# மணிக்கூண்

ஜன - ஜூன் 1929.

JL
LCM24, N28NR
N28.1.
218948

MARUTHUVAN

1461

# மருத்துவன்

PHYSICIAN

தமிழ் வைத்தியப் பத்திரிகை

ஆசிரியர். பண்டிட் எஸ். எஸ். ஆனந்தம்

ㅤ.ㅤ 1929ளு ஜனவரிமீ ㅤ இதழ் ச.

உள்ளுறை

| | |
|---|---|
| அபிப்பிராயங்கள் | |
| தமிழ்வைத்தியமும் சம்ஸ்கிருத வைத்தியமும் | 93 |
| திருசு | 97 |
| மதுசாரம் | 99 |
| மலத்தில் இரத்தம் | 101 |
| வைசூரியும், வாந்திபேதியும் | 103 |
| சிறுத்தொண்டர் வரலாறு | 105 |
| இலங்கை மருத்துவர்களுக்கு ஓர் வேண்டுகோள் | 109 |
| தென் இந்தியர் மருத்துவர்சங்கப் பொதுக்கூட்டம் | 113 |
| திருச்சி மருத்துவர்சங்கம் | 114 |
| பொதுச்செய்திகள் | 116 |
| மதிப்புரை | 117 |
| நன்கொடை அளித்த அன்பர்கள் | .118 |
| பாலர் பரிபாலனம் | |

OFFICE OF THE REGISTRAR OF ... - FEB 1929 ... MA...

மருத்துவன் காரியாலயம்

221, தங்கசாலை வீதி

சென்னை.

மருத்துவன் இயற்றும் தொண்டுபோற்றற்குரியதாகும். மருத்துவ முறையில் பெயர்பெற்று விளங்கிய பண்டை மருத்துவர் பலருடைய சரித்திரங்களும், அவர்கள் கண்டுபிடித்த மருந்துவகைகளும் வெளியிடப்படுவது ஒரு சிறந்த அறமாகும். குழந்தைகளை வளர்க்கும் முறை மிகத் தெளிவாக எழுதப்பட்டிருக்கின்றது. இத்தகைய சிறந்த விஷயங்களடங்கிய மருத்துவனைத் தமிழ்நாட்டார் ஆதரிப்பது முக்கிய கடனாகும்.

சித்தாந்தம், சென்னை

'மருத்துவன்' மருந்துமுறை பலவற்றையும், குழந்தை பாது காப்பு, சுகாதாரம் முதலான அரிய விஷயங்களையும் வெளியிட்டு வருவது. இதனால் பலர் சுகவாழ்க்கையை எளிதில் அறியலாம். இது ஒவ்வொருவர் வீட்டிலும் இடம்பெறத்தக்கதாகும்.

லக்ஷ்மி, சென்னை

**மருத்துவன்.** இஃது ஒரு வைத்தியப்பத்திரிகை. பரம்பரை வைத்தியரும், மருத்துவர் முன்னேற்றத்திற்குச் சிறப்பாகவும், தமிழர் முன்னேற்றத்துக்குப்பொதுவாகவும் பல்லாண்டாக உழைத்துவருபவரான பண்டிதர் ஆனந்தம் அவர்கள் இதன் ஆசிரியர். பண்டிதர் அவர்களைத் தமிழுலகம் நன்கறியுமாதலால் பத்திரிகையின் சிறப்பைப்பற்றி நாம் விரித்தெழுதத் தேவையில்லை. 'பாலர் பரிபாலனம்' என்னும் தலைப் பின்கீழ் இப்பத்திரிகையில் மாதந்தோறும் வெளிவரும் அரிய விஷயங்களை தமிழ்நாட்டுத் தாய்மாரெல்லோரும் கட்டாயம் வாசித்தே தீர வேண்டும். சுகமான குடும்பவாழ்க்கையை விரும்புவோருக்கு இப்பத்திரிகை ஒரு துணையாயிருக்கும் என்பதில் ஐயமில்லை.

கடிதம்

வைத்திய பாஸ்கர ஸ்ரீமான் பண்டிட் எஸ். எஸ். ஆனந்தம் அவர்களுக்கு,

ஐயா, எனக்கு அடிவயிற்றின் ஓர்பக்கத்தில் சகிக்கமுடியாத வலியும் கனமும் கண்களிற் காமாலையும் காய்ச்சலும் ஏற்பட்டு மிக வருந்திக்கொண்டிருந்தேன். அதனை ஆங்கிலவைத்தியர்கள் அப்பண்டிசைஸ் என்றும் வயிற்றை அறுத்துத்தான் வைத்தியம் செய்யவேண்டுமென்றும் சொன்னார்கள். பின்னர் தங்களிடம்வந்து காண்பித்த போது தாங்கள் அறுக்கவேண்டியதில்லை எனக்கூறி தங்கள் வைத்திய சாலையில் தயாராகும் வாதநிதானி, சிவனாமுதம் முதலிய மருந்துகளைக் கொடுத்தீர்கள். அதைத் தாங்கள் சொன்னபடி நான் சாப்பிட்டு வந்ததால் எனது நோய்கள் முற்றும் நீங்கி நலமாயிருக்கிறேன் என்பதை மகிழ்ச்சியோடும் வந்தனத்தோடும் அறிவிக்கின்றேன். எனது குழந்தைக்கு வயிற்றில் ஏற்பட்ட காய்ச்சல்கட்டியும் தங்கள் தமிழ் வைத்தியசாலையின் மருந்துகளைக்கொடுத்து சுகமாயிருக்கிறது.

(Sd.) பாஷ்யம் ஐயங்கார்
ரிட்டயர்டு ஸ்டேஷன்மாஸ்டர் அரக்கோணம் S, I.

# மருத்துவன்

## (PHYSICIAN)

## தமிழ் வைத்தியப் பத்திரிகை

ஆசிரியர் பண்டிட் எஸ். எஸ். ஆனந்தம்

மலர் ௧. } 1929௵ ஜனவரி௴ { இதழ் ௪.

### தமிழ் வைத்தியமும் சம்ஸ்கிருதவைத்தியமும்

தமிழ் வைத்தியத்தை நாம் சித்தவைத்தியமெனக் கூறுகின்றோம். சித்தவைத்தியத்தை அரசாங்கத்தார் ஒத்துக்கொண்டு அதற்குப் பாடசாலை, மருத்துவசாலை அமைத்தபின்னர் அதைப்பற்றிச் சிலர் தங்கள் கருத்தை வெளியிடுகின்றார்கள். சித்தவைத்தியம் ஒன்று தனியே இருக்கிறதா என்றும், சமஸ்கிருத வைத்தியம் ஒன்றுதானே இந்தியாவிலுள்ளதென்றும், சித்தவைத்தியமென்றால் சித்தர்களுடைய வைத்தியமென்றும், அவ்வகைச் சித்தர்கள் தமிழ்நாட்டில் தமிழர்களில் மட்டுந்தானா இருந்தார்கள், வேறுமொழி பேசுகிற மக்களில் சித்தர்கள் இருந்திருக்கக்கூடாதா? ஆதலால் ஏனைய சம்ஸ்கிருத வைத்தியமும் சித்தவைத்தியமாகாதா? எனவும், ஆயுர்வேத மருந்துகளும், சித்தமருந்துகளும் பலவகையில் ஒன்றாகத்தானே இருக்கிறது, அப்படியிருந்தும் ஏன் சித்தவைத்தியத்தை தனியாகவைத்து தமிழில் நடத்தவேண்டுமெனவும், பாஷைவாரியாக வைத்தியத்தைப் பிரிப்பதானால் இந்தியாவிலுள்ள ஒவ்வொரு பாஷைக்கும் ஒவ்வொரு வைத்தியமிருக்கிறதா எனவும், சித்தவைத்தியத்திற்கு ஒழுங்கான முறையில் வைத்திய நூல்கள் தமிழில் இல்லை, ஆதலால் அஃது எப்படி ஒழுங்கான (சாஸ்திரீய) வைத்தியமாகும்? பாடபுத்தகங்கள் (டெக்ஸ்ட் புக்கு) அதற்குச் சரியாயிருந்தால் அரசாங்கத்தார் இப்பொழுது அதற்கு ஒரு கழகம்வைத்துப் பாடபுத்தகங்கள் ஏற்படுத்துவானேன்? என்றும் கூறுபவர் பலர். அவற்றைப்பற்றி ஆராய்வோம்

நில உலகில் மக்கள் முதன் முதல் தோன்றின இடம் தென்
இந்தியா எனவும், அம்மக்கள் பேசின தமிழ் மொழியே இயற்கை
மொழியெனவும், இந்தியாவின் வடபாகத்தில் இந்தி என்னும் மொழி
யில் இந்துஸ்தானி, வங்காளி, பார்லி, குஜராத்தி, மராட்டி முத
லிய மொழிகள் தோன்றி அதில் கலந்து நடைபெறுவதைப்போல்,
தென்னாட்டில் திராவிட மொழியாகிய தமிழ்மொழியிலிருந்தே தெலு
ங்கு, மலையாளம், கன்னடம், துளுவம், படுகம் முதலிய மொழிகள்
தோன்றி பிரிந்தனவெனவும், மொழி ஆராய்ச்சி நிலவாராய்ச்சி வல்லுனர்
கூறுகின்றனர்.

தமிழ்நாடு இன்று நாம் காண்பது போல் இலங்கையோடு நில்லா
மல் தெற்கே பல்லாயிரமைல் தூரம் பரவியிருந்தது. அந்நிலப்பகுதி
யில் மணிமலையும், பஃறுளி ஆறும், குமரியாறும் இருந்தன. அதனால்
கபாடபுரம் குமரிநாடு முதலிய நாடுகள் செழிப்பாயிருந்தன வெனவும்
அந்நிலப்பரப்பு ஓர் ஊழிக்காலத்தில் தெற்கு மகா சமுத்திரத்தால்
விழுங்கப்பட்டது எனவும், மற்றொரு ஊழியில் வங்காளக்குடாக்கட
லின் கரையிலிருந்த தமிழ் நாட்டில் முற்றுந்துறந்த பட்டினத்து அடி
கள் ஊராயதும், காவிரியாறு கடலிற்கலக்கும் இடமுமாயதுமான
காவிரிப்பூம்பட்டினமும், மகாபலிபுரம் முதலிய நகரங்களும் கடலில்
மூழ்கினவெனவும், மேற்றிசையில் மலையாளமெனும் மலைநாடு அரபிக்
கடலிலிருந்து வெளித்தோன்றினதென்றும் நில வாராய்ச்சிக்காரர்
கூறுவதை நம்புவதற்கு வேண்டிய ஆதாரங்கள் இன்றும் இருக்கின்
றன. இம்மாறுபாடுகள் ஒரேநாளில் ஏற்பட்டிராவிடினும் நாளடைவில்
சிறிது சிறிதாக நிலமாயிருந்த இடம்நீராகவும், நீராயிருந்தவிடம் நில
மாகவும் மாறியிருக்கவேண்டும். உதாரணமாக இக்காலத்திலும் இரா
மேச்சுவரம் கோயிலுக்கு அருகிலிருந்த தனுஷ்கோடி என்னும் கடல்
நாள்தோறும் கொஞ்சங்கொஞ்சமாக விலகி சுமார் இருபதுமைலுக்கு
மேல் இடம்விட்டுப் போய்விட்டதென ஆங்குள்ள முதியோர் சொல்
லுகின்றார்கள். சென்னை ஐக்கோர்ட்டுக்கு எதிரில் சுமார் இருபது
ஆண்டுகளுக்குமுன் கடலாயிருந்த இடம், இன்று நிலமாகிப் பல கட்
டடங்கள் கட்டப்பட்டு நகரமாய்விட்டது. இதனை நாம் கண்கூடாகக்
காண்கின்றோம். இக்கடற்கோளுக்கு அழியாததும், பழமையான
தும், நீர்வள நிலவளமுள்ளதும், இயற்கை அழகிற்சிறந்து விளங்கு
வதுமாகிய சிவனடிபாத மலையையுடைய இலங்கையையும், அகத்தி
யர் வதிந்த பொதிகையையும், நீலமலையையும், வடக்கே வேங்கட மலை
யையும் கொண்டதே நந்தண்டமிழ் நாடாகும்.



இதனையே நமது பழந்தமிழ்ப் புலவராகிய மாணிக்கவாசகர் திரு
வாசகத்தில், "பாண்டிநாடே பழம்பதியாகவும்" எனக் கூறியுள்ளார்.
தற்கால மேனாட்டு நிலவாராய்ச்சிக்காரர்கள் தென்னாட்டில் கடலின்
உட்புறமுள்ள பொருள்களையும், மலைகளின்மீதுள்ள அடுக்குப்பாறை
களையும், ஆங்குள்ள, கல், மண்முதலியவைகளையும் துருவித்துருவிச்
சோதித்துப்பார்த்தும், தமிழ்நாட்டு மலைகளிலும் பழைய கோயில்களி
லும் உள்ள கல்வெட்டுகளையும், செப்பேடுகளையும் பார்த்தும் தென்
இந்தியா மிகப் புராதன நிலமெனவும், புராதனமக்கள் வாழ்ந்த நா
டெனவும் தீர்மானித்திருக்கின்றனர். இவ்வளவு பழைமையானதும்,
மிகப் பெரிதானதுமான நிலப்பரப்பிலிருந்த கோடிக்கணக்கான தமிழ்
மக்கள் கல்வி, உழவு, வாணிபம், ஓவியம், கப்பல் ஓட்டல், மருத்து
வம், அரசியல்முதலிய துறைகளில் உலகத்தில் முதலாவதாகத் தேர்ந்
தவர்களாவார்கள். தமிழ்மொழியை வளர்க்க சுமார் ஐயாயிரம் ஆண்டு
களுக்கு முன்னமே சங்கங்கள் நிறுவி நடத்திவந்தார்கள்.

இராமாயணத்தில் இராமன் தென்னாட்டுக்குவந்து அகத்தியரின்
ஆசிரமத்தில் தங்கி அவரிடம் சண்டைக்கு வேண்டிய விஷயங்களைத்
தெரிந்துகொண்டதாகவும் காணப்படுகிறது. இவ்வளவு அறிவுள்ள
தமிழ் மக்கள் தங்களுக்குண்டாகும் நோய்களுக்கு மட்டும் மருந்து
தெரிந்துகொள்ளாமல் இருந்திருப்பார்களா?

தற்காலம் உலகத்தை ஆளுவது கண்கூடாகக் காணப்படுவதும்,
சத்தியமாகியதுமான விஞ்ஞான சாஸ்திரமென்னும் சயன்ஸே அல்
லாது சமஸ்கிருத வேதசாஸ்திர புராண இதிகாசங்களன்று. மேல்நாட்
டார் சாஸ்திர ஆராய்ச்சியினாலும் அவர்களுடைய இடைவிடா உழை
ப்பினாலும் நாள்தோறும் நவநவமாகக் கண்டுபிடித்து உலகுக் களித்து
வரும் அறிவின் பயனை எல்லாம் நம்மவர்கள் கண்டு வியந்து, அனு
பவித்துக்கொண்டு, கடைசியாக இவை எல்லாம் நம்முடைய சம்ஸ்
கிருத வேதசாஸ்திரங்களை வெள்ளையர்கள் அள்ளிக்கொண்டுபோய்
அந்நூல்களிலிருந்தே ஏரோபிளேன், வயர்லஸ் டெலகிராம் முதலிய
எல்லா தொழில்களையும் செய்கின்றார்கள் என்று பெருமையாகச்
சோம்பேறி வேதாந்தம் பேசுபவர்கள் சிலர்.

சம்ஸ்கிருத ஆயுர்வேதக்காரர் சொல்லுகிறபடி சம்ஸ்கிருத ஆயுர்
வேத சாஸ்திரம் மிக ஒழுங்காக இருக்கின்றது. அதைப் படித்துப்
பெரும் பட்டங்கள் பெற்ற பண்டிதர்கள் மிகுதியாக இருக்கின்றார்

கள். அச்சாஸ்திரத்தில் காணும் ஔஷதிகளெல்லாம் அப்பண்டிதர்களுடன் பாரதபூமியில் பயிராகி ஔஷதங்களாகின்றன. அறுவை வைத்தியமும் அதற்குரிய ஆயுதங்களும் சம்ஸ்கிருதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி இருந்தும் மகாத்மாகாந்திக்கு வந்த குடல் கிளையின் நோய்க்கும், கோகலே, சி. ஆர். தாஸ், சுரேந்திரநாத பானர்ஜியின் நோய்க்கும், சம்ஸ்கிருதத்தில் மகா பண்டிதராயிருந்து இந்திய வைத்தியத்துக்கு புத்துயிரளித்த பானகல் அரசர் முதலியவர்களுக்கும் இன்னும்பல இந்திய அரசர்களுக்கும் தேசத் தலைவர்கட்கும் ஏன் அந்த சம்ஸ்கிருத வைத்தியத்தில் நம்பிக்கை இல்லாமல் ஆலோபதி என்னும் மேல்நாட்டு வைத்தியத்தையே நம்பினார்கள்?

ஆயுர்வேதத்தில் சாரீரம் என்னும் உடற்கூறும், உடற்றொழிலும், சல்லிய சாலாக்கியமெனும் அறுவை வைத்தியமாகிய இரணவைத்தியமும், அதற்குவேண்டிய ஆயுதங்களும், மர்மஸ்தான அமைப்புகளும், பாலரோக பரிகாரங்களும், ரோகநிதானங்களும், ஔஷதப்பிரயோகங்களும் ஒழுங்காகக் கூறப்பட்டிருக்கின்றன, அதைப்போல் தமிழ் சித்தர் நூல்களில் காணப்படவில்லை யெனவும் சிலர் கூறுகின்றார்கள். அப்படி ஒழுங்காக சம்ஸ்கிருத வைத்தியசாஸ்திரமிருக்கிறபோது இந்தியன் மெடிகல் ஸ்கூலில், உடற்கூறு, உடற்சோதனைக்கு (அனட்டமி, பிஸியாலஜியை) சம்ஸ்கிருத ஆயுர்வேதக்காரர் மேல்நாட்டு ஆங்கிலமுறையில் கற்கவேண்டியதில்லை. சம்ஸ்கிருத நூலின் வழியாகவே கற்கலாம். அறுவை வைத்தியமாகிய சர்ஜரிக்கும், சம்ஸ்கிருதத்திலுள்ள சல்லிய தந்திரத்தைப்பார்த்தே செய்யலாம்; குளோரோபாம் கொடுத்து மேல்நாட்டு முறையாக ஆப்ரேஷன் செய்யக் கற்றுக் கொள்ளுவானேன்? பிள்ளைபேறுபார்க்கும்முறையை சம்ஸ்கிருதத்தில் படியாமல் மேல்நாட்டாரின் மிட் ஒய்பரியை ஆங்கிலத்தில் படிப்பானேன்?

சம்ஸ்கிருத ஆயுர்வேத நூல்களைப் படித்த அளவிலே நோயின் தன்மைகளையும், நோய்வந்த காரணங்களையும், அதைப்போக்கும் மருந்துகளையும், அம்மருந்துகளை முடிக்கும் முறைகளையும், அதற்குப்பத்தியத்தையும் ஆசிரியன் உதவியின்றித் தாமே செய்யவல்லராய் எவரேனும் இருக்கின்றாரா? பெயரளவிலே அந்நூல்கள் இருக்கின்றன. ஓவியத்திற்கும், இசைக்கும், அடிசிற்றொழிலுக்கும் நூல்கள் இருக்கினும் அவைகள் ஆசிரியனின்றி பயன்படுகின்றனவா? அதுபோல,



ஆசிரியன்காலங்கருதி கற்றுக்கொடுத்தபின்னர் அன்றோ மேற்சொன்ன மாணவர்கள் மருத்துவர்களாகின்றார்கள். ஆசிரியன் உதவியின்றி இவ்வாயுர்வேத நூல்கள் மாணவர்களை மருத்துவர்களாக்குமேல் அவைகளுக்கு ஏற்றங்கூறலாம்.

திருமூலர் திருமந்திரம் அவ்வைக்குறள் போன்ற சிலநூல்கள் தமிழில் இருக்கின்றன. அவை சித்தர் நூல்கள். அந்நூல்களை சிலர் படிக்கின்றார்கள். அவர்கள் எல்லோரும் சிவயோக சாதனையில் வல்லவர்களாகி விட்டார்களா? அப்பழக்கமுடைய பெரியோர்களைத்தேடி அவர்களையடுத்துப் பல்லாண்டு பழகினவர்களன்றோ அவ்வின்பத்தை அடையவியலும்?

அச்சுநூல்களும், ஆங்கில மருத்துவசாலைகளும் தோன்றுவதற்கு முன் தமிழ்நாட்டில் வீட்டுக்கிழவிகளுக்குத் தெரிந்திருந்த மருத்துவப்புலமையும் இக்காலத்துப் பெரும் பட்டங்கள் புனைந்து வெளிவந்துள்ள வைத்திய நிபுணர்கட்கும் தெரியாதென்றே சொல்லலாம். இம்மருத்துவக்கல்வி உலகிலுள்ள எக்கல்வியினும் சிறந்தது. உடம்பிற்கும், உயிருக்கும் உள்ள நட்பை உணர்த்தி அந்நட்பை நீடிக்கச்செய்ய வல்லது. ஆதலால் இவ்வரிய மருத்துவக் கல்வி ஏட்டுப்படிப்பளவில் நின்றுவிட்டால் கணக்கற்ற நோய்களும், இளமையில் இறத்தலும், மலிந்துவிடும் என்பதை உணர்ந்து நமது முன்னோர்கள் ஏடுகளைமட்டும் பெருக்காமல், தங்கள்மாணவர்கட்கு நேரேகற்றுக்கொடுத்துக்கொண்டு வந்தார்கள். ஆகையினால் தற்கால மருத்துவப் பள்ளிக்கூடத்து மாணவர்களுக்குத்தக்கபடி நூல்கள் தமிழ் உரை நடையில் இல்லாமையினாலேயே சித்தவைத்திய மென்று ஒன்று இல்லை என்று சொல்வது என் பாட்டனுக்குப் பாட்டன் பெயர் எனக்குத் தெரியாமையினால் அவன் பிறக்கவே இல்லை என்று சொல்வதுபோல் இருக்கின்றது.

தமிழ்நாட்டுச் சித்தர்கள்வழிவந்த மருத்துவர்கள் நூல்களை வேண்டாமலே தலைமுறை தலைமுறையாய் நாடி முதலிய எண்வகை சோதனைகளால் நோய்களை உணரவும், அந்நோய்களை நாடி தாரணையால், வாயுதாரணையால், முழுக்காட்டலால், உணவால், நினைப்பால், மொழியால், செயலால், மருந்தால் போக்கவும் கற்றுக்கொண்டிருக்கின்றார்கள். இவைகளையே தங்கள் மாணவர்களுக்கும் கற்றுக்கொடுத்துக்கொண்டுவந்தார்கள். அச்சுநூல்கள் வெளிவந்தபின்னர் அன்றோ இக்காலத்தில் எல்லார்கையிலும் மருத்துவநூல்கள் இருக்கின்றன; எல்லாரும் மருத்துவர்களாகின்றார்கள்.

கரிசலாங்கண்ணி எனும் கையாந்தகரை, வேம்பு, சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், கற்றாழை, நன்னாறி, பிரண்டை, சீந்தில் முதலியவைகளை முறையே ப்ருங்கராஜா, நிம்பா, சுந்தி, மரிசம், பிப்பிலி, அரிதஹி, குமரி, சாரிபா, வஜ்ரவல்லி, அமிர்தவல்லி என்னும் சம்ஸ்கிருத பெயர்களைச் சொல்லிக்கேட்டால் எந்த வில்லியர், வேடர், காட்டிலிருந்து பறித்துக்கொணர்வர்? எந்த கடைக்காரர்கள் அவைகளை உணர்ந்துகொடுப்பார்கள்? இப்பெயர்களை வேண்டுமானால் சம்ஸ்கிருத ஏட்டுக்கல்வியால் பெறலாம்.

வடமொழிச்சொற்கள் சில தமிழில் கலந்ததனாலேயே, தமிழ் வடமொழியினின்றும் வந்ததென ஆராய்ச்சியற்றோர் சிலர் உரைப்பது போல, காய்ச்சலெனும் வெப்புநோய், சளிநோய், வளிநோய் முதலியவைகளை முறையே ஜ்வரமென்றும், கபமென்றும், வாதமென்றும் சாதாரணமாய் வழங்கப்பெறுவதனாலேயே சித்தவைத்தியம் சம்ஸ்கிருதத்திலிருந்து வந்ததெனச் சொல்லுவது நியாயமா?

பழமையாய் அனுபவித்துவரும் மெய்யானதும் உயர்ந்ததும், இனிமையானதுமான பொருள்களைப்பார்க்கினும், சாதாரண புதிய பொருள்களைக் காண்பதிலும், புதிய சொற்களையும் ஓசையையும் ஏற்றுக்கொள்வதிலும், புதிய இன்பங்களை நுகர்வதிலும் மக்களின் மனஞ் செல்வது இயற்கை. ஆதலால் புதிதாகவந்த சம்ஸ்கிருத சொற்களைத் தமிழர், வடுகர் முதலியவர்கள் தமது மொழிகளில் சேர்த்துக் கொண்டதனால் சம்ஸ்கிருதத்திலிருந்து தமிழ் வந்ததென்பது எப்படிப் பொருந்தும்?

சம்ஸ்கிருதமொழி எந்தநாட்டிலும், எந்தக்காலத்திலும் மக்களால் பேசப்பட்டுவந்த தேசபாஷைகளில் ஒன்றன்று. அம்மொழி மக்கள் பேச்சுவழக்கில் இல்லாமையால் சிலர் அதனை தேவமொழி எனக் கூறியது உபசாரவழக்காகும்.

மக்களின் கருத்தை ஒருவருக்கொருவர் அறிவித்துக்கொள்வதற்காக மொழிகள் தோன்றியது. மொழிகள் மக்களின்மனதிலிருந்து கை, வாய், கண் முதலிய உறுப்புகளின் சமிக்கை (ஜாடை) களில் வந்து பிறகு வாய் ஓசையில் வெளிப்பட்டு அந்தந்த நாட்டு வெப்பதட்பத்துக்கும், உணவுக்கும், செயலுக்கும் தக்கபடி வாய்மொழியாகிய ஒலிவடிவம் திருத்தமடைந்தது. பிறகு நெடுநாள் கழித்து ஒவ்வொரு நாட்டாருடைய வாய்மொழிக்கும் வரி வடிவம் (எழுத்துகள்) ஏற்பட்டது.

(தொடரும்)



## துருசு
### (மயில் துத்தம்)

துருசு எனப்படும் மயில்துத்தம் தமிழ் மருத்துவத்தில் எளிதாக உபயோகமாகும் ஒருபொருள். இது மயிலின் இறகிலுள்ள நீல நிறத்தைப்போன்ற நிறமுள்ளதாகையால் இதற்கு மயில்துத்தம் என ஒருபெயர் வழங்குகிறது. இது சீனக்கற்கண்டுக் கட்டிகளைப்போலவும், நீலநிறக்கண்ணாடித்துண்டுகளைப்போலவும் கட்டிகளாயிருக்கும். இது துவர்ப்புச்சுவையும் வெகுட்டல்குணமுமுள்ளது. இது நான்கு பங்கு தண்ணீரிலும், இரண்டுபங்கு வெந்நீரிலும் கரையும். இது எல்லா மருந்துக்கடைகளிலும் எளிதாகவும், மிகுதியாகவும் கிடைக்கக்கூடியது. தமிழ் மருத்துவர்கள், துருசை செய்நீர், களிம்பு, சிந்தூரம், நீறு (பஸ்மம்) சுன்னம் முதலிய மருந்துகளாகச்செய்து நோய்களுக்கு உள்ளுக்கும் வெளிக்கும் உபயோகின்றார்கள்.

துருசு சேர்க்கைப்பொருள். அதில் செம்பும், கந்தகமும், நீரும், பிராணவாயுவும் சேர்ந்துள்ளன. துருசுக்கட்டிகளின்மேல் கண்ணாடிபோல் பளபளப்பும், மினுமினுப்பும் காணப்படுவதற்கு அதில் கலந்திருக்கும் நீரே காரணமாகும். துருசை பொடிக்கரியுடன்சேர்த்து நெருப்பில் ஊதினால் துருசினின்றும் செம்பைப்பிரிக்கலாம். ஒரு கரித்துண்டைக் குழிசெய்து, துருசுப்பொடியை அக்குழியில்வைத்து நெருப்பிலிட்டு ஊதினால் கருநிறமாகும். அப்பொழுது அதனை எடுத்து தண்ணீரில் நனைத்து ஒருசுத்தமான வெள்ளித்தகட்டின்மேல் அல்லது ரூபாயின்மேல் அதைவைத்து நசுக்கினால் வெள்ளி கருநிறமாகும். துருசில் கந்தகம் இருக்கிறதென்பதை இதனால் நாம் அறியலாம். துருசினின்று பிராணவாயுவையும் பிரிக்கலாம். துருசிலிருக்கும் நீரைப் பிரித்துப் பார்க்கவேண்டுமானால் ஒருபக்கம் மூடியுள்ள கண்ணாடிக்குழாயில் சில துருசுத்துண்டுகளைப்போட்டு அக்கண்ணாடிக்குழாயை சிறிது சாய்ந்தநிலையில் அதன் அடிப்பாகத்தைப்பிடித்து லேசாகத் தீயில்காட்டினால் துருசுக்கட்டிகள் வெளிர் நிறமாகும். கண்ணாடிக்குழாயின் மேல் பாகத்தில் பனித்துளிகள்போல் நீர்த்துளிகள் காணப்படும். இதனால் துருசிலுள்ள நீரானது தீயின்சூட்டினால் நீராவியாகி குளிர்ந்தகண்ணாடிக்குழாயின் மேல்பாகத்தில் அந்நீராவி படிந்தவுடன் மறுபடியும் நீராகிவிட்டது.

இச்சோதனைகளால் துருசு ஓர் கலவைப்பொருள் என்பதை நாம் அறிகின்றோம்.

துருசு வேண்டியபோது கிடைக்கக்கூடிய பொருளாதலால் இதை மருத்துவர்கள் செய்கிற வழக்கமில்லை. துருசை மருந்தாகச் செய்கிற மருத்துவர்கள் பலர் துருசு என்பது என்ன? அது எப்படி உண்டாகிறது? என்பதை அறியாமல் இருக்கின்றார்கள். அதைப்பற்றி அறியாமலிருக்கிற மருத்துவர்களுக்கும் மருத்துவ மாணவர்கட்கும் இதனை எழுதுகின்றோம்.

### துருசு செய்முறை

செம்புப்பொடியை ஒரு பீங்கான் அல்லது ஒரு மண்சட்டியி லிட்டு, காற்றிலுள்ள பிராணவாயுவென்னும் உயிர்வளி அதில் நன்றாக் கலக்கும்படி தீயில்வைத்து, அதிக சூடாகும்வரையில் அச்செப்புப்பொடியை வறுக்கவேண்டும். வறுக்கும்போது செப்புப்பொடி கருநிறமாகும். அப்போது அதை எடுத்து விளாவின கந்தகத்திநீரில் (ஸல்ப்யூரிக் ஆசிட்) கரைக்கவேண்டும். அச்செப்புப்பொடி முழுவதும் கரைந்தபிறகு அதன் தெளிவு நீரை இறுத்துக்காய்ச்சினால் நீலநிறக்கண்ணாடித்துண்டுகள்போல் கட்டிகள் உண்டாகும். அக்கட்டிகள் பளபளப்பான, தட்டையான பக்கங்களுடன் கூடியதாயிருக்கும். அதில் அக்கட்டிகள் உண்டானதற்குக் காரணங்களை மற்றொருமுறை எழுதுவோம்.

இதனால் செம்பில் உயிர்வளியும் (பிராணவாயு) நீரும்கலந்து உண்டாகும் உப்பையே துருசு அல்லது மயில்துத்தம் என்று சொல்லுகிறோம்.

### துருசு சுத்திமுறை

துருசுக்கட்டிகள் சுத்தமாகவேயிருக்கும். இதற்குச்சுத்தி அவசியமில்லை. ஆயினும் சிலசமயங்களில் துருசு அயத்துடன் கலந்திருந்தால் பின்வருமாறு சுத்தி செய்துகொள்ளவேண்டும்.

துருசில் தூசிகளை நீக்கி, கட்டிகளாகப் பொறுக்கி யெடுத்து அதனைப் பொடித்துத் தூளாக்கி கொஞ்சம் நல்ல தண்ணீரில் கரைத்து கலவை நீராக்கிக்கொள்ளவேண்டும். பின்னர் அந்நீரைக்காய்ச்சி ஆறவைக்கும்போது அந்நீரில் நாலைந்து நூல்களை அதனுள் அடிப்பாகம்வரையில் நனையும்படி தொங்கவிட்டால் இரண்டொரு நாட்களில் அந்த நூல்களில் அழகிய நீலநிறமுள்ள தனித்துருசுக்கட்டிகள் மாலைபோல் தொடுத்துக்கொள்ளும். இவை சுத்தமான துருசாகும். இதனை மருந்துகளுக்கு எடுத்துக்கொள்ளலாம்.

(தொடரும்)



## மதுசாரம் மனிததேகத்திற்கு விஷமாகும்

(67-ம் பக்கத் தொடர்ச்சி)

அங்கே நான் குடித்ததும் நினைவிருக்கிறது; ஆனால், சிறைச்சாலையின் அறையில் தூங்கிவிழித்த நேரம் வரையும் என் மனைவியை நான் கொலைசெய்தது எனக்குத் தெரியவே தெரியாது. என்னுடன் தூங்கிவிழித்த கைதிதான் நான் என்னசெய்தேனென்பதைச் சொன்னான்."

சார்லஸ்லாம்ப் (Charles Lamb) என்பவர், தன்னடக்கம் சேதப்பட்டதென்பதன் பொருள் அவருக்கு அநுபவத்திற்கு வந்தபோது, "நான் செங்குத்தான மலையின் ஓரத்தில் நிற்கின்றேன் என்பதையும், சீக்கிரத்தில் அம்மலையடிவாரத்திற்குத் தள்ளுண்டு இறப்பது நிச்சயமென்பதையும் உணருகிறேன். என்னால் இயலுமாயின் நான் பின்வாங்கித் தப்பித்துக்கொள்வேன்; ஆனால், அவ்வாறு செய்ய என்னாற்கூடவில்லை" என்றார். ஏன் அவரால் பின்வாங்கிச் செல்லக்கூடவில்லை? அவருக்கிருந்த தன்னடக்கம் என்பதனை அதாவது எண்ணத்தின் சக்தியை மதுசாரங்கொள்ளை கொண்டு விட்டது.

1. மதுசாரத்தால் தன்னடக்கங் (Self Control) கெட்டுப்போய் தீமையான காரியங்களைச் செய்ய மிகவும் எளிதாகிறது; நன்மையான காரியங்களைச்செய்ய வருத்தமாகிறது. இதனை நியாயாதிபதி யொருவர்,

"ஒரு மனிதன் மதுக்கடைக்குட் புகுந்ததும் அவன் நன்கு மதிக்கப்படுகின்றான்; நன்கு மதிப்புள்ளவனாயும் இருக்கின்றான். ஆனால் அவன் குற்றவாளியாக வெளி வருகின்றான் என்று கூறுகின்றார். அஃதேன்?

மனிதர்கள் ஆவேச (மதுசாரம்) நீரின் அதிகாரத்திலிருக்கும்போது, அவர்கள் பேசுஞ்சொற்களையும், செய்யுங் காரியங்களையும், அவர்கள் வெறிதெளிந்தபின்னர் அவ்வாறு செய்ய கூச்சப்படுகிறார்கள்.

(2) தன்னடக்கங்கெட்டுப்போவதால் ஒரு மனிதனுடைய நற்செய்கைக்குத் தடையேற்படுகின்றது. ஏனெனின்,

மதுசாரம் கையின் உறுதியையும், கண்ணின் கூர்மையையும், பகுத்தறியுந்தன்மையையும், நினைப்பு, செய்கை இவற்றின் வேகத்தையும், கெடுக்கிறது.

பழுதான கைக்கடிகாரம் சரியான காலத்தைக் காட்டுவதினும் மதுசாரத்தால் சேதப்பட்ட மூளைக்கு நற் கருமங்களைச்செய்ய இயலாது. அதற்குத் திருட்டாந்தம்:—

## குறிபார்த்துச் சுடும் பரீட்சை.

குறிபார்த்துச்சுடுவதில் கைதேர்ந்த அறுவர் முப்பது நாட்களுக்கு மேற்பட்ட குறிசுடும் பரீட்சைக்கு முன்வந்தனர். முதல் முறையிலும் அவர்கள் ஆவேச நீர் அருந்தவில்லை. இரண்டாம் முறையில் குறிசுடுவதற்கு அரைமணிநேரத்திற்கு முன் ஒரு ஒயின் கிளாசில் மூன்றில் இரண்டுபங்கு (two third of a wine glass) பிராந்தியும், இரவில் படுக்கைக்குப்போகுமுன் அதே அளவு பிராந்தியுங் குடித்துவந்தார்கள்.

அவற்றின் சராசரி பயன்:—

மதுசாரமில்லாத முதல் 10-நாள் 30 முறை சுட்டதில் 23-குண்டுகள் குறியில் பட்டன.

மதுசாரமுண்ட இரண்டாவது 10-நாள் 30 முறை சுட்டதில் 3 குண்டுகள் குறியில் பட்டன.

மதுசாரமில்லாத மூன்றாவது 10-நாள் 30 முறை சுட்டதில் 26 குண்டுகள் குறியில் பட்டன.

இதனால் அதிக திறமையோடு வேலை செய்வதற்குக் குடிப்பழக்கமே இல்லாதிருப்பது அவசியமாகும் என்று தெரிகிறது.

(3) தன்னடக்க மில்லாமை, தற்செயலாயுண்டாகுஞ் சங்கடங்கட்கும் மற்றக் கெடுதிகட்குங் காரணமாகின்றது.

1. அபாயத்தை யறியுஞ் சக்தியையும்,
2. அபாயத்தை விலக்குஞ் சக்தியையும், அழிக்கின்றது.

அன்றியும், சுறு சுறுப்பைக் குறைக்கிறது. விவேகத்தைக் கெடுக்கிறது. தாமதத்தையும் பேச்சுத் தடுமாற்றத்தையு முண்டாக்குகிறது.

ஒரு விநாடிநேரம் தாமதிப்பதால் சில சமயம் மரணம் நேரிடுகின்றது. அன்றியும், அபாயமான அல்லது நெருக்கடியானசமயத்தில் தவறாக எண்ணித் துணிவதால் கடலிலும் தரையிலும் பயங்கரமான விபத்துக்களுண்டாகின்றன. ஏனெனின், சிறிதளவு மதுசாரம் உட்கொண்டாலும் அதுவே நம் அறிவின் விளக்கத்தை மறைத்துத் தீவிரமாக உண்டாகவேண்டிய சமயோசித புத்தியையும் செயலையும் தாமதப்படுத்துகிறது. தீவிரமாக வேலைசெய்யும் யந்திரங்களில் (ட்ராம்கார், மோட்டார்கார், பஸ் முதலியன) விரைவாகப் பிரயாணஞ்செய்யும் இந்நாட்களில் அவற்றைச் செலுத்துவோர்க்குச் சுத்தமான மூளையும் ஊக்கமுள்ள புலன்களறிவும் இருக்கவேண்டியது இன்றியமையாதனவாம். மதுசாரம், அடிக்கடி மரணத்திற்கு ஏதுவான காரணமாகின்றது.

(தொடரும்)



## மலத்தில் இரத்தம்:

### அதன் முக்கிய காரணங்கள்.

(திருநெல்லை சுந்தரனார்)

மலத்தில் இரத்தங்காணப்படுகின்றதன் சம்பந்தமாக நோய்கள் அநேகமிருப்பினும் அவ்வகை நோய்களில் முதலாவது வயிற்றளைச்சலாம். இவ்வியாதி குளிர்ச்சியான காலத்தில் குழந்தைகள், சிறுவர், முதியோர், ஆண், பெண், முதலிய எத்திறத்தினருக்கும் வரக்கூடியது. அடிக்கடி மலங்கழிதலும், மலத்தோடு இரத்தம் கலந்து வருதலும், ஆட்டிறைச்சி கழுவின நீர்போல் இரத்தம் விழுதலும், தொப்புளைச் சுற்றி அடிவயிற்றில் பிசைவதுபோன்ற வலியும், பசிமந்தம், குமட்டல், நாவில் வெண்மாசுமுதலிய குணங்கள் உண்டாதல், நாடியில் வாதத்தின் தன்மை முதலியவைகளும் வயிற்றளைச்சல் என்னும் வியாதியை உறுதிப்படுத்தும். சிலருக்கு இலேசானகாய்ச்சலும் இருப்பதுண்டு.

இரண்டாவது மூலநோய்: உள்மூலம், வெளி மூலநோய்களிலும் இரத்தம் காணப்படுவதுண்டு. ஆனால் இவ்வியாதி சிறுவர்களிடத்தில் காணப்படுவதில்லை. இருபது வயதிற்குமேல்தான் இவ்வியாதி அநேகமாய்த்தோன்றும். எப்பொழுதும் உட்கார்ந்து தொழில்செய்யும் ஆண்மக்களுக்கே முக்கியமாய் இவ்வியாதிவரும்; மலச்சிக்கல் உடையவர்களிடத்தே முக்கியமாய்த்தோன்றும். பெண் மக்களுக்கும் இவ்வியாதி வருவது உண்டு. ஆனால் ஆண்மக்களிடத்தே காணப்படுவதுபோல் பெண்களிடத்தில் அவ்வளவு மிகுதியாகக் காணப்படுகிறதில்லை. மூலத்தில் கடுப்பும், முதலில் இரத்தம் விழுந்து பிறகு மலங்கழிதலும், கீழேவிழுந்த இரத்தம் துண்டுதுண்டாக செந்நிறமாயிருத்தலும், மலங்கழியும்போது உண்டாகும் கடுப்புக்குத்தலுக்குப் பயந்து நோயாளி மலோபாதையை அடக்கிக்கொண்டிருப்பதும், கொஞ்சநாள் இரத்தம் மலத்தில் காணப்படாதிருந்து திரும்பத்தோன்றுவதும், இடதுகையின் ஆள்காட்டிவிரலென்னும் சுட்டுவிரலை ஆமணக்குநெய்யில் தோய்த்து மூலத்தில் செலுத்தித் துருவிப்பார்த்தால் முளைகள் காணப்படுவதும் மூலமுளைவியாதியை உறுதிப்படுத்தும். வெளிமூலம் வெள்ளிடைமலைபோல்த் தெள்ளிதிற் தெரிகிறபடியால் இலேசாக அறிந்துகொள்ளலாம்.

மூலமுளையென்பது மலவாயிலுக்குமேல் உட்புறம் மூன்று அங்குலம் வரையில் காணப்படுவது. அது மலக்குழாயின் உட்புறம் மிக

மெதுவாயிருக்கும் சவ்வின்மேல் சுண்டைக்காயளவு பருமனுள்ளதாய்
மூன்றுநான்குக்குக்குறையாமல் காணப்படுவது. நெடுநாட்பட்ட மலச்
சிக்கலினாலும், பித்தநீரின் குற்றத்தாலும், மலக்குழாய் உட்பக்கத்தை
மெதுவாகச்செய்கிற சவ்வின்மீதுள்ள கெட்ட இரத்தக்குழாய்கள்
விரிந்து சுருண்டு உருண்டை உருண்டையாகக் கட்டிக்கொள்ளும்.
அவ்வுருண்டைகளின் மத்தியில் கெட்ட இரத்தம் தங்கிவிடுகிறது.
இவ்வுருண்டைகளை மூடிக்கொண்டிருக்கிற மெல்லிய சவ்வானது,
நோயாளி முக்கி மலங்கழிக்கும்போது, உருண்டையோடுசேர்ந்து
உடைந்துவிடுகிறது. உடையும்பொழுது மலத்தில் இரத்தம் காணப்
படும். முக்குதலில்லாமல் மலம் இலேசாகக் கழியுமானால் அவ்வுருண்
டைகளும் உடையாது; இரத்தமும் காணப்படமாட்டாது. உணவுக
ளில் காய்கறிகளை மிகுதியாக உட்கொண்டு மலம் வருத்தமில்லாமல்
போகச்செய்யும் வழியைத் தேடிக்கொண்டால் இந்நோயால் பயமேற்
படாது. பழங்கள், பச்சைக்காய்கறிகள், நெய், பால் முதலியவைகளை
முக்கியமான உணவாய்க்கொள்ளவேண்டும். இவ்விதமான மூளைகள்
நாசித்துவாரங்களிலும், காதினுட்புறத்திலும், பெண்களின் கருப்பை
யிலும் உண்டாகும்.

மூன்றாவது சன்னிவாதசுரம். இந்தக் காய்ச்சலில் காய்ச்சல்
தோன்றி பதினெட்டு நாள்முதல் இருபத்திரண்டுநாட்களுக்குள், குட
லில் புண்பட்டு மலத்தில் இரத்தம் காணப்படும். இந்தக்காய்ச்சலை
இருபத்திரண்டுநாள் அல்லது நாற்பதுநாள் காய்ச்சல் என்றுஞ் சொல்
லலாம். ஏனெனில் சிலருக்கு நாற்பது நாட்கள்வரை இக்காய்ச்சல்
நீடிக்கிறது. இக்காய்ச்சல் முக்கியமாய் சிறுவர்களுக்கு மிகுந்த சுரம்,
சன்னி, தோஷம், பிதற்றல், வயற்றோட்டம் முதலியவைகளோடே
னும், அல்லது மலச்சிக்கலோடாவது ஏற்படக்கூடியது. பொதுவாக
பத்துநாளைக்குமேல் நீடித்த எந்தக்காய்ச்சலையும் மிகவும் கவனத்
தோடு பார்க்கவேண்டும். குடல் இயற்கையாகவே புண்படுந்தன்மை
யடைகிறபடியால் கொரோமானபேதி மருந்துகளைக் கொடுக்கக்கூடாது.
இவ்வியாதிக்கு நாக்கு ஓர் முக்கியகுறியாய் நிற்கும். ஆகையால் இவ்
வியாதியை வேறுவியாதிகளினின்றும் தனிப்பட தெரிந்துகொள்ள
லாம். இவ்வியாதியை ஆங்கிலத்தில் 'டையாயிட் பியூவர்' என்று
சொல்வார்கள்.

(தொடரும்)



## வைசூரியும் வாந்திபேதியும்

வைத்தியபூபதி, பண்டிட் K. S. பொன்னம்பலம் எழுதுகிறார்
(பரஞ்சோதி வைத்தியசாலை, கும்பகோணம்)

உலகத்தில் தோன்றிய உயிர்வகைகள் எல்லாம் தாம் தாம் சுகத்துடன் வாழவே விடாமுயற்சியுடன் போராடுகின்றன. வெப்பதட்ப வேற்றுமையாலும், உயிர்களின் உணவுஞ் செயலும் ஒவ்வாமையாலும் உடல் நலங்குன்றி, பல்வகைப்பிணிகள் ஏற்பட்டு மக்கள் உழன்றுவருவது யாவரும் உணர்ந்ததேயாம்.

தங்கள் தங்கள் அறிவைக்கொண்டு நோய்கள் வராமல் தடுக்கக்கூடியவழி பலவிருந்தும், நமது நாட்டில் ஒவ்வொரு வருஷமும் ஏறக்குறைய (2000000) இருபதுலட்சம் மக்களுக்கு அதிகமாகவே மரணம் அடைந்து வருகிறார்கள் என்று கணக்கிட்டிருக்கின்றார்கள் என்பதை அறிகிறோம். நமது தேசத்தார் நோயணுகாமல் சுகத்துடன் வாழவேண்டின், காற்று, நீர், உணவு, உறக்கம், செயல் முதலிய எல்லா விஷயங்களிலும் அறிவைச் செலுத்துவார்களானால் இந்த (2000000) இருபதுலட்சம் மக்களும் நோய் வாய்ப்பட்டு இறக்காமல் நல்வாழ்வை அடைவார்கள் என்பதற்கு ஐயமில்லை.

அறிவால் தடுக்கக்கூடிய வியாதிகளாவன:—மகமாரி (பிளேக்), காலரா (விஷபேதி), விஷசுரம், குளிர்காய்ச்சல், சீதபேதி, அஜீர்ண பேதி, நரம்புச்சிலந்தி, சொரிசிரங்கு, படை, யானைக்கால், வெறிநாய் கடித்தல், பாம்புமுதலிய விஷஜந்துக்கள் தீண்டுதலால் உண்டாகும் வியாதி முதலியவைகளாம். இவ்வகை வியாதிகளைத் தடுப்பது அறிவுள்ளோர்க்கு மிக எளிதேயாம்.

மேற்கூறிய நோய்கள் ஒவ்வொன்றையும் தடுக்கும் முயற்சியைக் குறித்து அந்தந்த வியாதிகளுக்குத் தனித்தனியே அவகாசம் கிடைத்தபோது சொல்லுவோம். இவைகளில் முக்கியமான வைசூரி, வாந்திபேதி ஆகிய இவற்றைப்பற்றிக் கவனிப்போம்.

### வைசூரி

வைசூரியானது அம்மை, குறுநோய், கோடகம் என நான்கு பெயருடன் உலவிவருகின்றது. இந்நோய் பதினான்குவகைப்படும். அதாவது பனைமுகரி, பாலம்மை, மிளகம்மை, வரகுதரி அம்மை, கல்லுதரி அம்மை, உப்புதரி அம்மை, கடுகம்மை, கரும்பனிச்சை அம்மை, வெந்தய அம்மை, பாசிப்பயிற்றம்மை, கொள்ளம்மை, விச்சரிப்பம்மை, ர்குளுவன், தவளை அம்மை என இத்தனை பிரிவுகளுண்டு. இவற்றில்

சாத்திய அசாத்தியமும் அந்நோய்களுக்கு மருந்துகளும் விரிவாக நமது சித்தர்கள் விவரித்திருக்கின்றார்கள். காலம் செல்லச் செல்ல "பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல காலவகையினானே" என்பதற்கிணங்கவோ என்னவோ வைசூரிநோயை மக்கள் மாரி என்றும், அம்மை என்றும் அதற்கு மந்திரம் செபித்தல், கோவில்வலம்வருதல், சிறுதேவதைகளுக்குப் பலியிடல், தலைமயிரை மொட்டை அடித்தல், அலகுகுத்தல், காணிக்கை செலுத்தல் முதலிய கொடிய பழக்கங்களை மேற்கொண்டு மனந்தடுமாறி தத்தளித்து வருகின்றனர்.

வைசூரியும், விஷபேதியும் ஒரேமாதிரியான தொற்றுவியாதி எனினும் அவை இரண்டிற்கும் வேற்றுமை உண்டு. விஷபேதி முக்கியமாய் தண்ணீர் சம்பந்தத்தாலும், வைசூரி குடியிருப்பிடத்தாலும் உண்டாகின்றன. ஆனால் ஓர் ஊரில் விஷபேதி உண்டாகுமாகில் அது இன்றைக்கு வடகோடியில் ஒருவனுக்குக் காணப்பட்டால் மறுநாள் மற்றொருவனுக்குத் தென்கோடியில் காணுகிறது. அதற்குக் காரணம், விஷபேதி அழுக்குத்தண்ணீரிலே உற்பத்தியாகி வளர்கிறது. அதில் உற்பத்தியாகும் விஷப்பூச்சிகளுக்கு முக்கிய ஆகாரம் அழுக்கே. அவ்வழுக்கு இல்லாவிட்டால் அவைகளும் நசித்துப்போகும். இந்த விஷப்பூச்சிகள் சம்பந்தமான தண்ணீரை உபயோகிப்பவர்களுக்குக் காலராநோய் உண்டாகும் என்பது திண்ணம். ஒருநகர் நடுவிலாவது, நகரத்தின் அருகிலாவது உள்ள ஆறுகளில் அவ்வூர் சாக்கடைநீரும், மழைபெய்யுங்காலத்தில் அந்த ஊரிலுள்ள அழுக்குகளும் அவ்வாற்றுநீரில் கலக்கும். ஆற்றங்கரையிலுள்ள மக்கள் ஆற்றுநீரை குடிக்கவும், சமையல்செய்யவும் உபயோகிப்பார்களானால் அங்குள்ள மக்கள் அந்நோய்க்கு இரையாவார்கள். இப்படியே குளங்களிலும், ஏரிகளிலும், கிணறுகளிலும் சாக்கடை மல, சலம் முதலிய அழுக்கு நீர் கலப்பதால் காலராநோய் உற்பத்தியாகின்றது

அம்மைநோய், நாம் வசிக்கும் இடமானது சவுதி நிறைந்ததும், எப்போதும் ஈரணைப்பு உடையதும், மரங்களால் நிழல் தாக்கப்பட்டதுமாக இருப்பதனாலும், கால்நடைகள் இருக்கும் இடத்தை அப்போதைக்கப்போது சுத்திசெய்யாததினாலும் உண்டாகின்றது. அறிவினத்தால் மேற்சொல்லிய நோயாளர்களுடைய துணிகளையும், மலஜலங்களையும் வீட்டுக்கு அருகிலுள்ள பொதுக்கிணறுகளிலும் குளங்களிலும் சுத்திசெய்வதாலும், மலஜலத்தைப் பள்ளத்திலிட்டு மூடாததினாலும் அம்மை என்னும் வைசூரிநோய் பரவுகின்றது.

(தொடரும்)



## மருத்துவப்பெரியார்

## சிறுத்தொண்டர் வரலாறு

(78-ஆம் பக்கத்தொடர்ச்சி)

திருஞானசம்பந்தர் திருச்செங்காட்டங்குடி பதிகத்தில் சிறுத்தொண்டரைச் சிறப்பித்துப் பாடி, தமது பரிவாரங்களோடு சிறுத்தொண்டரின் இல்லத்தில் திருவமுது செய்துகொண்டு அவரோடு அன்புடன் அளவளாவி அவரைப்பிரிந்துச்செல்ல மனமில்லாதவராகச் சிலநாள் அவர் இல்லத்தில் கழித்தபின்னர் சிறுத்தொண்டரிடம் விடைபெற்று திருமருகலுக்குச் சென்றார்.

சிறுத்தொண்டர் தாம்செய்யும் திருத்தொண்டை குறைவற நடாத்திவரும் நாளில் எல்லாம்வல்ல இறைவன் சிறுத்தொண்டரின் அன்பின் பெருமையையும், மனவலியின் மாண்பையும் உலகில் எல்லோரும் அறிவதற்காக சிறுத்தொண்டரின் அறநிலயத்திற்கு வழக்கம்போல் வரும் அதிதிகள் ஒருவரும் அன்று வராமற் செய்தனர். சிறுத்தொண்டர் நாள்தோறும் அடியார்களுக்கு உணவளித்த பின்னரே தாம் உண்பதென்னும் கொள்கையை உடையவராதலால் அன்று வழக்கம்போல் ஒருவரும் உண்ண வராமையைக்கண்டு தானும் மனைவியும் மிகக் கவலையடைந்து தமது பணியாளர்களை அனுப்பி அடியார் யாரையேனும் அழைத்து வரச்சொன்னார். பணியாளர் பல வீதிகளிலும் பார்த்து ஒருவரேனும் அகப்படாததை வந்து அறிவித்தனர். பின்னர் சிறுதொண்டர் தானே வெளியேபோய் ஒரு அடியாரையேனும் தேடிப்பார்த்து அழைத்துவருவதாக மனைவியிடம் கூறிச் சென்றார்.

தொண்டர் அடியாரைத் தேடி வெளியே சென்றசமயம் சிவபிரான் ஒரு தவமுனிவன் (வயிரவர்) வேடந்தாங்கி சிறுத்தொண்டரின் வீட்டுவாயிலை அடைந்து "பசிநோய்க்கு உணவு அளிக்கும் சிறுத்தொண்டர் வீட்டில் உளரோ" வென்று கேட்டார். ஆங்குள்ள சந்தன நங்கையார் விரைவாக வந்து வணங்கி "முனிவரே, எங்கள் தலைவர் இதுகாறும் அடியார் ஒருவரையும் காணாமையால் மிகக் கவலையுற்று அடியாரை அழைத்து வருவதற்கு வெளியே சென்றுள்ளார்; விரைவினில் வருவார். தாங்கள் சிறிது நேரம் இவ்வீட்டினுள் வந்து அமருங்கள்" என்று கூறினார். அதைக்கேட்ட வயிரவர் 'பெண்கள் உள்ள இடத்தில் நாம் தனியே வருவதற்கியலாது' என்று

கூறினர். அதைக் கேட்டுக்கொண்டிருந்த வெண்காட்டு நங்கை "இப்
பெரியார் போய்விடுவார் போலிருக்கிறது" என்றெண்ணி விரைவாக
ஓடிவந்து அத்தவசியை வணங்கி "ஆண்டவனே, எனது நாயகர் அடி
யவர்களுக்கு உணவளித்தபின்னரே தாம் உண்ணுவதென்னும் கொள்
கையுடையவர்; இன்று ஒரு அன்பரையும் இதுகாறும் காணாது மிக
வருத்தத்தோடு தேடப்போயிருக்கின்றார். உம்மைக் காண்பாராயின்
மிக மகிழ்ச்சி அடைவார்; விரைவினில் வருவார். தேவரீர் உள்ளே
எழுந்தருளும்" என்று வேண்டிக்கொண்டார். அதற்கு வயிரவர் "நாம்
இருப்பது வடநாடு; மிகப்பசியோடு சிறுத்தொண்டரைக் காணவந்
தோம். அவர் இல்லாக்காலத்தில் பெண்கள் தனித்திருக்கும் இல்லத்
தில் நாம் தங்கோம். இவ்வூர் கணபதீச்சரத்தின்கணுள்ள ஆத்திமரத்
தடியில் இருக்கின்றோம். அவர் வந்ததும் அறிவியுங்கள்" என்று
கூறிச்சென்றார்.

சிறுத்தொண்டர் அடியவர்களைத்தேடி எங்குங் காணாது மிக
வருத்தத்தோடு திரும்பி வீட்டிற்கு வந்து தனது நாயகியிடம்
சொல்லி வருந்தினர். அவ்வம்மையார் "இப்பொழுது இங்கே வட
நாட்டுத்தவசி ஒருவர் வந்தார்" என்றதும், மருத்துவரதிபர் உடனே
மகிழ்ந்து "அவர் எங்கேபோயினர்," என்று கேட்டார். வெண்காட்டு
நங்கை "அவரை இங்கே இருக்கவேண்டினேன்; அவர் அதற்கு இசை
யாது கணபதீச்சரத்தில் ஆத்திமரத்தின்கீழ் இருப்பதாகக் கூறிச்சென்
றார்," என்று சொன்னார்.

அதைக் கேட்டவுடனே சிறுத்தொண்டர் அம்புபோல் விரைந்
தோடிச் சென்று ஆத்திமரநிழலில் வயிரவரைக்கண்டு வணங்கி
"தேவரீர் பசியோடு அடியேனைத் தேடிவந்த சமயம் நான் மனை
யில் இல்லாமைக்காக மனம் வருந்துகின்றேன். நீர் மனம்பொறுத்து
எழுந்து இல்லத்துக்குவந்து உணவருந்தவேண்டும்," எனக் கேட்டுக்
கொண்டார். வயிரவர் "பெரிய சிறுத்தொண்டர் நீர்தானே" என்று
வினவ நாயனர் 'அடியேன்தான்' என்று சொல்லி "வழக்கம்போல்
அமுதுசெய்விக்க இன்று அடியவர் ஒருவரேனும் அன்னசாலைக்கு
வாராமையால் பணியாளர்களை விடுத்து அடியாரைத்தேடினேன். அடி
யவர் ஒருவரும் கிடைக்கவில்லை. மிகக்கவலையோடு நான் இந்நகர் வீதி
தோறும் தேடிப்பார்த்தும் காணமல் மிகப்பெரிதும் வருந்தி செய்வ
தொன்றும் தெரியாமல் வீட்டுக்குத் திரும்பிப்போனபோது எனது
மனைவியால் நீர் இங்கிருப்பதை அறிந்து மகிழ்ந்து ஓடோடிவந்தேன்;



உம்மைக் கடவுளாகக்கண்டேன்; பேரின்பங்கொண்டேன். தேவரீர்
அடியேன் இல்லத்திற்கு எழுந்துவந்து உணவருந்தவேண்டு" மெனப்
பிரார்த்தித்தார். அதைக்கேட்ட வயிரவர் "நாம் ஒரு தவசி, நாம்
இருப்பது வடநாடு, நீர் எம்போன்றவர் விருப்பப்படி யெல்லாம் அமு
தளிப்பதில் வல்லவர் எனக்கேள்விப்பட்டு வந்தோம். ஆனல் எமக்கு
உணவளிக்க உம்மால் இயலாதென நினைக்கின்றோம்," என்றார். அதை
க்கேட்ட சிறுத்தொண்டர் "மாதவரே, தேவரீர் திருவமுது செய்யும்
வழக்கத்தைத் தெரிவித்தால் உடனே சமைக்கச் செய்வேன். சிவனடி
யார்களுக்கு செயற்கரிய எச்செயலும் எளிதேயாகும்போது தாங்கள்
உண்ணும் எவ்வகை உணவும் செய்வது எம்போன்றார்க்கு பெரியகாரி
யம் அல்ல," வென்றார். அது கேட்டமுனிவர் "நாம் ஆறுதிங்கட்
கொருமுறை பசுவைக் கொன்று சமைத்துண்போம்; நாம் உண்ணும்
நாள் இன்றேயாகும். அங்ஙனம் எமக்கு உணவளிக்க உம்மால் முடி
யாது," என்றார். அதைக்கேட்ட சிறுத்தொண்டர் "மிகவும் நல்லது;
பசு, எருமை, ஆடுமுதலிய விலங்கினங்கள் மந்தை மந்தையாக வேண்
டியவைகள் நம் வசமிருக்கின்றன. முனிவரின் அமுதுக்கு வேண்
டியபசு இன்னதெனத் தெரிவித்தால் நான் போய் உமது விருப்பப்படி
உணவை ஆக்குவித்து விரைவில் திரும்பி வருவே" னென்றார். அதற்கு
வயிரவர் "நாம் உண்ணும் பசு நரபசுவாகும். அது ஐந்து வயதுடைய
தாயும், உறுப்புக்களில் குறைவில்லாததாயும், ஒரு குடிக்கு ஒன்றாயும்
இருத்தல் வேண்டும். அதைத்தாய் மனமகிழ்ச்சியோடு பிடிக்க தந்தை
அரியவேண்டும். இங்ஙனம் சமைத்தாலன்றி நாம் உண்ணோம் " என்
றார். இதைக்கேட்ட மகாவீரராகிய சிறுத்தொண்டர் இது இறைவ
னின் சோதனைபோலும் என்றெண்ணி "ஆண்டவனே, நீர் மகிழ்ச்சி
யோடு உண்ணும் வழக்கம்போல் உண்டு உமது பசிநோய் தீர்வதற்கு
இதனையும் நான் விரைவில்போய் தமது விருப்பப்படி செய்விப்பேன்"
என்று வீட்டிற்குப்போனர்.

அவரது வரவை ஆவலோடு எதிர்பார்த்திருந்த மனைவியார் கண
வன் முகமலர்ந்து வருவதைக்கண்டு அகமலர்ந்து 'வயிரவர் எங்கே,
என்றுகேட்கத் தொண்டர் அவர்கூறியதைச்சொன்னர். அதுகேட்ட
நங்கையார் "ஒரு குடிக்கு ஒருவனை உள்ள ஒரு சிறுவனை யார்
கொடுப்பார்கள்" என்றுகூற, தொண்டர் மனைவியைப்பார்த்துப் பொன்
னசை மிகுதியால் அடியவர்சொன்ன இலக்கணங்கள் நிறைந்த குழந்
தையைக் கொடுப்போருமுளர். ஆனல் அச்சிறுவனைத் தாங்களே பிடி

த்து மகிழ்ச்சியோடு அரியக்கூடிய மாதாபிதாக்கள் இலர். ஆறுதிங்கட்
கொருதடவை உண்ணும் தவத்திற்சிறந்த பெரியார் மிகப்பசிநோயோடு
வருந்திக்கொண்டிருக்கின்றார். ஆதலால், இனி காலந்தாழ்த்தாது நமது
அருமைப்புதல்வனையே அழைப்போம்,'' என்றுசொன்னார். உடனேசிறி
தும் ஆலோசியாது கணவன் கருத்துக்கிசைந்தொழுகும் நங்கையார்
"நம்மைக்காப்பாற்றவந்த குலமணியை பள்ளியினின்று அழைத்துவா
ரும்'' என்ன, சிறுத்தொண்டர் அளவிலா ஆனந்தமடைந்து பள்ளிக்கு
ஓடிச்சென்று சீராளதேவரை எடுத்துத் தோள்மேல்வைத்துக்கொண்டு
வீட்டுக்குவந்தார். வீரத்தாயாகிய வெண்காட்டு நங்கையார் எதிர்
சென்று சீராளனைவாங்கித் தலைமயிரைத்திருத்தி திருமுழுக்காட்டிக்
கணவனிடம் கொடுத்தார். சிறுத்தொண்டர் மகனை அன்புடன்
வாங்கி ஒருவருக்கும் தெரியாத மறைவிடத்திற்செல்ல நங்கையார்
ஏனங்களை நன்றாகச் சுத்தஞ்செய்து உடன்கொண்டுபோனார். ஆயுதங்
களைக்கொண்டரிந்து உடற்கூறுகளைச் சோதித்து மக்களின் கொடிய
நோய்களை நீக்கின மகாமருத்துவரும், உலகத்திற்குத் தீமைசெய்த
பகை அரசர்களை தமது வாளால் அரிந்து வதைசெய்த போர்வீரரு
மாகிய சிறுத்தொண்டர் புதல்வருடைய சிரசைப்பிடிக்க, அம்மையார்
பிள்ளையின் காலை மடியிலே இடுக்கி இரண்டு கைகளையும் தமது
இரண்டு கைகளாலும் பிடித்தார். சீராளதேவர் தாய்தந்தையர்கள்
தம்மிடம் விளையாடி மகிழ்வதாக எண்ணி சந்தோஷித்து நகைத்
தனர். அப்போது, சிறுத்தொண்டர் தமதுவிரதம் நிறைவேறுவதற்கு
மனம் ஒத்து மகன் நமக்குப் பெரும்பேறளித்தனன் என்று கருதி
இன்பக்கடலில்தோய்ந்து அன்புமயமாய் விளங்கி, இதுவும் இறைவன்
சம்மதமெனக்கொண்டு, தன்வயமற்று சிவமயமாகி கருவிகொண்டு
இறைவனைநினைத்து புத்திரசிகாமணியின் தலையை அறுத்தார். தனது
நிலையையும் உலகையும் மறந்த வெண்காட்டுநங்கை சீராளரின் தலை
சமையலுக்கு உதவாதெனக்கருதி அதனை மறைக்கும்பொருட்டு, எத்
கைய அரிய செயலுக்கும் ஒத்திருந்து உதவிசெய்யும் சந்தன நங்கை
யிடம் கொடுத்து மற்ற உறுப்புக்களின் இறைச்சியை அறுத்து பல்
வகைக் கறிகளாகப் பாகமாக்கித் தமது நாயகருக்குத் தெரிவித்தார்.
தாம்கொண்ட கொள்கையிலே வீராவேசத்துடனிருந்து நன்மை
தீமை என்பதறியாமல் எல்லாம் சிவன் செயலெனக்கண்டு களித்திருந்
கும் வீரபக்தராகிய சிறுத்தொண்டர், மிகவிரைவாகச்சென்று "சுவாமி,
தேவரீர் விரும்பியபடியே திருவமுது பாகஞ்செய்வித்திருக்கின்றேம்;
எழுந்துவந்து அமுதருந்தவேண்டு''மெனச்சொல்லி மிக அன்புடன்
அவரை வீட்டுக்கு அழைத்து முறைப்படி உபசரித்து திருவமுதிட்
டனர்.

(தொடரும்)

## இலங்கை மருத்துவர்களுக்கு

### எனது தாழ்மையான விண்ணப்பம்

அன்புமிக்க சகோதரர்களே!

நமது குலத்தொழிலாகிய மருத்துவத்தைக்காத்து வளர்ப்பதற்காகவும், மருத்துவகுலத்தினரின் மரியாதைக்காகவும் கைம்மாறு கருதாது சுமார் பதின்மூன்று ஆண்டுகளாக சங்கங்களைநிறுவி, ஊரூராகச் சென்று உபந்நியாசங்கள்மூலமாகவும் கடிதங்கள்மூலமாகவும் உழைத்துவரும் நமது தலைவர் பண்டிட் ஆனந்தம் அவர்களுக்கு மருத்துவ குலத்தவர்களாகிய நாம் எவ்வித நன்றி செலுத்தினபோதிலும் அவர் நமக்குச்செய்யும் உதவிக்குச் சமமாகாது. ஆனால் நாம் செய்யவேண்டியது ஒன்றே ஒன்றுள்ளது. அதாவது மருத்துவகுலத்தினர் ஒவ்வொருவரும் நமது தலைவரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி குலாபிமானத்தைக் கருதி குல முன்னேற்றத்துக்கு, பணத்தினாலும், உடம்பினாலும் உதவிசெய்யவேண்டும். மருத்துவத்திற்காகவும், மருத்துவர்களின் மரியாதைக்காகவும் மருத்துவன் என்னும் பத்திரிகையைத்தொடங்கி நம்மவர்களுக்கு மூன்றுமாதங்களாகச் சும்மா அனுப்பித்துவருகின்றார். அப்பத்திரிகையைப்பெற்று நாம் சும்மாயிருக்கக்கூடாது; பத்திரிகைகள், ஆதரிப்பவர்களைப் பொருத்துதான் நீடித்து நடைபெறுகின்றது. கண்தெரியாக் குருடர்களைப்போலிருந்த நம்மை கண்திறக்க வைத்தவர் நமது தலைவர் பண்டிதர் ஆனந்தம் அவர்களே என்பதைக் கொஞ்சமும் நாம் மறக்கக்கூடாது. ஆனந்தம் அவர்கள் 1924-ஆம் ஆண்டு இலங்கைக்குவந்து சுமார் இருபதுநாள்வரை நம்மவர்களுக்கு நடுவில் இரவுபகல் எவ்வளவோ அரிய பெரிய விஷயங்களையெல்லாம் தேன்மாரிபோல் பொழிந்தார்கள். திருநெல்வேலி ஜில்லாவிலும் மற்ற ஊர்களிலும் நம்மவர்களின் நிலைமையைக்கண்டு வருந்தி கண்ணீர்வடித்துக் கதறினார்கள். மருத்துவர்களுக்காக பத்திரிகை ஒன்றைத் தொடங்கி அப்பத்திரிகையின் வாயிலாக எங்களுக்கு நல்லறிவுச்சுடர் கொளுத்தவேண்டுமென பலமருத்துவர்கள் நேரிலும் கேட்டுக்கொண்டார்கள்; கடிதங்கள் எழுதினார்கள். அதன்படியே நமது தலைவர் ஆனந்தம் அவர்களும் ஒத்துக்கொண்டு மருத்துவன் பத்திரிகையை நடத்திவருகின்றார்கள்.

ஆனால் வேடிக்கை விகடம்போன்ற பத்திரிகைகளைப் பலரும் வாங்குவார்கள்; ராஜீய, தேசீயப்பத்திரிகைகளையும் பலரும் வாங்கிப்

படிப்பார்கள். மருத்துவர்களுக்காக நடைபெறும் பத்திரிகையை மருத்
துவர்களும் மருத்துவத்தொழிலைச் செய்கிறவர்களுந்தான் அதன்
அருமைதெரிந்து வாங்கவேண்டும். ஆதலால் மருத்துவகுலத்தினர்க
ளில் படித்தவர்கள் மிகக்குறைவாயிருப்பதாலும், குலாபிமானம்,
மருத்துவத்தொழிலில் அபிமானமில்லாதவர்கள் மிகுதியாயிருப்பதா
லும் மருத்துவன் பத்திரிகையை ஆதரிப்போர் அதிகமாயில்லாவிடில்
பலபத்திரிகைகள் தோன்றி மறைவதுபோல், மருத்துவனும் சிலமாதங்
களில் மறைந்துவிடக்கூடாதெனப் பயந்தே இதுவரை நமதுதலைவர்
மருத்துவன் பத்திரிகையைத் தொடங்காமல் இருந்து கடைசியாக,
மருத்துவர்களுடைய குலாபிமானமும், யோக்கியதையும் எவ்வளவில்
இருக்கிறதென்பதைப் பார்ப்பதற்கும், மருத்துவர்களுக்காகத் தாம்
செய்யவேண்டிய அலுவல்களில் பாக்கியாயிருந்த பத்திரிகையையும்
நடத்தித் தனது கடமையையும் தீர்ப்பதற்கும் துணிந்தார்; சென்ற
மூன்றுமாதப் பத்திரிகைகளையும் நமக்கு அனுப்பிவைத்திருக்கின்றார்.

நமது பண்டிதர் ஆனந்தம் அவர்கள் சென்னையிலுள்ள அவரு
டையமருத்துவசாலையில் அவருக்குள்ள தொல்லைகளோடு, தென் இந்
திய மருத்துவர்சங்கத்தின் அலுவல்களும், தமிழ் தருமவைத்தியசாலை
யின்அலுவல்களும், சங்கத்தில் ஏழைப்பிள்ளைகளை ஆதரித்து உண்டி
உடை, !உறைவிடம், கல்வி முதலியவைகள் கொடுத்து ஆதரித்துவரு
வதும் போதாமல் மருத்துவன் பத்திரிகையையும் மருத்துவர்களுக்
காகவே மருத்துவர்களையே நம்பி நடத்திவருகின்றார். நமது தலைவர்
பொதுஜனங்களின் மதிப்பையோ, பணத்தையோ கருதி, பத்திரிகை
நடத்த முன்வந்திருப்பாராகில், பொதுஜனங்களின் கவனத்தைக்
கவரத்தக்கவிதமாக வேறு பெயரை பத்திரிகைக்கு வைத்திருப்பார்.
அவர் மருத்துவர்களுக்கென்றே ஆரம்பித்தபடியால் பொதுஜன ஆதர
வைக்கூட பெரிதாகக் கருதாமல் மருத்துவன் என்ற பெயரையே பத்
திரிகைக்கு வைத்தார்கள். இதனாலும் நமது தலைவருடைய தன்னல
மறப்பு வெளியாகின்றது மருத்துவன் பத்திரிகை வாயிலாக மருத்து
வகுலப் பெரியார்களின் வரலாறுகளும், மருத்துவர்களின் உற்பத்தி
முதலியவைகளும் தாம் மிக நுணுகி ஆராய்ந்த அரிய விஷயங்களும்
மருத்துவனில் ஒவ்வொன்றாக வெளியிடப்படும் என நமக்கு
நேரில் சொன்னார். அதுபோல் முதலில் மருத்துவப் பெரியாராகிய
சிறுத்தொண்டர் வரலாறு எழுதிக்கொண்டு வருகின்றார். அவ்வர
லாற்றில் இதுவரையில் யாரும் வெளியிடாத பொருள்களும், நடத்



களும் மலிந்து மிளிர்கின்றன. இதனை மருத்துவர்களும் பொது
ஜனங்களும் படித்துணரவேண்டியது இன்றியமையாததாகும்.

2,18948

ஆதலால் "காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்" என்ற பழமொழி
யின்படி நமது பண்டிதர் ஆனந்தம் அவர்கள் ஊரூராகச்சென்று
பொதுமக்களையும், நம்மவர்களையும் கூட்டிக் கல்லும் கரையும் வண்
ணம் உபந்நியாசங்கள்செய்து, பத்திரிகைகளுக்கு எழுதியும், மகாநாடு
கள்கூட்டி பல தீர்மானங்கள்செய்து அரசாங்கத்துக்கு அனுப்பியும்
செய்த பெருங்கிளர்ச்சியால் நாம் இப்போது மருத்துவர் என்றும்,
பண்டிதர் என்றும் தைரியமாகச்சொல்லி வெளியில் வந்தோம். வேதா
கமபுராணங்களை எல்லாம் ஆராய்ந்து நம்முடைய பெரியோர்களாகிய
சிறுத்தொண்டர், மாணிக்கவாசகர், மருத்துவன் தாமோதரனார், தன்
வந்திரிபோன்றவர்களை நாம் அறியும்படி செய்தார். இன்னும் மருத்து
வர்கள் விஷயமாக கல்வெட்டுகளிலும், செப்பேடுகளிலும், தாம் பார்த்
துள்ள பலவிஷயங்களை மருத்துவனில் வெளியிடக் கருதியுள்ளார்.
ஆதலால் நமது குலத்தலைவர் அவர்களால் நாம் இன்னும் எவ்வளவோ
விஷயங்களை அறிந்துகொள்ளவேண்டும். நம்மால் நமது தலைவர் அவர்
களுக்கு ஆகவேண்டியது ஒன்றுமில்லை. அவரால் நமக்கு ஆகவேண்
டிய காரியங்கள் மிகுதியாயிருக்கின்றன. நமது தலைவரால்தான் நம்ம
வர்களில் பலருக்கு இவ்வளவாவது கண் திறக்கப்பட்டு மனிதத்
தன்மைவந்தது. இதை மறந்த மருத்துவன் மருத்துவனல்ல. அவன்
குலத்துரோகியும், குருத்துரோகியுமே ஆவான். நமது தலைவர் எவ்வ
ளவோ கஷ்ட நஷ்டத்தோடு மருத்துவன் பத்திரிகையை நடத்தி வரு
கின்றார். மருத்துவன் பத்திரிகையை இலங்கையிலும் பினாங்கு, சிங்
கப்பூர், கோலாலம்பூர், முதலிய வெளிநாடுகளிலும், உள்நாடுகளிலும்
தனக்குக்கிடைத்த மருத்துவர் விலாசங்களுக்கெல்லாம் மூன்றுமாத
மாக அனுப்புகின்றார்.

நான் தற்சமயம் வசிக்கும் இலங்கையில் பல மருத்துவர்களுக்
கும் மருத்துவன் பத்திரிகை வருகிறது. பலர் பத்திரிகை வந்ததும்
முற்றும் படிக்காமல் ஒரு மூலையில் போடுகின்றார்கள். சிலர் வருஷத்
துக்கு மூன்றுரூபா சந்தாவென்றதைப் பார்த்ததும், பயந்து தனக்கு
மூன்றுரூபா கொடுக்க முடியாதென்று திருப்புகின்றார்கள். இம்மருத்
துவர்கள் மாதம் நாலணாவீதம் ஒருவருஷத்துக்கு மூன்றுரூபா கட்ட
முடியாதென்பது உண்மையல்ல. குலாபிமானமில்லாமையும், மருத்
துவனின் அருமையறியாததுமே காரணமாகும். சிலர் தனக்கு பத்தி

ரிகை படிக்கக்கூடிய படிப்பில்லை என்னலாம், ஆசையிருந்தால் பணம் கட்டி வாங்கி பக்கத்திலுள்ள படித்தவர்களைப் படிக்கச்சொல்லி தான் காதால் கேட்டு அறியலாம். மருத்துவர் தங்களுக்கு செய்துகொள்ளும் நியாயமான செலவைத்தவிர வேடிக்கை உடைகளுக்கும், நகைகளுக்கும், டம்பகாரியங்களுக்கும் எவ்வளவோ செலவு செய்கின்றார்கள். மருத்துவன் பத்திரிகைக்குமட்டும் பணம் அதிகமென்றும், தம்மால் அதைவாங்கிப்படிக்க முடியாதென்றும், படிக்கத் தனக்கு நேரமில்லை என்றும் ஏதாவது போலிக்காரணங்கள்சொல்லி திருப்பி விடுகின்றார்கள். அந்தோ என் அருமைச்சகோதரர்களே! இதற்காகத்தானே நமது தலைவர் நமக்காக இந்த பாடுபட்டார்; இன்னும் பாடு படுகின்றார். இலங்கையில் ஆயிரக்கணக்கில் மருத்துவர்கள் இருக்கின்றோம். மருத்துவன் நூறுபத்திரிகைக்குக்கூட இலங்கையிலுள்ளவர்கள் பணம் அனுப்பி சந்தாதாரராகச் சேரவில்லை என்பதை அறிய மிகக்கவலைப்படுகின்றோம். மோசம்போகாதீர்கள்! குலதருமம் செய்யுங்கள்! உடனே செய்யுங்கள். நம்மவர்களில் தான்றோன்றித் தம்பிரான் சிலர் நமது தலைவரிடத்தில் பொறாமைகொண்டு, சங்கதி ஒன்றும் தெரியாமல் நடுவில் உங்களைக்கலைத்து, இலங்கை மருத்துவர் சங்கத்தின் ஒற்றுமையைக் குலைத்து நமது முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டை போடுவார்கள். அவர்கள் நமதுகுலத்தைக்கெடுக்கும் கோடரிக்காம்பு போன்றவர்கள். அவர்களால் மோசம்போகாதீர்கள். இலங்கை மருத்துவர் சங்கத்தை ஒன்றுசேருங்கள். காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளுங்கள். இதுவன்றி,

தென் இந்திய மருத்துவர் 3-வது மகாநாடு கூட்டவேண்டியதற்கும் மற்றும் சில முக்கியமான காரியங்களுக்கும் குடி அரசு, திராவிடன், மருத்துவன் முதலிய பத்திரிகைகள்மூலம் பல விளம்பரங்கள் வெளியிட்டிருக்கின்றார்கள். அவ்விதம் வெளியிட்டிருந்தும் கொழும்பு மருத்துவர் சங்கத்தலைவர்களும் கௌரவகாரியதரிசியும், கண்டி மருத்துவர்சங்க கௌரவகாரியதரிசியும் இருதறப்பிலுமுள்ள மருத்துவ சகோதரர்களும் இதற்கு எவ்வித முயற்சியும் எடுத்துக்கொள்ளாமல் "யாருக்குவந்த விருந்தோ" என்று நினைத்துக்கொண்டு சும்மா இருக்தால் அது மிகவும் வருந்தத்தக்கதாகும். நமது தலைவர் பண்டிதர் அவர்கள் இரண்டுமுறை மகாநாடுகள் நடத்திக்காண்பித்திருக்கிறார்கள். பத்திரிகை நடத்துவதில் அவருக்கு ஏற்பட்டிருக்கும் தொல்லையோடு இம்மூன்றும் முறையும், மகாநாடு கூட்டுவதற்கும் அவரையே எதிர்பார்ப்பது கூடாது. எத்தனைகாலம் அவருடைய உழைப்பையே நாம் எதிர்பார்த்துக்கொண்டிருக்கமுடியும்; அவர் நமக்காக ஏற்படுத்திய அவ்வியக்கத்துக்கு நாமன்றோ ஆதரவுகாட்டவேண்டியவர்கள். நமது தலைவரவர்கள் ஆலோசனையின்படி முன்வந்து காரியங்களை ஒற்றுமையோடுசெய்து வெற்றியுறவேண்டும். அதுவன்றோ தலைவரைப் பின்பற்றும் நமக்கு அழகு. ஆகையால் சகோதரர்களே! மறுமுறையும் தங்களை யான் தாழ்மையோடு பன்முறை வணங்கிக் கேட்டுக்கொள்வதென்னவென்றால், இக்காரியத்திற்கு ஒருவரையொருவர்முந்தப்பார்க்கவேண்டும்; வீரஞ்செறிந்த ஆண்மக்களாய் வெளிவந்து, நமது குல முன்னேற்றத்துக்கு மருத்துவர்களுக்கு தலைவராயுள்ள பண்டிட் ஆனந்தம் அவர்களின் ஆலோசனைப்படி தீவிர ஊக்கங்காட்டி உழைக்கவேண்டுமென்பதே எனது வேண்டுகோளாகும்.

**வெ. வையாபுரிப் பண்டிதர்**

**வியாங்கொடை, சிலோன்.**

---

## தென் இந்திய மருத்துவர் சங்கம்.

### ஓர் பொதுக்கூட்டம்.

18-1-29-ஆம் நாள் மாலை 5-மணிக்குச் சென்னை 221 தங்கசாலைத்தெரு தென்னிந்திய மருத்துவர் சங்க நிலையத்தில் தமிழ்ப்புலவர் எஸ். எஸ். அருணகிரிநாதர் அவர்களின் அவைத்தலைமையில் மருத்துவர்களும் மற்ற அன்பர்களும் பெருங்கூட்டமாகக் குழுமி இருந்தனர்.

அதுகாலை காலஞ்சென்ற தலைவர் பானகல் அரசர் அவர்களின் மரணத்தால் நமக்கு ஏற்பட்டுள்ள ஆராத்துயரத்தை தென் இந்திய மருத்துவர் சங்கத்தின் சார்பாக அவர் குடும்பத்தினருக்கு அறிவித்துக்கொள்ள வேண்டுமென ஒரு தீர்மானம் பண்டிட் எஸ். எஸ். ஆனந்தம் அவர்கள் கொண்டுவர டாக்டர் மாசிலாமணிமுதலியார் அவர்கள் ஆமோதிக்க திரு - சாரங்கபாணி ஆச்சாரியார் அதை ஆதரித்துப் பேசினர்.

பின்னர், பண்டிட் ஆனந்தம் அவர்கள் நமது சென்னைமாகாண அபிவிருத்தி இலாக்கா மந்திரி திரு S. முத்தையாமுதலியாரவர்கள் வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை செய்கையில் காட்டியதற்கு நமது நன்றியறிதலை தென் இந்திய மருத்துவர் சங்கசார்பாக முழுமனது

டன் அவருக்குத் தெரிவித்துக் கொள்ளுவதோடு மதுவிலக்குப் பிரசார விஷயத்திற்கு முன் வந்திருப்பதற்கும் வந்தனமளிப்பதாகவும் பேசியபின்னர் திரு - எஸ். வி. பாலகிருஷ்ணபிள்ளை அவர்களும், திரு - முத்துக்குமாரசாமி வைத்தியரும் அதை ஆதரித்துப் பேசினார்கள்,

கும்பகோணம் தேவஸ்தானக் கமிட்டியில் அங்கத்தினராயுள்ள திரு - வி. கனகசபை நாடாரவர்கள் இந்துக்களாயுள்ள யாவரும் இந்துக்கோயில்களுக்குள் சென்று சுவாமி தரிசனம் செய்ய உரிமை அளித்தல் வேண்டுமென அக்கமிட்டியில் கொண்டுவந்திருக்கும் தீர்மானத்தை இச்சங்கம் முழுமனதுடன் ஆதரிப்பதோடு அவருடைய தீர்மானத்தை நிறைவேற்றிவைக்க அக்கமிட்டியிலுள்ள மற்ற அங்கத்தினர்களையும் கேட்டுக்கொள்வதாக பண்டிட் ஆனந்தம் அவர்கள் பிரேரேபித்ததை திரு - எம். நாதமுனிபிள்ளை அவர்கள், எம். சரவணபிள்ளை அவர்கள், திரு - சாரங்கபாணி ஆச்சாரியார் முதலியவர்களும் ஆதரித்துப் பேசினார்கள்.

அருப்புக்கோட்டைக்குச் சமீபத்திலுள்ள பாளையம்பட்டி என்னும்கிராமத்தில் மருத்துவகுலத்தவர்கள் தாம் இதுவரை கோயிலுக்குள் வழக்கம்போல் சென்றுவந்த இடம்வரையில் இப்பொழுது போகக்கூடாது என்று அக்கோயில் பட்டர்களாலும், கூலிக்காரர்களாலும் தடுக்கப்பட்டார்களென்று பத்திரிகைகளில் கண்டு இக்கூட்டத்தார் வருந்துவதாகவும், அங்குள்ள கோயிலார் செய்கையைக் கண்டிப்பதாகவும் ஒரு தீர்மானம் பண்டிட் ஆனந்தம் அவர்களால் பிரேரேபிக்கப்பட்டு திரு - நாதமுனி பிள்ளை அவர்களும், பின்னர் முத்துராமபிள்ளை அவர்களும் ஆதரிக்க தீர்மானம் நிறைவேறியது.

பின்னர், ஆலயப்பிரவேசக் கிளர்ச்சி செய்வதற்கு சங்கமொன்று ஸ்தாபிக்க வேண்டுமெனும் தீர்மானம் ஒன்று நிறைவேறியபின், ஜார்ஜ் சக்கரவர்த்தியின் சுகத்துக்குப் பிரார்த்தனை செய்யப்பட்டு கூட்டம் இரவு 9-மணிக்குக் கலைந்தது.

---

## திருச்சிராப்பள்ளி மருத்துவர் சங்கம்

### இரண்டாவது ஆண்டுவிழா

5-1-29-ல் திருச்சி வரகநகர் மேட்டுத்தெரு வைத்தியர் க. பிச்சைமுத்து அவர்களின் வைத்திய சாலையில், இலங்கை மருத்துவர்சங்கத்தலைவர் மருத்துவர் வீ. கணபதி அவர்களின் தலைமையில் ஒரு



கூட்டம் நடைபெற்றது. சங்கத்திற்குக் காரிய நிர்வாகிகள் நியமனஞ் செய்யப்பட்டனர். பின்னர் அவைத்தலைவர் வீ. கணபதிஅவர்கள் ஒற்றுமையைப்பற்றியும் மருத்துவர்களுக்கு, மருத்துவன் பத்திரிகை உயிர்துணையாயுள்ளதென்றும், அம்மருத்துவன் பத்திரிகையை எல்லாமருத்துவர்களும் வாங்கி, நமது குலைத்தலைவர் பண்டிதர் எஸ்-எஸ் ஆனந்தம் அவர்களை ஊக்கப்படுத்தவேண்டுமெனவும் கூறினர்.

11-1-29. மாலை 5-மணிக்கு வக்கீல் திருவாளர் தி. பொ. வேதாசலம்பிள்ளை அவர்கள் தலைமையில் திருச்சி மருத்துவர் சங்கத்தின் இரண்டாவது ஆண்டுவிழாவின் கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம் இராஜரெத்தினம் என்னும் மருத்துவச்சிறுவனால் சுயமரியாதைப்பாட்டுகள் பாடப்பட்டன. பின்னர் சங்கக்காரியதரிசி சி. மு. இரத்தினம் அவர்களால் வருட அறிக்கை வாசிக்கப்பட்டது.

அதன்பின், ரெ. சின்னதுரை மருத்துவர், கல்வியைப்பற்றியும், ச. மதுரை மருத்துவர் சமயமும், நமது இயக்கமும் என்பதைப்பற்றியும் பேசினார்கள். க. பிச்சைமுத்து மருத்துவர் நமது குலத்தொழிலாகிய மருத்துவத்திற்கு வேண்டிய மருத்துவ ஞானத்தை நம்மவர்கட்குப் புகட்டவும், நமது குலப்பெரியார்களுடைய வரலாறுகளை நமக்கு எடுத்து அறிவிக்கவும், நமது குலமுன்னேற்றத்துக்கு உழைக்கவும் முன்வந்திருக்கும் மருத்துவன் என்னும் மாதப்பத்திரிகையை ஆதரிக்கவேண்டுவது ஒவ்வொரு மருத்துவ குலத்தவரின் கடமையெனவும், அவ்விதம் செய்வதால்தான் நாம் முன்னேறமுடியும் எனவும், நமது தலைவர் பண்டிட் ஆனந்தம் அவர்கள் திருச்சியிலுள்ள மருத்துவர்களை ஒற்றுமைப்படுத்தி மருத்துவர்சங்கம் நிறுவபட்ட பாட்டையும், திருச்சிமலைக்கோட்டை ஆலயப்பிரவேசத்திற்கு நம்மவர்களுக்காக திருச்சி கோயில்குருக்கள், மானேஜர் முதலானவர்களோடு வாதாடி பட்டபாடுகளையும், இன்றும் நம்மவர்களுக்காக செய்துவரும் வேலையையும், நாம் மறக்கக்கூடாது எனவும், சைமன் கமிஷனிடம் நமது குறைகளைத் தெரிவித்துக்கொள்ளவேண்டுமெனவும் பேசினர்.

ஜோதி நாயுனர் அவர்கள் மதம் என்பதைப்பற்றியும், தி. கோ. உபாத்தியாயர் சுந்தரராஜ நாயுடு அவர்கள் மருத்துவர்களின் முற்காலப் பெருமையையும் தற்காலச் சிறுமையைப்பற்றியும் விரிவாகப் பேசினார்கள்.

பின்னர் தலைவரவர்கள் கல்வி, அரசியல் சம்பந்தமாகவும், தற்காலம் மருத்துவர்கள் நடந்துகொள்ள வேண்டியதைப்பற்றியும் பேசினபிறகு கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பார்ப்பன ரல்லாதார் மாபெருந்தலைவர் பானகல் அரசர் காலஞ் சென்றதைக்குறித்து இக்கூட்டம் தங்களுக்கேற்பட்டுள்ள அளப்பரும் துயரத்தை அன்னார் குடும்பத்திற்குத் தெரிவித்துக்கொள்ளுகிறது.

சைமன் கமிஷனை வரவேற்று மருத்துவர்களின் குறைகளை கமிஷனிடம் தெரிவித்துக்கொள்ளுகிறது.

ஜியார்ஜ்சக்கரவர்த்தி உடல் நலம்பெற பிரார்த்திக்கிறது முதலிய வைகள். பின்னர் பூ, சந்தனம், தாம்பூலம், கற்கண்டு வழங்கப்பெற்று கூட்டம் கலைந்தது.

க. பிச்சைமுத்து.
வரகநகர், திருச்சி.

## ஓர் திருத்தத் திருமணம்.

பினங்கிலிருந்து ஓர் திருமண இதழ் கிடைக்கப்பெற்றோம். அதன்முகப்பில் வைக்கம் வீரரின் திரு உரு விளங்கியது.

மேற்கண்ட மணவினையை பேரா இந்து மகாஜன சங்கம் காரிய தரிசி திரு - ஐயாரு அவர்கள் தமிழில் நடத்திவைப்பார்கள். திரு - கருப்பண்ணவைத்தியர் திருமகன் அப்பாவுபண்டிதருக்கும், திரு - கலியபெருமாள் அவர்களின் மகள் திரு-ஜானகி அம்மாளுக்கும் இவ் வாண்டு தைமாதம் 9-ஆம் நாள் காலை இத்திருமணம் நடைபெறும். மணவினை முடிந்ததும் சுயமரியாதைச் சொற்பெருக்குகளும் நடைபெறும்.

இத்திருமணம் பார்ப்பன.கூலிப் புரோகிதர், போலிப்புரோகிதரின்றி, வீண் சடங்குகளின்றி சுயமரியாதைக் கொள்கையைத்தழுவி நடைபெறுமென்பதறிந்து மகிழ்வடைகின்றோம்.

இத்திருமணத்திற்குரிய மணமகள் திரு - க. ஜானகி அம்மை என்பவர் நமது மருத்துவன் பத்திரிகை மூன்றும் இதழில், மருத்துவச்செல்வனுக்கு நல்வரவுகூறி ஆசீர்வதித்த அம்மையார் தான் என்பதும், வேறு அம்மையார் என்பதும் அறிய விருப்பம். மற்றொன்று, மணமகன் மருத்துவவகுப்பினரென அறிகின்றோம். மணமகள் மருத்துவப்பெண் என்பதும் வேறு குலப்பெண் என்பதும் நமக்கு அறியக் கூடவில்லை. பெண் வேறுகுலமாயிருந்தால் இன்றியமையாத அக்கலப்பு விவாகத்தை மிக மகிழ்ச்சியோடு போற்றுகின்றோம்.

சுயமரியாதை முறைப்படி மணந்துகொண்ட மணமக்கள் இருவரும் மனமொத்து நெடுநாள் வாழ இறைவனை இறைஞ்சுகின்றோம்



## இரண்டு சித்த வைத்தியர்களின் மரணம்.

### தஞ்சை சிகாமணிபண்டிதர் அவர்கள்

தஞ்சை கரந்திட்டாங்குடி வைத்தியர் சிகாமணிப் பண்டிதர் அவர்கள் காலமானதாய் அறிந்து மிகக்கவலை அடைகின்றோம். சிகாமணிப்பண்டிதர் அவர்கள் சித்தவைத்தியமென்னும் நமது நாட்டு மருத்துவத்தில் மிகத் திறமையுள்ளவர்கள். அரசாங்கத்தார் சித்த வைத்தியத்தை ஆதரிக்க முயன்று நம்முடன் வேலைசெய்த மருத்துவப்பெரியார்களில் இவர் முக்கியமானவர். தன்னலங் கருதாதவர். பொதுமக்களுக்குத் தொண்டுசெய்வதிலேயே இவருடைய காலம் மிகுதியாகச் செலவழிக்கப்பட்டது. இவருடைய மரணத்தால் நமக்குள்ள துயரத்தை அவர் குடும்பத்தாருக்கு அறிவித்துக்கொள்ளுகின்றோம்.

### கரூர் வைத்தியர் பக்கிரியாபிள்ளை அவர்கள்

நல்ல மருந்துகளை முடித்து கொடுமையான நோய்களைப் போக்குவதில் பெயர்பெற்ற கரூர்வைத்தியர் பக்கிரியாபிள்ளை அவர்கள் இறந்ததாக அறிந்து மிக மனம் வருந்துகின்றோம். அவர் காலமானதால் நமக்குள்ள கவலையை அவர் குடும்பத்தார்களுக்கும், அவருடைய நண்பர்களுக்கும் வைத்தியர் நா. ப. குஞ்சிதபாதம்பிள்ளை அவர்களுக்கும் அறிவித்துக் கொள்ளுகின்றோம்.

## மதிப்புரை.

**வேளாளவாலிபன்** என்னும் பத்திரிகை கோயமுத்தூரிலிருந்து மாதம் இருமுறை வேளாளர்களின் முன்னேற்றத்துக்கு வேலைசெய்ய வெளிவருவது. உலகில் மக்கள் முதலில் செய்த தொழில் உழவுத் தொழிலேயாகும். அத்தொழிலைச்செய்த வேளாளமக்கள் பதினெட்டு வகைத் தொழிலாளர்களாகப் பிரிந்து ஒருவரோடொருவர் சேராமல் ஒவ்வொரு வகுப்பும் தனித்தனிச் சாதியாகி சிதறுண்டு கிடக்கின்றார்கள். இச்சாதிப் பிரிவென்னும் கோட்டையை உடைத்துத் தகர்க்கக் கூடிய ஒற்றுமை என்னும் பீரங்கியை நமது வேளாள வாலிபர்கள் கைக்கொள்ள ''வேளாளவாலிபன்'' வேலைசெய்வான் என்று நம்புகின்றோம். வருடசந்தா ரூ 3 0 0

## முன்னேற்றம், சிங்கப்பூர்.

நில உலகில் ஐந்து கண்டத்திலுமுள்ள மக்கள் தொகுதிகளெல்லாம் நாள்தோறும் அறிவுவளர்ந்து முன்னேறிச் செல்லுகின்றார்கள்.

இந்தியர்கள்மட்டும் இருந்த இடத்தைவிட்டு ஒரு அடிகூட பெயர்த்தெடுத்துவைக்க வியலாமல் சாதி, மதம் என்னும் இரண்டுவிலங்குகள் பூட்டப்பட்டவர்களாக இருந்து அடிமைகளாகவும், மக்களில் பதர் போன்றவர்களாகவும் இருந்து வாழாமல் வாழ்கின்றார்கள். இவ்விலங்குகளை உடைத்தெறிந்து சுயமரியாதை ஒற்றுமை என்னும் இரண்டு கால்களாலும் வீசிநடந்து முன்னேறிச் செல்லுதற்கு முன்னேற்றம் என்னும் பத்திரிகை தமிழ்மக்களுக்கு இன்றியமையாததாகும். இம் "முன்னேற்றம்" சிங்கப்பூரிலிருந்து வாரம் ஒருமுறை வெளிவரும். இதன் கௌரவ ஆசிரியர் வே. சி. நாராயணசாமி அவர்கள். முன்னேற்றம் நல்ல செந்தமிழ் நடையில் மிக அழகாய் எழுதப்பட்டிருக்கிறது. இதனை எல்லோரும் வரவேற்று ஆதரிக்கவேண்டும் எனக் கோருகின்றோம். இதன் வருஷ சந்தா ரூ. 5.

மானேஜர்:— முன்னேற்றம் ஆபீஸ்
152, சிலிகிரோட், சிங்கப்பூர்.

என்ற விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

---

## மருத்துவனுக்கு நன்கொடை அளித்த அன்பர்கள்.

(88-ஆம் பக்கத் தொடர்ச்சி)

| | | | |
|---|---|---|---|
| திரு - M. S. கபாலி கூலிம், கெட்டா, F. M. S. | ரூ. 5 | 0 | 0 |
| " V. M. முத்துக்குமாரசாமி வைத்தியர் பழையவண்ணாரப்பேட்டைசென்னை | 5 | 0 | 0 |
| " V. வையாபுரிபண்டிதர் வியாங்கொட, சிலோன். | ரூ. 2 | 0 | 0 |
| " த. அய்யாவு பண்டிதர் 781 டாட்டுக்கிராம் ரோடு, பினாங்கு. | 10 | 0 | 0 |

## மருத்துவனுக்கு முன்பணம் அனுப்பின அன்பர்கள்.

திரு - P. ராமையா அவர்கள்
சலாபம், சிலோன்.

" R. பரமார்த்தலிங்க வைத்தியர்
இடச்சகுளம், தெ. திருவாங்கூர்.



திரு - K. P. அய்யம்பெருமாள் பண்டிதர்
வார்டுபிளேஸ்ரோட், கொழும்பு.

" வெள்ளைச்சாமி பண்டிதர்
ராமாயணசாவடிதெரு, மதுரை.

" E. ஈஸ்வரமூர்த்தி பண்டிதர்
வடிவீஸ்வரம், நாகர்கோயில்.

" R. T. சுப்பையன் அவர்கள்
E & O. ஓட்டல், பினாங்கு.

" M. V. ரெங்கசாமி பண்டிதர்
ராஜமன்னார்குடி.

" N. ராமலிங்கம் பண்டிதர்
திருத்துவளை, நாகப்பட்டணம் தாலுக்கா.

" R. சின்னதுரை பண்டிதர்
மணிக்கூண்டு, திருச்சி.

" K. M. குட்டிவைத்தியர்
அரசமரம் பிள்ளையார்கோவில்தெரு, சேலம்.

" S. முத்துசாமிபண்டிதர்
செங்கோட்டை, திருவாங்கூர்.

" T. இராமசாமிபண்டிதர்
ஆழ்வார்திருநகரி, திருநெல்வேலிஜில்லா.

" E. குமாரசாமிபண்டிட்
வடிவீசுவரம், நாகர்கோயில்.

" T. M. கிருஷ்ணசாமி
மலாக்காகிளப், மலாக்கா.

" பண்டிட் M. P. முத்தையா
பாளையங்கோட்டை.

" T. V. உமாமகேசுவரம்பிள்ளை B. A. B. L.
கரந்தை, தஞ்சாவூர்.

" S. பட்டமுத்து பண்டிதர்
அம்பாசமுத்திரம், திருநெல்வேலிஜில்லா.

" P. N. சங்கரலிங்க வைத்தியர்
கொழும்புதெரு, கண்டி.

திரு - பெருமாள் பண்டிதர்
வெங்கடாசலபுரம், திருச்சிஜில்லா.

,, G. N. மாரிமுத்து
சிறபோயா, ஜாவா.

,, G. N. R. சாமி
பொறையார், தஞ்சைஜில்லா.

,, P. ஆவுடையப்பன்
மூன்றாவது மருதானை, கொழும்பு.

,, L. கந்தபண்டிதர்
குலசேகரப்பட்டணம், திருநெல்வேலிஜில்லா.

,, R. கோவிந்தசாமி பண்டிதர்
ஸ்ரீரங்கம், திருச்சி.

,, T. O. சுப்பிரமணிய பண்டிதர்
கவிராயர், திருச்செந்தூர்.

,, N. அருணாசலம் பண்டிதர், கரூர்.

,, P. நாச்சிமுத்து, திருப்பூர்.

,, S. V. சீதாராமபிள்ளை
வளவனூர், விழுப்புரம்.

,, N. சிவன்பண்டிதர்
தெமட்டகொடை, கொழும்பு.

,, K. அடைக்கலம் பண்டிதர்
செண்டுவெல்ரோட், கோலாலம்பூர்.

,, M. S. கபாலி, கூலிம், கெட்டா. F. M. S.

,, N. குமாரசாமி பண்டிதர்
கிரிவலை, கொழும்பு.

,, S. E. சுடலைமுத்து
கொட்டாரக்குறிச்சி, திருநெல்வேலிஜில்லா.

,, P. அய்யாவு பண்டிதர்
பெரியபுரலை, கொழும்பு.

,, S. வன்னியன்பண்டிதர்
தெற்கு மருதானை, கொழும்பு.

,, பொன்னுசாமி வைத்தியர்
கோயில்வெண்ணி, தஞ்சைஜில்லா.



குழந்தைகளின் உடுப்பைத் தினம் மாற்றவேண்டும். அதிக உடுப்புகள் செய்து வைத்துக்கொள்ள சக்தியற்றவர்கள், அழுக்கு உடுப்புகளை உடனே சவர்க்காரம் (சோப்) கரைத்த தண்ணீரில் ஊறவைத்து செம்மையாகக் கசக்கிச் சுத்திசெய்து வெய்யிலில் காயப்போட்டு வைத்துக்கொள்ளவேண்டும். குழந்தைகளின் உடுப்புக்களை மழைக்காலத்தில் நெருப்பு அனலில் காயவைத்தெடுத்துப்போடவேண்டும். மல, சலங்களினால் அடிக்கடி உடுப்புகள் அழுக்காகி மாற்றும்படி நேரிட்டால் முன் சொல்லியபடி மூலைவாட்டமாக மடித்த முக்கோணத் துண்டுகளை குழந்தைகளின் அரையில் கட்டிவரவேண்டும்.

உடுப்புகளை அழகுக்காகவும், பிறர் மதிக்கப் பெருமைக்காகவும் எண்ணிச் செய்யாமல், சுகத்துக்கானவைகளாகவே செய்யவேண்டும். வீட்டிற்குள் இருக்கும்போது உள்ளுடுப்பு ஒன்று போதும். வெளியிற் செல்லுங்காலத்தில் உள்ளுடுப்பு ஒன்றும், மேலுடுப்பு ஒன்றுமாக இரண்டு வேண்டும். குளிர்காலங்களில் பாதங்களுக்கு மெல்லிய காலுறைபோடுவது நலம். உஷ்ணகாலங்களில் மெல்லிய துணியில் செய்த உடுப்புகள் நல்லது.

உடுப்புகளின் அவசியம்:—குளிர்காலத்திற்கு மிருதுவான கம்பளிமேலுடுப்பும், பருத்திநூலால் செய்த மெல்லிய உள்ளுடுப்பும், வெய்யிற்காலத்தில் சல்லா மேலுடுப்பும் போடவேண்டும். நாடா, பொத்தான் இவைகளால் உடுப்பைக் கட்டவேண்டும். அவைகள் எளிதாய்ப் போடக் கழற்றக்கூடியவைகளாயிருக்கவேண்டும். உடைகளை நாள்தோறும் மாற்றவேண்டும் கழுத்துமுதல் பாதம்வரை மூடக்கூடியதாயிருக்கவேண்டும்.

எச்சரிக்கை:—உடுப்பில்லாமல் குழந்தைகளை நிருவாணமாக விடுவதனால் அவர்களுக்கு வெப்பமும் குளிரும் தாக்கிப் பலநோய்களுண்டாகும். இறுக்கமான உடுப்பு இரத்த ஓட்டத்தை மட்டுப்படுத்தும். நுரையீரல், இரத்தப்பை, குடல்கள் முதலிய உறுப்புகள் அதனதன் வேலைகளைச் சரியாய்ச் செய்ய இயலாததனால் நோய் உண்டாகும். குண்டூசி முதலியன உபயோகிப்பது நல்லதல்ல. முரட்டுத்துணிகளால் செய்த உடுப்பு தோலில் படிந்து எரிச்சலை உண்டாக்கும். தலைக்குல்லா வியர்வைகண்டு நீர்க்கோர்வையையுண்டாக்கும். அழுக்கு உடுப்பு வியாதிக்கிடமாகும். இவைகளைத் தள்ளவேண்டும்.

## 6 அத்தியாயம்

உணவைப்பற்றிய பொது விதிகள்:—மக்களுக்கு உயிர் நிலை உணவேயாகும். உணவு சிறிது மில்லாவிடின் மிக விரைவில் உடல் வளர்ச்சிக்குறைந்து மரணம் நேருவது திண்ணம். முதிர்ந்த மரங்களுக்கே நீர்வேண்டுமானால் முளைப்பயிருக்குக் கேட்கவும்வேண்டுமா? நெல்பயிர் சிறிதாயிருக்கும்போது எப்போதுங் குறைவின்றி தாராளமாகவே நீர் விட்டுவரவேண்டும். அதில் குறைவுசெய்தால் வாடிப் பட்டுப்போகிறது. ஒருக்கால் அப்பயிர் தப்பிப் பிழைத்திருப்பினும் பயனற்றுப்போகிறது. அதுபோல் சிசுக்களுக்கும் உணவுக்குறைவு சிறிதுமின்றி அளவாகக்கொடுத்துவரவேண்டும். அதில் குறைவுநேரிட்டாலும், அளவுக்கு மீறினாலும் துன்பமுண்டாகும். ஆகையினாலே சிசுக்களின் ஆகார விஷயத்தில் அதிகக்கவலையும் ஒழுங்கும் இருத்தல் வேண்டும்.

இனி உணவின் தன்மைகளைக் கவனிப்போம். உடல் செம்மையாக வளருவதற்கு 1. சதையை வளர்க்கும்பாகம், 2. ஜீவாக்கினியை வளர்க்கும் பாகம் என்று இரு முக்கியபாகங்களாக வகுக்கலாம். பிராணிவகைகளின் பால், தயிர், பாற்கட்டி முதலியவைகளிலிருக்கும் சத்துக்கள் ஊன் வளர்ச்சிக்கானது. முட்டை, இறைச்சி, கோதுமை முதலியவைகளின் சத்தும், பயறு, முதலிய பருப்புவகைகளில் உள்ள சத்தும், பாலிலுள்ள சத்தைப்போல மாமிசவிருத்திசெய்து உடலை வளர்ப்பவைகள். இச்சத்துக்கள் சுமார் ஒருபாகமும் ஜீவாக்கினி உற்பத்தி சத்துக்கள் இருபாகமுஞ்சேர்ந்து நமக்கு உணவாகவேண்டும். ஒன்று சிறிது குறைந்து மற்றது அதிகமானால் பயனில்லை. வியாதி நேரிடும்.

உயிருக்கு ஆதாரமாகிய தீயை (ஜீவாக்கினியை), வளர்க்கும் சத்துக்கள் மூன்றுவகைப்படும். 1—கொழுப்பு, வெண்ணெய், நெய், முதலிய நெய்ச்சத்துக்கள். 2. சருக்கரை, வெல்லம், கற்கண்டு முதலிய தித்திப்பு சத்துக்கள். 3. மாவுவகைகள் ஆகிய இவைகளே.

மேற்கூறிய இருவகைச் சத்துக்களன்றி சில உப்புவகைகளும், தண்ணீரும் வேண்டும். உப்பென்றால் வழக்கமாக நாம் உணவில் உபயோகிக்கிற கறி உப்புமாத்திரமல்ல, சுண்ணாம்பு, சோடா, பொட்டாஷ், மாக்னிஷியா முதலிய உலோகங்களின் துவர் உப்புகளும் சிறிது தேவை. இரத்தசுத்திக்கும், உடலினுள்ளிருக்கும் உறுப்புகள்



தத்தம் வேலைகளை ஒழுங்காகச் செய்வதற்கும் இவ்வுப்புகள் வேண்டும். பெண்களுக்குப் பால் சரியாகச் சுரக்கிறதற்கும் இந்த உப்புகள் அனுகூலமானவைகள். இவைகளில்லாவிடில் உடல் நலமிராது.

தண்ணீரும் உடல் வளர்ச்சிக்கு இன்றியமையாத பொருளாகும். வேண்டிய நீர் உடம்பில் இல்லாவிடில் உயிர்த்தீ (ஜீவாக்கினி) மிகுந்து நோய்க்கிடமாகும். தவிர, வியர்வையாகவும் ஆவியாகவும், சிறுநீராகவும் வெளியேறும் நீருக்குப் பதில்நீர் உடலுக்குக் கொடுக்க வேண்டும். தாராளமாக இவைகள் கழியாவிடில், தேகத்திலிருந்து அப்புறப்படவேண்டிய கழிவுப்பொருள்கள் வெளியேறாமல் உடலில் தங்கி நோய்க்கிடமாகும். இரத்தத்திலும் நீர்சுண்டி, இரத்தம் தடிப்பாகி ஓட்டம் மட்டுப்படும்: ஆதலால் உணவில் ஊன்வளர்ச்சிப்பொருள், சீவாக்கினிப்பொருள், உப்புகள், நீர் ஆகிய இந்நான்கு பொருள்களும் கலந்திருக்கவேண்டும்.

குழந்தை கருப்பையிலிருந்து வெளிவருமுன்னரே அதற்கு வேண்டிய உணவை, கடவுள் உடல் வளர்ச்சிக்கு வேண்டிய நான்கு சத்துக்களோடும் ஒழுங்காக பாலில் அமைத்திருக்கின்றார். அப்பாலையும் அன்னையின் மார்பில் அமைத்திருக்கின்றார். இதன் அருமையை யாரே அறியவல்லார்! தாய்ப்பாலின் ஆயிரம் பங்கில்

| | |
|---|---|
| ஊன் வளர்ச்சிக்குரிய சத்து | 39-பாகம் |
| உயிர்த்தீக்குரிய சத்து (வெண்ணெய், பால், சருக்கரை) | 70-பாகம் |
| உப்புகள் | 1-பாகம் |
| நீர் | 890-பாகம் |

அடங்கியிருக்கிறது. இதுதான் சிசுவின் சீரணசக்திக்கும்,உடல் வளர்ச்சிக்கும், உடல் நலத்துக்கும் தக்க அளவாகும். இப்பொருள்கள் பாலில் மிகினும், குறையினும் உடல் செம்மையாய் வளராது. நோய்க்கிடமாகும். மற்றப் பிராணிகளின் பால்களில் இப்பொருள்கள் குறைந்தும் கூடியும் இருக்கும். இவ்வேற்றுமைக்காகத்தான் பசு, ஆடு, முதலிய பிராணிகளின் பாலில் ஏதேனும் ஒன்றை சிசுக்களுக்குக் கொடுக்கும்படி நேரிட்டால் அதனுடன் நீர்சேர்த்து சற்றேறக்குறைய மனிதப்பாலின் சத்துகளின் அளவுக்குச் சமப்படுத்திக் கொடுக்கவேண்டும்.

குழந்தை பிறந்தகாலத்தில் தாயின்பாலில் வெண்ணெயும் சருக்கரையுமாகிய சீவாக்கினி யுற்பத்திசெய்யும் பொருள்கள் மிகுதியாயிருக்கும். ஏனெனில் சிசுவுக்குக் கைகால்களைத்தானே அசைப்பதனாலுண்டாகும் உடற்பழக்கமேதவிர உடம்பில் சூடுண்டாக்கத்தக்க வேறு காரணமில்லை. ஆகையினால் கடவுள் பருவத்துக்குத்தக்க உணவை ஏற்பாடுசெய்திருக்கிறார். குழந்தைக்கு வயதாக வயதாக அதன் சீரணசக்தியும் அதிகப்படும். அதற்குச் சரியாக இரைப்பையிலும் மாறுதலுண்டாகும். இந்த மாறுதலுக்குத் தக்கதாகத் தாயின்பாலிலுள்ள சத்துக்களின் அளவிலும் சிலகுறைந்தும், சில கூடியும்வரும். முதல்மாதத்தில் தாயின்பாலிலுள்ள சருக்கரையும், நீரும் வரவரக் குறையும். ஊன்வளர்ச்சிச் சத்து நான்கு மாதம் வரையும், வெண்ணெய் ஆறுமாதம்வரையும் வரவர அதிகப்படும். உப்புகள் முதலில் அதிகமாகிப் பிறகு குறையும். இந்தக்காரணங்களால்தான், தாதிவைத்துப்பால்கொடுக்கநேரிடுங்காலத்தில், அவள் கருஉயிர்த்தகாலத்தையும், சிசுவின் வயதையுங் கவனித்து இதில் காலவேற்றுமையில்லாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். இல்லையேல் சிசுவின் சீரணசக்திக்குத் தீங்கு நேரிடும். இவ்விதமாகச் சிசுவுக்குச் சீவாக்கினி குறைவாயிருக்கும்போது அதற்குத்தக்கபடியும், மாமிசவளர்ச்சி அதிகமாகவேண்டிய காலத்தில் அதற்கிசையவும், சிசுவின் உணவுகளிலுள்ள சத்துக்களை அப்போதைக்கப்போது அவசியமானபடி கடவுள் மாற்றி அமைத்து வருகிற அளவுகளை நாம் கவனித்தும் அவர் கருத்துப்படியே குழந்தைகளுக்கு உணவூட்டி வளர்த்துவரவேண்டும்.

குழந்தையின் ஒருநாள் பால் உணவின் அளவு:—பிறந்த மூன்றுநாள்வரை இருபத்துநான்குமணிநேரத்துக்கு சுமார் (கால்படிக்குள்) பன்னிரெண்டு அவுன்சு,

அதன்பிறகு பதினைந்து நாள்வரை தினசரி (கால்படிக்குமேல்) பதினான்கு அவுன்சு,

முப்பதுநாள்வரை (காலே அரைக்கால்படி) பதினெட்டு அவுன்சு

இரண்டாம் மாதத்தில் தினம் (அரைப்படி) இருபத்திநான்கு அவுன்சு,

மூன்றாம்மாதம் முதல் முக்கால்படி; அதாவது முப்பத்தாறு அவுன்சு பால்வரை குழந்தைக்குக் கொடுக்கவேண்டும். தாயினிடம் இவ்வளவு பால் இல்லாமற்போனாலும் சிசுவுக்குப் பல் முளைக்குமட்டும் தன்னிடத்தில் உள்ள அளவு தாயே பால்கொடுத்து வரவேண்டும். மிகக் குறைவாயிருந்தால் கைப்பாலாவது, தாதிப்பாலாவது அதனோடு கொடுத்து வருவது நலம். எவ்வளவு குறைவாயிருந்தாலும் தகுந்த காரணமின்றித் தாய்ப்பாலை நிறுத்தக்கூடாது. மேற்காட்டிய சிசுவின் ஆகார அளவு அதிகமென்று எண்ணக்கூடாது. குழந்தை வளர்ந்து வருங்காலமானதால் தேகத்தின் அங்கங்களெல்லாம் எப்போதும் வேலைசெய்துகொண்டிருக்கும். ஆதலால் புதிதாய்க் கட்டப்படும் வீட்டிற்கு அவ்வீடு கட்டிமுடியுமட்டும் சாமான்கள் மிகுதியாக வேண்டும். ஆனால் வீடுகட்டி முடிந்தபின் அவ்வீட்டிற்குப் பழுது நேரிடாமல் அப்போதைக்கப்போது காத்துவருவதற்கும், மராமத்து செய்வதற்கும் கொஞ்ச சாமான்கள்தான் வேண்டும். அதுபோல சிசுவின் வயதுக்கும், அதன் உடல் அளவுக்கும் தகுந்தபடி பெரியவர்களைவிட இரண்டுபங்கு உணவு கொடுக்கவேண்டும். பலவகைச் சோதனைகளைச் செய்துபார்த்ததில் குழந்தைகளின் உடல் வளர்ச்சிக்கு வேண்டிய உணவில் இந்தக்கணக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. நோயின்றிச் செம்மையாயிருக்குங் குழந்தைகளுக்கு அந்தந்தக் காலங்களில் இந்த அளவுப்படி உணவுகொடுத்து வந்தால்தான் குழந்தைகள் உடல் வன்மையோடு கொழுமையாக வளரும்.

இதுவரை பாலைப்பற்றிக் கவனித்தோம். இனிமேல் அதற்கடுத்த உணவு வகைகளாகிய மாவுப்பொருள்களைப்பற்றிச் சற்றுக்கவனிப்போம். இவைகளில் அரிசி, கோதுமை,சோளம்,வரகு,கம்பு, தினை முதலியவைகளும், டப்பியாகோ, பார்லி, ஓட்ஸ் முதலிய புதிய உணவுகளும் மிகுதியாக உபயோகப்படுவன. இவைகளிலுள்ள சத்துகளின் அளவு பாலுக்குப் பேதப்படும். பாலில் ஊன் வளர்ச்சி சத்து ஒருபங்குக்கு சீவாக்கினிப்பொருள் இரண்டுபங்காயிருக்க, மாவு வகைகளில் அது ஒன்றுக்கு ஏழுமுதல் இருபத்தாறுவரை பேதப்படுகிறது. கோதுமையில் ஒன்றுக்கு ஏழும், அரோரூட்டில் ஒன்றுக்கு இருபத்தாறுமிருக்கிறது. மேலும் இவைகள் முதன்மையான சத்து ஸ்ற்றார்ச் என்னும் பொருள். இது பாலில் கிடையாது. ஆகையினால் பாலே குடித்து வளர்ந்து வந்த குழந்தையின் குடலுக்கு இது மாறான உணவாகிறது. மாவு சத்து ஜீரணமாகிறதற்கு இரைப்பையில் ஓர்வகைப் புளிப்புநீர் உற்பத்தியாகவேண்டும். இந்த நீர் குழந்தைக்குப் பல் முளைக்குங்காலத்தில்தான் போதுமான அளவு உண்டாகும். அதற்கு முன்னுண்டாகும் பித்தநீர் பால்மாத்திரம் செமிக்கக்கூடிய சத்துள்ளது.

ஆகவே அதுவரை மாவுசத்துள்ள உணவுகள் குழந்தைகட்குக் கொடுக்கக்கூடாது. கொடுத்தாலும் செமியாது. புளித்து மந்தப்பட்டு வியாதிநேரிடும். பல்முளைக்கத் தொடங்கியவுடனேயும் மாவுவகை உணவுகளைத் தனியாகவாவது, வேறு பொருள்களோடாவது கொடுக்கக்கூடாது. பல்முற்றும் முளைக்குமட்டும் மேற்சொல்லிய இரைப்பையின் சத்தும் வலுப்பெற்றிராது. குழந்தைக்குக் கொடுக்கும் உணவின் அளவுக்குத் தக்கதாய் அது வளர்ச்சியடையாமல் உணவிலுள்ள சத்துக்களில் அதற்கு செமிக்கக்கூடிய அளவு எவ்வளவோ அதற்குத் தக்கதாகவே வளரும். மாவுவகைகளில் ஜீவாக்கினி யுற்பத்தி பாகம் அதிகமாயிருப்பதனாலே இதை அளவுக்கு மீறிக்கொடுத்தால் உடம்பில் சூடுமிகுந்து செமியாமல் வயிற்றோட்டங்காணும். இது தெரியாமல் குழந்தைகளுக்கு வயிறுகொண்டமட்டும் கஞ்சிகளை ஊட்டி அதனால் வயிற்றோட்டம் வந்தவுடனே சூட்டுக்கழிச்சலென்று மருந்துகளை மிகுதியாகக் கொடுப்பதில் பயனில்லை. கஞ்சியை நிறுத்துமட்டும் மருந்தினால் யாதொரு உதவியுமிராது. உடனே அதை நிறுத்திப் பாலை அளவாகக்கொடுத்துவந்தால் விரைவில் குழந்தை நலமடையும். இதுதான் அதற்கு மருந்து. இதைக் கவனியாமல் மருத்துவரிடம் ஓடுவது வீண். பல்முளைக்குமுன் சிசுவுக்கு மாக்கஞ்சி முதலானவைகளைக் கொடுப்பது நஞ்சுக்கு சமம் என்று அறியவேண்டும்.

சிசுவுக்கு ஆறேழுமாதம்வரை தாய்ப்பாலன்றி வேறு உணவு கொடுக்கக்கூடாது. பால்தவிர வேறு உணவுகள் சரியல்லவென்று அறிவதைப்போல தாய்ப்பால் கொடுத்து வளர்க்கவேண்டியமுறையும், அதில் தாய் நடந்துகொள்ளவேண்டிய ஒழுங்குகளும் இன்னவென்று அடுத்த அத்தியாயத்தில் கவனிப்போம்.

---

## 7 அத்தியாயம்

### சிசுவுக்குப் பால் கொடுக்கும் முறை

சிசுவுக்குத் தன் தாய்ப்பாலன்றி வேறு உணவு கடவுள் படைத்திருப்பாரானால் தாயின் அன்பிற்கு இடமாகிய நெஞ்சின் அருகில் பால் சுரப்பிருக்கமாட்டாது. பாலுக்காக ஓர் உறுப்பை ஏற்படுத்தி சிசுபிறந்தவுடனே அச்சிசுவின் உணவுக்கு வேண்டிய அளவு பால் அந்த உறுப்பில் சுரக்கிறதனால், அந்தப்பால் சிசுவுக்கென்றே கடவுளால் ஆக்கப்படுகிறது. காரணமின்றி ஆண்டவன் ஒன்றையும் படைப்பதில்லை. சில பெண்கள் குழந்தைகட்குத் தாங்கள் பால்கொடாமல் தாதிவைத்தும், தாய்ப்பாலுக்குப் பதிலாக வேறு உணவுகள் கொடுத்தும் வளர்க்கிறார்கள். விலங்குகளின் குட்டிகள் பிறந்த நிமிஷமே பழைய உணர்ச்சியினால் தங்கள் தாயின்பால்தான் தங்களுக்குரிய ஆகாரமென்றறிந்து தாயினிடம் பால்குடிப்பதையும், அந்தத்தாய் மிக அன்புடன் குட்டிக்குப் பால்கொடுத்து அதன் உடலை நாவினால் நக்கி இன்புறுகிறதையும் நாம் எல்லோரும் பார்க்கிறோம். மனிதர்கள் மிருகத்திலும் மிக்க பகுத்தறிவுடையவர்களாயிருந்தும் இந்தக் காரியத்தில் தம் சிசுவை மறக்கிறார்கள்; சிசுவுக்குத் துரோகம்செய்கின்றார்கள். இது பெரும்பிழை. தாய்க்கும் சிசுவுக்கும் நெருங்கிய சம்பந்தமிருக்கிறது. அதனால் குழந்தைக்குத் தன் தாயின் அமிர்தமயமான பாலைப்போல் மற்றெந்தப்பாலும் குணம் செய்யமாட்டாது. அன்னை தன் குழந்தையை அன்புடனெடுத்து மார்போடணைக்குங்காலத்தில் அவளுக்குண்டாகும் ஓர்வகை பூரிப்பும் அப்போது அவள் மார்பிலுண்டாகும் பாற்சுரப்பும் இன்பமும் தாய்க்கும் குழந்தைக்கு மிருக்கும் தொடர்பைக்காட்டுங் குறியாகும். தாய் தன் குழந்தைக்குப் பால்கொடுக்கும்படி கடவுள் அமைத்திருப்பது குழந்தையின் நலத்துக்கு மாத்திரமல்ல. அச்சிசுவைப்பெற்ற தாய்க்கும் அதனால் நலமிருக்கிறது. ஆதலால் தன் குழந்தைக்குத் தானே பால்கொடாத தாய் அந்த நன்மைகளை அடைய வியலாது.



தாய் தன் குழந்தைக்குப் பால்கோடுப்பதனால் உண்டாகும் நன்மைகள்:—

1. கரு உயிர்த்த (பிள்ளைபெற்ற) மாதத்தில் தாய்க்குண்டாகக் கூடிய பல நோய்கள் நேரிடாது.

2. பிள்ளை பெறுவதற்குமுன் வலிவற்று மெலிவாயிருந்த தாய் கருவுயிர்த்து தன் குழவிக்கு முலைகொடுக்குங்காலத்தில் இன்பமும் வலிவும் அடையக்கூடும். ஆனால் வருஷக்கணக்கில் குழந்தைக்குப் பால் கொடுத்தால் இந்த நன்மை கெட்டுப்போகும்.

3. முலைக்கடுவன் என்று பெண்களுக்கு வரும் ஒரு வகைக் கொடுமையான நோய் வாராது. அது பிள்ளைபெறாத மலடிகளுக்கே பெரும்பாலும் உண்டாகும்.

4. பொதுவாக சிசுக்களுக்குப் பால்கொடுக்குங்காலத்தில் நூற்றில் எழுபது பெண்களுக்குக் கருப்பமுண்டாகாது. அடிக்கடி கருப்பெற்றால் விரைவில் உடம்பில் வலிவற்றுப்போகும். ஆதலால் அதுவும் நன்மையேயாகும்.

5. குழந்தை செம்மையாய் வளரும். செமியாக்குணம், வயிற்றுவலி, வயிற்றோட்டம் முதலிய பிணிகளணுகாது. முலைப்பாலுண்டு வளரும் குழந்தைகளுக்கும், வேறு உணவு உண்டு வளரும் குழந்தைகளுக்கும் மிக வேற்றுமையுண்டு. கைப்பால் கொடுப்பதனால் குழந்தைகளுக்கு வியாதிகண்டு அகாலமரணத்துக்கிடமாகும். இதன் வேற்றுமைகளை விசாரித்து அடியிற் சொல்லப்படுங் கணக்கைச் சராசரியாக ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

தாய்ப்பாலே உண்டு வளருங் குழந்தைகளில் நூற்றில் 85-ம், முலைப்பாலும், வேறு உணவுமுண்டு வளருங் குழந்தைகளில் நூற்றில் 53-ம், முற்றிலும் வேறு உணவுகொடுத்து வளருங் குழந்தைகளில் நூற்றில் 26-ம், தான் பிழைக்கிறதாகத் தெரியவந்திருக்கிறது. ஆகையால் சிசுவுக்குத் தாயின் முலைப்பாலே கடவுள் உணவென்றறிய வேண்டும்.

6. இருமல், காசம், கண்டமாலை, முதலிய கொடிய வியாதிகள் நோயில்லா நல்ல உடம்புள்ள தாயாரின் பாலைக்குடித்து வளரும் குழந்தைகளுக்கு வாராது.

**தாய் சிசுவுக்குப் பால்கொடாவிட்டாலுண்டாகுந் தீமைகள்:—**

1. பிரசவித்த மாதத்தில் சிசுவுக்குத் தாய் தனது முலைப்பால் கொடாவிட்டால் அதனால் முலைகளில் பால் கட்டுப்பட்டு வீங்கிக் காய்ச்சலும், கட்டிகளுமுண்டாகி உடல் வலிவற்றுப் பல பிணிகளுண்டாகும்.

2 பிள்ளைபெற்றபின் குழந்தைகளுக்குத் தாய் தனது முலைப்பாலைக் கொடுப்பதினாலே தாயின் கருப்பை சுருங்கி கட்டுப்பட்ட உதிரம் சரியாய்க்கழிந்து விரைவில் சுகமுண்டாகும். தாய் முலைப்பால் கொடாவிட்டால் உதிரப்போக்கு மிகுதியாகி அதிகபலவீனத்திற் கிடமாகும். தாய் விரைவில் வெளியேறி நடமாடி வீட்டுவேலை முதலியன பார்க்க உடம்பில் வலிவு ஏற்படாது.

3. கருப்பை சுருங்கிப் பழைய நிலையை அடையா விடில் அது எப்போதும் சற்றுப் பருமனாகவும், பளுவாகவுமிருக்கும். அதிலிருந்து வெள்ளை மேகம் என்று பெண்கள் சொல்லுகிற ஓர்வகை அழுக்கு நீர் ஓயாமல் வடிந்து கொண்டிருக்கும். அதனால் தேகம் மெலிந்து பலவீனப்படும். அடிவயிற்றில் வலியுண்டாகும். முதுகெலும்புக்குள் உளையும். கருப்பை புரண்டு வளைந்து தன்னிடம்விட்டு விலகிப்போகும். முடிவில் உயிரோடிருப்பதே பெருந்துன்பமாகத் தோன்றும்.



# அமுத சுரபி

## சிறந்த தாது விருத்தி லேகியம்.

இஃது ஆண், பெண் இருபாலருக்கும் எவ்வகைக் காரணங்களினாலாவது விந்து கெட்டு, வலிவு குறைந்து, நரம்புக்கட்டுகள் தளர்ச்சி அடைந்து, இந்திரியக் கசிவு, கனவிற் கழிதல், விரைவிற் கழிதல், பொருந்த விருப்பின்மை, குறி துவளல் முதலிய துன்பங்களால் புத்திரப் பேற்றுக்கு வகையின்றி வருந்துவோர்களுக்கு அத்தகைய துன்பங்களை நீக்கி, அமுத மயமான உடம்பையும், வலிவையும், நல்லறிவையும், அழகையும், நீண்ட ஆயுளையும், மக்கட் பேற்றையும், பொன் போன்ற மேனியையும் தருமென்பதில் யாதொரு ஐயமுமில்லை. இது சித்தர்களின் முறை.

அமுத சுரபி உயர்ந்த பல்வகைப் பிசின் வகைகள், வித்து வகைகள், அரிய மூலிகைகளின் சத்துக்கள் முதலிய அரும்பொருள்களைக் கொண்டு செய்துள்ளது. இஃது அருந்துவதற்கு இனிமையாகவும், இலேகிய பாகமாகவும் செய்யப் பட்டுள்ளது.

அமுத சுரபியை காலை மாலை நெல்லிக்காயளவு நெய், அல்லது வெண்ணெய் கலந்து. அருந்துவது நலம், தனியாகவும் அருந்தலாம்.

அமுத சுரபியை அருந்தி அநேகர் பெருந்துன்பங்களினின்றும் நீங்கி இன்பமடைந் திருக்கின்றனர்.

| | | | |
|---|---|---|---|
| 40-நாள் மருந்து விலை ரூபா | 5 | 0 | 0 |
| 20-நாள் மருந்து விலை ரூபா | 2 | 12 | 0 |

# சீரணி இலேகியம்

நமது உயிரைப் பற்றி ஆணவ மலம் நீங்காது அடிக்கடி துன்பத்தில் அழுத்துவதைப் போல்; நமது உடம்பிலிருந்து நாள்தோறும் கழியவேண்டிய மலம் நீங்காமல் உடம்பில் தங்கித் தீமை செய்குவதால் நாம் அடிக்கடி நோயால் வருந்துகின்றோம். ஆதலால் மல பந்தத்தை நாள்தோறும் கழிப்பதே நோயற்ற வாழ்க்கைக்கு முதற் காரணமாகும்.

சீரணி இலேகியம் யாதொரு வருத்தமுமின்றி நாள்தோறும் மலத்தைக் கழித்து, மலச்சிக்கலால் வரும் நோய்கள் எல்லாவற்றையும் நீக்கும் ஓர் அருமருந்து.

சீரணி இலேகியம் உண்ட உணவை நன்றாய்ச் செறிக்கச்செய்து நாள்தோறும் மலத்தைச் செம்மையாய்க் கழிக்கும்; பசியின்மை, புளி, ஏப்பம், சூலை எரிச்சல், வயிற்றுநோய், குன்மம், மார்புநோய், இடுப்பு நோய், இருமல், மயக்கம், வாந்தி, சுவையின்மை முதலிய நோய்களை நீக்கும். சீரணி இலேகியத்தை குழந்தை முதல் கிழவர் வரையில் ஆண் பெண் இரு பாலரும் அருந்தலாம்.

மலப்போக்குள்ளவர்களும், வயிற்றுளைவு, சீதபேதி உள்ளவர்களும் சீரணிலேகியத்தை சாப்பிடக்கூடாது.

பெரிய டப்பி விலை ரூபா 3 0 0
சிறிய டப்பி விலை ரூபா 1 10 0

---

# அயச்சிந்தூரம்

இரத்தக் குறைவுக்குச் சிறந்த மருந்து.

'இளைத்தவன் இரும்பைத் தின்பான்'

துரும்புபோல் இளைத்தவன்

இரும்பை அருந்தத் தூண்போல் ஆவன்'

இது இரத்தக் குறைவினால் உண்டாகும் பித்தபாண்டு, சோகை, காமாலை, வீக்கம், உடல் வெளுத்தல், மிகப்பருத்தல், உடம்புமிக இளைத்தல் முதலிய நோய்களை மிக விரைவில் போக்கி நல்ல இரத்தத்தை உண்டாக்கும். அயச்செந்தூரம் அருந்தும்போது, நமது சீரணி என்னும் இலேகியத்தையும் ஒருநாளைக்கு ஒருவேளை கலந்து சாப்பிடுவது நலம்.

அயச் செந்தூரத்தை, உணவு உண்ட பின்னர் ஒரு நெல்லிடை முதல் மூன்று நெல்லிடை வரையில், காலை மாலை தேனில் சாப்பிடவேண்டும். அயச்செந்தூரம் அருந்துகிறவர்கள் மாதம் இருமுறை மலக்கழிவுக்குச் சாப்பிடவேண்டும்.

அயச்செந்தூரத்துக்கு மிகுதியான பத்தியமில்லை. இயன்ற வரையில் பொதுப்பத்தியம் (இச்சா பத்தியம்) இருப்பது நலம். புளிப்புள்ள பழங்கள், உணவுகள் மிகுதியாகச் சேர்க்கக்கூடாது.

40-நாள் மருந்து விலை ரூபா 5 0 0
20-நாள் மருந்து விலை ரூபா 2 10 0

---



# வாத நிதானி

வாத ரோகங்களுக்கு இணையற்ற மருந்து

இது அண்டவாதம், யானைக்கால், குடல்வாதம், பக்கவாதம், கீல்வாதம், நெறிக்கட்டி சுரம் முதலிய எண்பதுவகை வாதநோய்களையும், கக்கை வலி, வயிற்றுநோய் (குன்மம்,) மார்பு நோய், பக்கசூலை முதலிய வியாதிகளையும் மிகவிரைவில் கண்டிக்கக் கூடியது.

வாதநிதானி சாப்பிடும் அளவு, வகை: சுக்கு ஒரு அங்குலத் துண்டு, மூன்று கடுக்காயின் தோல், இரண்டு ஏலக்காய் இவைகளை நசுக்கி மண் சட்டியில் போட்டு, அரை ஆழாக்குத் தண்ணீர்விட்டு, அரைக்கால் ஆழாக்கு நீராகச் சுண்டக் காய்ச்சிச் சிறிது சருக்கரையிட்டு வடிக்கட்டின குடிநீரில் (கியாழத்தில்) வாதநிதானியில் பத்துத்துளி முதல் இருபது துளிவரையில் விட்டுக் காலையில் அருந்தல் வேண்டும். நாளொன்றுக்கு ஒருவேளையாக அவரவர் நோயின் தன்மைக்கும், உடம்பின் வன்மை, மென்மைக்குந் தக்கபடி மூன்றுநாள் முதல் ஐந்து நாள்வரையில் சாப்பிடலாம்.

வாதநிதானியைச் சிறுவர்களும், கிழவர்களும் மேற்காட்டிய அளவில் பாதி அருந்த வேண்டும்.

வாதநிதானி மலத்தைக் கழிக்கும் குணமுள்ளதாகையால் மலப்போக்கு உள்ள காலத்தில் இதனைச் சாப்பிடக் கூடாது.

வாதநிதானி சாப்பிட்டு மலம் மிகுதியாகப்போனால் சோற்றில் வடித்த கஞ்சி நீரும், சிறிது மோரும் கலந்து குடிக்க மலப்போக்கு நிற்கும்.

வாதநிதானி:— அருந்தும்போது பொதுப் பத்தியத்தோடு (இச்சாபத்தியம்) அடியிற் குறிக்கும் பத்தியப்படி நடந்து கொள்வது நலம்.

புழுங்கல் அரிசி கிடைக்காதவிடத்தில் பச்சரிசி அல்லது கோதுமை சேர்த்துக்கொள்ளலாம். துவரை, பச்சைப்பயறு, கத்தரி, முருங்கை, அவரை, பீர்க்கு, வெண்டைக்காய் முதலிய இளங்காய்கள், பொன்னாங்கண்ணி, அரிகீரை, முளைக்கீரை, புளியாரை முதலிய கீரைகள், உப்பு, மிளகாய், வெங்காயம், பசுநெய் அல்லது ஆட்டுநெய், கலப்புநெய், சோறு கரையக் காய்ச்சின புனற்பாகக் கஞ்சி, கோதுமை நொய்க் கஞ்சி இவைகள் ஆகும்.

வாதநிதானி அருந்தி மலப்போக்கு நின்றபின் வெந்நீரில் உடம்பு குளிக்கலாம்.

வாதநிதானி சாப்பிட்டு நிறுத்தின பின்னர் மறுபத்தியம் இரண்டு நாள் இருப்பது நலம். இயலாதவர்கள் இச்சாபத்தியமாகவாவது இருத்தல் வேண்டும். பத்தியம் தீர்ந்தபின் நல்லெண்ணெய் தேய்த்துத் தலைமுழுகலாம்.

வாதநிதானி:— சாப்பிட விரும்புகிறவர்கள் தங்கள் நோயின் தன்மைகளை விளக்கமாக எழுதினால் அதற்குத் தக்க பக்குவங்களையும் மருந்தனுப்பும்போது எழுதி அனுப்பப்படும்.

வாத நிதானி விலை ரூபா 2 8 0

## காய்ச்சல் குளிகை

(சுர மாத்திரை.)

மலைக் காய்ச்சல், முறைக்காய்ச்சல், குளிர்காய்ச்சல், நெறிக்கட்டி காய்ச்சல் முதலான சுரங்களை மிக விரைவினில் நீக்கக்கூடியது. சுரம் அடிக்கடி வந்து வயிற்றில் மண்ணீரல் பருத்திருப்பவர்கள் (காய்ச்சல் கட்டியுள்ளவர்கள்) இம் மாத்திரையைத் தொடர்ந்து 40-நாள் சாப்பிட்டுவரின் சுரக்கட்டி (ஸ்பிளீன்) தன் நிலையில் சுருங்கிவிடும். இஃது இரத்தத்திலுள்ள நச்சுநீர், முதலிய மேக நோய்களைப்போக்கி மெலிந்த உடம்பைத் தேற்றிப் பலத்தைத் தரும். இதை ஒவ்வொருவரும் அநுபவத்தில் தெரிந்து கொள்ளலாம்.

காய்ச்சல் வந்தவர்கள் முதலில் மலத்தைக் கழித்துக்கொள்ள வேண்டும். சுரம்காய்ந்து விட்டிருக்குஞ் சமயத்தில் குளிகையை வயதுக்குத் தக்கபடி, சிறுவர்கள் ஒரு குளிகையையும், பெரியவர்கள் இரண்டு குளிகையையும் வாயிலிட்டு, இஞ்சிச்சாறு, சுக்குநீர் (கியாழம்), வெந்நீர் இவைகளுள் யாதேனும் ஒன்றுடன் கலந்து விழுங்க வேண்டும். விழுங்குவதற்கு இயலாத சிறுவர்களும் மற்றவர்களும் குளிகையை இஞ்சிச்சாற்றில் அல்லது நிலவேம்பு கியாழத்தில் இழைத்துக்கரைத்து அருந்தலாம்.

காய்ச்சல் வருமுன் குளிர் மிகுதியாயிருக்கும்போது மிளகுத்தாள் கியாழம் சூடாய்ச் சாப்பிடக் குளிர் விரைவில் நீங்கும்.

பத்தியம்:—காய்ச்சல் நிற்கும் வரையில் புனற்பாகக் கஞ்சி, புழுங்கல் அரிசி நொய்க்கஞ்சி, கோதுமை நொய்க்கஞ்சி இவைகளில் ஏதாவதொன்றில், சிறிது உப்பு அல்லது இனிப்புச் சேர்த்துச் சாப்பிடவேண்டும். சோறு உண்ணக்கூடாது. காய்ச்சி ஆறின நீரைக் குடித்தல் வேண்டும்.

24 குளிகைகள் விலை ரூபா 1 12 0
12 குளிகைகள் விலை ரூபா 1 0 0



## வெள்ளை வெட்டைக்கு

(கனேரியா கியூர்)

இது ஆண் பெண்களுக்கு ஏற்படும் நீர் எரிச்சல், நீர்த்தாரை இரணம், வீக்கம், குத்தல், வலி, சீழ், இரத்தம்வருதல், முதலிய நோய்களை மிகவிரைவில் கண்டிக்கக்கூடிய மருந்து.

இம்மருந்து அருந்தின 12 மணி நேரத்திற்குள் நோயைக் கண்டிக்கும். இம்மருந்து அரை அவுன்சும் தண்ணீர் ஒரு அவுன்சும் கலந்து நாளொன்றுக்கு மூன்று வேளையாக மூன்றுநாள் அருந்த நோய் முற்றிலும் நீங்கும்.

மருந்து சாப்பிடும் மூன்று நாளும் உப்பு, புளி, மிளகாய், முதலிய மசாலைப் பொருள்கள் ஆகாது. பகலில் மோர்ச்சோறு,இரவில் பால்சோறு உண்ணவேண்டும். சர்க்கரை, வெண்ணெய், நெய், பச்சரிசி, பச்சைப் பயறு, கோதுமை, பழவகைகள் உபயோகித்துக் கொள்ளலாம். காபி, ஊன் (மாமிசம் வகைகள்), பிராந்தி, சாராயம், புகையிலை, புகையிலைச் சுருட்டு, இராவிழிப்பு, பகல் உறக்கம், வெயிலில் அலைச்சல், பொருந்தல் முதலியவைகள் ஆகா. நாள்தோறும் இளவெந்நீரிலாவது, தண்ணீரிலாவது தலை முழுகலாம்.

இந்நோய் கண்டவர்கள் முதலில் கடுக்காயின் தோல், நிலாவரை இலை இவைகளின் கியாழத்துடன் நமது மருந்து விலைப்பட்டியில் கண்டுள்ள கணைக்கிருதமாவது, ஆமணக்குநெய்யாவது ஒரு அவுன்ஸ் கலந்து ஒரு வேளை சாப்பிட்டு மலத்தைக் கழித்துக்கொண்டு பின்னர் இம்மருந்தைச் சாப்பிடுவது நலம். நோய் நீங்கின பின்னர் நமது அமுத சுரபி இலேகியத்தைச் சிலநாள் அருந்துவதால் நோய் திரும்பி வராது. தேக பலமும் தாதுவிருத்தியும் உண்டாகும்.

வெள்ளை வெட்டை மருந்து விலை ரூபா 3 0 0

## சகலவித குஷ்டநோய்களுக்கும் மேக நிவாரணகிருதம் என்னும்

குடிநெய்.

இம்மருந்து பதினெண் வகை குஷ்டநோய்கள், கருப்பத்தில் உண்டான [illegible] மேக நோய்கள், நடுவில் தனது செய்கைத் தவறால் வந்த மேக ரோகங்களாகிய, வெள்ளை, கிரந்தி வகைகள், புண், சதை அடைப்பு, நீர நோய்கள், லிங்கபுற்று, யோனிப்புற்று, அறையாப்புக்கட்டி, கண்டமாலை, [illegible]டைப்பு, [illegible], செம்மேகம், வெண்மேகம்,தோல் தடித்தல், உணர்ச்சி அற்று [illegible]ருமேகம்,

தோல் மறத்தல், தோல் வெடித்தல், தோல் சுருங்கல், தோல் புண்ணாகி, நீர்வடிதல், கை, கால் விரல்களில் புண்ணாகிக் குட்டை யாகுதல், விரல்கள் மடிப்புண்டாகுதல் முதலியநோய்களை எல்லாம் மிக விரைவில் குணமாக்கும் அருமருந்து.

இந்த நெய்யைக் கடுக்காய்த்தோல், நிலாவாரை, (சூரத்தாவாரை) கியாழத்தில் மூன்று நாள் காலையில் ஒருரூபா அகலம் விட்டு சாப்பிட வேண்டும். பின்னர் நாள் தோறும், இரவில் உறங்கப் போகும்போது காய்ச்சின பசும்பாலில் அல்லது வெந்நீரில் அரை ரூபா அகலம் விட்டு சாப்பிட வேண்டும்.

பத்தியம்:—நல்லெண்ணெயில் தலைமுழுகுதல், கறிகுழம்பு தாளித்தல் கூடாது. நெய், தேங்கா எண்ணெய், ஆமணக்கு எண்ணெய், சேர்த்துக் கொள்ளலாம். மீன் வகைகள் கூடாது, வெள்ளாட்டிறைச்சி, கத்திரிப்பிஞ்சு, முருங்கைப் பிஞ்சு, வெண்டக்காய், பீர்க்கங்காய், புடலைப் பிஞ்சு, அத்திக்காய், அவறைக்காய் பொன்னாங் கண்ணிக்கீறை, முளைக்கீறை, அறுகீறை, துவரம்பருப்பு, பச்சைபருப்பு முதலியவைகள் சேர்த்துக் கொள்ளலாம். தினம் இள வெந்நீரில் தலை முழுகலாம், எண்ணெய் தேய்த்துத் தலை முழுகுவதற்குப் பதிலாக மிளகு, சீரகம், இவை இரண்டையும் பசும்பால் விட்டு அரைத்து பாலில் காய்ச்சி தலை முழுகவேண்டும். தலை முழுக்கு அன்று இரவு மருந்தை நிருத்திவைக்கவும், நோயாளி நல்ல காற்றில் படுத்து உறங்கவேண்டும். மாலை வெய்யிலில் உடம்பை இரண்டுமணிநேரம் காய்ச்சவேண்டும், இந்த நெய்யை உபயோகித்துகுணமடைந்தவர்களின் நற்சாட்சியை எங்கள் மருந்து விலைப்பட்டியில் (கேட்லாக்கில்) காணலாம்.

குஷ்டநோய்க்கு குடிநெய் புட்டி விலை ரூபா 5 0 0.
வி-பி. தபால் செலவு வேறு.

---

# பூ எண்ணெய்

(ஆனந்த ஹேராயில்)

**இது மணத்திலும், குணத்திலும், மாண்புமிக் குடையது.**

நறுமண மிகுந்த பூக்களின் சத்துக்களால் செய்துள்ளது. இந்த எண்ணெயைக் கூந்தலில் தடவி வாரிக்கொள்ளுவதனால் அன்று மலர்ந்த மலரின் மணம்போல் மணங்கமழும். இதன் மணம் மயிரைவிட்டு ... நாள் விலகாது தலையில் பேன், பொடுகு, சொறி, சிரங்கு முதலிய ... அணுக விடாது.

மயிரைக் கருநிறமாக்கி விரைவினில் வளர்க்கும்.
பூ எண்ணெய் குப்பி 1 க்கு விலை ரூபா 1.



# மூலநோய் மருந்து

இது ஒன்பது வகை மூலங்களையும், சீத இரத்தபேதி, அதிசார பேதி, கிராணிக் கழிச்சல்களையும் மிக விரைவில் கண்டித்து குடலில் ஏற்பட்டிருக்கும் புண்களை ஆற்றக்கூடியது. மூலரோகங்களை அறுக்காமல் (ஆப்பரேஷன் இல்லாமல்) நீக்கக்கூடியது.

இம்மருந்து இரண்டு வேளையில் குணம்தரும் இதனைச் சுண்டைக் காயளவு தேனில் கலந்து காலை மாலை சாப்பிடவேண்டும். சீத இரத்த பேதி, வயிற்றுளைவு நின்றவுடன் மருந்தை நிறுத்த வேண்டும். மலம் செம்மையாகக் கழியாமல் வெறும் சீதம், இரத்தம் மட்டும் போனால் கடுக்காய்த்தோல் கியாயத்தில் ஆமணக்கெண்ணெய்கலந்து அருந்திபழய மலத்தை முன்னர்க் கழித்துக்கொண்டு, பின்னர் மூல நோய் மருந்தை அருந்த வேண்டும்.

பத்தியம்:— பால்சேர்ந்த கஞ்சிகள் தான் சாப்பிடவேண்டும். உப்பு மிளகாய், புளி முதலிய காரமுள்ள குழம்பு கறி முதலியவைகளும் சோறும் ஆகாது.

மூலநோய் மருந்து புட்டி 1-க்கு விலை ரூபா 1 0 0

---

# ஆனந்த பாம்

வலிகளுக்கு மேலே தடவும் மருந்து

இத்தைலம், தலைநோய், நெஞ்சுநோய், நெஞ்சடைப்பு, நெஞ்சிற்கபம், சுவாசநோய், கீல்வாயு, பக்கவாயு, அண்டவாயு,பல்நோய், முதுகு, இடுப்பு, கைகால் முதலியவைகளில் பிடிப்பு, சீதளம், குரல்வளைநோய், தேள், பூரான், நண்டு வாய்க்காலி முதலான விஷப்பூச்சிக்கடி இவைகளுக்கு மேலே தடவித் தேய்க்க மிக விரைவில் நோயை நீக்கி மகிழ்ச்சியைத் தரும் சஞ்சீவி போன்றது.

நோய் மிகுதியாயுள்ள விடத்தில், தவிடு அல்லது மணலை வறுத்து ஒத்துக்கொடுத்து, பின்னர் இம்மருந்தைத் தடவித் தேய்த்துக் கம்பளி அல்லது முறட்டுத் துணியினால் மூடிக் கட்டிவைக்கவேண்டும். நோய்க்குத் தக்கபடி அடுத்தடுத்து இதனைச் செய்யலாம். பல் ஈறு வீக்கம், பல்சொந்தை முதலிய பல்வலிக்கு இம்மருந்தைப் பஞ்சில் தடவி நோயுள்ளவிடத்தில் வைத்து உமிழ் நீரை விழுங்காமல் கொஞ்சநேரம் வைத்து ... எடுத்து விடலாம்.

டான மே...
நோய்கள் ...ல் நோயுள்ளவர்களுக்கு நமது பற்பொடி மிக நன்மை செய்யும்)

ஆனந்தபாம் குப்பி விலை அணா 0 12 0

டைப்பு,
ருமேகம்

## படை மருந்து

படை என்னும் இந்நோய் உடம்பில் இடுப்பு தொடை முதலிய இடங்களில் தோலின்மேல் படர்ந்து தடித்துத் தினவை யுண்டு பண்ணும், தோலின் மேனியைக் கெடுத்து பார்ப்பதற்கு வெறுப்பை உண்டாக்கும். இரவில் படுத்துறங்கப் போகும்போது படையுள்ள இடத்தைச் சிறுகத்தியினால் மெதுவாய்ச் சுரண்டி அதன்மேல் படை மருந்தைத் தடவித் தேய்த்துத் துணிபடாமல் வைத்திருந்து காலையில் இலுப்பைப் பிண்ணாக்கு அல்லது (சவர்க்காரம்) சோப்பினால் கழுவிக் குளிக்கவேண்டும். தொடர்ந்து நாலைந்து நாள் தடவினால் எப்போதும் வராது.

இப்படை மருந்து தடவுவதனால் எரிச்சல், நாற்றம், துணியில் கறைபிடித்தல் முதலிய கெடுதிகள் ஏற்படா.

படை மருந்து விலை அணா 0 8 0

## கருப்பரோக, நிவாரணி
## (ஸ்திரீகளின்மருந்து)

இது பெண்களின் மாதவிலக்கு நாட்களில் உண்டாகும் வயிற்று வலி; சூதகபந்தம், இடுப்புவலி, கைகால்வலி, தலைவலி, உடல்பருத்தல் முதலிய நோய்களையும், பூ ஒதுங்கல், சதைவளர்ச்சி, கிருமி முதலிய எழுவகை மலடுகளையும் நீக்கித் தேகாரோக்கியத்தையும், புத்திரப் பேற்றையும் தரும்.

பெண்கள் மாதவிலக்கு மூன்று நாட்களிலும் காலையில் இம்மருந்தைக் தேக்கரண்டி யளவு சுக்குக் கியாழத்தில் கலந்தருந்தவேண்டும்.

உப்பு, புளி, மிளகாய், நல்லெண்ணெய் ஆகாது. பால்சோறு, மோர் சோறு, பால்கஞ்சிதான் சாப்பிடவேண்டும். நான்காம்நாள் மறுபத்திய மிருந்து, ஐந்தாம்நாள் நல்லெண்ணெய் தேய்த்துத்தலைமுழுகலாம். உப்பு, புளி, மிளகாய் குறைவாகச் சேர்த்துக்கொள்ளவேண்டும். இம்மருந்தை இம்முறையாக மூன்றுமாதம் விலக்கு நாட்களில் அருந்தல்வேண்டும்.

நமது மருந்து விலைப்பட்டியில் கண்டுள்ள அரச அமுதசுரபியை யாவது, அமுத சுரபியையாவது 40-நாள் சாப்பிட்டுவரின், விரும்பிய பயனை அடையலாம். இதற்குப் பத்தியமில்லை.

கருப்பரோகத்தைலம் குப்பி ஒன்று ரூபா 3 0 0

**பண்டிட் ஆனந்தரின் தமிழ் வைத்தியசாலை,**
**221, தங்கசாலை வீதி, சென்னை.**

## வியாசம் எழுதுவோர் கவனிக்க வேண்டியவை.

வியாசம் எழுதுகிறவர்கள் கடிதத்தின் ஒரு பக்கத்தில் மாத்திரம் தெளிவாக எழுதி அனுப்பவேண்டும். இராஜ நிந்தனை, மத தூஷணை, மனித தூஷணை, முதலியவைகளும் பொருத்தமில்லாத விஷயங்களும் பிரசுரிக்கப்படமாட்டா. வியாசங்களைத் திருத்தவும், நிறுத்தவும் ஆசிரியருக்கு முழு உரிமையுண்டு. பிரசுரிக்காத வியாசங்கள் திருப்பி அனுப்பப்படமாட்டா

வியாசதாரர்களின் அபிப்பிராயங்கட்கு ஆசிரியர் உத்தரவாதியல்லர்.

நமது ஆபீசிலிருந்து பதில் வர விரும்புவோர் ரிப்ளை கார்டாவது, தபால் பில்லையாவது அனுப்பிவைத்தல் வேண்டும்.

கடிதம் எழுதும்போதெல்லாம் ஒவ்வொருவரும் தங்கள் சந்தா எண்ணைக் குறிப்பிட்டு எழுதுதல் வேண்டும்.

### விளம்பர விகிதம்

| | | | |
|---|---|---|---|
| முழுப்பக்கத்திற்கு | ஒரு மாதத்திற்கு | ரூ. | 8—0—0 |
| அரைப் பக்கத்திற்கு | ,, | ரூ. | 5—0—0 |
| கால் பக்கத்திற்கு | ,, | ரூ. | 3—0—0 |

மானேஜர், மருத்துவன் ஆபீஸ்
221, தங்கசாலைத்தெரு, சென்னை.

### கடிதம் எழுதுவோர் கவனிக்கவேண்டியது

நமது தமிழ் வைத்தியசாலைக்கு வழக்கமாக ஆர்டர் செய்கிறவர்கள் ஒவ்வொரு கடிதத்திலும் முழுவிலாசத்தையும் தெளிவாக எழுதும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். ஆர்டர் செய்தவர்களின் விலாசம் தெளிவாகவும் விவரமாகவும் இல்லாததினால் சில ஆர்டர்களுக்கு மருந்தனுப்பமுடியாமல் போனதற்கு மிகவும் வருந்துகிறோம்.

மானேஜர் :—
தமிழ் வைத்தியசாலை,
221 தங்கசாலைத்தெரு, சென்னை.

Regd. No. M. 2418

# MARUTHUVAN
## (PHYSICIAN)

A High Class Medical Tamil Monthly
Editor; Pandit S. S. Anandam.
Sample Copy Free on Application

Add:— Manager.
MARUTHUVAN OFFICE
221, Mint Street
MADRAS.

## மருத்துவன் பத்திரிகை சந்தாதாரர்களுக்குள்ள பெரிய லாபம்.

பாலர் பரிபாலனம், பாலர் வைத்தியம்

மருத்துவனில் மாதந்தோறும் எட்டுப்பக்கம் (ஒரு பாரம்) 'பாலர்பரிபாலனம் பாலர்வைத்தியம்' என்பதன் சம்பந்தமாகப் பல அரிய பெரிய விஷயங்கள் வெளியாகும். இப்புத்தகம் சுமார் முப்பது பாரத்துக்குமேல் வரும். சந்தாதாரர்கள் அதனைச்சேர்த்து ஒரே புத்தகமாகப் பைண்டு செய்து கொள்ளவேண்டும். இல்லறத்திலிருந்து மக்கள் பேறு அடையும் ஒவ்வொருவருக்கும் இப்புத்தகம் பெருநிதியைப்போன்றது. பாலரை நோயணுகாமல் வளர்க்கும் முறைகளும், பாலர்களுக்குவரும் நோய்களுக்குத் தாங்களே பரிகாரம் செய்துகொள்ளும் வழிகளும் இப்புத்தகத்தில் தெளிவாக விளக்கிக் காட்டப்பட்டிருக்கின்றன, இப்புத்தகத்தைப் பெண்கள் எல்லோரும் படிப்பதால், சிசு தாயின்கருப்பையினின்று வெளிப்படுங்காலத்தில் அருகிலிருந்து பரிகாரஞ்செய்ய மருத்துவச்சி தேடவேண்டியதில்லை, வீட்டிலுள்ள பெண்பாலார் தாங்களே ஒருவருக்கொருவர் உதவிசெய்து கொள்ளலாம். இப்புத்தகம் மருத்துவர், மருத்துவச்சிகளுக்கும், மருத்துவமாணவர் மாணவிகட்கும், பொது ஜனங்கட்கும் தோன்றாத் துணையாக உள்ளது.

மானேஜர்:— மருத்துவன் காரியாலயம்,
221, தங்கசாலை வீதி,
சென்னை.

Printed by The Sree Subramaniya Vilasam Press, NO 220. Mint Street, MADRAS
& Published by Pandit S. S. Anandam, 221, Mint Street, Madras.

# MARUTHUVAN

# மருத்துவன்

## PHYSICIAN

## தமிழ் வைத்தியப் பத்திரிகை

ஆசிரியர். பண்டிட் எஸ். எஸ். ஆனந்தம்

மலர் க. 1929ஞு பிப்ரவரிமீ இதழ் ரு.

உள்ளுறை

| | |
|---|---|
| தமிழ்வைத்தியமும், சம்ஸ்கிருதவைத்தியமும் | 121 |
| திருசு | 123 |
| மதுசாரம் | 125 |
| மலத்தில் இரத்தம் | 127 |
| சைமன்கமிஷன் வரவேற்பு | 129 |
| சுயமரியாதை மகாநாட்டில் வைத்திய உதவி | 131 |
| தென்னிந்திய மருத்துவர்சங்கம் பொதுக்கூட்டம் | 132 |
| பொதுச்செய்திகள் | 133 |
| நன்கொடை அளித்த அன்பர்கள் | 134 |
| பாலர் பரிபாலனம் | |

மருத்துவன் காரியாலயம்
221, தங்கசாலை வீதி
சென்னை.

# மருத்துவன்

ஓர் உயர்ந்த வைத்திய மாதப் பத்திரிகை.

இம் மருத்துவன் ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையாது வேண்டியவன். இவன் நோயணுகா விதிகளை ஆண், பெண் ஆகிய இரு பாலாருக்கும் போதிக்கக் கூடியவன். வந்த நோய்களை எளிதாகப் போக்கிக் கொள்ளும் வழிகளைக் கூறுபவன், பெண்கள் கருப்பெற்ற காலத்திலும், கரு உயிர்க்கும் காலத்திலும் நடந்து கொள்ள வேண்டிய முறைகளையும், பாலர் பரிபாலனத்தையும், குழந்தைகளுக்கு வரும் நோய்களையும், அவற்றிற்குரிய பரிகாரங்களையும் அறிவிப்பவன். பொதுவாக மக்கள் நோயின்றித் தேக பலத்தோடும், நீண்ட ஆயுளுடனும் வாழ்வதற்குரிய வழிகளை ஆராய்ச்சி முகத்தால் எடுத்து விளக்குபவன். மக்களுக்கு உயிரினும் சிறந்த பொருள் உலகில் வேறொன்றுமில்லையாதலால், ஒவ்வொருவருடைய உயிர் வாழ்க்கைக்கும் இம்மருத்துவன் உற்ற துணைவனாவான்.

### மருத்துவனின் சந்தா விபரம்.

ஆண்டு 1-க்குத் தபாற் கூலியுட்பட உள் நாடாகிய இந்தியா, இலங்கை, பர்மா முதலிய இடங்களுக்கு ரூ. 3—0—0.

பினாங்கு, சிங்கப்பூர், கோலாலம்பூர், தென் ஆப்பிரிக்கா முதலிய வெளி நாடுகளுக்கு ரூ 3—8—0.

தனிக்காப்பி அணா 0—4—0

ஓராண்டுக்குக் குறைந்த சந்தா கிடையாது.

பத்திரிகை ஆங்கிலமாதக் கடைசியில் வெளிவரும்.

### சந்தாதாரர்கள் கவனிக்கவேண்டியவை.

சந்தா தாரர்களாகச் சேருகிறவர்கள் தங்கள் பெயரையும், முழு விலாசத்தையும் அருகிலுள்ள தபாலாபீசோடு தெளிவாக எழுத வேண்டும்.

சந்தா தொகையை முன்னரே செலுத்தியாவது அல்லது வி-பி-யில் செலுத்தியாவது பத்திரிகையைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

ஆண்டின் நடுவில் சேருகிறவர்களுக்கு முன் பத்திரிகைகள் வேண்டுமானால், இருக்கும் சஞ்சிகைகள் மட்டும் அனுப்பப்படும்.

உ

# மருத்துவன்

(PHYSICIAN)
தமிழ் வைத்தியப் பத்திரிகை
ஆசிரியர் பண்டிட் எஸ். எஸ். ஆனந்தம்

மலர் க. | 1929ஞு பிப்ரவரிமீ | இதழ் ரு.

## தமிழ்வைத்தியமும், சம்ஸ்கிருதவைத்தியமும்

(96-ம் பக்கத்தொடர்ச்சி)

அதன்பிறகு பனை ஓலைகளிலும், செப்பேடுகளிலும், கல்லிலும் எழுதத் தலைப்பட்டார்கள். தமிழ் தெலுங்கு முதலிய எல்லா மொழிகளுக்கும் சம்ஸ்கிருதம் முதல் மொழியாயிருந்திருப்பின் அம்மொழிக்குச் சொந்தமான எழுத்து இன்றுவரை இல்லாமல் இருப்பானேன். வடநாட்டார் இந்தி அல்லது நாகர எழுத்தையும், தென்னாட்டார் சம்ஸ்கிருதத்துக்காக கிரந்த எழுத்தென்று ஒரு எழுத்தையும் செய்துகொள்வானேன். கிரந்த எழுத்தென்றால் நூல்கள் எழுதுவதற்கென்றே ஏற்படுத்தப்பட்டது என்று பொருளாகின்றது.

சம்ஸ்கிருத வேதங்களை நெடுநாள் எழுத்தில்லாமல் செவியாரலாக (கர்ணபரம்பரையாக) சொல்லிவந்தார்கள். ஆதலால் சம்ஸ்கிருத வேதத்திற்கு எழுதாக்கிளவி என்றும் பெயரிருக்கிறது.

இந்தியாவில் சுமார் பன்னிரெண்டு மொழிகள்வரையிலிருப்பதனால் வேதம், உபநிஷத், ஆகமம், யோகம், ஞானம், ஜோதிஷம், மாந்திரீகம், வைத்தியம் முதலிய நூல்களையும், அர்த்தசாஸ்திரம், யுத்தசாஸ்திரம், காந்தருவ முதலிய சாஸ்திரங்களையும் எல்லோரும் அறியும்படியான நாட்டுமொழிகளில் எழுதினால் அதற்குப் பெருமையிராதெனவோ, அல்லது இந்தியாவிலுள்ள பல மொழிகளிலும் நூல்களை எழுதுதல் இயலாதெனவோ கண்டமுற்காலத்தினர் இந்தியாவில் நூல்

களை)(கிரந்தங்களை) எழுதுவதற்காக சம்ஸ்கிருதபாஷையை நடுவில் செய்துகொண்டார்கள். சம்ஸ்கிருதம், சம் = செம்மையாக, கிருதம் = செய்யப்பட்டது என்றபொருளும் பெருகின்றது. ஆதலால் பிற்காலத்தில் தேசபாஷைகளில் எழுதிய நூல்களை எல்லாம் சம்ஸ்கிருதத்தில் எழுதினார்கள். பின்னர் புதிதாக எழுதும் நூல்களை எல்லாம் அம்மொழியிலேயே எழுதத்தலைப்பட்டார்கள். சம்ஸ்கிருதம் படிப்போர் சிலராதலாலும் படியாதவர் பலராதலாலும் சம்ஸ்கிருதத்திற்கு ஏற்றமுண்டாயிற்று. சம்ஸ்கிருதத்திற்கு தேசபாஷைகள் மூலபாஷையே தவிர தேசபாஷைகளுக்கு சம்ஸ்கிருதம் மூலபாஷையல்ல. சம்ஸ்கிருதம் ஒரு நாட்டாருக்கோ, ஒருவகுப்பினருக்கோ சொந்தமொழியல்ல; நூல்கள் எழுதுவதற்காக ஏற்பட்ட பொதுமொழியாகும். பிற்காலத்தில் இதனை ஒருவகுப்பினர், தாங்கள் மக்களில் உயர்ந்தவர்கள், பூசுரர், தேவர்கள், மற்றவர்களெல்லாம் சூத்திரர்கள், அவர்கள்பேசும் மொழி சூத்திரமொழி, தங்கள்மொழி தேவமொழியாகிய சம்ஸ்கிருதம், அம்மொழியிலிருந்துதான் உலகிலுள்ள எம்மொழிகளும் தோன்றியதெனவும்கூறி, மேற்சொன்ன அந்த ஓரேவகுப்பினர்மட்டும் சம்ஸ்கிருதத்தைப்படித்து அதிலுள்ள நூல்களையும் படிக்கவேண்டும்; மற்றவர்கள் படித்தால் நாவை அறுத்தல், அம்மொழியைக் காதால் கேட்டால் காதில் ஈயத்தை உருக்கிவிடுதல் முதலிய கொடுமைகளை ஏற்படுத்தி பொதுமக்களுக்கு கல்வி அறிவைத்தடுத்து, மிருகங்களைப்போல் நடத்தி தமிழ்மொழியையும் கேவலப்படுத்தினார்கள். இதனைக் கண்ட அறிவுடையவர்கள் தேசபாஷைகளை வளர்க்கவும், அதிலுள்ள நூல்கள் அழிந்ததுபோக எஞ்சிநின்ற மருத்துவம் முதலிய நூல்களை பள்ளி மாணவர்களுக்குத்தக்கபடி திரட்டி புத்தகங்களாக்கவும் தலைப்பட்டு அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொண்டார்கள். அரசாங்கத்தாரும் உதவிசெய்து வருகின்றார்கள். இதனால் பொறாமைகொண்ட சிலர் தமிழ்மொழியையும், தமிழிலுள்ள மருத்துவம்முதலிய நூல்களையும், தமிழ் மருந்துகளையும் சம்ஸ்கிருத மொழியில் பெயர்த்தெழுதிக்கொண்டு தமிழில் என்ன இருக்கிறதென்று கூறுகின்றார்கள்.

சம்ஸ்கிருதத்திலுள்ள வேதம் உபநிஷத்து முதலியவைகளையும் தமிழிலுள்ள திருக்குறள், நாலடியார், சிவஞானபோதம், சித்தியார் முதலிய சாஸ்த்திரங்களையும் உலகில் எந்தநாட்டினரும் படித்துணரும்படியாக மாக்ஸ்முல்லர், ரெவரெண்டுபோப்பு முதலியவர்கள் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்திருக்கின்றார்கள். இதனால் சம்ஸ்கிருதம், தமிழ் படியாதவர் பலர் உலகப் பொதுப்பாஷையாகிய ஆங்கிலத்தில் எளிதாகப்படித்து அறிந்துகொள்ளுகின்றார்கள். இதனால் ஆங்கில மொழியினின்றுதான் இருக்காதி வேதங்களும், திருக்குறள், திருவாசகம், சித்தாந்த சாஸ்திரங்களும் வந்ததெனில் எப்படிப்பொருந்தும்? அதுபோல் தமிழ் மருத்துவ நூல்களிலுள்ள பொருள்களை சம்ஸ்கிருத நூல்களில் எழுதிக்கொண்டு இப்போது எல்லாம் சம்ஸ்கிருதத்திலிருக்கிறதென்றால் அது எப்படிப்பொருந்தும்? தமிழைவிட சம்ஸ்கிருதத்தில் மருத்துவ நூல்கள் ஒரு ஒழுங்காக எழுதப்பட்டிருக்கிறதெனில், ஒருபாஷையிலிருந்து மற்றொருபாஷையில் மொழிபெயர்க்கும்போது திரட்டி முறையாக எழுதப்பட்டிருக்கிறது. ஆதலால் சம்ஸ்கிருத வைத்திய நூல் ஒரு ஒழுங்காக இருக்கிறதெனக் கூறுவது உண்மைதான்; அந்த ஒழுங்கும் என்ன என்பதை பின்னர்கூறுவோம். தமிழில் பலசித்தர்கள் பல்லாயிரக்கணக்கான மருத்துவ,யோக,ஞான நூல்களை இலட்சக்கணக்கான செய்யுள்களில் பாடினார்கள். அவைகளெல்லாம் தற்காலமுள்ள பள்ளி மாணவர்கட்குப் பயன்படுமா? ஒருக்காலும் பயன்படாது. ஆதலால் அவைகளினின்று திரட்டித்தான் எழுதவேண்டும். அப்படி எழுதுங்காலத்தில் சம்ஸ்கிருத வைத்திய நூல்களில் இவைகளெல்லாம் இருக்கின்றன, அதைத்தான் தமிழில் இவர்கள் எழுதிக்கொண்டார்கள் என்றும் சிலர் கூறுவர். அதைப்பற்றி நமக்கு ஒன்றும் குறைவில்லை.

சம்ஸ்கிருதமொழியைத் தங்களுடையமொழி என்று ஒருவகுப்பார் சொல்லிக்கொண்டு தமிழ்மொழியை சூத்திரர்மொழி என்று சொல்லி, தாம்பிறந்ததுமுதல் இறக்கும்வரையில் தாய்மொழியாக தமிழையேபேசிக்கொண்டு, தமிழிலேயே உயிர்வாழ்ந்துகொண்டிருக்கிறவர்களைப்பற்றி நாம் ஆச்சரியப்படவில்லை. தமிழர்களும் மற்றவர்களும் நூல்கள் எழுதிவைக்கப்பட்ட பொதுமொழியாகிய சம்ஸ்கிருதத்தை ஒரு சிறு வகுப்பினர் தங்கள் மொழியென்றும் தெய்வமொழி என்றும் சொல்லுவதை ஒத்துக்கொண்டு காலங்கழிக்கக்கூடிய நிலையில் ஒரு பெரும்பகுதிமக்கள் இருந்திருக்கிறதை நினைத்தால் மிக ஆச்சரியமாயிருக்கிறது. (தொடரும்)

## துருசு

(98-ம் பக்கத் தொடர்ச்சி).

துருசு கரைத்த நீர் பச்சைநிறமாயிருக்கும். அந்த நீரில் இரும்பு சாமான்களையோ துத்தநாகச்சாமான்களையோ போட்டால் செம்பு அவைகளின்மேல் படிந்து அவைகள் செம்பின் நிறத்தை அடையும். இந்த சோதனையாலும் துருசில் செம்பு இருக்கிறதென்பதை அறியலாம்.

## துருசின் உபயோகம்.

பீங்கான், கண்ணாடி இவைபோன்ற பொருள்களில் பச்சைநிறம் உண்டாவதற்கு இச்செம்பு உப்பாகிய துருசு உபயோகமாகின்றது. ஒரு செப்புத்துண்டை குறட்டினால் பிடித்து தீயில்காய்ச்சி சீக்கிரம் ஆறவிடும்போது அதன்மேல் சிவந்தநிறமாக உண்டாகும் ஓர் பொருளால் கண்ணாடிக்குச் சிவப்புநிறம் உண்டாக்கப்படுகிறது. துணிகளுக்கு நிறம் கொடுப்பதற்கும், செம்பிலிருந்து வேறு சில உப்புகள் எடுப்பதற்கும், ப்யாட்றிவேலைகளுக்கும் துருசு மிகுதியாகச் செலவாகின்றது. துருசு கரைந்திருக்கும் நீரில் ஊறினமரம் உளுக்காது. துருசு கலந்த வர்ணம் பூசப்பட்ட கதவு, நிலை முதலிய மரச்சாமான்களை கறையான்முதலிய பூச்சிகள் பிடிக்காது; தோல் முதலிய பிராணீயப் பொருள்களும் கெடாது. இரணங்களில் வளரும் கெட்ட ஊனை கரைப்பதற்கும், உடையாதசிரங்குகளின் வாயைத்திறப்பதற்கும், மூலமுளைகளை வேகவைத்து எடுப்பதற்கும் மருத்துவர்கள் செம்புத்துருசை உபயோகிப்பது வழக்கம். துருசைச் சுட்டுப் பொடித்து தேள்கொட்டின இடத்திலும், பாம்புகடித்த இடத்திலும் வைத்துத் தண்ணீர் விட்டால் விஷம் நீங்கும்.

ஆனால் அதனை மேலே உபயோகித்த உடனே எரிச்சலும், நோயும் மிகுதியாகும். தெரிந்தோ, தெரியாமலோ துருசைத் தின்றால் வாந்தி மிகுதியாகும். துருசை அதிகமாக அருந்தினால் வாந்தியும், பேதியும் மிகுதிப்பட்டு, வயிற்றுநோயும், களைப்பும் ஏற்பட்டு இறக்க நேரிடும்.

### துருசு, செம்புக்களிம்பு முதலியவைகளுக்கு முறிவு.

செம்பு உப்பாகிய துருசை அளவுக்குமீறி களிம்புடன் தெரிந்தோ தெரியாமலோ அருந்தினால் உடனே இளஞ்சூடான வெந்நீரை மிகுதியாகக்குடிக்கும்படி உள்ளுக்குக்கொடுத்து உடனே கைவிரலைத்தொண்டையில் படும்படிவிட்டு வாந்தி எடுக்கச்செய்யவேண்டும். எப்சம் சால்ட் என்னும் மாக்னிஷியம் சல்பஸ் (பேதி உப்பைக்) கரைத்தும் வாந்தி ஆகக் கொடுக்கலாம். ஆமணக்கெண்ணெய், பச்சை முட்டையின் வெள்ளைக்கரு, பால், புளித்த எருமை மோர், எலுமிச்சம்பழச்சாறு, இஞ்சிச்சாறு, தேன், சர்க்கரை இவைகளைக்கலந்து கொடுக்கலாம். சீனச்சர்க்கரையும், அயச்செந்தூரமும் சேர்த்துக் கொடுப்பதும், நெல்லிக்காய்ச் சாற்றை உள்ளுக்குக் கொடுப்பதும் நல்ல முறிவு.



### கட்டிச்சிரங்குகளிலுள்ள முளையை எடுக்கவும் கெட்ட ஊனைக்கரைக்கவும்.

துருசையும் வெண்ணெயையும் அரைத்து வைத்துக்கொண்டு புண்களின்மேல் சதைவளர்ந்திருப்பதை கரைப்பதற்கும் கட்டிச்சிறங்குகளிலுள்ள முளைகளை எடுப்பதற்கும் வெள்ளைத்துணியில் தடவி புண்களின்மேல் போடலாம். வெண்ணெய் மிகுதியாகச்சேர்ந்தால் எரிச்சல் குறையும், ஆறாதபுண்களையும் ஆற்றும்.

### கண்ணோய்க்கு.

துருசுப்பொடியை சிறிதளவு மழைநீரிலாவது, நல்லதண்ணீரிலாவது கரைத்து கண்ணோயுள்ளவர்களுக்கு கண்ணில்விட்டுவர கண்ணோய் நீங்கும்.

### வாந்தியாக.

நஞ்சுகளைத் தெரிந்தோ, தெரியாமலோ தின்றவர்கட்கும், நெஞ்சில் கவத்தின் வருத்தமுடையவர்கட்கும் வாந்திக்கு உடனே கொடுக்கவேண்டுமானால் துருசில் நான்குநெல்லளவுமுதல் பத்துநெல்லளவு வரை தண்ணீரில் கரைத்துக்கொடுத்தால் களைப்பில்லாமல் வாந்தியாகும்.

### வெட்டை, தந்திமேகத்திற்கு.

நான்குமுதல் பத்து நெல்லிடைவரை துருசை நான்கு அவுன்சு தண்ணீரில் கரைத்து கண்ணாடி பீச்சாங்குழலால் நீர்தாரையில் துருசுநீரைச் செலுத்துவதால் வெள்ளை வெட்டை, தந்திமேகம் முதலிய நோய்கள் நீங்கும்.

## மதுசாரம் மனிததேகத்திற்கு விஷமாகும்

(100-ம் பக்கத்தொடர்ச்சி)

1916-ம் ஆண்டு நவம்பர்மாதம் 28-ந் தேதி யன்று நாலுமணி நேரத்திற்குள் கிளாஸ்கோ (Glasgow) நகரத்தில் டிராம் வண்டிகள் செல்லும் பாதையில் (Tramways) 17 ஆபத்துக்கள் உண்டாயினவாம். விசாரணை செய்ததில் டிராம் வண்டியைச் செலுத்திய ஒவ்வொருவரும் ஆவேசநீரின் (Alcohol) அதிகாரத்திலிருந்தனரென்று தெரிய வந்ததாம்.

ஒவ்வொருவர் செய்யும் நல்லவேலை, சுத்தமான மூளையைக் கேட்கிறது. சுத்தமான மூளையோ ஆவேசநீர் வேண்டாமென்கிறது. ஆதலால், சிறுவர், சிறுமிகள், வாலிபர், பெரியோர் முதலியோர் தங்கள்

சுவாதீனத்திலுள்ள நல்ல மூளையை எவ்விதப்பொருள்களாலுஞ் சேதப்படுத்தாமலும், வேலையின் திட்டமும் அளவுங் குறைவுபடாதபடியுங் காப்பாற்றிக்கொள்ளல் வேண்டும்.

மதுசாரஞ்சேராத மூளையே உத்தமமான மூளையாம்.

பைத்தியத்திற்குப் பல காரணங்க ளிருப்பினும் அவற்றுள் மதுசாரமும் ஒரு முக்கிய காரணமாகும்.

ஆயிரக்கணக்கான மக்கள் அறிவிழந்து பித்தாச்சிரமங்களில் (Lunatic Asylum) அடைபட்டிருக்கின்றனர். அஃதேன்? "ஐயோ அவன் தன் மூளையைக் கொள்ளையிடும்படி, தன் வாய்க்குள்ளே பகைவனுக்கு இடங் கொடுத்தனன்." (Oh! that man should put an enemy in his mouth to steal away his brain-Shakespeare) அதனாலே, மதுசாரம் பைத்தியத்திற்கு முக்கிய காரணமாகின்றது. முதல் கிளாஸ் (First Glass) அல்லது முதல் கலசம் மலையுச்சியிலிருந்து மலையடிவாரஞ் சேருவதற்கு முதற்படியாகும் (first step.)

மதுசாரம் மூளைக்கு விஷமாகும்

மதுசாரம், கண்ணறைகளின் சீர்கேட்டிற்குக் காரணமாகின்றது.

சீர்கேடென்று லென்ன? நிலைமைகெட்டுப்போதல், தன்மைகெட்டுப்போதல், வளர்ச்சிகெட்டுப்போதல், சிறந்த குணத்தினின்றுந் தாழ்வடைதல் அல்லது குறைதல், நன்னிலைமையினின்றும் அழிதல் எனப் பலபொருள் கொள்ளலாம்.

சிறிதுகாலமாகப் பணத்தின் மதிப்புக் குறைந்துவிட்டது. 15-ரூபாய்க்குச் சமமான தங்கநாணயம் (Sovereign) சண்டைக்கு முன் வாங்கியதுபோலத் தற்காலம் அவ்வளவுக்கு வாங்குவதற்கில்லை. அதன் மதிப்பு இறங்கிவிட்டது. உடைகளை உபயோகித்துவருவதால் அவற்றின் நிலைமை கெடுகிறது. வயது சென்றதால் தேகாரோக்கியமும் வேலைசெய்வதற்குச் சக்தியுங்குறைகிறது. ஒருவன் வாலிபனாயிருந்த போது செய்த நல்லவேலையைப்போல, அவன் விருத்தாப்பியனானபோது நல்லவேலையைச்செய்ய முடியுமா? முடியாது. அஃதேன்? அவனுக்கிருந்த வலுவுந் தைரியமுங் குன்றிவிட்டது. கெட்டப்பழக்கங்கள் நற்பழக்கங்களையழித்து, உயர்ந்த நிலைமையினின்றுந் தாழ்ந்தநிலைமைக்குக் கொண்டுபோகின்றன.

(தொடரும்)



## மலத்தில் இரத்தம்

### அதன் முக்கியகாரணங்கள்

(102 ஆம் பக்கத்தொடர்ச்சி)

நான்காவதுசிறுகுடற்புண்:—மணிக்குடல் என்று சொல்லப்படுகிற சிறுகுடலின் முற்பாகத்தில் சிலகாரணங்களால் புண் ஏற்படுகிறதுண்டு. புண் ஏற்பட்டால் மலத்தில் இரத்தம் காணப்படும். ஆனால் முற்கூறியவைகளைப்போலிராமல் மலத்தோடு மிகவும் கலந்து நிற்கும். அதனால் மலமானது கரிய நிறமாய்க்கழியும். எப்போதாவது மலமானது கருநிறமாகக்காணும். ஆனால் இக்குடற்புண்ணுக்கு, வயிற்றின் நடுவில் கத்தியைக்கொண்டு குத்துவதுபோல், உணவு செமிக்கும் காலத்தில் வலி மிகுதியாய் ஏற்படும். கடுமையான வலியுமிருக்கும். இவ்வலியைப்பற்றி இடை இடையே வாந்தியும், வயிற்றில் பந்துபோல் புரளுதலும் தோன்றும். தொப்புளுக்குமேல் கையைவைத்து மெதுவாக அழுத்தினால் நோயாளி திடீரென்று கூச்சலிடுவான். இப்பிணி நீடித்திருக்கின்றதா இல்லையா என்பதை நோயாளியை வினவி அறிந்து கொள்ளலாம். ஆகாரக் குறைவினால் உடல் மெலிந்திருக்கும். கஞ்சிபோன்ற உணவுதான் நோயாளிக்குத்துன்பந்தராததாயிருக்கும். மலச்சிக்கல் எப்பொழுதும் இருக்கும். முப்பது வயதிற்குமேல் ஆண் பெண் இருதிறத்தார்க்கும் இந்நோய் ஏற்படும். ஆனால் பெண்களுக்கு கொஞ்சம் அதிகமாய் ஏற்படுகின்றது. ஆகையால் மலத்தில் இரத்தம் ஏற்படுகிற குடற்புண் வியாதியை வேறு வியாதிகளினின்றும் தெள்ளிதிற்றெரிந்துகொள்ளலாம் இது சத்தியமானது.

ஐந்தாவது குடற்புற்று நோய்கள்:— குடற்புற்று நோய் மலக்குழாய் பக்கத்திலும், இரைப்பையிலும், மணிக்குடலிலும் புற்றுபோல் வளர்ந்து, கள்ளிமலர்போல் விரிந்திருக்கும். குபீர்குபீரென்று அவைகளிலிருந்து இரத்தம்பாய்ந்து மலத்தில் சேர்ந்துவரும். கொடூரமான வலி இடையிடையேதோன்றும். இவ்வலியைத் தாங்காது சிலர் நஞ்சுகளைத்தின்று தற்கொலை செய்துகொள்வார்கள். அடிக்கடி பாய்கிற இரத்தத்தால் உடல் வெளுத்து உணவு குறையும். ஆனால் இவ்வியாதி நாற்பத்தைந்து அல்லது ஐம்பது வயதிற்கு மேற்பட்டவர்களுக்கே வரும். அதற்குமுன் வருகிறதேயில்லை. ஆயிரத்தில் ஐந்துபேர்களுக்குத்தான் இவ்வியாதி வரும். இது பொதுவாக வருகின்ற சாதா

ரண வியாதியன்று. ஆகையால் இந்நோயை முன்னே சொன்ன நோய்களினின்றும் இலேசாகத் தெரிந்துகொள்ளலாம். வாந்தியிருந்தால் வாந்தியிலும் உதிரம் வரும்.

ஆறாவது சிலகொடிய நஞ்சுள்ள மருந்துச் சரக்குகள்:— இச்சரக்குகளை உட்கொண்டால் மலத்தில் இரத்தத்தைத் தோற்றுவிக்கிறதுண்டு. முக்கியமாக வெள்ளைப்பாடாணம் அல்லது மஞ்சள் (கௌரி) பாஷாணத்தை அளவுக்குமீறித்தின்று அது நஞ்சாகிவிட்டால், அது குடலைப் புண்படுத்தி மலத்தில் இரத்தம் விழச்செய்யும். சிலவகைப் பாம்புகள் கடித்துவிட்டாலும் மலத்தில் இரத்தம் காணப்படும். கொடுமையான குணமுள்ள இன்னுஞ் சில பாஷாணச் சரக்குகளும் உட்சென்றால் அது மலத்தில் இரத்தத்தைத் தோற்றுவிக்கும். கொஞ்சநேரத்துக்குமுன் எவ்வகைப்பிணியும் இல்லாம லிருந்தவனுக்குத் திடீரென்று வாந்திபேதியும், மலத்தில் இரத்தமும் காணுமானால் அதற்கு வெள்ளை, மஞ்சள் முதலிய பாஷாணங்களே காரணமா யிருக்க வேண்டும். நோயாளியின் வாயைப் பார்த்தால் வாய் புண்பட்டுச் சிவந்திருக்கும். பிணியாளியையும் சுற்றத்தாரையும் கேட்டு எதையும் தீர்மானஞ் செய்துகொள்ளலாம்.

மேற்குறித்த நோய்களே முக்கியமாய் மலத்தில் உதிரத்தைத் தோற்றுவிக்கும். உஷ்ணமிகுதியாலும் உணவுவேற்றுமையாலும் மலக்குடலில் அற்பமான புண் தோன்றி, அது கொஞ்சம் இரத்தத்தையும் சீதத்தையும் மலத்தில் தோற்றுவிக்கும். ஆனால் இவ்வியாதி வயிற்றளைச்சல் அன்று. இது சாதாரண நல்ல உணவுகளால் மூன்று அல்லது நான்கு நாட்களில் குணத்துக்கு வரக்கூடியது.

“நோய்நாடி நோயின் முதல்நாடி” என்ற வாக்கின்படி நடக்க வேண்டுவது மருத்துவர் கடமையாதலால் பிணியாளனின் வயது, நோயின் ஆரம்பகாலம், மலத்தில் இரத்தங்கண்டதின் வரலாறு முதலியவைகளை நன்கு வினவி யறிந்து வியாதி இன்னதென்று உறுதி செய்துகொண்டு பிறகு வேண்டும் மருந்துகள் கொடுப்பது மருத்துவர் கடமை. சிலவேளைகளில் வயிற்றளைச்சலை உள்மூல வியாதியினின்றும் தீர்மானிப்பது கொஞ்சம் கடினமாய்த்தோன்றும். ஆனால் அதை மேற்கூறிய ஆதாரங்களைக்கொண்டு நன்கு அறிந்துகொள்ளலாம்.

திருநெல்லைச்சுந்தரனார்

சிந்தாப்பள்ளி.



இந்திய அரசியல் மகா சபையினராகிய

# ஸர். ஜான் சைமன் அவர்கட்கும் அவர் துணைவர்கட்கும்

## தென் இந்திய மருத்துவ சங்கத்தினரின் வரவேற்பு

ஐயன்மீர்,

தென் இந்தியாவில் சுமார் பதினொரு லட்சம் மருத்துவர்களுக்குப் பிரதிநிதியாக நாங்கள் தங்களை அன்புடன் வரவேற்கின்றோம். தங்கள் வரவு நல்வரவாகுக!

இந்தியாவிலுள்ள சிற்றரசர்களாலும், ஜமீன்தார்களாலும், வெளிநாடுகளிலிருந்து இந்தியாமீது படை எடுத்து வந்தவர்களாலும், நெடுநாள் சமாதானமின்றித் தாய்முகம்காணாத சேய்போல் வருந்திக்கொண்டிருந்த இந்திய மக்களுக்குத் தாய்போல் தோன்றிய ஆங்கில நன்மக்களே வருக! வருக!

பலமொழிகள் வழங்கும் இப்பெரிய கண்டமாகிய இந்தியாவில் ஒருவருடைய கருத்தை மற்றவர்கள் அறிவதற்கியலாமல், அன்பும் ஒற்றுமையுமின்றி வாழ்ந்தவர்களாகிய எங்கட்கு, இமயம் முதல் குமரிவரையிலுள்ள எம்மொழியினரும், எம்மதத்தினரும், எக்குலத்தினரும் இந்தியர் என ஒன்றுகூடிக் குலாவிப் பேசவும், மற்றக் கண்டத்தினர்களோடு அளவளாவவும் எங்களுக்கு ஆங்கிலப் பெருமொழியையும், பல நலங்களையும் அளித்த பெருமக்களே வருக! வருக!

இந்தியாவில் பிராமணரென்போர் தம் சுயநலம்கருதி, நூற்றுக்குத் தொண்ணூற்றேழு மக்களைப் பலவகை ஜாதிகளாகப் பிரித்து, அடிமைப்படுத்தி, மிகக் கொடுமையாக நடத்திவந்ததைப் பிராமணரல்லாத தலைவர்களால் நீங்கள் அறிந்து ஒடுக்கப்பட்ட வகுப்பினர்களுக்கு வகுப்புரிமை வழங்கிய வள்ளல்களே வருக! வருக!

பிராமணர்களால் மத்தியகாலத்தில் மதங்களின் பெயரால் ஏற்படுத்தப்பட்ட நரபலி, கணவன் இழந்த பெண்களை உடன்கட்டையேற்றல். சிசுக்களை உயிருடன் கங்கையிலெறிதல் முதலிய கொடுமைகளையெல்லாம் நீக்கி, மேல் ஜாதிக்கொரு சட்டமும் கீழ் ஜாதிக்கொரு சட்டமுமாயிருந்த அநீதியெல்லாம் ஒழித்து இந்தியர்களுக்கு நல்வாழ்வு அளித்த வல்லவர்களே வருக! வருக!

உயர்ந்த ஜாதியார் என்போர் இந்தியரின் சாஸ்திரம் வேறு, அனுஷ்டானம் வேறு என்று கூறி ஒடுக்கப்பட்ட எங்களில் பலர் இந்துக்களாயிருந்தும், ஜனத்தொகையில் எங்களை இந்துக்களாகப் பதிவு செய்தும், மத சம்பந்தமான வரி முதலியவைகளை எங்களிடமிருந்து வசூல்செய்தும், இந்து மதக்கோயில்களுக்குள் எங்களை நுழையவிடாமலும், மிருகங்கள் நடமாடும் தெருக்களில்கூட எங்களில் சிலரை நடக்கவிடாமலும் தடுத்துக் கேவலப்படுத்தும் மனிதத் தன்மையற்றவர்களுக்கு நல்லறிவுச் சுடர்கொளுத்தும் ஞான ஞாயிறு போன்றவர்களே வருக! வருக!

இந்தியாவில் தொழில்களால் ஜாதிகள் வகுக்கப்படாத காலமுதல் வைத்தியம், இரணவைத்தியம், பிள்ளைப்பேறு முதலிய உயர்ந்த தொழில்களையே பரம்பரையாய்ச் செய்துவந்த மருத்துவ வகுப்பினரான நாங்கள் இக்காலத்தே மிகத் தாழ்த்தப்பட்டவர்களாக நடத்தப்படுகின்றோம். எங்கள் பரம்பரை வைத்தியத்தொழிலை உயர்ந்த ஜாதியார் என்பவர் கைக்கொண்டனர். எங்கள் வகுப்பினர் கல்வியில் மிகப் பிற்போக்கடைந்து மிக ஏழைகளாயிருப்பதால் வேண்டிய உதவிசெய்து உயர்தரக் கல்வியை இலவசமாக அளித்து மனிதத்தன்மை அடையச்செய்ய வல்ல மாண்பு மிக்கோர்களே வருக! வருக!

இந்தியாவில் மேல்ஜாதியாரென்போர் மக்களுக்குள் ஜாதிப் பிரிவுகளை ஏற்படுத்தி, எல்லாச்சாதிக்கும் தாங்கள் உயர்ந்த ஜாதி என்றும், தாங்கள் பூலோக தேவர்கள் என்றும் மிகக் குரூரமான ஜாதிக்கொரு நீதிசாஸ்திரம் எழுதி, அக்காலத்திருந்த மூட அரசர்களில் மனு என்னும் ஒரு பெரிய அரசன் பெயரை அந்த அதர்ம சாத்திரத்துக்கு அளித்து, அந்த மனு அநீதிப்படி மிகக்கொடுமையாக ஆட்சிபுரிந்து வந்தார்கள். கடவுள் அருளால் ஆங்கிலேயர்களாகிய நீங்கள்வந்து அக்கொடுமையான ஜாதிக்கொரு நீதியை ஒழித்து மக்களுக்குள்ள சுதந்தரத்தைக் கொடுத்தீர்கள்.

மீண்டும் அப்பார்ப்பனர்கள் தங்களுடைய பழைய கொடுமையான மனு அதரும ஆட்சியைநடத்தி எங்களைப்போன்ற ஒடுக்கப்பட்டவர்களைப் பழைய நிலைமைக்குக் கொண்டுபோய் நசுக்குவதற்காக முழு சுயராஜ்யம் கேட்கின்றார்கள். நூற்றுக்குத் தொண்ணூற்றேழு பிராமணரல்லாத மக்கள் கல்வி அறிவுபெற்றுச் சாதித் துவேஷங்கள் வேரோடு களையப்பட்டு மக்களுக்குள் சமத்துவம், சுயமரியாதை வந்த பின்னரே இந்தியாவுக்குச் சுயராஜ்யம் அளித்தல் வேண்டும்.



இந்தியாவில் பிறப்பினால் மேல் சாதியார் என்று ஒரு வகுப்பு இருக்கும்வரையில் சுயராஜ்யம் கொடுப்பது, ஒடுக்கப்பட்டுக் கல்வியில்லாமல் இருக்கும் பெரும் பகுதி மக்களுக்கு ஆபத்தேயாகும்.

இப்போது நாங்கள் பிரிட்டிஷ்குடிகளாயிருந்தும், உயர்ந்த சாதியாரால் படும்பாடு சொல்லி முடியாது. பிரிட்டிஷ் ஆட்சி நீங்கிச் சுய ஆட்சி வந்தால் எங்களைப் போன்றவர்கள் மானத்தோடு வாழ இயலாது.

ஆதலால் நாங்கள் என்றும் இந்தியாவில் பிரிட்டிஷாரின் செங்கோலின்கீழ் வாழ்வதற்கே கடவுளைப் பிரார்த்திக்கின்றோம்.

இங்ஙனம்:

நன்றியறிதலுள்ள

**தென் இந்திய மருத்துவ சங்கத்தினர்.**

## செங்கற்பட்டு சுயமரியாதை மகாநாட்டில்

# வைத்திய உதவி

சென்னைத் தமிழ் வைத்தியசாலைத் தலைவர் பண்டிட் எஸ். எஸ். ஆனந்தம் அவர்களால் சுயமரியாதை மகாநாட்டில் தியாகராயநகரில் ஒரு தரும வைத்தியசாலை ஏற்படுத்தப்பட்டு இரண்டு நாளும் இரவு பகல், மகாநாட்டிற்கு வந்தவர்களில் பல நோயாளர்களுக்கு வைத்தியர்கள் சிலர் இருந்து இலவசமாய் வைத்தியம் செய்தார்கள்.

வந்திருந்தவர்களில் வைத்தியசாலையில் உதவியாக யிருந்த வைத்தியர்களில் முக்கியமானவர்கள்.

பண்டிட் ஆனந்தம் அவர்கள், சென்னை வைத்தியர் மு. குலசேகரம் அவர்கள், திருநெல்வேலி டாக்டர் M. P. சங்கரசுப்பு அவர்கள் திருநெல்வேலி; வைத்தியர் T. முத்துசாமி அவர்கள், திருநெல்வேலி; வைத்தியர் T. S. முத்துசாமி அவர்கள், திருநெல்வேலி; வைத்தியர் R. அப்பாதுரை அவர்கள். வேலூர்; வைத்தியர் G. கண்ணுசாமி அவர்கள், திருவாரூர்; வைத்தியர் க. பிச்சைமுத்து அவர்கள், திருச்சிராப்பள்ளி; வைத்தியர் V. S. சண்முகானந்தம் அவர்கள், மதுரை.

இன்னும் சுமார் 200-மருத்துவர்கள் வரையிலும் மகா நாட்டிற்கு வந்திருந்தார்கள்.

## தென்னிந்திய மருத்துவர் சங்கம்.

### ஓர் பொதுக்கூட்டம்

20-2-29-ஆம்நாள் மாலை 5-மணிக்குச் சென்னை தங்கசாலைவீதி தென்னிந்திய மருத்துவர் சங்க நிலையத்தில் திருநெல்வேலி ஜில்லா மருத்துவர் சங்கத்தலைவர் மருத்துவர் திரு - மு. குலசேகரம் அவர்களின் அவைத்தலைமையில் ஒரு கூட்டம் கூடினார்கள். அதுகாலை வெளியூர்களிலிருந்து செங்கற்பட்டு மாகாண சுயமரியாதை முதல் மகாநாட்டிற்கு அநேக ஜில்லாக்களிலிருந்து வந்திருந்த மருத்துவர்கள் பலரும், சென்னையிலுள்ள மருத்துவர்கள் பலரும் பெருங்கூட்டமாகக் குழுமியிருந்தனர். தென்னிந்திய மருத்துவர் சங்கத்தலைவரும் "மருத்துவன்" ஆசிரியருமாகிய பண்டிட் ஆனந்தம் அவர்கள்,

செங்கற்பட்டில் நடைபெற்ற மாகாண சுயமரியாதை முதல் மகாநாட்டிற்கு மருத்துவர்கள் நூற்றுக்கணக்காக பல ஜில்லாக்களிலிருந்து வந்திருந்ததற்காகவும், அம்மகாநாட்டில் தியாகராயநகரில் ஏற்படுத்தப்பட்டிருந்த தமிழ் இலவச வைத்தியசாலையிலிருந்துகொண்டு சில வைத்தியர்கள், மகாநாட்டிற்கு வந்திருந்தவர்களில் பலருக்கு தம்முடனிருந்து வைத்திய உதவிசெய்ததற்காகவும், பின்னர் சென்னையில் இன்று தென் இந்திய மருத்துவர்சங்கத்தில் நடைபெறவேண்டிய கூட்டத்திற்கு சிரமத்தைச் சிறிதும் பொருட்படுத்தாமல் வந்ததற்காகவும், தனது மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துவதாகக் கூறினர்.

பின்னர், மருத்துவர்கள் தங்கள் குலச் சிறுவர்களை ஐந்துவயது முதல் குறைந்தது 18-வயது வரையிலாவது பாடசாலைகளுக்கு அனுப்புவித்து, தமிழ் ஆங்கிலமொழிகளை கற்பிக்கவேண்டுமென்றும்,

மருத்துவர்கள் எவ்வளவு ஏழைகளாயிருப்பினும் தங்கள் சிறுவர்களை 18-வயதிற்குள் பணம் சம்பாதிக்கும் தொழில்களில் விடக்கூடாது. மருத்துவமாணவர்கள் படிப்பதற்குவேண்டிய உணவு,உடை, இருப்பிடம், புத்தகம், சம்பளம் முதலியவைகள் கொடுக்க பெற்றோர்களுக்கோ, அல்லது வளர்ப்பவர்களுக்கோ சக்தியில்லாவிடில் மருத்துவர்கள் அந்தந்த ஜில்லாக்களிலுள்ள மருத்துவர்சங்கத்தை சரியாக நடத்தி மாதச்சந்தா வசூல்செய்வதினாலாவது, மருத்துவர்களில் பணமுள்ள தனிப்பட்டவர்களின் உதவியினாலாவது, அரசாங்கத்தின்



உதவியினாலாவது 18-வயதுவரை கட்டாயமாக மாணவர்களை படிக்க வைக்க வேண்டுமென்று பண்டிட் ஆனந்தம் அவர்கள் ஒரு தீர்மானம் கொண்டுவந்தார்.

அத்தீர்மானம் டாக்டர் M. P. சங்கரசுப்பு அவர்களாலும், திருநெல்வேலிஜில்லா மருத்துவர்சங்கக்காரியதரிசி மருத்துவர் தி. முத்துசாமி அவர்களாலும் ஆமோதிக்கப்பட்டு எல்லோராலும் ஒரே மனதாய் ஒப்புக்கொண்டு தீர்மானம் நிறைவேறியது.

## ஓர் பத்திரிகாசிரியரின் மரணம்.

சிங்கப்பூரில் நாதாந்தக்கூட்டத்தாரால் நடைபெறும் "முத்தமிழ் நாட்டின் பள்ளி உதயம்" என்னும் பத்திரிகையின் ஆசிரியர் திரு - மு. கதிரேசன் அவர்கள் காலஞ்சென்றமைக்குப் பெரிதும் வருந்துகின்றோம். இவர் சுயமரியாதைக் கொள்கையை ஆதரித்து பத்திரிகை நடத்தியது பாராட்டத்தக்கதாகும்.

## சுயமரியாதைத் திதிகள்.

4-2-29-ஆம் நாள் திங்கட்கிழமை இலங்கை அம்பலாங்கொடை காலிரோடு 370-ஆம் எண்ணுள்ள வீட்டில் மருத்துவர் மு. சண்முகம் அவர்கள் தமது அன்னையின் முதல் ஆண்டு திதியை மிக அன்புடன் பார்ப்பனக்கூலிப் புரோகிதமின்றி சுயமரியாதைக் கொள்கைப்படி நடத்தினர். சாதி வேற்றுமையின்றி சுமார் 100-ஏழைமக்களுக்கு உணவு அளிக்கப்பட்டது. பிறகு சில கனவான்களால் சுயமரியாதைப் பொருளுரைகளும் நடைபெற்றன. இத்திதியின் நினைவுக்காக "குடி அரசு" பத்திரிகைக்கு ரூபா ஒன்றும், "மருத்துவன்" பத்திரிகைக்கு ரூபா ஒன்றும், பண்டித P. S. நாராயணன் மூலமாக அனுப்பப்பட்டது.

நாளதுவருஷம் மாசிமீ 2உ புதன்கிழமை சிதம்பரம் மார்க்கட் தெரு, மருத்துவர் திரு - சு. தில்லைக்கண்ணு அவர்கள் இல்லத்தில் தமது தகப்பனார் சுப்பராய பண்டிதரவர்களின் தலைத்திதி சுயமரியாதை முறைப்படி பார்ப்பனீயத்தை ஒழித்து, மூடச்சடங்குகள் எதுவுமின்றி நடத்தப்பெற்றது. ஆதிதிராவிடருள்பட சுமார் 200-ஏழைமக்களுக்கு உணவளிக்கப்பட்டது. அன்று மாலை தமது தந்தையின் நன்றிக்காக பசுமாடுகளுக்கு அகத்திக்கீரையும் பசும்புல்லும் இடப்பெற்றது.

சுப்பராயபண்டிதரின் பேத்தியும் P. கோவிந்தசாமி பண்டிதரின் மனைவியுமான திரு செல்லம்மாளால் தனது பாட்டனார் திதியின் நினைவுக்காக 50-ஆதிதிராவிட மாணவர்களுக்கும், மற்ற ஏழை மாணவர்களுக்கும் புத்தகங்கள் கற்பலகைகள் கொடுக்கப்பட்டது என்று ஒரு நிருபர் எழுதுகிறார்.

## மருத்துவனுக்கு நன்கொடை அளித்த அன்பர்கள்.

(120-ஆம் பக்கத் தொடர்ச்சி)

திரு - M. S. நாதன் அவர்கள்
கேம்பெல் தெரு. பினாங்கு. 5 0 0

### மருத்துவனின் அன்பர்கள்.

திரு - M. A. இருதயசாமிபிள்ளை அவர்கள்
உதகமண்டலம், நீலகிரி.

" S. சிவன்பண்டிதர் அவர்கள்
பெருந்துறை, சிலோன்.

" T. முத்துசாமி பண்டிதர் அவர்கள்
(திருநெல்வேலிஜில்லா மருத்துவர்சங்க அமைச்சர்)
சாலியர்தெரு, திருநெல்வேலி.

" P. சாமிபண்டிதர் அவர்கள்
கருவேலங்குண்டுத்தெரு. திருநெல்வேலி.

" V. வையாபுரி பண்டிதர் அவர்கள்
வியாங்கொடை, சிலோன்.

" Dr. K. R. முத்துக்குமாரசாமி அவர்கள்
பாரி & Co. ஆஸ்பத்திரி, நெல்லிக்குப்பம்.

" பண்டிட் R. சங்கரநாராயண அவர்கள்
பண்டாரவளை, சிலோன்.

" P. நல்லபெருமாள் பண்டிதர் அவர்கள்
கோர்ட்போம் தெரு, கொழும்பு.

" P. S. பலவேசம்பண்டிதர் அவர்கள்
பெருவளை, சிலோன்.

" S. ஈசுவரமூர்த்திவைத்தியர் அவர்கள்
தென்காசி.



திரு - M. பெரியசாமிபண்டிதர் அவர்கள்
குயப்பேட்டை, சேலம்.

" இராமசாமி உபாத்தியாயர் அவர்கள்
கம்பளை, சிலோன்.

" S. பாலையாபண்டிதர் அவர்கள்
கடவத்தை, சிலோன்.

" S. செல்லையா அவர்கள்
வெளிகாமா, சிலோன்.

" T. வீராசாமி அவர்கள்
நாகலாகம், சிலோன்.

" T. ஐயாவுபண்டிதர் அவர்கள்
டத்தோகிராமத்ரோடு, பினாங்.

" K. R. சிவசாமிபண்டிதர் அவர்கள்
பழைய நீடாமங்கலம், தஞ்சைஜில்லா.

" K. S. சிவநாதன் அவர்கள்
மால்தெரு, கொழும்பு.

" வைத்தியர் K. M. தருமலிங்கம் அவர்கள், கரூர்.

" K. நாகூர்கனிராவுத்தர் அவர்கள்
முத்துப்பட்டணம் ரோடு, காரைக்குடி.

" K. தட்சிணாமூர்த்திபண்டிதர் அவர்கள்
பண்பொழி, திருநெல்வேலி ஜில்லா.

" N. கோதண்டபாணி அவர்கள்
அய்யங்கடைத்தெரு, தஞ்சை.

" V. சுடலைமுத்துபண்டிதர் அவர்கள் தூத்துக்குடி.

" S. பழனிபண்டிதர் அவர்கள்
அன்னதானப்பட்டி, சேலம்.

" K. R. முத்தையபண்டிதர் அவர்கள்
ஷாப்கீப்பர், தூத்துக்குடி.

" வைத்தியர் T. இராமசாமிபண்டிதர் அவர்கள், சேலம்.

" Dr. K. கோவிந்தசாமிப்பிள்ளை அவர்கள் L. M. P.
கும்பகோணம்.

திரு - S. V. மாரிமுத்துப்பண்டிதர் அவர்கள்
செவ்வாய்ப்பேட்டை, சேலம்.

" P. முத்துசாமிப்பண்டிதர் அவர்கள்
வடக்கூர், தூத்துக்குடி.

" G. லோகநாதம்பிள்ளை அவர்கள்
மயிலாப்பூர், சென்னை.

" M. குலசேகரம்பண்டிதர் அவர்கள்
தச்சநல்லூர், திருநெல்வேலிஜில்லா.

" E. பக்கிரிசாமி அவர்கள்
சவுத்பிரிட்ஜ்ரோட், சிங்கப்பூர்.

" வைத்தியர் V. வாசுதேவபிள்ளை அவர்கள் A. M. A. C.
திருவல்லிக்கேணி, சென்னை.

" K. M. P. இளையபெருமாள்பண்டிதர் அவர்கள்
ஷர்ப்கிப்பர், தூத்துக்குடி.

" A. கிருஷ்ணசாமிபிள்ளை அவர்கள்
பொன்மலை, திருச்சி.

" S. சுப்பிரமணியப்பண்டிதர் அவர்கள்
திருநெல்வேலி.

" A. நல்லசிவம்பண்டிதர் அவர்கள்
ஆரவாம்பண்ணை, திருநெல்வேலிஜில்லா.

" T. V. நடேசவைத்தியர் அவர்கள்
தலைஞாயிர், மாயவரம்தாலூக்கா.

" E. பார்த்தசாரதிபண்டிதர் அவர்கள்
மயிலாப்பூர், சென்னை.

" C. துரைசாமிவைத்தியர் அவர்கள்
திருநெல்வேலி.

" S. அரசப்பவைத்தியர் அவர்கள், தென்காசி.

" V. ஜகன்னாதன் அவர்கள்
B. மெர்டாஜம், பினாங்கு.

(தொடரும்)



4. கடைசியாய் குழந்தைக்குத் தாய்முலைகொடுப்பதனால் உண்டாகிற மேற்கண்ட நன்மைகள் ஒன்றுங் கிடைக்காது.

ஆனால் சில சமயங்களில் தாய் தனது முலைப்பாலை சிசுவுக்குக் கொடுக்கக்கூடாது. அவையாவன:—

1. தாய்க்கு நேரிடும் கடுங்கோபம், அதிகதுக்கம், சஞ்சலம், திகில், வெருட்சி முதலிய காரணங்களால் இரத்த ஓட்டம் பேதப்படும். அந்தநேரம் அவள்மார்பிலிருக்கிற பாலும் அதுபோலவே பேதப்படும். இப்படிப்பட்ட காலங்களில் தாய் தன் குழந்தைக்குப் பால் கொடுக்கக்கூடாது. நம்நாட்டில் பெண்கள் வீடுகளில் ஒருவருக்கொருவர் கோபித்துத் தொண்டை கம்மிப்போகுமட்டும் இரைந்து ஓயாமல் சண்டைசெய்வதில் வெகு சமர்த்தர். இப்படிப்பட்ட காலங்களில் குழந்தையை எடுத்துப் பாலுங் கொடுத்துக்கொள்வார்கள். அதனால் குழந்தைக்கு வியாதிநேரிடும். இதன் காரணமறியாமல் பலவைத்தியங்கள் செய்வதனால் குழந்தைக்குத் துன்பம்நேரிடும். ஆகையால், தாய் சினமிகுந்தகாலங்களில் எச்சரிக்கையாய் இருக்கவேண்டும். உடம்பில் இரத்தக்கொதிப்பு அடங்கியபின் குழந்தைக்குப் பால்கொடுக்கவேண்டும். கடுஞ்சினத்தால் இரத்தக்கொதிப்புண்டாகுங்காலங்களில் முலைப்பால் முட்டையின் வெண் கருவைப்போல் உறைந்து பிசின்மாதிரியாகும். அந்தப்பாலை அருந்தின சிசுவுக்கு நோயுண்டாகும். சினமிகுந்த பெண்களும், சண்டைபோடுகிறவர்களும் குழந்தைகட்குப் பால்கொடுப்பதில் மிகக்கவனமாய் இருக்கவேண்டும்.

2. மிகவருந்திக் கரு உயிர்த்ததினால் உண்டாகும் காய்ச்சல், குளிர்காய்ச்சல், காய்ச்சல்கட்டி, பால்கட்டி முதலிய வியாதிகளால் வருத்தப்படும் தாய்மார், தங்கள் குழந்தைகளுக்கு அந்தச் சமயங்களில் பால்கொடுக்கக்கூடாது.

3. எக்காரணத்தாலாவது உடம்பு அதிக பலஹீனப்பட்டு அதனால் பால்சத்துக் குறைந்திருக்குமானால், அப்போது தாய் குழந்தைக்குத் தன் முலைப்பால் கொடுக்கக்கூடாது.

4. காக்கைவலி, பைத்தியம், கண்டமாலை, காசம், இருமல், க்ஷயம் முதலிய கொடூரமான நோய்கள் உண்டானால், அந்தத் தாய் தன் குழந்தைக்கு முலைகொடுக்கக்கூடாது.

5. தாய்க்குப்பால் மிகக் குறைவாயிருப்பினும், அல்லது பால் மிகுதியாயிருந்தும் பாலில் சத்துக்கள் குறைந்து நீர் மிகுந்திருக்குமானால் அந்தப்பாலையும் குழந்தைக்குக் கொடுக்கக்கூடாது.

6. முலைக்காம்பு சிறுத்து உட்சுருங்கியிருந்தால் தாய் பால் கொடுக்க இயலாது.

7. தாய் கருப்பெற்றால், பாலின்குணம் மாறி சத்துக்கள் ஏறு மாறாகும். அப்போது குழந்தைக்குப் பால்கொடுக்கக்கூடாது. தாய் கருவிலிருக்கும் பிண்டத்திற்கும், கையிலிருக்கும் குழந்தைக்கும் போதுமான வளர்ச்சிக்குத்தக்க உணவு கொடுக்க இயலாது.

8. மாதவிலக்குக்காலங்களில் பாலின் தன்மைமாறிக் கெட்டுப் போயிருக்கும். அப்போதுங் குழந்தைக்குப் பால்கொடுக்கக்கூடாது.

இந்த எட்டுவகை காரணங்களில் ஏதேனும் ஒன்றிருந்தால், தாய் பால்கொடாமல் தாதிவைத்தாவது பசும்பால்கொடுத்தாவது வளர்க்க வேண்டுமேயன்றி, குழந்தைக்கு நோய் உண்டாகும்படி தானே தன் பாலைக் கொடுக்கக்கூடாது.

இதுவரை பாலின்குணங்களைப்பற்றிப் பேசினோம். இனிமேல் குழந்தையை வளர்த்துவரும் முறையைப்பற்றிக்கவனிப்போம். முதல் பிரசவமாயிருந்தால் குழந்தைபிறந்து இரண்டு மூன்றுமணி நேரஞ் சென்று பால்கொடுப்பது நலம். சில சமயங்களில் உடனே பால் சுரக்கமாட்டாது. சுரந்திருக்குமானால் குழந்தையை முழுக்காட்டி உடுப்பு உடுத்தின உடனே பால்கொடுக்கவேண்டும். தாயின் உடம்புசூடு படவே குழந்தை அயர்ந்து நித்திரைசெய்யும். அப்படியானால் அது விழிக்கும்வரை பொறுத்திருக்கவேண்டும் எப்படியாவது இருபத்து நான்குமணிநேரத்திற்குள் குழந்தைக்குப் பால்கொடுத்தால் முன் சொல்லியபடி கழியவேண்டிய உதிரம் செம்மையாய்க்கழிந்து தாயின் கருப்பை சுருங்கி வயிற்றுவலியும் (சூண்டுவலி) இலகுவாகும். குழந்தைபிறந்தவுடனே அதற்கு ஆமணக்குநெய் கொடுப்பதுண்டு. அது வேண்டுவதில்லை. கரு உயிர்த்தவுடனே தாய்மார்பில் சுரக்கும் பால் பேதிமருந்துபோல் குழந்தைக்கு மலத்தைக் கழித்துக் குடலைச் சுத்தமாக்குங் குணமுள்ளது. ஆதலால் மருத்துவருடைய கட்டளையின்றி ஆமணக்கெண்ணெயாவது மற்றெந்த பேதிமருந்தாவது சிசுவுக்குக் கொடுக்கக்கூடாது. சிலர் தேனும் சருக்கரையும் கொடுப்பார்கள். இதுவும் பிசகு. தாயின் பால்தவிர மற்றொன்றுமாகாது. சில சமயங்களில் இரண்டு மூன்று தினங்கள்வரை தாய்க்குப் பால் சுரப்பிராது. அப்படியிருந்தாலும் குழந்தை தாயின் முலைக்காம்பில் வாய்வைத்து உறிஞ்சுவதனால் சீக்கிரம் பால்சுரப்பதற்கு இடமுண்டு. பால் சிறிதும் இராமற் போகாது. சிறிதாவது இருக்கும். அது குழந்தைக்கு உதவியாயிருக்



கும். அப்படி பால் மிகக்குறைவாக இருந்தாலும், அல்லது கொஞ்சமும் பால்சுரப்பில்லாமல்போனாலும், அல்லது முன்சொல்லிய காரணங்களில் ஏதாவது ஒன்றால் பால்கொடுக்கக் கூடாமற்போனாலும் பின் சொல்லப்படும் முறைப்படி குழந்தைக்கு உணவுகொடுத்து வளர்க்கவேண்டும்.

1. குழந்தைபெற்று ஒருமாதத்திற்கு மேற்படாதபெண் ஒருத்தியைத் தாதியாக ஏற்பாடுசெய்து குழந்தைக்கு முலைகொடுத்துவரச் செய்யலாம். முடியாவிடில் பிரசவித்து இரண்டு மூன்று மாதத்திற்கு மேற்படாதவளாக இருக்கவேண்டும்.

2. அப்படியும் தாதி கிடைக்காவிடில் கழுதைப்பால்கொடுத்து வளர்க்கலாம். இது தாய்ப்பாலுக்குச் சற்றேறக்குறைய சமமானது. ஆனால் குழந்தைக்குப் போதுமான கழுதைப்பால் கிடைப்பதரிது.

3. வெள்ளாட்டுப்பால் இருபங்குக்கு ஒருபங்கு வெந்நீரும் சிறிது சருக்கரையும்கலந்து கொடுக்கலாம். இதுவும் கழுதைப்பாலும் வேண்டிய சமையங்களில் கறந்து தூயசல்லாவில் வடிகட்டி வெந்நீர் கலந்து குப்பியிலிட்டு தடவை ஒன்றுக்கு இரண்டு அவுன்ஸ் வீதம் மூன்றுமணிநேரத்துக்கு ஒருதரங் கொடுத்துவரவேண்டும்.

குழந்தைபிறந்து பதினைந்துநாள்வரை பசும்பால்கொடுக்கவேண்டிய அளவு

4. ஒரே பசுவின்பால் — ஒருபாகம்<br>
வெந்நீர் — இரண்டுபாகம்<br>
உப்பு — ஒரு சிறுகல் (மிளகளவு)<br>
வெள்ளை சருக்கரை — கொஞ்சம் இனிப்புண்டாவதற்குப் போதிய அளவு. சர்க்கரையை ஈ, எறும்பு, தூசிகள் சேராமல் பதனமாக வைத்திருக்கவும்.

இவைகளைக் கலந்து குப்பியிலிட்டுக்கொடுக்கலாம். அதற்குமேல் முப்பதுநாள்வரை வேளைக்கு அரை ஆழாக்கு (மூன்று அவுன்சு) வீதம் ஆறுவேளை கொடுக்கவும். அதன்பிறகு வேளைக்கு நாலு அவுன்சு ஆக அரைப்படி பால் கொடுக்கவேண்டும். பிறகு மூன்றும் மாதமுதல் வேளைக்கு அரைக்கால்படியாகப் பகலில் ஐந்துவேளையும் இரவில் ஒருவேளையும் கொடுக்கலாம். இதன் மற்ற விபரங்களை 9-ம் அத்தியாயத்தில் விரிவாகக்காணலாம். தாய்ப்பாலுக்குப் பதிலாக மேல்நாட்டார் குழந்தைகளுக்கு கைமுறையாகச்செய்து எல்லாகடைகளிலும் விற்கப்படும் உணவுப்பொருள்களை வாங்கிக்கொடுக்கிறார்கள்.

ஆனால் மேல்நாட்டார், பாலில் சருக்கரையை மிகுதியாகச்சேர்த்து நீர்வற்றக்காய்ச்சி தகரடப்பிகளில் அடைத்து வியாபாரத்துக்கு அனுப்புகின்றார்கள். அதைத் தாய்ப்பாலுக்குப் பதிலாக குழந்தைகளுக்குக் கொடுக்கின்றார்கள். சர்க்கரை மிகுதியாகச் சேர்ந்துள்ள அந்தப்பாலைக்குடிக்கும் குழந்தைகளுக்கு அப்பால் ஆகாரம் உடம்பில் அளவுக்குமீறி கொழுப்பை யுண்டுபண்ணலாம். அதனால் பார்ப்பதற்கும், குழந்தைகளைக் கையால் தொடுவதற்கும் இன்பமாயிருக்குமேயன்றி, உடம்பு கெட்டியாயிராது. குழந்தைகள் வலுப்பெற்றிருக்கமாட்டா. அந்தப்பாலை பெரியவர்கள் அருந்தினாலும் அப்படித்தான் ஆவார்கள்; பொடியாக பால்சேர்ந்த உணவுகள் பல இப்போது கடைகளில் விற்கப்படுகின்றன. அவைகளில் சிலதும் இப்படியேயாகும். இவைகள் செய்யப்படும்காலமும் நமக்குத் தெரியாததால் சிலசமயங்களில் பழையபால்களையும் வாங்கிக் கொடுத்துவிடும்படி நேரிடும். ஆகலால் தாய்ப்பால் கொடுக்கக்கூடாதகாலங்களில் கூடுமானவரையில் நல்ல பசுவின் புதியபாலைக் கொடுப்பதே நல்லது.

பாலைக் காய்ச்சக்கூடாது. பச்சைப்பாலாகவே இருக்கவேண்டும். கூடச்சேர்க்கும் வெந்நீரால் பாலுக்குச் சற்றே சூடுண்டாகச்செய்துகொள்ளவேண்டும். அதிக சூடு கெடுதலை விளைவிக்கும் என்றுசொல்லும் ஒரு சாராருமுளர்; ஆனால் சென்னையைப்போன்ற நகரங்களில் வீடுகளுக்குள் கட்டுக்கிடையிலேகிடக்கும் கால்நடைகள் கால் நடைசிறிதுமின்றி நல்ல காற்றையும், சூரிய வெளிச்சத்தையும், பச்சைப்புல்லையும் கண்ணாலும் பாராத பசுவின்பாலைக் காய்ச்சி உண்பதே நலமாகும். பகலுக்குவேண்டிய பாலை காலையிலும், இரவிற்குவேண்டிய பாலை மாலையிலும் ஒரே பசுவில் கறந்துகொள்ளவேண்டும். பசுவுக்குப்பசு பாலில் வித்தியாசமிருப்பதால் பலபசுவின் கலப்புப்பாலை உபயோகிக்கக்கூடாது. ஆனால் தாய்க்குப் போதுமானபால் சுரந்தவுடனே இவைகளை நிறுத்தித் தாய்ப்பாலே கொடுத்துவரவேண்டும்.

சிசுவுக்குப் பால் கொடுப்பதில் ஒரு ஒழுங்கு இருக்கவேண்டும். தன் இஷ்டப்படி, அல்லது குழந்தை அழும்போதெல்லாம் முலைகொடுப்பது பிசகு. பசியினால் மாத்திரமல்ல, குளிர், அஜீரணத்தினால் உண்டாகும் வாயுவுபத்திரவம், வயிற்றுவலி, எறும்பு, கொசு, முகட்டுப்பூச்சிகள் கடிப்பது, கரப்பான், சிரங்குகளால் உண்டாகும் அரிப்பு, எரிச்சல், மலஜலம் படுக்கையில் கழிந்து, உடுப்புகள், படுக்கை நனைந்துப்போவது முதலிய பலகாரணங்களால் சிசு அழுவதுண்டு,



ஆதலால் அழும்போதெல்லாம் வாய்க்கு அடைப்புப் போடுவதுபோல குழந்தையை எடுத்துப் பால்கொடுப்பது பிழை. தற்காலம் தாயின் முலைக்காம்புபோல் ரப்பரால்செய்து கடைகளில் விற்கிறதை வாங்கி குழந்தைகள் அழாமல் இருப்பதற்காக எந்நேரமும் வாயில்வைத்து அடைக்கின்றார்கள். இது மிகத்தீமையபக்கும். ஒருசமயம் அஜீரணத்தின் காரணமாயுண்டான நோயினால் அழுகிறபோது, மேலும்மேலும் பாலைக்கொடுக்கிறது எரிகிற நெருப்பிற்கு எண்ணெய்வார்த்ததுபோல் நோய் மிகுதியாகும். எல்லா உயிர்வகைகளும் ஒருகாலத்தில் வேலைசெய்து மற்றக்காலத்தில் ஓய்ந்து இளைப்பாறுகிறதுபோல நாமும் பகலில்வேலைசெய்து இரவில் இளைப்பாறுகின்றோம். இரவும் பகலும் ஓயாமல் வேலைசெய்ய சிறிதும் இயலாது. அதுபோல நடக்கும் கால்கள் எப்போதும் நடந்துகொண்டிருக்கமுடியாது. ஓய்வின்றி ஒரு அவயவமும் இருக்க இயலாது. ஆதலால் நாம் உண்ணும் உணவை அரைத்துக்கரைத்து சீரணிக்கச்செய்யும் கருவியாகிய நமது இரப்பையைமட்டும் எப்போதும் வேலைசெய்துக்கொண்டிருக்கச்செய்வது இயற்கைக்கு விரோதமல்லவா? ஆதலால், இரைப்பைக்கு வேலையும் சற்று ஓய்வும் மாறிமாறித்தான் கொடுக்கவேண்டும். குழந்தை அழும்போதெல்லாம் அதற்குப் பால்கொடுக்கிற வழக்கம் உண்டாக்கிவிட்டால், தனக்கு வேண்டியதற்கெல்லாம் அழுதால் கிடைக்குமென்ற செயற்கை அறிவு குழந்தைக்கு உண்டாகிவிடும். பிறகு எந்த விஷயத்திற்கும் தங்கள் விருப்பம் நிறைவேறுமட்டும் விடாமல் அழுதேதீரும். நம்நாட்டில் பல குழந்தைகளிடத்தில் இவ்வழக்கம் உண்டென்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். அழும்போதெல்லாம் பால்கொடுக்கிற வழக்கமே இதற்குக் காரணம். சிசுவாயிருக்கும்போதே எல்லாவற்றிலும் ஒரு ஒழுங்கைத் தாய்மார் கைப்பற்றி பழக்கிவந்தால் பிற்காலத்தில் குழந்தைகளும் அம்மாதிரியே தங்கள் நடக்கைகளிலும் ஒழுங்கைப் பற்றிவருவார்கள். இது குழந்தைகளுக்குத் தாய்மார் கற்பிக்கவேண்டிய முக்கியமானபடிப்பு. குழந்தை, பிறந்ததுமுதல் எந்தவகையிலும் தாய் நடந்துகொள்ளவேண்டியமுறைகளை அந்தந்த அத்தியாயங்களில் தெளிவாகக் கூறியுள்ளதைக் கவனித்து நடந்துகொள்ளவேண்டும்.

### சிசுவுக்குப் பால்கோடுக்கவேண்டிய முறை:—

பதினைந்துநாள்வரை பகலில் ஒன்றரைமணிநேரத்துக் கொருதரமும், இரவில் மூன்றுமணிநேரத்துக்கொருதரமும் கொடுக்கவேண்டும், பின்னர் இரண்டாவது மாதமுடிவுவரை, பகலில் இரண்டுமணி

நேரத்துக்கொருதரமும் இரவில் நான்குமணிநேரத்துக்கொருதரமும் கொடுக்கவேண்டும். அதன்பின் ஏழெட்டு மாதம்வரை, அதாவது பல் முளைக்குமட்டும், காலை 5-மணிமுதல் இரவு 10-மணிவரை சுமார் சாமத்திற்கு அதாவது மூன்றுமணிநேரத்திற்கு ஒருதரமாக ஐந்து வேளை கொடுத்து, கடைசியாகப் பத்துமணிக்குப் பாலைக்கொடுத்து தூங்கவிட்டுபின்னர் மறுபடியும் காலை 5-மணிவரை நிறுத்திவிட வேண்டும்.

இதனிடையில் பால்கொடுக்கும் வழக்கஞ் செய்யக்கூடாது. அதனால் தாய்க்குத் தூக்கங்குறைந்து நோய்க்கிடமுண்டாகும். முலை கொடுக்குந்தாய்க்கு நல்ல தூக்கம்வேண்டும். மேலும் சிசுவின் இரைப்பை அதிகவலிவற்றது. அதற்கு வலிவுண்டாகுமட்டும் அதிகவேலை கொடுக்கவுங்கூடாது. ஒவ்வொருதரமும் வேலைசெய்தபின் அதற்கு இளைப்பாறவும் போதுமானநேரங் கொடுக்கவேண்டும். முலைகொடுக்குந் தாய் கவனிக்கவேண்டிய வேறொரு சங்கதியுமுண்டு. பால்கொடுக்குங் காலந்தோறும் இருமுலைகளிலும் முறையே மாற்றிமாற்றிக் கொடுத்து வரவேண்டும். பால் மிகக் குறைவாயிருந்தால், பக்கத்துக்கு இத்தனை நிமிஷமென்று கணக்காகக்கொடுக்கவேண்டும். வேண்டியபாலிருந்தால் தடவைக்கொருபக்கத்தில் கொடுக்கலாம். இதைக்கவனியாமல் ஒரே பக்கத்தில் மிகுதியாய்க்கொடுத்துவந்தால் அந்தப்பக்கத்துமார் பருத்துத் தளர்ந்தும், மற்ற பக்கத்துமார் சிறுத்துச் சுருங்கிப்போம். மேலும் பால்குடிக்கும்போது சிசுவுக்கு ஒரேபக்கமாகப் பார்வை இருப்பதால் அதற்கு மாறுகண்ணுண்டாகிவிடும். ஆகையால் இதையும் ஒழுங்காகச்செய்யவேண்டும். அன்றியும் குழந்தைக்குப் பால் கொடுக்கும்போது தாய் நிமிர்ந்து உட்கார்ந்து கையினால் சிசுவின் தலையை உயர்த்தி ஏந்திக்கொண்டு பால்கொடுக்கவேண்டும். இதைவிட்டு மடியில் கிடத்தி குனிந்து முதுகை வளைத்துக்கொடுத்தல் ஆகாது. தாய்க்கு முதுகு உளச்சல் உண்டாகும். குழந்தையை கையில் ஏந்திக்கொண்டு முலை கொடுக்கும்போது குழந்தையின் வாயிலிருந்து வயிற்றுக்குப் பால் சரேலென்று தாராளமாக இறங்கிவிடும்.

இவ்விதமாகத் தாய் சிசுவுக்குப் பால்கொடுத்துவரும்போது எதுவரை அவள் குழந்தைக்கு முலைகொடுக்கலாம், எப்போது கைத்தீனி கொடுக்கலாமென்றறியவேண்டும். அதைப்பற்றி சற்று கவனிப்போம். குழந்தைக்குப் பல்முளைக்கத் துடங்குமட்டும் கட்டாயமாகத் தாயே பால்கொடுத்து வளர்க்கவேண்டும். அதற்குமேல் தாய்க்குப் பால் அதி



கமாயிருந்து, குழந்தையும் மெலிவின்றிச் செம்மையாய் இருக்குமாகில் பத்துமாதம்வரை தாயே பால்கொடுத்து வளர்க்கலாம். ஆனால் இதனிடையில் தாய்க்குப் பால் குறைந்துபோனாலாவது, அவள் கருப்பெற்றாலாவது, மாதாமாதம் ஒழுங்காகத் தூரங்கண்டாலாவது, தாய்ப்பாலை நிறுத்தி முன்சொல்லிய நான்குவகை உணவுகளிலொன்றைக் கொடுக்கலாம். குழந்தையின் உடல் நிலைமையைக்கண்டு இப்படி ஆகாரத்தை மாற்றவேண்டியகாலத்தை அறிந்துகொள்ளலாம்.

முலைகொடுக்குந்தாய் தன் உடல் நலத்தை நன்றாய்ப்பேணிவர வேண்டும். இல்லாவிடில் அவள் தன்சிசுவுக்குச் செய்யவேண்டிய கடமைக்குப் பிசகுநேரிடும். தலைப்பிள்ளைப்பேற்றில் முலைகெட்டியாயிருப்பதால் அதில்வலியுண்டாகும். அப்போது நல்லெண்ணெயைத் தடவி முலைக்காம்பிலிருந்து மெதுவாய் மேல்நோக்கித் தேய்த்துவிட்டு வெந்நீரால் ஒத்தடங்கொடுத்தால்வலிநிவர்த்தியாகும். அன்றியும் மலக்கட்டு இருந்தால் பிரசவித்த ஆறாம் நாளில் ஒருகரண்டி ஆமணக்கெண்ணெயில் கடுக்காய், நிலவாகைக்கஷாயங்கலந்து அல்லது பேதி உப்புசேர்த்தாவது பேதிக்குச்சாப்பிடுவது நலம். தினசரி அதிகாலையில் வெந்நீரில் முழுகவேண்டும். தன் உடல் சத்திக்கு மிஞ்சாமல் கூடியவரை வேலை செய்து நல்லகாற்றுப்பட வெளியே உலாவிவரவேண்டும். காற்றுப்புகாத இருண்ட அறைகளிலே பொழுதுபோக்கக்கூடாது. சிசுவுக்குச் சுகவீனமும், தனக்குப் பலயீனமும் நேரிடாவிடில் வழக்கமாய்த்தான் புசித்துவரும் ஆகாரம்போதும். பிரசவமாகி ஒருமாதம்வரையிலும் பலதினுசான ஆகாரம்புசிக்காமல் சற்றுபத்தியமாக இருக்கவேண்டும். பிறகு அதிக உறைப்பு, புளிப்பு, கறிமசாலை முதலிய சேர்ந்த கறிகள், முள்ளங்கி, வெள்ளரிக்காய், பூசணிக்காய், தண்டுக்கீரை முதலிய காய்கறிகள், பலதினுசு மச்சங்கள், அதிகமாம்ச உணவுகள் முதலியவைகளைத் தள்ளவேண்டும். அநேகர், குழந்தைக்குப் பால்கொடுப்பது பலயீனமென்றெண்ணி பீர், ஒயின், பிராந்தி முதலிய சாராயவஸ்துக்களைக் குடிக்கிறதுண்டு. இது தப்பிதமான எண்ணம். ஏதேனும் பிணியுண்டானாலொழிய முலைகொடுப்பதனால் தாய்க்கு ஒருபோதும் பலவீனம் நேரிடமாட்டாது. அதற்கெதிரிடையாய் நல்ல சுகமுண்டாகும். சாராயதினுசுகளில் ஒன்றாவது பிரசவித்த பெண்ணுக்கு அவசியமில்லை. அதனால் தீமையும் வீண்பணச்செலவுமேயன்றி சிறிதும் பயனில்லை. குழந்தையின் சுகத்துக்குங் கெடுதலுண்டாகும். பால்கொடுக்குந்தாய்க்கும் அதிகதாகமுண்டாகும். இதற்கு மாக்கஞ்சி

களில் ஏதேனுங்கொடுக்கலாம். கேழ்வரகுக்கூழ்செய்து பாலாவது நீராவதுவிட்டுக்கரைத்துக் குடித்துவருவது அதிகநலம். தேகத்துக்கு அதிககளைப்புண்டாகும்படியான வேலைகள் செய்யக்கூடாது. தவிரவும், சடுதியானகோபம், துக்கங்களுக்கு இடங்கொடுக்கக்கூடாது. இதனால் பால்கெட்டுக் குழந்தைக்கு நோயுண்டாகுமென்று ஏற்கனவே சொல்லியிருக்கிறோம். வியர்வை அதிகமாக உண்டாகிறதானால் பால்கொடுக்குமுன் ஒரு மெல்லிய துணியை அல்லது பஞ்சை தண்ணீரில் நனைத்துப் பிழிந்து அதனால் முலைகளை நன்றாய்த் துடைத்து சுத்திசெய்து பின்னர் தான் பால்கொடுக்கவேண்டும். இல்லையேல் வியர்வையும் அதில் ஊறின அழுக்கும் பாலுடன்கலந்து உட்சென்று குழந்தைக்கு வாந்தியுண்டாக்கும். தாய், கடும்வெயிலில் நடந்து வந்தவுடனே குழந்தைக்குப் பால்கொடாமல் உடற்சூடு சற்று ஆறினபின் பால்கொடுக்கவேண்டும். அதிகாலையில் தாயானவள் தலைமுழுகினவுடனும், இரவில் படுக்கைக்குப்போகும்போதும் சுமார் காற்படி பசுவின் பால் சாப்பிட்டுவருவது நலம். இரவில் பத்துமணிக்குத்தூங்கப்போய் காலை ஐந்துமணிக்குத்தான் விழிக்கவேண்டும். வேலை, கூத்து, விளையாட்டு, திருவிழா, நலந்தீங்குமுதலிய காரணங்களால் தூக்கங்கெடலாகாது. பசிவேளையில் உண்ணவேண்டும். அகாலத்தில் உண்ணலாகாது. பாற்சுரப்பு அதிகமாகி அதனால் சோம்பலும், உடம்பு பளுவுமாகத் தோற்றினால் இரண்டொருதடவை பேதியாகும்படி விளக்கெண்ணெய் (ஆமணக்குநெய்) சாப்பிடலாம்.

தாய் தன் குழந்தைக்குப் பத்துமாதத்துக்குமேல் பால்கொடுக்கக்கூடாது. ஏதாவது காரணம்பற்றி வைத்தியர் உத்தரவுசெய்தாலன்றி கட்டாயமாக ஒருவருஷத்திற்குமேல் குழந்தைக்கு முலைகொடுக்கவே கூடாது. வழக்கமாக பத்து அல்லது பனிரெண்டாம் மாதங்களில் தாய்க்கு மாதப்போக்கு காண்பதுண்டு. அதன்பிறகு அவள் பாலினால் குழந்தைக்கு நலமிராது. ஆதலால் தாய்ப்பாலைவிட்டு வேறு உணவு கொடுத்து வளர்க்கவேண்டும். அப்படிச்செய்யாவிட்டால் சிசுவுக்குமாத்திரமல்ல, தாய்க்கும் உடம்பு நலங்கெடும்.

நீடித்து பன்னிரண்டு மாதங்களுக்குமேல் குழந்தைக்கு முலைகொடுப்பதனால் தாய்க்குண்டாகும் கெடுதிகளின் குறிகளாவன:—

குழந்தைக்குப் பால்கொடுக்கும்போது முதுகுத்தண்டெலும்பிலும் இடுப்பிலும் உளைச்சல், நெஞ்சுக்குழியில் கயிறுபோட்டிறுக்கினதுபோல் வலி, வயிற்றில் எரிவு, பசி குறைவு, மலக்கட்டு, சோர்வு,


# TAMIL MEDICAL HALL

தமிழ் வைத்தியசாலை

221, MINT ST., MADRAS.

221, தங்கசாலைத் தெரு, சென்னை,



வைக்கம் வீரர், சுயமரியாதை இயக்கத்தலைவர்
குடிஅரசு, ரிவோல்ட் பத்திராதிபர்
சென்னைத் தமிழ் வைத்திய சாலையின் போஷகர்
ஆசிரியர்
ஈ. வே. இராமசாமி நாயகர் அவர்கள்

*Proprietor*, PANDIT. S. S. ANANDAM.

## வைக்கம் வீரரும்
## சுயமரியாதை இயக்கத் தலைவருமாகிய
## திரு ஈ. வெ. ராமசாமி நாயகர் அவர்கள் எழுதுவது

பண்டிட் எஸ். எஸ். ஆனந்தம் அவர்கள் தமிழ் நாட்டில் தஞ்சாவூர் ஜில்லாவில் புகழ்பெற்ற பரம்பரை சமஸ்தான வைத்தியர்களின் சந்ததியில் பிறந்தவர். அவர் எனக்கு சுமார் இருபது வருஷங்களாக நண்பராவர்.

சென்னையில் அவருடைய தமிழ் வைத்திய சாலையில் செய்யப்படுகிற மருந்துகளில் சிலவற்றையும், அவருடைய மகா சந்தனாதித்தைலத்தின் பலனையும் நான் உணர்ந்திருக்கிறேன். அவைகள் குறிப்பிட்ட நோய்களைக் கண்டித்து நல்ல குணத்தைத் தருகின்றன.

அவருடைய இலவச வைத்தியசாலையில் தாழ்ந்த வகுப்பார்களும், ஏழைகளும் நாள்தோறும் பலர் வந்து நோய் நீங்கி நலமடைகின்றார்கள்.

பொதுவாக நமது தேசவைத்தியத்திற்கும், சிறப்பாகத் தமிழ் சித்த வைத்தியத்திற்கும் பண்டிட் ஆனந்தம் அவர்கள் சுமார் 12 வருஷங்களாக சென்னையில் சர். பி. தியாகராய செட்டியார், டாக்டர். சர். சுப்பிரமணிய ஐயர் முதலியவர்களின் தலைமையில் ஒரு வைத்திய சங்கத்தை நிறுவி வேலை செய்து கொண்டு வந்தார். சென்னை அரசாங்கத்தார் தமிழ் சித்த வைத்தியத்தை ஒரு வகுப்பாக வைத்து நடத்துவதற்கு அவர் முதன்மையாக நின்று முனைந்து வேலை செய்தார். பரம்பரை மருத்துவர்களின் முன்னேற்றத்துக்காக தென் இந்திய மருத்துவர் சங்கம் என்னும் பெயர் கொண்ட ஒரு சங்கத்தை எட்டு வருஷங்களாக ஏற்படுத்தி நடத்திவருகின்றார். அவருடைய உழைப்பினால் தமிழ் வைத்தியத்திற்கும், மருத்துவர்களுக்கும் புதிய சக்தி உண்டாகி வருகிறதென்று சொல்லத் தேவையாகாது.

பண்டிட் ஆனந்தம் அவர்கள் சென்ற நான்கு மாதங்களாக மருத்துவன் என்னும் வைத்திய மாதப்பத்திரிகை ஒன்றை நடத்திவருகின்றார். அதில் நமது நாட்டில் சிசுக்களின் மரணம் மிகுதியாக இருப்பதைத் தடுப்பதற்காகப் பாலர் பரிபாலனம் என்னும் நூல் வெளியாகின்றது. மக்கள் நோயின்றி உடல் பலத்தோடு நீண்ட நாள் வாழ்வதற்குரிய வழிகளும், நமது நாட்டு மருந்து முறைகளும், இன்னும் பல உயர்ந்த விஷயங்களும் அதில் வெளிவருகின்றன. அதில் வெளியாகும் பாலர் பரிபாலனம் என்னும் விஷயத்தை நமது பெண்மக்கள் ஒவ்வொருவரும் கட்டாயம் படித்துப் பயனடைய வேண்டிய அவசியம். பொதுவாக நோயற்ற வாழ்வை விரும்பினவர்களும், வைத்திய ஞானத்தைப் பெற விரும்புகிறவர்களும் கட்டாயம் "மருத்துவனைப்" படிக்கவேண்டுமென்பதில் ஆட்சேபனையில்லை. ஆதலால் பண்டிட் ஆனந்தரால் வெளியிடப்படும் மருத்துவன் பத்திரிகையை ஒவ்வொருவரும் வாங்கிப்படித்துப் பயனடைய வேண்டுமென்பது எனது விருப்பமாகும்.

ஈ. வெ. ராமசாமி.

## தமிழ் மாகாண
## சுயமரியாதை முதல் மகாநாட்டுத்தலைவரும்
## இராமநாதபுரம் ஜில்லா போர்டு தலைவரும்
## பட்டிவீரன்பட்டி ஜமீன்தாரரும்



சென்னை தமிழ் வைத்திய சங்கத்தின் போஷகருமாகிய

## W.P.A. சௌந்தரபாண்டிய நாடார் M.L.C

---

தமிழ் வைத்தியசாலை, 221, தங்கசாலைத் தெரு, சென்னை.

தமிழ்மாகாண
சுயமரியாதை மகாநாட்டு
வரவேற்புக்கழகத் தலைவரும்



செங்கற்பட்டு ஜில்லா போர்டு தலைவருமாகிய

**எம். கே. ரெட்டியார், அவர்கள்**

---



தென் இந்திய
நல உரிமை சங்கம் நிறுவியவரும்
ஜஸ்டிஸ் முதல் ஆசிரியரும்
[illegible]ரிமைக்குப் பாடுபட்டவரும்



சமதருமமே தமது கருமமாக எண்ணியவருமாகிய

**டாக்டர் I. M. நாயர், அவர்கள்.**

"ஜஸ்டிஸ் கட்சிக்கு நான் என்ன செய்யவேண்டும்? என்பதே தேவை; 'ஜஸ்டிஸ் கட்சி எனக்கு என்ன செய்யும்?' என்பதே நமக்கு வேண்டாம்."—டாக்டர் T. M. நாயர்.

---

தென் இந்திய
நல உரிமை சங்கம் நிறுவியவரும்
பார்ப்பனரல்லாதார் இயக்கத்தலைவரும்



தென் இந்திய மருத்துவர் முதல் மகாநாட்டின் தலைவரும்,
சென்னை, தமிழ் வைத்தியசாலையின் போஷகருமாகிய
**சர். பி. தியாகராய செட்டியார்**





## பார்ப்பனரல்லாதார் மாபெருந்தலைவர்
## சர். பி. தியாகராய செட்டியார் அவர்கள் எழுதியது.

தென் இந்தியாவின் சித்த மருந்துகளில் எனக்கு நம்பிக்கையுண்டு நான் இன்றளவும் சித்த மருந்துகளைத் தவிர மற்ற மருந்துகள் எதையும் உபயோகித்ததில்லை. இதர வைத்தியத்திலும் அப்படியே, ஆனால் சித்த மருந்து முறைகளை வெளிப்படுத்தி பொதுமக்களுக்கு எளிதாகப் பயனாகும்படி வேலை செய்ய தமிழ் வைத்தியர் ஒருவரும் வெளிவராததைப்பற்றி நாம் கவலைப்பட்டதுண்டு. தற்காலம் பரம்பரை வைத்தியராகிய பண்டிட் எஸ். எஸ். ஆனந்தம் அவர்கள் முன்வந்து தென் இந்திய வைத்திய சங்கம் என்றவும் ஒரு சங்கத்தை நிறுவி, பல வைத்தியர்களையும் ஒன்று சேர்த்து அச்சங்கத்தை ரிஜிஸ்தர் செய்து, ஊக்கமாக வேலை செய்து வருகின்றார். இவர் பொதுமக்களின் நன்மைக்கு வேலை செய்வதில் ஆர்வமுள்ளவராய் இருப்பதைப் பற்றி மகிழ்ச்சி அடைகின்றோம். * * * * * * *

தென் இந்திய ஆயுர்வேத சங்கம் நன்றாக வேலை செய்து நமது நோக்கம் நிறைவேற வேண்டும் என்பது எமது கோரிக்கையாகும்.

பண்டிட் ஆனந்தம் அவர்களின் அமுதசுரபி இலேகியம், மகா சந்தனாதித் தைலம் முதலிய சில மருந்துகளை நாம் உபயோகித்திருக்கின்றோம். பண்டிதரின் வைத்தியசாலையில் தயாராகும் மருந்துகள் நல்ல மருந்துகள் என்பதை அறிகின்றோம்.

(Sd) பி. தியாகராய செட்டி

பார்ப்பனரல்லாதார் மாபெருந்தலைவர்

பானகல் அரசர்

இந்தியவைத்தியத்திற்குப் புத்துயிரளித்தவர்



இந்து மதபரிபாலன சபைஸ்தாபகர்

**சர். பி. இராமராயநிங்கார்**

---

தமிழ் வைத்தியசாலை, 221, தங்கசாலைத் தெரு, சென்னை.

சென்னை முனிசிபல் கார்பரேஷன் தலைவரும்

"ஜஸ்டிஸ்" ஆசிரியருமாகிய



**திரு. A. இராமசாமி முதலியார்** அவர்கள்

---

தமிழ் வைத்தியசாலை, 221, தங்கசாலைத் தெரு, சென்னை.

## சென்னை, முனிசிபல் கார்ப்பரேஷன் தலைவர்

## திரு. A. இராமசாமி முதலியார் அவர்கள் B.A., B.L.

நான் பண்டிதர் ஆனந்தம் அவர்களைச் சில வருடங்களாக அறிந்துள்ளேன். அவர் சித்த வைத்திய முறையில் கற்றுத் தேர்ந்த நிபுணர் என்னும் புகழ் மிக உயர்ந்து நிற்கின்றது. சித்த வைத்திய முறைகளைப் பிறருக்கு எடுத்துச் சொல்வதில் அவர் நிகரற்ற திறமை வாய்ந்துள்ளார். அவருடைய தளராத ஊக்கத்தினாலேயே, பெரும்பாலும், இந்திய வைத்திய போதனாசாலையில் சித்தவைத்திய பாடங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. திரு.ஆனந்தம் அவர்களின் சந்தனாதித்தைலத்தையும், பற்பொடியையும் பற்றிய அனுபவம் எனக்குண்டு. அவைகளை உபயோகப்படுத்திய பிறகு, அவைகளைப்போல் பிறரால் செய்யப்பட்டவைகளை நான் உபயோகிக்க விரும்பவில்லை. அவருடைய தீவிர முயற்சியில் அவர் வெற்றிபெற வேண்டுமென்பது என் முழுமன விருப்பம். அவர் பொது மக்களின் ஆதரவையும் உதவியையும் பெறுவாரென்று நம்புகிறேன்—அவர் அவைகளைப்பெற மிகுதியும் தகுதியுடையவரே,

(Sd.) A. இராமசாமி முதலியார்





திராவிடன் ஆசிரியரும்
ஆலயப்பிரவேச சுயமரியாதை வீரரும் சுயமரியாதை
முதல் மகாநாட்டு விளம்பர அதிகாரியுமாகிய



## ஜே. எஸ். கண்ணப்பர்.

'அமிர்த சுரபி இலேகியம்' தேவாமிர்தம் போன்றது. இது நரம்புகளின் தளர்ச்சியை நீக்கி, ஆண்தன்மையை அதிகப்படுத்துவது. இழந்த பலத்தை திரும்பக் கொடுப்பது.

1 பவுண்டு 5—0—0.

தமிழ் வைத்தியசாலை, 221, தங்கசாலைத் தெரு, சென்னை.

## ஜே. எஸ். கண்ணப்பர் அவர்கள் எழுதுவது

பண்டிட். ஆனந்தம் அவர்களின் சென்னை தமிழ் மருத்துவ சாலையில் தயாராகும் அமுதசுரபிலேகியம் மகாசந்தனாதித்தைலம், பற்பொடி, ஆனந்த வராயில் முதலிய மருந்துகளை நானும் எனது நண்பர்களும் உபயோகித்து மகிழ்ச்சி அடைந்திருக்கின்றோம். அவருடைய இலவச வைத்திய சாலை ஏழைகளுக்கு மிகப்பயன் படுகிறது.

பண்டிட் ஆனந்தம் அவர்கள் மருத்துவமுறையில் பொது மக்களுக்கு உதவி செய்து வருவதோடு தமிழரின் சித்த மருந்துவத்தை நன்னிலைக்குக் கொண்டு வரவும், பிற்போக்கடைந்துள்ள மருத்துவ வகுப்பினர் முன்னேற்றமடையவும் பலவழிகளில் முயன்று பல்லாண்டுகளாக உழைத்துவருகின்றார்.

பார்ப்பனரல்லாதார் இயக்கம் தோன்றின நாள் முதல் உறுதியுடன் நின்று ஒத்துழைத்து வருகின்றார்.

பண்டிட் ஆனந்தம் அவர்களால் வெளியிடப்படும் மருத்துவன் என்னும் ஓர் அரிய வைத்தியப் பத்திரிகையைப் பார்த்தோம். அஃது ஒவ்வொரு பெண்மக்களுக்கும், மருத்துவ மாணவர், மாணவிகட்கும், மருத்துவர்கட்கும் பொதுவாக நோயின்றி நீண்டவாழ்வைப்பெற விரும்பும் ஒவ்வொருவருக்கும் இன்றியமையாததாகும் என்பது நமது கருத்து.

(Sd) ஜே. எஸ். கண்ணப்பர்.

---

நேரில் வருவதற்கு இயலாத நோயாளர் தமது நோயின் விவரத்தைத்தபாலில் அறிவித்தால் தக்க ஆலோசனை சொல்லப்படும்.

தமிழ் வைத்தியசாலை, 221, தங்கசாலைத் தெரு, சென்னை.



## சுயமரியாதை வீரரும் தேசத்தொண்டருமாகிய N. தண்டபாணி பிள்ளை அவர்கள்

பண்டிட் எஸ். எஸ். ஆனந்தம் அவர்களின் சென்னைத் தமிழ் வைத்திய சாலையில் செய்யப்படும் மருந்துகள் சிலவற்றை எனது குடும்பத்தில் உபயோகித்து நல்லகுணம் கண்டிருக்கின்றேன். அவருடைய தமிழ் வைத்திய சாலையின் மருந்துகளைப் பெரியோர்களும் பலடாக்டர்களும் உபயோகித்துக்கொண்டாடுகின்றார்கள்.

இங்கிலீஷ் டாக்டர்கள் அறுத்தே வைத்தியம் செய்யவேண்டுமென்று சொன்ன பலநோய்களுக்குப் பண்டிட் ஆனந்தம் அவர்கள் அறுக்காமலே வைத்தியம் செய்திருக்கின்றார். அவருடைய தமிழ் வைத்திய சாலையில் தயாராகும் மருந்துகள் பலநோயாளிகளுக்கும் பயனுள்ளனவாய் இருக்கின்றன.



பண்டிட் ஆனந்தம் அவர்கள் நடத்திவரும் மருத்துவன் என்னும் உயர்ந்த தமிழ் வைத்தியப் பத்திரிகையின் மூன்று பிரதிகளைப் பார்வையிட்டேன். அதில் நந்தமிழ்நாட்டு மருந்துவமுறைகள், இயற்கை செயற்கை மருந்துப் பொருள்கள், நோயணுகாவிதிகள், பாலர் பரிபாலனம், பாலர் வைத்தியம் முதலிய பல விஷயங்கள் வெளிவருகின்றன. அவைகள் ஒவ்வொன்றும் பொன்னேபோல் போற்றற்குரியவை. ஆதலால் நந்தமிழ்மக்கள், ஆண்பெண் இருபாலரும், மருத்துவனைப் படிக்க வேண்டுமென்பது எனது விருப்பமாகும்.

(Sd) N. தண்டபாணி பிள்ளை.

ஜஸ்டிஸ் ஆசிரியரும்

ஜஸ்டிஸ் ஆபீஸ் மானேஜருமாகிய

## கே. வி. மேனன் அவர்கள்



பண்டிட் ஆனந்தம் அவர்களின் தமிழ் வைத்திய சாலையில் தயாராகும் சில மருந்துகளை நானும் எனது நண்பர்களும் உபயோகித்திருக்கின்றோம். அவைகள் மிக உயர்ந்த முறையில் செய்யப்பெற்றுள்ளது. பண்டிட் அவர்களுடைய பற்பொடியையும் சந்தனாதித்தைலத்தையும் நான் உபயோகித்து வருகின்றேன். அவைகள் மிகக் குணமுள்ளவை.

தமிழ் வைத்தியசாலை, 221, தங்கசாலைத் தெரு, சென்னை.

சுயமரியாதை வீரரும்

பார்ப்பனரல்லாத இளைஞர் சங்கத்தலைவருமாகிய



## S. P. Y. S. V. ஆரியா M.A.B.D.S.T.M.

'கேசாமிர்தம்' மயிர்க்கால்களை உறுதிப்படுத்துகிறது, மயிருக்கு கருநிறத்தைக் கொடுக்கிறது, மயிரைவளர்க்கிறது. மனோரம்மியத்தைத் தருகிறது. புட்டி விலை அணா 10.

தமிழ் வைத்தியசாலை, 221, தங்கசாலைத் தெரு, சென்னை.

## S. P. Y. S. V. ஆரியா M.A.B.D.S.T.M. அவர்கள் எழுதுவது

நான் இந்தியாவில் இருக்கும்போதும், இலண்டனில் இருந்தபோதும் பல ஐரோப்பிய பண்டிதர்களால் செய்யப்படும் "ஏர்டானிக்"குகளை உபயோகித்து அதன் குணங்களை அறிந்திருக்கின்றேன்.

பண்டிட் ஆனந்தம் அவர்களின் மகாசந்தனாதித்தைலம், கேசாமிர்தம் முதலிய "ஏர்டானிக்"குகளை உபயோகித்துப்பார்த்ததில் அவைகளால் மேல் நாட்டாரின் ஏர்டானிக்குகளிலும் பதின்மடங்கு அதிக நன்மை உண்டானதைக் கண்டு மகிழ்ந்தேன். மயிருக்குத் தடவிக்கொள்ள மேல் நாடுகளிலிருந்து "வாஸ்லயன்" பகட்டான கண்ணாடிப்புட்டியில் பலநிற லேபிள் களோடும், பல்வகை மணத்தோடும் வரினும் அவைகள் பண்டிட் ஆனந்தரின் வைத்தியசாலையில் நல்ல மூலிகைகளால் செய்யப்பட்ட அருமையான கேசாமிர்தத்துக்கு இணையாகாதென்பது எனது அனுபவமாகும். வெளிநாடுகளிலிருந்து வரும் பற்பொடி, பற்பசை (டூத்பேஸ்ட்)களை உபயோகித்துப் பார்த்தேன் அவைகள் பண்டிட் ஆனந்தரின் பற்பொடியைப்போல் குணம் செய்யவில்லை என்பதை எனது சகோதரர்களுக்கு அறிவிக்கிறேன்,

(Sd) S. P. Y. S. V. ஆரியா M.A.B.D.S.T.M.

---





சென்னை முனிசிபல் கார்ப்பொரேஷன்
கவுன் சிலராகிய தேசபக்தர்

## வி. சக்கரை செட்டியார் அவர்கள்

பண்டிட் ஆனந்தம் அவர்களின் தமிழ் வைத்திய சாலையில் தயாராகும் மருந்துகளில் மகாசந்தனாதித்தைலம், பற்பொடி முதலியவைகளை நான் உபயோகித்திருக்கின்றேன். அவைகள் நல்ல குணமுள்ளவைகள். பண்டிட் ஆனந்தம் அவர்களின் தமிழ் இலவச வைத்திய சாலையை இரண்டு தடவை பார்வையிட்டேன். அது திருப்திகரமாக வேலைசெய்கிறது. அவ்வைத்திய சாலையை பண்டிதர் அவர்கள் தமது சொந்த செலவிலேயே பல வருடங்களாக நடத்திவருவதைப்பற்றி அவரை நாம் போற்றுகின்றோம். சில வைத்தியர்களைப் போல பணம் சம்பாதிக்கும் நோக்கத்தையே முக்கியமாகக் கருதாமல் சித்த வைத்தியத்தில் தமக்குள்ள அறிவைப்பொது ஜன நன்மைக்கே உரியதாகச் செய்யக் கருதி அவ்வாறே செய்து வருகின்றனர்.

"தென் இந்திய மருத்துவர் சங்கம்" என்னும் ஒரு சங்கத்தை நிறுவி அதில் ஏழைப் பிள்ளைகள் சிலருக்கு உணவு, உடை விடுதி கொடுத்து அவர்களுக்குக் கல்வியையும் கற்பித்து வருகின்றார். மாணவர் சிலருக்கும் வைத்தியமும் கற்றுக் கொடுக்கின்றார். அவர் எடுத்துக் கொண்டிருக்கும் காரியங்களில் மேல் மேலும் வெற்றியுண்டாக நாம் விரும்புகின்றோம், பொது ஜனங்களும், கார்பரேஷனும், கவர்ன் மெண்டும் அவருடைய காரியங்களுக்குப் பண உதவி செய்யும்படியாகவும் நாம் கேட்டுக் கொள்ளுகிறோம்.

(Sd) V. சக்கரை செட்டி

---

பல்லிலிருந்து பலநோய்கள் வருகின்றது. ஆதலால்பல்லைக்காப்பாற்றினல் சொல்லைக் காப்பாற்றலாம், நாவின் சுவையை அனுபவிக்கலாம், பல நோய்களைத்தடுக்கலாம். பற்பொடி விலை அணு 6.

சென்னைத்திராவிட சங்கத்தலைவரும

பார்ப்பனரல்லாதார் கட்சித்தலைவருமாகிய

ராவ்பகதூர் டாக்டர்

## C. நடேச முதலியார் அவர்கள் L.M.S.

பண்டிட் எஸ். எஸ். ஆனந்தம் பிள்ளை அவர்கள் எனக்குச் சுமார் இருபது வருடங்களாகப் பழக்கமுள்ளவர். அவர் சிறந்தபரம்பரை மருத்துவக் குடும்பத்தைச் சார்ந்தவர். அவர் சித்த வைத்தியத்தில் பெரும் புலமை வாய்ந்து, மனிதர்களுக்கேற்படும் பிணிகளைப் போக்கி இன்பத்தை விளைவித்துக் கொண்டு வருகின்றார். அவருடைய மகா சந்தனாதித்தைலத்தையும், கல்நார் பற்பொடியையும் நான் உபயோகித்துப் பார்த்ததில், எவ்விதமான நன்மைகளுண்டாவதற்காக அவைகள் செய்யப்பட்டிருக்கின்றனவோ அவ்விதமான நன்மைகளெல்லாம் அவற்றால் உண்டாகக்கண்டேன். அவர் தமிழ் வைத்தியம் சிறப்புற்று விளங்க வேண்டுமென்று மிக முயன்று வேலை செய்துவருகின்றார்.

பார்ப்பனரல்லாதார் கட்சித்தலைவரில் ஒருவரும்

சென்னை ஸ்மால்காஸ் கோர்ட்டு தலைமை ஜட்ஜியுமாகிய

திவான்பகதூர்

## O. தணிகாசலஞ் செட்டியார் அவர்கள்

**B.A. B.L.**

பண்டித S. S. ஆனந்தம் பிள்ளை அவர்களை நான் பல்லாண்டுகளாக அறிவேன் அவர் தமிழ்ச் சித்த மருத்துவ முறைகளை நன்கு கற்றுத் தேர்ந்து பிணிகளால் துன்புறும் மக்களுக்குப் பெரிதும் பயன்படுகிறார். அவர் மருத்துவ சாலையில் செய்யப்படும் மகா சந்தனாதித்தைலம், கல்நார் பற்பொடி போன்ற சிலமருந்துகளின் சிறந்த குணங்களை நான் உபயோகித்து அதன் குணத்தை அறிந்திருக்கிறேன். இவற்றை ஒரு முறை உபயோகிப்பவர் மீண்டும் மீண்டும் உபயோகிப்பதற்கு விரும்புகின்றனர்.

---



சென்னை, முனிசிபல் கார்பொரேஷன் கவுன்சிலர்

## கெத்தெ. ரங்கைய்ய நாயுடு அவர்கள்

எழுதுவது.

பண்டிட் ஆனந்தம் அவர்களின் தமிழ் வைத்தியசாலையில் செய்யப்படும் சிரணி லேகியம், சந்தனாதித்தைலத்தை நானும், அவரது பற்பொடியை எனது குடும்பத்தாரும் உபயோகித்து அவைகளின் நல்ல குணத்தை அறிந்துள்ளோம் பண்டிட் ஆனந்தம் அவர்கள் வாதநோயாளர் சிலருக்கு முதலில் பேதிக்குக் கொடுக்கப்படும் வா த நி தா னி என்னும் மருந்து பாதிவியாதியைப் போக்குந் தன்மையுடையது. அம்மருந்து வாந்தி, களைப்பு முதலிய எவ்விதகெட்ட குணங்களின்றி நோயை விரைவில் நீக்கி விடுகின்றது. என்னுடைய அனுபவத்தில் இம்மருந்துக்கு இணையில்லையாதென்று தைரியமாய்ச் சொல்லுவேன். நோயாளிகளுக்கு இது ஒரு பெரும் பாக்கியமேயாகும். பிணியாளர்களுக்கும் ஏழைகளுக்கும் தொண்டு புரிய பண்டிதரவர்களுக்கு கடவுள் நீண்ட ஆயுளையும் செல்வத்தையும் அளிக்குமாறு வேண்டுகிறேன்.

தரும வைத்தியஸ்தாபனம் பண்டிதரவர்களின் சொந்த செலவிலேயே நடைபெறுகின்றது. இந்த ஸ்தாபனத்திற்கு நிலையான பண உதவியைச் சென்னைக் கார்பொரேஷன், ஜில்லா, தாலுக்காபோர்டுகள் போன்ற பொது ஸ்தலஸ்தாபனங்கள் செய்யுமானால் இப்பொழுது நடந்து வருவதைவிட இன்னும் நல்லவிதமாக ஏழைமக்களுக்கு வைத்திய உதவியை பண்டிதரவர்கள் செய்வார்களென்று திண்ணமாய் நம்புகிறேன்.

வைத்தியத் தொழிலில் எனக்குச் சம்பந்தமில்லாவிட்டாலும் என்னுடைய அனுபவத்திலிருந்து பண்டிதரவர்கள் சித்த ஆயுள் வேத வைத்தியத்தில் மிகத்தேர்ச்சியடைந்திருப்பதை அறிகிறேன்.

கெத்தெ ரங்கைய்ய நாயுடு

## அறுவை (ஆப்ரேஷன்) இல்லாத அற்புத வைத்தியம்

பல்லாவரம்

பொது நிலைக்கழககுரு, ஞானசாகர ஆசிரியர்,

## சுவாமி வேதாசலம் அவர்கள்

எழுதுவது

திருத்தமான அரிய ஆயுள்வேத மருத்துவ இனத்திற் சேர்ந்தவராய்த்திகழும் பண்டிதர் எஸ். எஸ். ஆனந்தம் பிள்ளை அவர்களின் திறமையைப்பற்றி மனமுவந்து கூறுகின்றேன். 1921-ஆம் ஆண்டு ஆவணித்திங்களில், எனது அடிவயிற்றினுள்ளே மிகக்கொடியதோர் இடரான கழலைகண்டு, அதனால் தொடர்பாக உண்டான காய்ச்சலோடு அல்லும் பகலும் வருந்தியபடியாய் ஏறக்குறைய ஒரு திங்கள் வரையிற் படுக்கையிற் கிடந்தேன். அப்போது என்னை வந்து பார்த்த மருத்துவர்களெல்லாரும் எனக்கு அதனைத்தீர்க்கமாட்டாமல் மயங்கி நிற்ப, எம்பெருமான் திருவருளாற் பண்டிதர் ஆனந்தம் அவர்கள் உற்றநேரத்தில் என்பால் வந்து என்னைக் கூற்றுவன் வாயினின்றும் மீட்டார்கள். சிவஞாரமுதம், வாதநிதானி என்னும் தூய தமிழ் மருந்துகளின் வாயிலாகவே மூன்று நாட்களில் அவர் எனக்கு அந்நோயைத் தீர்த்ததானது மிகவும் வியக்கத்தக்க தாயிருந்தது. **அறுத்துத்தீர்க்கும் இஞ்ஞான்றை மருத்துவத்தின் துன்பமான முறைக்கு யான் உள்ளாகாதபடி நோய்தீரப் பெற்றமைக்காக யான் இறைவனை வழுத்துகின்றேன்.**

பின்னர் எனது உடம்பின் வலிவு குறைவாயிருந்தமைக்கு ஆனந்தரின் அரச அமுதசுரபி என்னும் இலேகியம் உட்கொண்டமையால், நல்லவலி வெய்தப் பெற்றுப் பெரிதும் நன்மையுற்றேன்.

வேதாசலம்.

---

"மிகினுங் குறையினு நோய்செய்யு நூலோர்
வளிமுதலா வெண்ணிய மூன்று"





## தொண்டையில் வளர்ந்த சதை அடைப்பை அறுத்தெடுக்காமல் நீக்கிய அற்புத வைத்தியம்.

ஐயா,

எனக்குத் தொண்டையில் ஓசை நரம்பு உணர்ச்சி அற்றுப் பேசுவதற்குக் கொஞ்சமும் முடியவில்லை. எவ்வளவு அருகிலிருப்பவர்கட்கும் நான் பேசுவது காதில் சிறிதும் கேட்காத நிலையில் மிக வருந்தினேன். எனக்கு ஆகாரம் விழுங்குவதற்குச் சக்தி யில்லாமலிருந்தது. இந்த நிலையில் 25-4-28 ஆம் நாள் சென்னை, ஜெனரல் ஆஸ்பத்திரிக்குச் சென்றேன். அங்குள்ள டாக்டர்கள் E. N. T டிபார்ட் மெண்டில் குளோரபாரம் கொடுத்துச் சோதனை செய்து பார்த்தார்கள். பார்த்தபின்னர் எனக்குத் தொண்டையில் ஓசை நரம்பு உணர்ச்சி அற்றுவிட்டதென்றும் தொண்டையில் ஒரு பக்கத்தில் சதை வளர்ந்திருக்கிறதென்றும், அதற்கு ஆப்ரேஷன் செய்ய வேண்டுமென்றும், சதைவளர்ச்சியை அறுத்தெடுத்தாலும், பேசுவதற்குரிய ஓசை நரம்பு ஒருபக்கம் அறுபட்டுவிடுமாதலால் பேசுவதற்கு வைத்தியம் செய்ய முடியாதென்றும் சொன்னார்கள். பின்னர் சென்னைத் தமிழ் மெடிகல்ஹால் சொந்தக்காரர், பண்டிட் எஸ். எஸ். ஆனந்தம்பிள்ளை அவர்களிடம் காண்பித்ததில், 'அறுக்க வேண்டியதில்லை' எனச் சொல்லி அவர், தம்முடைய மேகநிவாரணி என்னும் மருந்தும், மற்றொரு பஸ்பமும் கொடுத்தார். அவற்றை நான் பத்துநாள் சாப்பிட்டதில் எனது நோய் முற்றும் நீங்கி நானும், எனது வீட்டார்களும், எனது ஆபீசிலுள்ள நண்பர்களும் ஆச்சரியப்படும்படி சுகமாகப் பழைய குரலோசையோடு என்னால் பேச முடிந்தது. இவ்வருமையான மருந்தை மிக மகிழ்ச்சியோடு ஞாபகார்த்தமாக எல்லோருக்கும் தெரிவிக்கின்றேன்,

**T. K. கணேசய்யர்**

கிளார்கு,

சென்னை, எலக்ட்ரிக் சப்ளை கார்பரேஷன் லிமிடெட், மதராஸ்.

---

"மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு
அருந்திய தற்றது போற் றுணின்"

## நீர் தாரையில் சிறிதும் நீர் இறங்காமல் செய்த சதை அடைப்பை அறுக்காமல் நீக்கிய அற்புத வைத்தியம்.

ஐயா!

எனக்கு பத்தொன்பது வருடங்களாக இருந்த சதையடைப்புக்குப் பல வகை வைத்தியங்கள் பார்த்தும் நீங்கவில்லை. பிறகு எனக்குச் சிறுநீர் முற்றும் இறங்காமல் வயிறு உப்பி நான் பிராணவஸ்தை அடைந்தபோது ஜெனரல் ஆஸ்பத்திரியில் எனக்கு சிலாகை போட்டு நீர் இறங்கியது. இப்படிப்பலநாள் நீர் இறங்காத போதெல்லாம் சிலாகை போட்டே நீர் இறங்குவது வழக்கம். கடைசியாக மெல்லிய சிலாகையும் போடமுடியாமல் நீர்த்தாரையில் சதையடைப்பு மிகுதிப்பட்டுக் கெட்டிப்பட்டுவிட்டது. ஜெனரல் ஆஸ்பத்திரியில் டாக்டர் ஆபரேஷன் செய்தாலன்றிப் பிழைக்க மாட்டேனென்று சொல்லி விட்டார்கள். நான் மிக்க கவலையோடு, பண்டிட் எஸ் எஸ். ஆனந்தம்பிள்ளை அவர்களிடம் சென்று விஷயத்தைச் சொல்லி வருந்தினேன். பண்டிதர் ஆனந்தம் அவர்கள் உடனே எனக்குத் தேறுதல் சொல்லி மருந்து கொடுத்து, வெந்நீர் தொட்டியில் உட்காரவைத்த பிறகு எனக்கு நீர் இறங்கியது. அன்று முதல் அவர் பரிகாரத்தில் இருந்து அவருடைய குடிநெய்யை (மேகநிவாரணி) சாப்பிட்டு வந்தேன்.

அதுமுதல் எனக்கு அறுக்க வேண்டியதும், சிலாகை போடவேண்டியதுமின்றி சதை அடைப்பு நோய் முற்றும் ஒழிந்தது. நன்றாய் நீர் இறங்குகிறது. இதனை என்போன்ற நோயாளர்களின் கஷ்டம் நீங்குவதற்காக வெளியிடுகிறேன்.

K. சேதுவாச்சாரி
13, சிங்காராச்சாரியார் தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை

---

மேகரணங்களை ஆற்றுவதிலும், தூர்மாமிஸங்களைக் கரைப்பதிலும், குடிநெய் என்னும் குஷ்டநோய் மருந்து சிறந்தது.
விலை ரூபா 5—0—0

" அற்றா லளவறிந் துண்க வஃதுடம்பு
பெற்றா னெடிதுய்க்குமாறு "

தமிழ் வைத்தியசாலை, 221, தங்கசாலைத் தெரு, சென்னை.



## கண்டமாலைக்கு அறுக்காமல் செய்த வைத்தியம்

என் குழந்தைக்குக் கழுத்தைச் சுற்றிக் கட்டிகள் தோன்றிக் கஷ்டப்பட்டபோது, பல டாக்டர்கள் அது கண்டமாலை என்றும் அதை அறுத்துத்தான் சுகமாக்க வேண்டுமென்றும் கூறினார்கள்.

பண்டிதர் எஸ். எஸ். ஆனந்தம் பிள்ளை அவர்கள் அதனை அறுக்காமல் அவர் வைத்தியசாலையில் தயாராகும் குடிநெய் என்னும் குட்ட நோய்மருந்தை உள்ளுக்கு கொடுத்து மேலுக்கும் மருந்து தடவி நாங்கள் ஆச்சரியப்படும்படி அந்நோயைப் போக்கினார். இன்னும் பலசமயங்களில் வீட்டிலுள்ளவர்களுக்கு ஏற்பட்ட பல நோய்களுக்கும் வைத்தியம் செய்து குணப்படுத்தினார்.

R. காசிவிசுவநாத முதலியார்
ஆனரரி பிரசிடென்சி மாஜிஸ்ட்ரேட்,
சென்னை.

---

'கணைக்கிருதம்' குழந்தைகளுக்குத் தாயின் கருப்பையைப் பற்றிய கணைச்சூடு வெட்டைச்சூடு, மூலச்சூடு, கருப்பகாரகம், கரப்பான், சிரங்கு, உடல் மெலிவு, ஈரல் வற்றி மார்கூடு கட்டுதல், வயிற்றில் கிருமி, மலச்சிக்கல் முதலிய நோய்களை நீக்கி குழந்தைகளை வளர்க்கும் அருமையான மருந்து.

புட்டி விலை ரூ. 1—8—0

" அற்றது அறிந்து கடைப்பிடித்து மாறல்ல
துய்க்க துவரப் பசித்து."

தமிழ் வைத்தியசாலை, 221, தங்கசாலைத் தெரு, சென்னை.

## குடற்கிளை (நாங்கூழ்லகரம்) நோய்க்கு (**Appendicitis**) வயிற்றை அறுக்காமல் நீக்கிய அற்புத வைத்தியம்

ஐயா,

எனக்கு அடிவயிற்றின் ஒரு பக்கத்தில் சகிக்க முடியாத வலியும், கனமும், கண்களிற் காமாலையும், காய்ச்சலும் ஏற்பட்டு மிக வருந்திக்கொண்டிருந்தேன். அதனை ஆங்கில வைத்தியர்கள் அப்பண்டிசிட்டிஸ்என்றும் வயிற்றை அறுத்துத்தான் வைத்தியம்செய்ய வேண்டுமென்றும் சொன்னார்கள். பின்னர், தங்களிடம் வந்து காண்பித்தபோது தாங்கள் அறுக்க வேண்டியதில்லை எனக்கூறி தங்கள் வைத்திய சாலையில் தயாராகும் வாதநிதானி, சிவனாமுதம் முதலிய மருந்துகளைக் கொடுத்தீர்கள். அதைத் தாங்கள் சொன்னபடி நான் சாப்பிட்டு வந்ததால் எனது நோய்கள் முற்றும் நீங்கி நன்றாய் இருக்கிறேன். இதனை மகிழ்ச்சியோடும் வந்தனத்தோடும் தங்களுக்கு அறிவிக்கின்றேன்.

எனது குழந்தைக்கு வயிற்றில் ஏற்பட்ட காய்ச்சல் கட்டியும் தங்கள் தமிழ் வைத்திய சாலையின் மருந்துகளைக் கொடுத்துச் சுகமாயிருக்கிறது.

பாஷ்யம் ஐயங்கார்
ரிட்டையர்டு ஸ்டேஷன் மாஸ்டர்,
அரக்கோணம், S. I. Ry.

---

**வாதநிதானி** அண்டவாதம், குடல்வாதம், யானைக்கால், குடற்கிளை (நாங்கூழ்லகரம்) நோய் முதலிய நோய்களை நீக்கக்கூடியது.

விலை ரூபா 2—8—0

"மாறுபாடில்லாத வுண்டி மறுத்துண்ணின்
ஊறுபாடில்லை யுயிர்க்கு."

**தமிழ் வைத்தியசாலை, 221, தங்கசாலைத் தெரு, சென்னை.**



## கையை அறுக்க (ஆப்ரேஷன்) வேண்டுமென்றதை மருந்தினால் நீக்கியது.

1909ஆம் ஆண்டு எனக்கு வலக்கையிற் தோன்றின வலியோடு உண்டான குடைச்சலுக்குப் பல வைத்தியர்கள் மருந்து கொடுத்தும் நோய் நீங்காதபடியால், சென்னை இராயப்பேட்டை ஆஸ்பத்திரியில் டாக்டர் பார்த்துக் கையைப்புண்ணாக்கி உள்ளுக்கு மருந்து கொடுத்தார். அதனாலும் எனது நோய் நீங்கவில்லை. பிறகு ஜெனரல் ஆஸ்பத்திரியில் 'எக்ஸ்ரே' என்னும் போட்டோ எடுத்துப் பார்த்துக் கை எலும்பில் கோளாறு இருப்பதாகவும், ஆஸ்பத்திரியிலே சில நாளிருந்து ஆப்ரேஷன் செய்து பார்த்துக்கொள்ள வேண்டுமென்றும் டாக்டர் சொன்னார். எனக்கு அறுத்துப்பார்ப்பதில் விருப்பமில்லாமல் நான் சென்னையிலுள்ள தமிழ் வைத்தியர் பண்டித S. S. ஆனந்தரிடம் காண்பித்தேன். அவர் அறுக்க வேண்டியதில்லையென்று கூறி என் பயத்தை நீக்கி வாதநிதானி மருந்தும், மற்றொரு மருந்தும் அருந்தக் கொடுத்துக் கையின்மேல் தடவும்படியாக ஒரு தைலமும் கொடுத்தார். சில நாட்களுக்குள் என் கைக்குடைச்சலும், வலியும் நீங்கி நான் நலமடைந்தேன்.

*S. A.* வெங்கடராமய்யர்
புரொப்ரைட்டர், டூப்ளே அண்டு கம்பெனி,
27, சப்பிரதி வயித்தியநாதய்யர் தெரு,
கும்பகோணம்.

---

'கால்ராகியூர்' விஷபேதி என்னும் வாந்திபேதி, அஜீர்ணபேதி, சீதபேதி இவைகளை மிகவிரைவில் கண்டிக்கக்கூடிய மருந்து.

புட்டி 1க்கு விலை ரூபா 1—8—0

"இழிவறிந் துண்பான்க ணின்பம்போ னிற்கும்
கழிபேரிரையான்க ணோய்."

**தமிழ் வைத்தியசாலை, 221, தங்கசாலைத் தெரு, சென்னை.**

## அறுக்க வேண்டிய வயிற்று நோயை அறுக்காமல் போக்கிய அற்புத வைத்தியம்.

### ம-ா-ா-ஸ்ரீ பண்டிட் ஆனந்தம் அவர்கட்கு

ஐயா, சுமார் பதினைந்து வருஷங்களாக எனக்கு ஆகாரம் செமிக்கும்போது தாங்கமுடியாத கொடுமையான வயிற்று நோயினால் நான் வருந்துவதுண்டு. அதற்குப் பலவகை வைத்தியங்கள் செய்தும் பயனில்லாமல் நோய் மிகுந்து விட்டது. சென்னை ஆஸ்பத்திரியில் வயிற்றை அறுத்து வைத்தியம் செய்ய வேண்டுமெனக் கூறினார்கள் எனது மருமகன் அதைத் தடுத்துச் சென்னையில் தங்களுடைய தமிழ் வைத்திய சாலையில் மருந்து வாங்கிக்கொடுத்தார். அம் மருந்தைச் சாப்பிட்டு வந்ததால் எனது நோய் நீங்கிச் சுகமடைந்தேனென்பதை வந்தனத்தோடு உங்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். தயைசெய்து அந்த மருந்தில் இன்னும் ஒரு புட்டி அனுப்பக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மு. கந்தசாமி முதலியார்
காணியம்பாக்கம்,
பொன்னேரி தாலுக்கா.

---

பூஎண்ணெய் நறுமணமிகுந்த பூக்களின் சத்துக்களால் செய்துள்ளது. கூந்தலில் தடவி வாரிக்கொள்ளுவதனால் அன்று மலர்ந்த மலரின் மணம் போல் மணங்கமழும். இதன் மணம் மயிரைவிட்டு நெடுநாள் விலகாது. தலையில் பேன், பொடுகு, சொறி, சிரங்கு முதலியவைகளை அணுகவிடாது. மயிரைக்கருநிறமாக்கி விரைவினில் வளர்க்கும்.

புட்டியின் விலை ரூபா I—0—0

"தீயள வன்றித் தெரியான் பெரிதுண்ணின்
நோயள வின்றிப்படும்."

தமிழ் வைத்தியசாலை, 221, தங்கசாலைத் தெரு, சென்னை.

## ஐகோர்ட்டு ஜட்ஜிகள் எழுதுவது

218948

சென்னை ஐகோர்ட்டு ஜட்ஜ்

### டாக்டர் சர் எஸ். சுப்பிரமணிய ஐயர் அவர்கள்

கே. டி., சி. ஐ. இ.

"பண்டிதர் எஸ். எஸ். ஆனந்தம் அவர்களின் தமிழ் வைத்திய சாலையில் தயாரிக்கப்படும் மகா சந்தனாதித் தைலத்தை எங்கள் குடும்பத்தில், உபயோகித்து மிக நன்மை அடைந்தோம். அது மனோகரமாக இருப்பதோடு நல்ல குணமும் செய்கிறது. நெடுநாளாக அத் தைலத்தையே உபயோகித்து வருகின்றோம். அவருடைய மற்ற மருந்துகளை, பலரும் உபயோகித்து நலமடைவதாகத் தெரிகிறது."

சென்னை ஐகோர்ட் ஜட்ஜியாயிருந்தவரும்
இந்திய அரசாங்க நிருவாகசபை அங்கத்தினராயிருந்தவரும்
ராயல் கமிஷனில் இந்திய மெம்பருமாகிய

### ஆனரபில். சர். சி. சங்கரநாயர் அவர்கள் C. I. E.

பண்டிட் ஆனந்தம் பிள்ளை அவர்களின் வைத்தியசாலையில் செய்யப்படும் பற்பொடியை நான் உபயோகித்து வருகின்றேன். அதனால் எனக்கு மிக நன்மை யுண்டாகியது. அவருடைய மகா சந்தனாதித் தைலம் எனது குடும்பத்தில் உபயோகப்படுகிறது.

### சர். சி. சங்கரன் நாயர் அவர்களின் மனைவி,
### (லேடி சங்கரன் நாயர்)

"பண்டிதர் எஸ். எஸ். ஆனந்தம் பிள்ளை அவர்களின் மகா சந்தனாதித்தைலத்தை உபயோகித்து வருகிறேன். அது மிகவும் குளிர்ச்சியாயும் இனிய மண முள்ளதாயும் இருக்கிறது.

## டாக்டர் சி. ஆர். புருஷோத்தமமுதலியார்

பி. ஏ., எம். பி. சி. எம்.

**சிவில் அஸிஸ்டெண்டு ஸர்ஜன் ஆஸ்பத்திரி சென்னை.**

"பண்டித எஸ். எஸ். ஆனந்தம் பிள்ளை அவர்களின் சிறந்த மருந்துகளில் மகா சந்தனாதித் தைலம், அமுத சுரபி, பற்பொடி முதலியவற்றை இரண்டு மூன்று வருஷங்களாக உபயோகித்து அவற்றின் நற்குணங்களை அறிந்திருக்கிறேன். அவருடைய மருந்துகள் பலராலும் கொண்டாடப்படுகின்றன. தாழ்ந்த வகுப்பினருக்கு இலவசமாக வைத்தியஞ்செய்வதுமன்றி அவ்வப்போது சுகாதாரபோதனையுஞ் செய்து வருகின்றார்."

## டாக்டர் ஜெ. எம். ஞானவொளி

பி. ஏ., எம். பி. ஸி. எம். சென்னை.

"பண்டித எஸ். எஸ். ஆனந்தம் பிள்ளை அவர்களின் மகா சந்தனாதித் தைலம், அமுத சுரபி முதலிய மருந்துகளை நான் உபயோகித்துப் பார்த்தேன். அவை நேர்த்தியாய்ச் செய்யப்பட்டிருக்கின்றன; நல்ல மருந்துகள்."

## டாக்டர் டி. எஸ். இராமசாமி

பி. ஏ. எம். பி. ஸி. எம்.

"பண்டித எஸ். எஸ். ஆனந்தம் பிள்ளையவர்கள் கீர்த்தியுள்ள தமிழ் வைத்தியக் குடும்பத்தினர். அவருடைய அமுத சுரபி என்னும் தாது விருத்தி மருந்து, சந்தனாதித் தைலம், ஹேர் ஆயில், ராயல் டீத் பேஸ்ட் என்னும் பல் விளக்கும் மருந்து முதலியவைகள் சாஸ்திரமுறையாய்த் தயார் செய்யப்பட்டிருக்கின்றன. குறித்த நோய்களைக் கண்டித்து நல்ல குணத்தைத் தருகின்றன."

## டாக்டர் ஜே. என். ராஜரத்தினம்,

பி. ஏ. எல். எம். எஸ்.

பண்டிட் எஸ். எஸ். ஆனந்தம் அவர்களின் மகா சந்தனாதித் தைலத்தை நெடுநாளாக உபயோகித்து வந்திருக்கின்றேன். அது மிக ஆரோக்கிய முள்ளதாகவும், குளிர்ச்சியாகவும் இருக்கின்றது. அதன் இனிமையான மணமும் எல்லோராலும் விரும்பத்தக்கதாயிருக்கின்றது.



## டாக்டர். ஜெ. ஆர். ஆசீர்வாதம்

பி. எ. எல். எம். எஸ்.

**கிருஸ்டியன் கலாசாலை, மெடிகல் ஆபீஸர் சென்னை.**

பண்டித எஸ். எஸ். ஆனந்தம் அவர்களுடைய மகாசந்தனாதித் தைலம், ராயல் டீத் பேஸ்ட், கேசாமிர்தம், கல்நார் பற்பொடி முதலியவைகளை நான் உபயோகித்து பரீட்சித்திருக்கிறேன். அவைகள் குறித்த நோய்களைப் போக்கி அதிக நன்மை யடையச் செய்கின்றன. அருமையான சரக்குகள் அவைகளில் சேர்க்கப்பட்டிருந்தும் சொற்ப விலைக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இவைகள் அநேகருக்குப் பிரயோசனத்தைக் கொடுக்குமென நிச்சயிக்கிறேன்.

## டாக்டர் பி. என். ரங்கசாமி, எல். எம். எஸ்.

## வைத்தியர், கண் வைத்தியர்.

(ஜெனால் அண்டு ஆப்தல்மிக் ஸர்ஜன்) **சென்னை.**

பண்டிட் எஸ். எஸ். ஆனந்தம் அவர்களின் மகா சந்தனாதித் தைலத்தை கண்ணோயுள்ளவர் பலருக்கு நான் சிபார்சு செய்திருக்கிறேன்; அதனால் அவர்கள் நன்மை அடைந்திருக்கிறார்கள். பண்டிதரின் பற்பொடியை நான் உபயோகித்திருக்கிறேன். அது பற்களை நன்றாக சுத்தப்படுத்துகிறது. பல்லில் இரத்தம் வருதல், சீழ்வருதல் முதலியவைகளையும் கண்டிக்கிறது. அவருடைய மருத்துவசாலையில் தயாராகிற மற்ற மருந்துகளும் மிக நல்ல முறையில் செய்யப்படுகிறதென்பதை நான் பார்த்திருக்கிறேன்.

## டாக்டர் ஜி. நாராயணசாமி எல். எம். எஸ்.

சென்னை.

"பண்டித எஸ். எஸ். ஆனந்தம் பிள்ளை அவர்களின் மகா சந்தனாதித் தைலம் குளிர்ச்சியா யிருப்பதுடன் மயிரை வளரச் செய்கிறது. ராயல் டீத் பேஸ்ட் என்னும் பல் விளக்கும் மருந்து மனோகரமாயும் மிக்க உபயோகமுள்ளதாயு மிருக்கிறது."

## டாக்டர் எ. என். வெர்க்கீஸ், எல். எம். எஸ்.

“பண்டிட் எஸ். எஸ். ஆனந்தரின் மகா சந்தனாதித்தைலத்தை உபயோகித்திருக்கிறேன். அது குளிர்ச்சியாயும் இனிய வாசனையுள்ளதாயு மிருக்கிறது.”

## டாக்டர் சி. ஆர். குப்புசாமி, எல். எம். பி.

பண்டித எஸ். எஸ். ஆனந்தம் அவர்களைச் சென்ற பத்து ஆண்டுகளாக நான் நன்கறிவேன். அவர் மிகவும் சிறந்த குணமுள்ள சித்த மருந்துகளைத் தயாரித்து, அவற்றைப் புத்தி கூர்மையாய் பிறருக்குக் கொடுத்து உதவி வருகின்றார். அவருடைய மகா சந்தனாதித் தைலம் மிகச் சிறந்த குணமுள்ளது. அதை என்னிடம் வரும் பல நோயாளிகளுக்குச் சிபார்சு செய்கிறேன். தமிழ் மருத்துவத்தை விருத்திசெய்வதில் அவர்க்குள்ள விருப்பம் நிறைவேற வேண்டுமென்பது எனது விருப்பமாகும்.

## டாக்டர் எம். பி. சங்கரசுப்புப்பிள்ளை எல். எம். எஸ்.

பண்டித எஸ். எஸ். ஆனந்தம் அவர்களின் சித்த மருந்துகள் சிலவற்றை நான் உபயோகித்துப் பார்த்திருக்கிறேன். 1925-ம் வருடம் நான் இரண்டரைமாதஞ் சென்னையில் தங்கும்படி நேரிட்ட காலத்தில் அவர்களுடைய தரும வைத்தியசாலையில் நாள்தோறும் வைத்தியஞ் செய்துகொண்ட பலரையும், அவர்கள் மருந்துகளை வாங்கி உபயோகித்த சிலரையும் நேரில் பார்த்திருக்கிறேன். தமிழ் மருந்தின் பெருமையும் பண்டிட் ஆனந்தம் அவர்களின் திறமையும் வியக்கத்தக்கதாய் இருக்கின்றது.

## டாக்டர் வி. எல். குப்புசாமி முதலியார், எல். எம். பி.

பண்டித எஸ். எஸ். ஆனந்தம் அவர்களின் மகா சந்தனாதித் தைலத்தை எனது குடும்பத்தில் உபயோகித்திருக்கின்றேன். என்னிடம்வரும் நோயாளிகளுக்கும் நான் அதைச் சிபார்சு செய்கின்றேன். அதன் குணத்தைப்பற்றிப் பலரிடத்திலும் மிக நன்மையாகக் கேள்விப்பட்டு வருகிறேன். குளிர்ச்சிக்கும் ஆரோக்கியத்திற்கும், மருந்து குணத்திற்கும், சிறந்த மணத்திற்கும், அதைச் சாதாரணமாய் மயிருக்குத் தடவிக்கொள்ளுவதற்கும், தலை முழுகுவதற்கும் மிக நல்லதென்று கூறுகின்றேன். முக்கியமாய் நோயினால் மயிர் உதிர்வதை நிறுத்துவதற்கும், மயிர் வளர்வதற்கும் அது மிகவும் குணமுள்ளதென்று நான் உறுதியாய்ச் சொல்லுவேன்.



## டாக்டர் டி. வடிவேலு

என்னிடம்வரும் நோயாளிகள் பலருக்கும் பண்டித எஸ். எஸ். ஆனந்தம் அவர்களின் மகா சந்தனாதித் தைலத்தைச் சிபார்சு செய்ததில், அவர்களில் அநேகர் அதைப்பற்றிப் புகழ்ந்து பேசுகிறார்கள். மேலே சொல்லிய பண்டிட் அவர்களை வெகுகாலமாக எனக்குத் தெரியும். அவருடைய மருந்துகள் வெகு குணமுள்ளவைகளாகக் காணப்படுகின்றன.

## டாக்டர் எஸ். திருவேங்கடம், எல். எம். பி.

மெடிகல் ஆபீஸர். ராயகுடா கஞ்சம் ஜில்லா.

அன்புள்ள பண்டிதர் ஆனந்தம் அவர்கட்கு வந்தனம். தங்களுடைய மகா சந்தனாதித் தைலத்தை நான் உபயோகித்து நல்லகுணத்தைக் கண்டேன். பலருக்கும் அதை நான் தெரிவித்தேன். அதை வாங்கி உபயோகித்தவர்களெல்லாம் அதன் நற்குணத்தைப்பற்றிப் புகழ்ந்து கூறுகின்றார்கள். தற்காலம் சந்தனாதித் தைலம் என்ற பெயரால் பல போலித் தைலங்கள் வியாபாரத்திற்காக விளம்பரப்படுத்துகின்றார்கள். அதனை வாங்கிப் பலர் மோசம் போகின்றார்கள். தங்களுடைய மகா சந்தனாதித் தைலத்தின் பெருமையை எல்லோரும் அறியும்படி பல பத்திரிகைகளில் தாங்களும் விளம்பரம் செய்யவேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

# மகா சந்தனாதித் தைலம்

வெண்பா.

“இன்ப மணம்வீசும் இளநரையைத் தான்தடுக்கும்
துன்பமெலாந் தூர விலக்கிவிடும்—அன்பாக
ஆனந்த ரின்சந்த னாதித்தை லந்தன்னை
ஆனந்த மாயாண்டு பார்.”

இம் மகா சந்தனாதித் தைலம் கண் சிவத்தல், கண் எரிச்சல், கண்ணில் நீர்வடிதல், இமை தடித்தல், கண்ணிற் பூவிழுதல், படலங்கள், பார்வைக்குறைவு முதலிய கண்ணோய்களையும், காது இரைச்சல்,

காதில் நீர்வடிதல், சீழ்வடிதல், நோதல், கேள்விக் குறைவு (காது மந்தம்) முதலிய செவிநோய்களையும், மூளையின் வலிவுக் குறைவு, மயக்கம், ஒற்றைத் தலைநோய், பிடரி நோய் முதலியவைகளையும், இளமையில் மயிர் நரைத்தல், மயிர் உதிர்தல், தலைவழுக்கை, புழுவெட்டு, பொடுகு முதலியவைகளையும், மூக்கைப்பற்றி வரும் பீனசநோய்களையும், பல்லின் வேரைப்பற்றிவரும் நோய்களையும், பொதுவாகக் கழுத்திற்கு மேற்பட்ட எல்லாப் பிணிகளையும் கண்டிக்கும். மிகுந்த மூளை உழைப்புள்ளவர்களுக்கும், கல்வி பயிலும் மாணவர்களுக்கும், இத்தைலம் மூளைச்சோர்வை நீக்கிக் குளிர்ச்சியைத்தரும். தலைமயிரைக் கறுக்கச்செய்து மிகவிரைவில் வளர்க்கும். பக்கவாதம், காசம், இருமல், நீர் வியாதி (மதுமேகம்) கரப்பான், சொரி, சிரங்கு, கை கால் எரிச்சல், தேமல், கற்றாழைநாற்றம் முதலிய நோயுள்ளவர்கட்கு இந்தச் சந்தனாதித் தைலம் இன்றியமையாது வேண்டப்படுவதாகும். வைசூரி நோயால் உடல் வெதும்பி, இரத்தம் சுண்டி, மயிர் உதிர்ந்து, அம்மைத் தழும்பினால் அழகற்று வலிவற்றிருப்பவர்கட்கு இது மிக விரைவில் அக்குறைகளை நீக்கி நலந்தரும். நோயில்லாத ஆண் பெண் சிறியோர்முதல் முதியோர்வரை எல்லோரும் இதனைப் பயன்படுத்தலாம். இது சூரியவெப்ப மிகுந்த கோடைக்காலத்திலும், மற்றக் காலங்களிலும் யாதொரு ஐயமுமின்றி நாள்தோறும் தலையிற்றடவி மயிர் வாரிக்கொள்ளவும், தலைமுழுகவும் பயன்படும்; இனிய மணமும் உயர்ந்த குணமுமுடையது.

இத்தைலத்தை காலையில் தேய்த்துக்கொண்டு இளஞ்சூடான வெந்நீரில் தலை முழுகலாம். இச்சாபத்தியம். கண், காது, மூக்கு முதலிய வெளி உறுப்புக்களில் ஏற்பட்டுள்ள நோயின் விபரத்தை அறிவித்தால் அதற்குத்தக்க மற்ற பக்குவங்களும் தெரிவிக்கப்படும்.

இம்மகா சந்தனாதித்தைலத்தைப் பல அரசர்களும், பல ஆங்கில மருத்துவர்களும், மற்றும் பல செல்வர்களும் ஆண்டு அனுபவித்த நற்குணங்களை எழுதி இருக்கின்றார்கள் அவைகளை நமது மருந்து விலைப்பட்டியின் நன்மதிப் பிதழ்களில் காணலாம்.

| | | | | |
|---|---|---|---|---|
| 24-அவுன்சு | ரூபா | 4 | 4 | 0 |
| 12-அவுன்சு | „ | 2 | 4 | 0 |
| 6-அவுன்சு | „ | 1 | 3 | 0 |



# அமுத சுரபி

## சிறந்த தாது விருத்தி லேகியம்.

இஃது ஆண், பெண் இருபாலருக்கும் எவ்வகைக் காரணங்களினாலாவது விந்து கெட்டு, வலிவு குறைந்து, நரம்புக்கட்டுகள் தளர்ச்சி அடைந்து, இந்திரியக் கசிவு, கனவிற் கழிதல், விரைவிற் கழிதல், பொருந்த விருப்பின்மை, குறி துவளல் முதலிய துன்பங்களால் புத்திரப் பேற்றுக்கு வகையின்றி வருந்துவோர்களுக்கு அத்தகைய துன்பங்களை நீக்கி, அமுத மயமான உடம்பையும், வலிவையும், நல்லறிவையும், அழகையும், நீண்ட ஆயுளையும், மக்கட் பேற்றையும், பொன் போன்ற மேனியையும் தருமென்பதில் யாதொரு ஐயமுமில்லை. இது சித்தர்களின் முறை.

அமுத சுரபி உயர்ந்த பல்வகைப் பிசின் வகைகள், வித்து வகைகள், அரிய மூலிகைகளின் சத்துக்கள் முதலிய அரும்பொருள்களைக் கொண்டு செய்துள்ளது. இஃது அருந்துவதற்கு இனிமையாகவும், இலேகிய பாகமாகவும் செய்யப் பட்டுள்ளது.

அமுத சுரபியை காலை மாலை நெல்லிக்காயளவு நெய், அல்லது வெண்ணெய் கலந்து அருந்துவது நலம், தனியாகவும் அருந்தலாம்.

அமுத சுரபியை அருந்தி அநேகர் பெருந்துன்பங்களினின்றும் நீங்கி இன்பமடைந் திருக்கின்றனர்.

| | | | | |
|---|---|---|---|---|
| 40-நாள் மருந்து விலை | ரூபா | 5 | 0 | 0 |
| 20-நாள் மருந்து விலை | ரூபா | 2 | 12 | 0 |

# சீரணி இலேகியம்

நமது உயிரைப் பற்றி ஆணவ மலம் நீங்காது அடிக்கடி துன்பத்தில் அழுத்துவதைப் போல்; நமது உடம்பிலிருந்து நாள்தோறும் கழியவேண்டிய மலம் நீங்காமல் உடம்பில் தங்கித் தீமை செய்குவதால் நாம் அடிக்கடி நோயால் வருந்துகின்றோம். ஆதலால் மல பந்தத்தை நாள்தோறும் கழிப்பதே நோயற்ற வாழ்க்கைக்கு முதற் காரணமாகும்.

சீரணி இலேகியம் யாதொரு வருத்தமுமின்றி நாள்தோறும் மலத்தைக் கழித்து, மலச்சிக்கலால் வரும் நோய்கள் எல்லாவற்றையும் நீக்கும் ஓர் அருமருந்து.

வாதநிதானி அருந்தி மலப்போக்கு நின்றபின் வெந்நீரில் உடம்பு குளிக்கலாம்.

வாதநிதானி சாப்பிட்டு நிறுத்தின பின்னர் மறுபத்தியம் இரண்டு நாள் இருப்பது நலம். இயலாதவர்கள் இச்சாபத்தியமாகவாவது இருத்தல் வேண்டும். பத்தியம் தீர்ந்தபின் நல்லெண்ணெய் தேய்த்துத் தலைமுழுகலாம்.

வாதநிதானி:— சாப்பிட விரும்புகிறவர்கள் தங்கள் நோயின் தன்மைகளை விளக்கமாக எழுதினால் அதற்குத் தக்க பக்குவங்களையும் மருந்தனுப்பும்போது எழுதி அனுப்பப்படும்.

வாத நிதானி விலை ரூபா 2 8 0

## காய்ச்சல் குளிகை

(சுர மாத்திரை.)

மலைக் காய்ச்சல், முறைக்காய்ச்சல், குளிர்காய்ச்சல், நெறிக்கட்டி காய்ச்சல் முதலான சுரங்களை மிக விரைவினில் நீக்கக்கூடியது. சுரம் அடிக்கடி வந்து வயிற்றில் மண்ணீரல் பருத்திருப்பவர்கள் (காய்ச்சல் கட்டியுள்ளவர்கள்) இம் மாத்திரையைத் தொடர்ந்து 40-நாள் சாப்பிட்டவரின் சுரக்கட்டி (ஸ்பிளீன்) தன் நிலையில் சுருங்கிவிடும். இஃது இரத்தத்திலுள்ள நச்சுநீர், முதலிய மேக நோய்களைப்போக்கி மெலிந்த உடம்பைத் தேற்றிப் பலத்தைத் தரும். இதை ஒவ்வொருவரும் அநுபவத்தில் தெரிந்து கொள்ளலாம்.

காய்ச்சல் வந்தவர்கள் முதலில் மலத்தைக் கழித்துக்கொள்ள வேண்டும். சுரம்காய்ந்து விட்டிருக்குஞ் சமயத்தில் குளிகையை வயதுக்குத் தக்கபடி, சிறுவர்கள் ஒரு குளிகையையும், பெரியவர்கள் இரண்டு குளிகையையும் வாயிலிட்டு, இஞ்சிச்சாறு, சுக்குநீர் (கியாழம்), வெந்நீர் இவைகளுள் யாதேனும் ஒன்றுடன் கலந்து விழுங்க வேண்டும். விழுங்குவதற்கு இயலாத சிறுவர்களும் மற்றவர்களும் குளிகையை இஞ்சிச்சாற்றில் அல்லது நிலவேம்பு கியாழத்தில் இழைத்துக்கரைத்து அருந்தலாம்.

காய்ச்சல் வருமுன் குளிர் மிகுதியாயிருக்கும்போது மிளகுத்தூள் கியாழம் சூடாய்ச் சாப்பிடக் குளிர் விரைவில் நீங்கும்.

பத்தியம்:—காய்ச்சல் நிற்கும் வரையில் புனற்பாகக் கஞ்சி, புழுங்கல் அரிசி நொய்க்கஞ்சி, கோதுமை நொய்க்கஞ்சி இவைகளில் ஏதாவதொன்றில், சிறிது உப்பு அல்லது இனிப்புச் சேர்த்துச் சாப்பிடவேண்டும். சோறு உண்ணக்கூடாது. காய்ச்சி ஆறின நீரைக் குடித்தல் வேண்டும்.

24 குளிகைகள் விலை ரூபா 2 0 0
12 குளிகைகள் விலை ரூபா 1 0 0



## வெள்ளை வெட்டைக்கு

(கனேரியா கியூர்)

இது ஆண் பெண்களுக்கு ஏற்படும் நீர் எரிச்சல், நீர்த்தாரை இரணம், வீக்கம், குத்தல், வலி, சீழ், இரத்தம்வருதல், முதலிய நோய்களை மிகவிரைவில் கண்டிக்கக்கூடிய மருந்து.

இம்மருந்து அருந்தின 12 மணி நேரத்திற்குள் நோயைக் கண்டிக்கும். இம்மருந்து அரை அவுன்சும் தண்ணீர் ஒரு அவுன்சும் கலந்து நாளொன்றுக்கு மூன்று வேளையாக மூன்றுநாள் அருந்த நோய் முற்றிலும் நீங்கும்.

மருந்து சாப்பிடும் மூன்று நாளும் உப்பு, புளி, மிளகாய், முதலிய மசாலைப் பொருள்கள் ஆகாது. பகலில் மோர்ச்சோறு,இரவில் பால்சோறு உண்ணவேண்டும். சர்க்கரை, வெண்ணெய், நெய், பச்சரிசி, பச்சைப் பயறு, கோதுமை, பழவகைகள் உபயோகித்துக் கொள்ளலாம். காபி, ஊன் (மாமிசம் வகைகள்), பிராந்தி, சாராயம், புகையிலை, புகையிலைச் சுருட்டு, இராவிழிப்பு, பகல் உறக்கம், வெயிலில் அலைச்சல், பொருந்தல் முதலியவைகள் ஆகா. நாள்தோறும் இளவெந்நீரிலாவது, தண்ணீரிலாவது தலை முழுகலாம்.

இந்நோய் கண்டவர்கள் முதலில் கடுக்காயின் தோல், நிலாவரை இலை இவைகளின் கியாழத்துடன் நமது மருந்து விலைப்பட்டியில் கண்டுள்ள கணைக்கிருதமாவது, ஆமணக்குநெய்யாவது ஒரு அவுன்ஸ் கலந்து ஒரு வேளை சாப்பிட்டு மலத்தைக் கழித்துக்கொண்டு பின்னர் இம்மருந்தைச் சாப்பிடுவது நலம். நோய் நீங்கின பின்னர் நமது அமுத சுரபி இலேகியத்தைச் சிலநாள் அருந்துவதால் நோய் திரும்பி வராது. தேக பலமும் தாதுவிருத்தியும் உண்டாகும்.

வெள்ளை வெட்டை மருந்து விலை ரூபா 3 0 0

## சகலவித குஷ்டநோய்களுக்கும் மேக நிவாரணகிருதம் என்னும்

குடிநெய்.

இம்மருந்து பதினெண் வகை குஷ்டநோய்கள், கருப்பத்தில் உண்டான மேக நோய்கள், நடுவில் தனது செய்கைத் தவறால் வந்த மேக நோய்களாகிய, வெள்ளை, கிரந்தி வகைகள், புண், சதை அடைப்பு, நீரடைப்பு, லிங்கபுற்று, யோனிப்புற்று, அரையாப்புக்கட்டி, கண்டமாலை, கருமேகம், செம்மேகம், வெண்மேகம்,தோல் தடித்தல், உணர்ச்சி அற்று

தோல் மறத்தல், தோல் வெடித்தல், தோல் சுருங்கல், தோல் புண்ணாகி, நீர்வடிதல், கை, கால் விரல்களில் புண்ணாகிக் குட்டை யாகுதல், விரல்கள் மடிப்புண்டாகுதல் முதலியநோய்களை எல்லாம் மிக விரைவில் குணமாக்கும் அருமருந்து.

இந்த நெய்யைக் கடுக்காய்த்தோல், நிலாவாரை, (சூரத்தாவாரை) கியாழத்தில் மூன்று நாள் காலையில் ஒருரூபா அகலம் விட்டு சாப்பிட வேண்டும். பின்னர் நாள் தோறும், இரவில் உறங்கப் போகும்போது காய்ச்சின பசும்பாலில் அல்லது வெந்நீரில் அரை ரூபா அகலம் விட்டு சாப்பிட வேண்டும்.

பத்தியம்:—நல்லெண்ணெயில் தலைமுழுகுதல், கறிகுழம்பு தாளித்தல் கூடாது. நெய், தேங்கா எண்ணெய், ஆமணக்கு எண்ணெய், சேர்த்துக் கொள்ளலாம். மீன் வகைகள் கூடாது, வெள்ளாட்டிறைச்சி, கத்திரிப்பிஞ்சு, முருங்கைப் பிஞ்சு, வெண்டைக்காய், பீர்க்கங்காய், புடலைப் பிஞ்சு, அத்திக்காய், அவரைக்காய் பொன்னாங் கண்ணிக்கீரை, முளைக் கீரை, அறுகீரை, துவரம்பருப்பு, பச்சைபருப்பு முதலியவைகள் சேர்த்துக் கொள்ளலாம். தினம் இள வெந்நீரில் தலை முழுகலாம், எண்ணெய் தேய்த்துத் தலை முழுகுவதற்குப் பதிலாக மிளகு, சீரகம், இவை இரண்டையும் பசும்பால் விட்டு அரைத்து பாலில் காய்ச்சி தலை முழுகவேண்டும். தலை முழுக்கு அன்று இரவு மருந்தை நிருத்திவைக்கவும், நோயாளி நல்ல காற்றில் படுத்து உறங்கவேண்டும். மாலை வெய்யிலில் உடம்பை இரண்டுமணிநேரம் காய்ச்சவேண்டும், இந்த நெய்யை உபயோகித்துகுணமடைந்தவர்களின் நற்சாட்சியை எங்கள் மருந்து விலைப்பட்டியில் (கேட்லாக்கில்) காணலாம்.

குஷ்டநோய்க்கு குடிநெய் புட்டி விலை ரூபா 5 0 0
வி-பி. தபால் செலவு வேறு.

# பூ எண்ணெய்

(ஆனந்த ஹேராயில்)

**இது மணத்திலும், குணத்திலும், மாண்புமிக் குடையது.**

நறுமண மிகுந்த பூக்களின் சத்துக்களால் செய்துள்ளது. இந்த எண்ணெயைக் கூந்தலில் தடவி வாரிக்கொள்ளுவதனால் அன்றலர்ந்த மலரின் மணம்போல் மணங்கமழும். இதன் மணம் மயிரைவிட்டு நெடுநாள் விலகாது தலையில் பேன், பொடுகு, சொறி, சிரங்கு முதலியவைகள் அணுக விடாது.

மயிரைக் கருநிறமாக்கி விரைவினில் வளர்க்கும்.
பூ எண்ணெய் குப்பி 1 க்கு விலை ரூபா 1.



# மூலநோய் மருந்து

இது ஒன்பது வகை மூலங்களையும், சீத இரத்தபேதி, அதிசார பேதி, கிராணிக் கழிச்சல்களையும் மிக விரைவில் கண்டித்து குடலில் ஏற்பட்டிருக்கும் புண்களை ஆற்றக்கூடியது. மூலரோகங்களை அறுக்காமல் (ஆப்பரேஷன் இல்லாமல்) நீக்கக்கூடியது.

இம்மருந்து இரண்டு வேளையில் குணம்தரும் இதனைச் சுண்டைக்காயளவு தேனில் கலந்து காலை மாலை சாப்பிடவேண்டும். சீத இரத்த பேதி, வயிற்றுளைவு நின்றவுடன் மருந்தை நிறுத்த வேண்டும். மலம் செம்மையாகக் கழியாமல் வெறும் சீதம், இரத்தம் மட்டும் போனால் கடுக்காய்த்தோல் கியாழத்தில் ஆமணக்கெண்ணெய்கலந்து அருந்திபழைய மலத்தை முன்னர்க் கழித்துக்கொண்டு, பின்னர் மூல நோய் மருந்தை அருந்த வேண்டும்.

பத்தியம்:— பால்சேர்ந்த கஞ்சிகள் தான் சாப்பிடவேண்டும். உப்பு மிளகாய், புளி முதலிய காரமுள்ள குழம்பு கரி முதலியவைகளும் சோறும் ஆகாது.

மூலநோய் மருந்து புட்டி 1-க்கு விலை ரூபா 1 0 0

# ஆனந்த பாம்

வலிகளுக்கு மேலே தடவும் மருந்து

இத்தைலம், தலைநோய், நெஞ்சுநோய், நெஞ்சடைப்பு, நெஞ்சிறுபம், சுவாசநோய், கீல்வாயு, பக்கவாயு, அண்டவாயு,பல்நோய், முதுகு, இடுப்பு, கைகால் முதலியவைகளில் பிடிப்பு, சீதளம், குரல்வளைநோய், தேள், பூரான், நண்டு வாய்க்காலி முதலான விஷப்பூச்சிக்கடி இவைகளுக்கு மேலே தடவித் தேய்க்க மிக விரைவில் நோயை நீக்கி மகிழ்ச்சியைத் தரும் சஞ்சீவி போன்றது.

நோய் மிகுதியாயுள்ள விடத்தில், தவிடு அல்லது மணலை வறுத்து ஒத்துக்கொடுத்து, பின்னர் இம்மருந்தைத் தடவித் தேய்த்துக் கம்பளி அல்லது முறட்டுத் துணியினால் மூடிக் கட்டிவைக்கவேண்டும். நோய்க்குத் தக்கபடி அடுத்தடுத்து இதனைச் செய்யலாம். பல் ஈறு வீக்கம். பல்சொத்தை முதலிய பல்வலிக்கு இம்மருந்தைப் பஞ்சில் தடவி நோயுள்ளவிடத்தில் வைத்து உமிழ் நீரை விழுங்காமல் கொஞ்சநேரம் வைத்திருந்து எடுத்து விடலாம்.

(பல்லில் நோயுள்ளவர்களுக்கு நமது பற்பொடி மிக நன்மை செய்யும்)
ஆனந்தபாம் குப்பி விலை அணா 0 12 0

## படைமருந்து

படை என்னும் இந்நோய் உடம்பில் இடுப்பு தொடை முதலிய இடங்களில் தோலின்மேல் படர்ந்து தடித்துத் தினவை யுண்டு பண்ணும், தோலின் மேனியைக் கெடுத்து பார்ப்பதற்கு வெறுப்பை உண்டாக்கும். இரவில் படுத்துறங்கப் போகும்போது படையுள்ள இடத்தைச் சிறுகத்தியினால் மெதுவாய்ச் சுரண்டி அதன்மேல் படை மருந்தைத் தடவித் தேய்த்துத் துணிபடாமல் வைத்திருந்து காலையில் இலுப்பைப் பிண்ணாக்கு அல்லது (சவர்க்காரம்) சோப்பினால் கழுவிக் குளிக்கவேண்டும். தொடர்ந்து நாலைந்து நாள் தடவினால் எப்போதும் வராது.

இப்படை மருந்து தடவுவதனால் எரிச்சல், நாற்றம், துணியில் கறைபிடித்தல் முதலிய கெடுதிகள் ஏற்படா.

படை மருந்து விலை அணா 0 8 0

## கருப்பரோக நிவாரணி, ஸ்திரீகளின் மருந்து

இது பெண்களின் மாதவிலக்கு நாட்களில் உண்டாகும் வயிற்றுவலி; சூதகபந்தம், இடுப்புவலி, கைகால்வலி, தலைவலி, உடல்பருத்தல் முதலிய நோய்களையும், பூ ஒதுங்கல், சதைவளர்ச்சி, கிருமி முதலிய எழுவகை மலடுகளையும் நீக்கித் தேகாரோக்கியத்தையும், புத்திரப் பேற்றையும் தரும்.

பெண்கள் மாதவிலக்கு மூன்று நாட்களிலும் காலையில் இம்மருந்தைக் தேக்கரண்டி யளவு சுக்குக் கியாழத்தில் கலந்தருந்தவேண்டும்.

உப்பு, புளி, மிளகாய், நல்லெண்ணெய் ஆகாது. பால்சோறு, மோர் சோறு, பால்கஞ்சிதான் சாப்பிடவேண்டும். நான்காம்நாள் மறுபத்தியமிருந்து, ஐந்தாம்நாள் நல்லெண்ணெய் தேய்த்துத்தலைமுழுகலாம். உப்பு, புளி, மிளகாய் குறைவாகச் சேர்த்துக்கொள்ளவேண்டும். இம்மருந்தை இம்முறையாக மூன்றுமாதம் விலக்கு நாட்களில் அருந்தல்வேண்டும்.

நமது மருந்து விலைப்பட்டியில் கண்டுள்ள அரச அமுதசுரபியையாவது, அமுத சுரபியையாவது 40-நாள் சாப்பிட்டுவரின், விரும்பிய பயனை அடையலாம். இதற்குப் பத்தியமில்லை.

கருப்பரோகத்தைலம் குப்பி ஒன்று ரூபா 3 0 0

## பண்டிட் பற்பொடி

இந்தப் பற்பொடியை நாள்தோறும் பிரஷினாலாவது, விரலினாலாவது விடியற்காலம் விளக்கிவரின், பற்களின் சந்திலுள்ள அழுக்குகளை அறவே நீக்கி, சீழ் வருதல், பல் தேய்தல், ஈறுகரைதல், பல்லில் காரை பிடித்தல், வாய்வேக்காடு வாய்நாற்றம் நாவிற்புண் முதலிய நோய்களை நீக்கும். வலியோடுகூடிய பல்லின் ஆட்டத்தை நிறுத்தும். பல்லில் நோய் உள்ளவர்கள் நமது பற்பொடியை காலை மாலை இரண்டுவேளையும் விளக்கவும், நமது பற்பொடிக்கு நிகரான பற்பொடி இது வரையில் வெளிவரவில்லை என்பதை அநுபவித்தவர்கள் எல்லோரும் ஒப்புக்கொள்ளுகின்றார்கள்.


கல்நார் பற்பொடி அணா 0 6 0

# TAMIL MEDICAL HALL

**221, MINT STREET, MADRAS**

## தமிழ்வைத்தியசாலை

221, தங்கசாலைத்தெரு, சென்னை.



உயர்ந்த செந்தூரங்கள், பஸ்மங்கள், சுன்னங்கள், குளிகைகள் (மாத்திரைகள்), இலேகியங்கள், கிருதங்கள், தைலங்கள் முதலிய உத்தரவாதமுள்ள சித்த மருந்துகள் தமிழ் வைத்தியசாலையில் எப்பொழுதும் விலைக்குக்கிடைக்கும்.

**தமிழ் வைத்தியசாலையில்**

காலை 7-மணிமுதல் 10-மணிவரையில் இலவசமாக நோயாளர்களுக்கு மருந்து கொடுக்கப்படும்.

Regd. No. M. 2418

# MARUTHUVAN
## (PHYSICIAN)

A High Class Medical Tamil Monthly
Editor: Pandit S. S. Anandam.
Sample Copy Free on Application

Add:— **Manager.**
**MARUTHUVAN OFFICE**
**221, Mint Street**
MADRAS.

## மருத்துவன் பத்திரிகை சந்தாதாரர் களுக்குள்ள பெரிய லாபம்.

### பாலர் பரிபாலனம், பாலர் வைத்தியம்

மருத்துவனில் மாதந்தோறும் எட்டுப்பக்கம் (ஒரு பாரம்) 'பாலர்பரிபாலனம் பாலர்வைத்தியம்' என்பதன் சம்பந்தமாகப் பல அரிய பெரிய விஷயங்கள் வெளியாகும். இப்புத்தகம் சுமார் முப்பது பாரத்துக்குமேல் வரும். சந்தாதாரர்கள் அதனைச்சேர்த்து ஒரே புத்தகமாகப் பைண்டு செய்து கொள்ளவேண்டும். இல்லறத்தி லிருந்து மக்கள் பேறு அடையும் ஒவ்வொருவருக்கும் இப்புத்தகம் பெருநிதியைப்போன்றது. பாலரை நோயணுகாமல் வளர்க்கும் முறைகளும், பாலர்களுக்குவரும் நோய்களுக்குத் தாங்களே பரிகாரம் செய்துகொள்ளும் வழிகளும் இப்புத்தகத்தில் தெளிவாக விளக்கிக் காட்டப்பட்டிருக்கின்றன, இப்புத்தகத்தைப் பெண்கள் எல்லோரும் படிப்பதால், சிசு தாயின்கருப்பையினின்று வெளிப்படுங்காலத்தில் அருகிலிருந்து பரிகாரஞ்செய்ய மருந்துவச்சி தேடவேண்டியதில்லை. வீட்டிலுள்ள பெண்பாலார் தாங்களே ஒருவருக்கொருவர் உதவிசெய்து கொள்ளலாம். இப்புத்தகம் மருத்துவர், மருத்துவச்சிகளுக்கும், மருத்துவமாணவர் மாணவிகட்கும், பொது ஜனங்கட்கும் தோன்றாத் துணையாக உள்ளது.

மானேஜர்:— **மருத்துவன் காரியாலயம்,**
221, தங்கசாலை வீதி,
சென்னை.

Printed by The Sree Subramaniya Vilasam Press, NO 220. Mint Street, MADRAS
& Published by Pandit S. S. Anandam, 221, Mint Street, Madras.

# MARUTHUVAN

# மருத்துவன்

## PHYSICIAN

## தமிழ் வைத்தியப் பத்திரிகை

ஆசிரியர். பண்டிட் எஸ். எஸ். ஆனந்தம்

17 APR 1929

மலர் ௧. 1929௵ மார்ச்மீ இதழ் ௬.

உள்ளுறை

பாலர் பரிபாலனம்
தமிழ்வைத்தியமும், சம்ஸ்கிருதவைத்தியமும் 137
மலத்தில் புழுக்கள், அவைகள் செய்யும் குணங்கள் 143
இரசம் அல்லது சூதம் 147
மதுசாரம் 150
சைமன் கமிஷனுக்கு தென்னிந்திய மருத்துவர் சங்கத்தின் அறிக்கை 153
இலங்கை மருத்துவர்களுக்கு ஓர் வேண்டுகோள் 164
பொதுச்செய்திகள் 166
நன்கொடை அளித்த அன்பர்கள் 167
தென் இந்திய மருத்துவர் சங்கத்தின் நிகழ்ச்சிக் குறிப்பு

மருத்துவன் காரியாலயம்

221, தங்கசாலை வீதி

சென்னை.

# மருத்துவன்

ஓர் உயர்ந்த வைத்திய மாதப் பத்திரிகை.

இம் மருத்துவன் ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையாத வேண்டியவன். இவன் நோயணுகா விதிகளை ஆண், பெண் ஆகிய இரு பாலாருக்கும் போதிக்கக் கூடியவன். வந்த நோய்களை எளிதாகப் போக்கிக் கொள்ளும் வழிகளைக் கூறுபவன். பெண்கள் கருப்பெற்ற காலத்திலும், கரு உயிர்க்கும் காலத்திலும் நடந்து கொள்ள வேண்டிய முறைகளையும், பாலர் பரிபாலனத்தையும், குழந்தைகளுக்கு வரும் நோய்களையும், அவற்றிற்குரிய பரிகாரங்களையும் அறிவிப்பவன். பொதுவாக மக்கள் நோயின்றித் தேகபலத்தோடும், நீண்ட ஆயுளுடனும் வாழ்வதற்குரிய வழிகளை ஆராய்ச்சி மூகத்தால் எடுத்து விளக்குபவன். மக்களுக்கு உயிரினும் சிறந்த பொருள் உலகில் வேறொன்று மில்லையாதலால், ஒவ்வொருவருடைய உயிர் வாழ்க்கைக்கும் இம்மருத்துவன் உற்ற துணைவனாவான்.

## மருத்துவனின் சந்தா விவரம்.

ஆண்டு 1-க்குத் தபாற் கூலியுட்பட உள் நாடாகிய இந்தியா, இலங்கை, பர்மா முதலிய இடங்களுக்கு ரூ. 3—0—0.

பினங்கு, சிங்கப்பூர், கோலாலம்பூர், தென் ஆபிரிக்கா முதலிய வெளி நாடுகளுக்கு ரூ 3—8—0.

தனிக்காப்பி அணா 0—4—0.

ஓராண்டுக்குக் குறைந்த சந்தா கிடையாது.

பத்திரிகை ஆங்கிலமாதக் கடைசியில் வெளிவரும்.

## சந்தாதாரர்கள் கவனிக்கவேண்டியவை.

சந்தா தாரர்களாகச் சேருகிறவர்கள் தங்கள் பெயரையும் முழு விலாசத்தையும் அருகிலுள்ள தபாலாபீசோடுத் தெளிவாக எழுத வேண்டும்.

சந்தா தொகையை முன்னரே செலுத்தியாவது அல்லது வி-பி-யில் செலுத்தியாவது பத்திரிகையைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

ஆண்டின் நடுவில் சேருகிறவர்களுக்கு முன் பத்திரிகைகள் வேண்டுமானல், இருக்கும் சஞ்சிகைகள் மட்டும் அனுப்பப்படும்.




மயக்கம், அசதி, படபடப்பு, காதிலிரைச்சல், ஏதாவது ஒரு பொருளைக் கூர்ந்து பார்ப்பதால். இடைக்கிடையே கறுப்புப்புள்ளிகள் ஓடுவதுபோல் தோற்றுகிறது. ஒவ்வொருகாலத்தில் பார்வை மங்கலாயிருக்கிறது, தூக்கக்கெடுதி, சிறிது வேலை செய்தாலும், மிக இளைப்பும், களைப்பும் நேரிடுகிறது. நெஞ்சிடி, நாளுக்குநாள் உடல் மெலிவு முதலிய குணங்களேற்படும். இக்குணங்கள் சிறிது கண்டாலும் உடனே மருத்துவரிடஞ் சொல்லி ஏற்ற மருந்துண்டு, உடலைத் தேற்றிக் கொள்ளவேண்டும். உடனே குழந்தைக்கும் பால் மறப்பிக்கவேண்டும். ஆனால் சிசுவுக்கு ஆறுமாதம் ஆகுமுன் இக்குணங்கள் தாய்க்குண்டானல் தாதி ஏற்பாடுசெய்து பால் கொடுக்கவேண்டும். தாய்ப்பாலை முற்றிலும் நிறுத்திவிடவேண்டும். நிறுத்தாவிடில் தாய்க்குக் கொடிய நோய் உண்டாகும். குழந்தையும் நோயுற்று, மெலிந்து, கை கால் சூம்பி, வயிறு பெருத்து வயிறோட்டமுண்டாகி மறுபடி தேறுவது கடினமாகும்.

---

## 8. அத்தியாயம்.

*தாதி:—*

மேற்சொல்லிய காரணங்கள் ஏதாவதொன்றினல் சிசுவுக்குத் தாய் முலைகொடுத்து வளர்க்கக்கூடாமற் போகுங்காலத்தில், செவிலித் தாய் வைத்தாவது, கைப்பால் உணவு கொடுத்தாவது வளர்க்கவேண்டும். இவை இரண்டில் தாதியே நலம். ஆனல் ஒழுங்காகத் தாதி ஏற்பாடு செய்யமுடியாவிடில் கைப்பால் கொடுக்கலாம்.

தாதி ஏற்பாடு செய்வதில் தீமையுமுண்டு, நன்மையுமுண்டு. நல்ல குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள் தாதிவேலைக்கு வருவது அருமை. நல்நடத்தை யில்லாதவர்கள், சோற்றுக்குந் துணிக்கும் வறுமைப்பட்டு அலைகிறவர்கள், பிணியாளர்கள் முதலியவர்கள் இவ்வேலைக்கு வருவார்கள். இப்பெண்களிடம் கொடிய மேக நோய்கள் குடியிருக்கும். பிள்ளைப்பெற்று பத்துமாதம், ஒருவருடமாகி யிருந்த போதிலும், மூன்று நான்கு மாதங்கள்தான் ஆயிற்றென்று சொல்லி ஏமாற்றுவார்கள். தலைப்பிள்ளைபெற்றுக் குழந்தை வளர்ப்பதில் பழக்கமில்லாதவர்களா யிருந்தபோதிலும் இது இரண்டாம்பேறு, மூன்றும் பேறு என்று பொய் சொல்லுவார்கள். சிலர் கணவனிடம் வாழ்வதாகச் சொல்லுவார்கள். ஆனல் இவர்களுக்கு இன்னார்தான் கணவன்

என்பதை நிச்சயிக்க வியலாது. காசுதான் இவர்களுக்குக் கணவன். பால் கொஞ்சமா யிருக்குங் காலத்திலும், நாளெல்லாம் தன் குழந்தைக்குப் பால் கொடாமலிருந்து பால் வழிந்தோடும்படியான மார்களைக் காட்டுவார்கள். இவர்களைச் செம்மையாகச் சோதிக்கக்கூடிய மருத்துவரைக்கூட இவர்கள் ஏமாற்றிவிடுவார்கள். எவ்வளவோ கண்டிப்பாகப்பார்த்து ஒரு பால்காரியைத்தெரிந்து கொண்டபோதிலும், சிலநாள்வரை அவளுடைய நடவடிக்கைகளை நன்றாகக்கவனித்துவர வேண்டும். சிலர் குழந்தைகளுக்கு அபின்மருந்துகொடுத்து இரவில் குழந்தை அழுது தங்களுக்குத் தொந்தரை கொடாதபடி தூங்கச் செய்வார்கள். இதில் அபின் வேகம் மிகுதியாகி அநேகங் குழந்தைகளுக்கு உயிர் நீங்கி யிருக்கிறது. ஆகலால் பால்காரி ஏற்பாடு செய்யும்போது செம்மையாகப் பார்த்து அவளுடைய செய்கைகளைக் கண்டு ஒப்புக்கொள்ள வேண்டும்.

பால்கொடுக்குந் தாதியின் இலக்கணங்கள்:—

1. வயது: இருபதுமுதல் முப்பதுக்குள்ளாக இருக்கவேண்டும். இரண்டொரு குழந்தைகளைப் பெற்றவளா யிருப்பது நலம். அவளுக்குப் பாலும் மிகுதியாயிருக்கும். குழந்தைகளைக் காப்பதிலும், வளர்ப்பதிலும் பழகி யிருப்பாள்.

2. குணங்கள்: சாராயங் குடிக்கிறவள், சிற்றுண்டிகளை எந்த நேரத்திலும் மிகுதியாக உண்ணுகிறவள், பொடி போடுகிறவள், சுருட்டுமுதலிய புகைகள் பிடிக்கிறவள், சண்டை சல்லியஞ் செய்கிறவள், சோம்பேறி, தூக்கம் மிகுந்தவள் உதவாது. சுறுசுறுப்பும், குளிர்ந்த முகமும், குறைந்த பேச்சும், எல்லாவகையிலும் சுத்தமும் நன்னடக்கையுமுள்ள பெண்ணாக யிருத்தல்வேண்டும்.

3. உடம்பில் நோயில்லாதவளும், உடம்பில் சிரங்கு, பற்றுகள் ஒன்றுமில்லாதவளும், பல் சொத்தை, ஈறில்புண், நாக்கில் புண், அழுக்கு, சுவாசத்தில் கெட்டமண முதலியது சிறிது மில்லாதவளுமா யிருக்கவேண்டும்.

4. பால் முலைகள் கல்போல் கெட்டியாகவாவது, வெறுந் தோற்பைபோல் தளர்ந்துபோயாவதிராமல், மிருதுவான ரப்பர் பந்துபோற் கெட்டியாயும், சதைப் பிடிப்புள்ளதும், உள்ளே முடிச்சு முடிச்சாயுமிருக்கவேண்டும். முலைக்காம்பு மிகுதியாகப் பருத்து, அல்லது சிறுத்து, அல்லது வெடித்திராமல் சரியான வடிவமாக அமைந்திருக்கவேண்டும். சிறிது நீலங்கலந்த வெளுப்பு நிறமுள்ளதும் போதுமான பாற்கண்கள் உள்ளதாயு மிருக்கவேண்டும். பால், பசும்பாலைவிட இனிப்பா யிருக்கவேண்டும்.



5. நாளடைவில் முலைப்பாலிலுள்ள சத்து அதிகப்பட்டுவருமாதலால் குழந்தை பிறந்த அதேமாதத்தில் பிரசவித்த பெண்ணாயிருந்தால் மிக நலம். இரண்டொருமாத வித்தியாசமுள்ளவள் மத்திமம். மற்றவர்கள் ஆகாது. மூன்றுமாதக் குழந்தைக்குக் குழந்தை பெற்று ஆறுமாதமானவளுடைய பாலில் சத்துகள் மிகுதியாயிருப்பதாலும், ஆறுமாதக் குழந்தைக்கு கரு உயிர்த்து மூன்றுமாதமானவளுடைய பாலில் சத்துக்கள் குறைவாயிருப்பதாலும் குழந்தை உடம்புக்குப் பொருந்தாது.

6. மாதந்தோறும் மாதவிலக்குச் செம்மையாயும்சரியாயும் கண்டு வருமானால் அந்தப் பெண்பிள்ளை யாகாது.

7. பால்கொடுக்கும் வேலைக்கு வருகிறவளுடைய குழந்தைக்குச் சிரங்கு, கரப்பான், மூக்கில் சளிவடிதல், உடம்பு மிக மெலிவு முதலியவைகளிருந்தால் அவள் தாதிவேலைக்குதவமாட்டாள்..

தக்க மருத்துவரைக்கொண்டு நன்னடையும், நல்ல உடம்புமுள்ளவளும், கணவன்கீழ் மனைவியுமான ஒரு பெண்ணைத் தாதியாக ஏற்பாடு செய்யலாம். கூடுமானால் அவள் கணவனையும் மருத்துவன் பார்ப்பது நலம். ஒருக்கால் அவன் கொடிய நோயாளியாயிருந்தால் எவ்வளவோ தீமை அதனாலுண்டாகும்.

## பால் நிறுத்தல்

இப்படிப் பால் குடித்து வளருங் குழந்தைக்கு எப்போது, என்ன காரணங்களைக்கொண்டு எப்படி வகையாய்ப் பாலை நிறுத்த வேண்டுமென்பதைப்பற்றிக் கவனிப்போம். குழந்தைக்குப் பல்முளைக்குமட்டும் பால் தவிர வேறு எவ்வித உணவும் செமியாது. இரைப்பையின் உள்ளுறை மிக மெலினமாயிருக்கும். ஆனால் குழந்தைக்குப் பல் முளைக்கத் தொடங்கும் ஆறு ஏழுமாதங்களில் இரைப்பைக்குச் சிறிது வலிவுண்டாகும். பல் முழுவதும் முளைத்தபிறகு தேக வளர்ச்சிக்கு ஏற்றவிதமாக உணவுகளை செமிக்கச்செய்யும் பித்தநீர் சத்தும்

அதில் உற்பத்தியாகிறது. பாலைவிடக் கடினமான உணவுப் பொருள்களைக் கடித்து மென்று உட்கொள்ள கடவுள் பற்களைக் கொடுத்திருக்கிறார். ஆதலால் அரைவரிசை பல் முளைத்தவுடன், அதாவது ஒன்பது மாதத்திற்குமேல் பதின்மூன்றும் மாதத்திற்குள்ளாக பால் நிறுத்திவிடவேண்டும். இதே காலத்திற்குச் சரியாகத் தாய்க்குத் தூரங்கண்டு, அவள்பாலும் குழந்தைக்குதவாமற்போய்விடும். ஆகவே இதற்குமேல் குழந்தைக்குத் தாய்ப்பாலை விட்டு வேறே உணவு கொடுக்க வேண்டுமென்பது கடவுளமைப்பென்றே எண்ணவேண்டியது. ஆனால் குழந்தைக்குப் போதுமான பால் தாயிடமில்லாமலும் தாதி ஏற்பாடு செய்யவும் இயலாவிடில் ஆறு ஏழு மாதங்களில் பாலை நிறுத்திவிடவேண்டும். சிசு மிக மெலிவாயிருந்தால் தாய்க்கு அல்லது தாதிக்கு நல்ல சுகமும் போதுமான பாலுமிருந்தால், பதினான்கு பதினைந்து மாதங்களுக்கு மேல் பால் நிறுத்தலாம். குழந்தைக்கு ஒன்பது மாதங்களுக்குமுன் பற்கள் பல முளைத்துக் குழந்தை திடமாயும் பருத்துமிருந்தால் உடனே பாலை நிறுத்திவிடலாம். ஆனால் சில குழந்தைகளுக்கு ஒரு ஆண்டாகியும் பல் ஒன்றாகிலும் முளையாதிருக்கிறதுண்டு. அக்குழந்தைகளுக்கு ஏதோகாரணங்களால் வேறு உணவுகளைச் செமிப்பிக்க இரைப்பைக்குச் சக்தியின்னமுண்டாகவில்லையென்றறியவேண்டியது. சோறு, கறி, முட்டை முதலிய கடின உணவுப் பொருள்களைக்கொடுத்தால் குடலில் செமியாமல் வயிற்றோட்டமுண்டாகும். ஒருக்கால் வயிற்றோட்டம் காணாவிடினும் அவ்வுணவுப் பொருள்கள் செமித்துப்போனதென்று நினைக்கக்கூடாது. ஒன்றிரண்டாகக் கரைந்து மலத்துடன் கழிந்துபோய்விடுமேயன்றி உடம்பில் சேராது. இப்படிப் பல் முளையாதிருக்கும்போது தாயாவது தாதியாவது பால்கொடுக்க இயலாமற்போனால், முன் அத்தியாயத்தில் சொல்லிய பால் உணவுகளில் ஒன்றைக் கொடுத்துவரலாம். பல் முளைக்கும் போதுண்டாகும் பல தொல்லைகளில் ஏதனாலாவது குழந்தை வருந்தும்போது பால் நிறுத்தக்கூடாது. அத்துன்பங்களெல்லாம் முற்றும் நீங்கிக் குழந்தைக்கு உடல் நன்றாய்த் தேறின பின்னரே பால் நிறுத்த வேண்டும்.

## பால் நிறுத்தவேண்டிய வகை

ஆறு ஏழு மாதங்களில், அதாவது பல் முளைக்கத் தொடங்கினவுடனே, ஒரு மாதம்வரை நாள்தோறும் நடுப்பகலில் கை உணவு கொடுக்கும் ஒழுங்கைப்பற்றி அடுத்த அத்தியாயத்தில் சொல்லியிருக்கின்றோம். அதுபோல் ஒருவேளை பசும்பால் முதலிய வேறு உணவு கொடுத்துவரவேண்டும். துவக்கத்தில் சிறிது சிறிதாகக் கொடுத்து வரவர அரைக்கால்படிவரை அதிகப்படுத்தவேண்டும். ஒருமாதம் சென்றபிறகு குழந்தைக்கு இதனால் ஒரு கெடுதியுமில்லையென்று கண்டால் தினம் பகலில் இரண்டு தடவையும், மூன்றும் மாதத்தில் பகலில் இரண்டு தடவையும், இரவில் ஒரு தடவையுமாகக் கொடுத்து, பிறகு முற்றும் முலைப்பாலை நிறுத்தி, பகலில் நாலைந்துதரமும் இரவில் ஒருதரமுமாகப் பசும்பால் முதலிய உணவையே கொடுத்து வரலாம். இவ்விதமாகப்படிப்படியாய் முலைகொடுப்பதை நிறுத்துவதால் தாய்க்கும் வரவரப் பால் குறைந்து கடைசியாக முற்றிலும் நிறுத்திவிடும்போது ஒரு வருத்தமுமிராது, பால் தானாக வற்றிப்போகும். குழந்தைக்கும் முலைப்பாலின் பேரில் ஏக்கமிராது. சில குழந்தைகள் கைப்பாலுண்டாலும் முலைப்பாலுக்காக வருத்தப்படும். சிலகுழந்தைகள் கை உணவு சாப்பிடாமல் பிடிவாதம் செய்யும். இப்படித்தொல்லை கொடுக்கும் குழந்தைகளை ஒவ்வொருவேளை பட்டினியாய்ப் போட்டால், பின்னர் பசியினால் எதுகொடுத்தாலும் வேண்டிய அளவு உண்ணும். முலைகொடுக்குந்தாய் முற்றிலும் பால் நிறுத்தவேண்டிய காலத்தில் குழந்தையைத் தன்னருகில் தூங்கும்படி இடங்கொடுக்கக் கூடாது. எட்டாம் மாதமுதல் வேறிடத்தில் தூங்கும்படி செய்ய வேண்டும்.



## பால் வற்றச் செய்யும் விதம்

மார்பில் பால்கட்டி வருத்தமுண்டானால் மல்லிகைப் பூவை முலைகளின்மேல் வைத்து துணியினால் சற்று இறுக்கிக் கட்டிவிட்டால் பால் வற்றிப்போம். அல்லது வேப்பிலையை அவித்துவைத்துக் கட்டலாம். அல்லது துவரம்பருப்பை பச்சையாக அரைத்துப் பூசலாம். நல்லெண்ணெயில் உப்பைப் பொடிசெய்து குழைத்து மாரில் தடவலாம். இதிலெல்லாம் குணமில்லையென்றால் மருத்துவரிடம் தெரிவிக்கவேண்டும். நோய் மிகுதியாயிருக்கும்போது ஒருநாள்விட்டொரு நாள் கொஞ்சம் மலக்கழிவுக்குச் சாப்பிடுவது நலம். நீர்ப்பொருள்களான உணவு வகைகளை சிறிது நிறுத்துவது நலம்.

---

## 9. அத்தியாயம்.

### கைத்தீனி கொடுத்து வளர்ப்பது

தாய் முலைகொடுக்கவாவது, தாதிவைத்துப் பால்கொடுக்கவாவது முடியாத காலங்களில் கைத்தீனி கொடுத்து வளர்க்கும் வகை எப்படி யென்று கவனிப்போம்.

1. பல் முளைக்குமட்டும், அதாவது ஏழுமாதம்வரை சிசுவின் இரைப்பை இந்தக்காலங்களில் தாய்பால் தவிர வேறு உணவுகள் செமிக்கத்தக்க வலிவற்றதென்று முன் அத்தியாயத்தில் சொல்லியிருக்கிறோம். ஆகையினால் இப்போது எந்த உணவு கொடுத்தாலும் சற்றேறக்குறைய தாயின் பாலில் என்னென்ன சத்துக்கள் என்னென்ன அளவாக அமைக்கப்பட்டிருக்கிறதோ அந்த அளவாகவே அதையுங் கலந்து கொடுக்கவேண்டும். இப்படிச் செய்துகொடுக்கும் பால்தான் சரிப்படுமேயன்றி மற்றொன்றும் சரிப்படாது. ஆதலால் பால்தான் இக்காலத்திற்கு முதன்மையான உணவு. பாலில் வெள்ளாடு, பசு, எருமை, கழுதை முதலிய விலங்குகளின் பால்தான் உபயோகப்படுத்தக்கூடியது. இவைகளின் பாலில் ஒன்றிற்கொன்று வேற்றுமை தெரியுமானல் அவைகளைத் தாயின் பாலுக்கு ஒப்பச்செய்து கொள்ளத்தக்க பக்குவம் எளிதில் விளங்கும்.

| பாலின் வகை | ஊன்வளர்ச்சிசத்து | வெண்ணெய் | சருக்கரை | உப்பு | நீர் | ஆயிரம் பாகத்தில் சத்துக்களின் சராசரி |
|---|---|---|---|---|---|---|
| தாயின்பால் | 39 | 27 | 43 | 1 | 890 | |
| பசுவின்பால் | 85 | 36 | 38 | 7 | 864 | |
| வெள்ளாட்டுபால் | 55 | 57 | 37 | 6 | 845 | |
| எருமைப்பால் | 42 | 45 | 41 | 7 | 865 | |
| கழுதையின் பால் | 63 | 18 | 51 | 5 | 890 | |

இந்தக் கணக்கைக்கொண்டு ஏதிலாவது ஒருவிதப்பாலில் ஒரு பங்குக்கு எவ்வளவு நீர், சருக்கரை, உப்பு முதலியது சேர்ந்தால்



தாயின் பாலுக்குச் சற்றேறக்குறைய நேராகலாமென்று கணக்கிட்டுத் தெரிந்துகொள்ளலாம்.

இதில் கழுதைப்பால்தான் தாயின்பாலுக்குச் சிறிது பொருத்தமாயிருக்கிறது. ஆனல் அதில் சருக்கரை மிகுதி வேண்டிய சமயமெல்லாம் போதுமான அளவு கிடைப்பதும் அரிது. அப்படிக் கிடைக்கக்கூடிய சமயத்தில் குழந்தை பிறந்து பத்துநாள்வரை சரிபாகமும், பின் ஒருமாதம்வரை மூன்றிலொருபாகமும் வெந்நீர் கலந்து கொடுக்கவேண்டும்.

வெள்ளாட்டுப்பாலில் சத்துக்கள் மிகுதியாதலால் இதையும் கழுதைப்பால்போல் வெந்நீர் கலந்துதான் கொடுக்கவேண்டும். ஆட்டுப்பாலில் ஒருவகை கெட்ட மணமுண்டு. அதனல் சில குழந்தைகளுக்கு வாந்தி யுண்டாகும். ஆட்டின் பால்பையில்-(முலையின்மேல்) மயிர் மிகுதியாயிருப்பதால் பால் கறக்கும்போது பாலில் அம்மயிர்கள் உதிரும். ஆகையால் எப்போதும் ஆட்டுப்பாலை நல்ல வெள்ளைத்துணியில் வடித்துத்தான் உபயோகிக்கவேண்டும்.

பசும்பாலிலும் சத்துக்கள் அதிகமானதால் அம்முறையே வெந்நீர் கலந்துதான் கொடுக்கவேண்டும். மேலும் இதில் கவனிக்கவேண்டியதொன்று, பசும்பால் சிறிது புளிப்புள்ளது. அதிலும் வீட்டில் கட்டித் தீனிபோட்டு வளர்க்கும் பசுக்களின் பால் மிகப் புளிப்புள்ளது. ஆதலால் பசும்பால் குழந்தைகளுக்குக் கொடுக்குஞ் சமயங்களில் அதனுடன் சுண்ணும்புநீர் சிறிது கலந்து கொடுக்கவேண்டும்.

எருமைப்பால் அதிக வெண்ணெயுள்ளது. எளிதில் செமியாக் குணமுள்ளது. அன்றியும் எருமை மலத்தைத்தின்னும் அசுத்தமான பிராணியாதலால் அதன் பால் சிசுக்களுக்காகாது.

எங்கும் எளிதாய் பசும்பால் கிடைக்குமாதலால் அதையே உபயோகிப்பது நலம். வேண்டிய அளவு வெள்ளாட்டுப்பால் கிடைக்குமானல் அதையும் உபயோகிக்கலாம். ஆனல் நாலைந்து ஆட்டின்பாலை ஒன்றாய்க் கலந்துகொடுப்பது நல்லதல்ல. ஒன்றுக்கொன்று உடல் வேற்றுமை விலங்குகளிலுமுண்டு.

பசும்பால் கொடுப்பதில் பாலைக் காய்ச்சாமல் பச்சையாகவே கொடுக்கவேண்டும். காய்ச்சும்போது அதன் சத்துக்களில் முக்கிய

மான சில பாகங்கள் கெட்டுப்போகும். ஆனால் தேகச்சூட்டிலும் பால் குளிர்ந்திருந்தால் சிசுவின் இரைப்பை கெட்டுப்போகும். ஆதலால் பாலுடன் வெந்நீர் சேர்த்து அல்லது பாலைக் குப்பியிலடைத்து வெந்நீருக்குள் வைத்திருந்து கொடுக்கவேண்டும். இரைப்பையிலிருக்கும் பாலை செரிக்கச்செய்யும் நீர் கொடிய புளிப்புள்ளதாதலால் பாலைக் குடித்தவுடனே அது அந்தப் புளிப்புடன் கலந்து திரைந்து கட்டி கட்டியாகப்போகும். பால் அதிகக்கெட்டியாய் உறைந்துவிடாமல் சுண்ணம்பு நீர் அதை மெதுவாக்கும்.

ஆனால் இப்படி உறைந்த பால் மறுபடியும் விரைவில் கரைந்து சத்துவேறு சக்கைவேறாகப் பிரிந்துபோகும். பால் குடித்துச் சிறிது நேரத்தில் குழந்தை வாந்தி யெடுக்கும்போது இவ்விதமாகப் பால் திரைந்து விழுவதைப் பல தாய்மார் கண்டு, குழந்தைக்கு வயிற்றில் புளிப்பேறிவிட்டது, சூடு அதிகமாகிவிட்டது என்று பயந்து மருந்துகளைக் கொடுக்க தொடங்குவதுண்டு. அப்படிச் செய்யக்கூடாது. மலத்தில் பால் செரிக்காமல் திரைந்துபோனால் உடனே அதைக் கவனித்து மருத்துவரிடம் சொல்லவேண்டும்.

சிசுவுக்குப் பால் கொடுக்கவேண்டிய

அளவைக்காட்டும் அட்டவணை.

| ஆகாரத்தில் சேர வேண்டியவகை | 1-ம்மாதத்தில் | 2-ம்மாதத்தில் | 3-முதல் 7-மாதம் வரை |
|---|---|---|---|
| ஒரேபசும்பால் | 4 தேக்கரண்டி | $2\frac{1}{2}$ அவுன்ஸ் | 3ஒயின் கிளாஸ் ($7\frac{1}{2}$ அவுன்ஸ்) |
| வெந்நீர் | 3 தேக்கரண்டி | $1\frac{1}{4}$ அவுன்ஸ் | சுமார் 2 அவுன்ஸ் |
| சுண்ணம்புநீர் | 1 தேக்கரண்டி | 2 தேக்கரண்டி | 2 தேக்கரண்டி |
| உப்பு | | சுத்திசெய்தது ஒரு சிட்டிக்கை | (இரண்டுவிரலால் எடுக்கக்கூடியது) |
| சருக்கரை | சொற்பதித்திப்பு | ,, | போதுமான அளவு |

248948
600 008

உ

# மருத்துவன்

(PHYSICIAN)

A High Class Medical Tamil Monthly

Editor: Pandit S. S. Anandam,

தமிழ் வைத்தியப் பத்திரிகை

ஆசிரியர் பண்டிட் எஸ். எஸ். ஆனந்தம்

மலர் க. | 1929ஞு மார்ச்சுமீ | இதழ் சு.

## தமிழ்வைத்தியமும், சம்ஸ்கிருதவைத்தியமும்

(123-ம் பக்கத்தொடர்ச்சி)

சிலர் தற்காலம் சம்ஸ்கிருத ஆயுர்வேதத்திற்குத் தன்வந்தரியை முதல்வராகக் கூறுகின்றனர். தன்வந்திரி விஷ்ணுவின் அப்சமென்றும், அவர் கைகளில் சங்கு சக்கரமும், அமுதகலசமுந்தாங்கி நெற்றியில் நாமமும் இட்டிருப்பவராக படமும் எழுதுகின்றார்கள், தன்வந்தரி பூசையும் செய்து வருகின்றார்கள். தன்வந்தரியைப்பற்றிச் சிறிது ஆராய்வோம். தேவர்கள் நோயினாலும், மூப்பினாலும், பகைவர்களாகிய அசுரர்களாலும் சாவாதிருப்பதற்காகப் பாற்கடலைக் கடைந்து அதில் தோன்றும் அமிர்தத்தை அருந்துவதற்கு, மத்தாக மேரு மலையைப்பிடுங்கிப் பாற்கடலில் நட்டுக் கயிற்றுக்குப்பதில் பூமியை ஒருதலையில் தாங்கிக்கொண்டிருக்கும் ஆயிரந்தலையையுடைய முதல் பாம்பை (ஆதிசேஷனை) ப்பிடித்து அம்மேருமலையில் சுற்றித் தேவர்கள் ஒருபக்கம் அசுரர்கள் ஒருபக்கம் நின்று, பாம்பின்வாலையும் தலையையும் பிடித்திழுக்கும்போது அப்பாம்பு உடல்வலி பொறுக்கவியலாமல் ஆயிரம் வாயினாலும் தனது நஞ்சைக்கக்கினது. அந்த நஞ்சுக்கு

அருகிலிருக்க ஆற்றாமல் பாம்பைப்பற்றியிருந்த விஷ்ணுமுதல் எல்லோரும் ஓடிவிட்டார்களென்று புராணம் கூறுகின்றது. இது ஒரு பெரியகதை. அதனைவிடுத்து நாம் எடுத்துக்கொண்ட பொருளைப்பற்றிச்செல்வோம். எப்படியோ நஞ்சின் கொடுமைநீங்கிப்பிறகு எல்லோரும் திரும்பிவந்து பாற்கடலைக்கடைந்தார்கள். அப்பாற் கடலில் மூதேவி, சீதேவி, சந்திரன், வெள்ளையானை, குதிரை, கல்பதரு, காமதேனு (பசு) முதலிய பதின்மூன்று பொருள்கள் தோன்றின. அதனுடன் விஷ்ணுவாகிய தன்வந்தரி அமிர்தம் நிறைந்த கலசத்தைப்பற்றின கைகளோடு பிறந்தாரெனவும், அத்தன்வந்தரிதான் ஆயுர்வேதத்துக்குத் தலைவர் என்றும் தற்கால ஆயுர்வேதக்காரர் கூறுகின்றார்கள்.

கயிலையில் பரமேசுவரன் பார்வதிக்கும், பார்வதி நந்தி முதலிய சிவகணங்கட்கும், அசுவினி (தேவமருத்துவர்) கட்கும், அந்நந்திகளால் தன்வந்தரி அகத்தியர் முதலிய ருஷிகளுக்கும் ஆயுர்வேதம் உபதேசமுறையில் வந்ததாக ஆயுர்வேத நூல்களில் கூறப்பட்டிருக்கிறது. அதில் இந்த தன்வந்தரி, யார்? என்பது விளங்கவில்லை.

தமிழ்நாட்டில் தஞ்சை ஜில்லாவில் சீர்காழிக்கு அருகிலுள்ள வைத்தியநாதன், அல்லது வைத்தீசுவரன் கோயிலென்று வழங்கும் ஈசுவரன் கோயிலிலுள்ள கடவுள் வடிவத்தைத் தன்வந்தரி பூசித்து அவ்வூரிலேயே முத்தி அடைந்தார் எனக் கூறுகிற புராணமிருக்கிறது. இதனால் இத்தன்வந்தரி சைவராகின்றார்.

காசிராசன் சபையிலிருந்த மருத்துவப்புலவர்களில் தன்வந்தரி ஒருவர் இருந்ததாகவும் கூறப்படுகிறது. இக்கதைகளில் எந்த தன்வந்தரி ஆயுர்வேதத்துக்குத் தலைவர் என்பது விளங்கவில்லை. பொதுவாக ஆயுர்வேத சம்ஸ்கிருத நூல்களைச்செய்தவர்களில் பலர் சைவ சமயத்தினராகவும், சிலர் புத்தசமயத்தினராகவும் அந்நூல்களால் புலப்படுகிறது. அவர்களுடைய நூல்களில் சிவனையும், பார்வதியையும், பிர்மாவையும், தட்சனையும், இந்திரனையும், அக்னிவேசரையுமே முக்கியமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இக்காலத்தில் வைணவமதப் பற்றுள்ள சிலர் பாற்கடல் கடைந்தகாலத்தில் வெளிப்பட்டதாகக் கூறும் தன்வந்தரிக்குச் சீரங்கத்துக்கோயிலில் ஓர் உருவம் இருப்பதாகக் கூறி, விஷ்ணுவாகிய தன்வந்தரியே ஆயுர்வேதத்திற்கு முதல்வர் என்று கூறிக்கொண்டு வருகின்றார்கள்.



சம்ஸ்கிருத மருத்துவநூல்களைத் தற்காலம் மொழிபெயர்ப்பவர்களும், அதைப் படிப்பவர்களும், அதை வளர்ப்பவர்களும் ஒருசமயப் பற்றும், சாதிப்பற்றுமில்லாது கவனிக்கவேண்டும். இவர்கள் அந்நூல்களையும் அந்நூலாசிரியர்களையும் தமது மதத்தினராக்க மிகப் பாடுபடுகின்றார்கள். தன்வந்தரிக்கும் மூவிலைச்சூலம்போல் நெற்றியில் நாமம்போட்டு விளம்பரப்படுத்துகின்றார்கள். 700 ஆண்டுகளுக்கு முன் இராமாநுஜாசாரியார்காலத்தில் ஏற்பட்ட மதச்சின்னமாகிய நாமம், பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்தோன்றினவர்களின் உருவங்களிலும், கடவுளரில் ஒருவராகிய விஷ்ணுவினுடைய நெற்றியிலும் கூட ஏறிவிட்டது வருந்தத்தக்கதாகும். பொதுவாக மருத்துவநூல்களை மதத்தில் பொருத்தாமலும், அந்நூல்கள் கடவுளால் ஏற்பட்டதென்று கூறாமலும் இருந்தால் நமது நாட்டு மருத்துவநூல்கள் நல்ல நிலைமையை அடைந்திருக்கும்.

ஆயுர்வேதம் பிர்மா, தட்சப்பிரஜாபதி, இந்திரன்முதலிய தேவர்களால் செய்யப்பட்டதாகவும், பிறகு நாம் வசிக்கும் நில உலகத்திற்கு வந்ததாகவும், மற்றோரிடத்தில் ஆயுர்வேதத்திற்கு முதல் நூலாகிய சரகம் அக்னிவேசமுனிவரால் எழுதிப் பிறகு சரகரால் ஒழுங்குபடுத்தப்பட்டு, திரடபலன் என்பவரால் விரித்துக் கூறப்பட்டு, வங்கநாட்டில் மருத்துவகுலத்தினராகிய சக்கரபாணிதத்தரால் விரிவுரை செய்யப்பட்டதெனவும் கூறப்பட்டிருக்கிறது.

## அசுவினிகள் அல்லது தேவ மருத்துவர்

சூரியனிடம் தோன்றிய அசுவினிதேவர்கள் என்னும் தேவ மருத்துவர் இருவர் தெய்வலோகத்திலுள்ள தேவர்களும் மற்றவர்களும் சில பிராணிகளும் நோய்வாய்ப்பட்டு வருந்தும்போது மருத்துவம்செய்து அந்நோய்களை நீக்கினதைப்பற்றிப் புகழ்ந்து இருக்குவேதத்தில் பல இடங்களில் பாடல்கள் காணப்படுகின்றன. சிவனை மதியாது தக்கன்செய்த வேள்விக்குச்சென்ற தேவர்களில் ஒருவனாகிய சூரியனுக்கு வீரபத்திரரால் பல் தகர்க்கப்பட்டகாலத்தில் இத்தேவமருத்துவர் வேறு பல் உண்டுபண்ணியதாகவும், சந்திரனுக்கு ஏற்பட்ட குறை (க்ஷய) நோய்க்கு மருந்துகொடுத்து அவன் உடலை வளர்த்ததாகவும், இந்திரனுக்கு அங்கமெலாந்தோன்றிய ஆயிரம்பெண்குறியை ஆயிரம் கண்ணாக மாற்றினதாகவும், குபேரனுக்கு ஒரு கண் குருடானதற்குக் கண்வைத்தியம் செய்ததாகவும், எல்லா உயிர்களையும் ஆட்டிவைக்கும்

சனீசுவரனுக்கு ஒரு கால் முடமானதற்கு இருப்புப் பொய்க்கால் வைத்துச் சேர்த்ததாகவும் இன்னும் பலகதைகள் கூறப்பட்டிருக்கின்றன. இதனால் சொர்க்கலோகத்திலுள்ள தேவர்கட்கும் பல ஆபத்துகளும், பகையும்,பலநோய்களும் இருக்கின்றனவென்றும் அவைகட்குப் பாற்கடல் கடைந்தெடுத்த அமிர்தமோ, அப்பாற்கடலில் தோன்றிய விஷ்ணுவாகிய தன்வந்தரியின் கை அமிர்தமோ பயன்படாமல் தேவர்களும் பலர்நோய் வாய்ப்பட்டு வருந்தினார்களென்றும்,ஆங்கு அசுவினிகளே மருத்துவர்களாயிருந்து மருத்துவம் செய்தார்களெனவும் கூறுகின்றது. இவ்வகையான பொய்க்கதைகள் தமிழ்ச்சித்தர் நூல்களில் காணக்கிடையா. வடமொழி ஆயுர்வேதத்தில் ஓரிடத்தில் மருத்துவசாலைகளைப்பற்றிக்கூறிப் பெண்கள் கருவுயிர்க்கும் அறையைப்பற்றிக் கூறும்போது பிராமணப்பெண் கருவுயிர்க்கும் அறையின் உட்புறம் சுவர் வெள்ளைநிறம் பூசப்பட்டதாகவும், க்ஷத்திரியப்பெண் கருவுயிர்க்கும் அறை மஞ்சள் நிறமாகவும், வைசியப்பெண் கருவுயிர்க்கும் அறை சிவப்பு நிறமாகவும், சூத்திரப்பெண் கருவுயிர்க்கும் அறை சிவப்பும் கறுப்பும் கலந்த நிறமாகவும் இருத்தல்வேண்டுமெனவும் கூறப்பட்டிருக்கிறது. சூத்திரர்களுக்குங் கீழ்ப்பஞ்சமர் என்ற வகுப்புப் பெண்கள் கருவுயிர்க்கும் அறைக்கு முழுக்கறுப்பு பூசப்படல் வேண்டுமென்று கூறப்படாமலிருப்பதால் பஞ்சமர் முதலிய தாழ்த்தப்பட்டவர்களுக்கு வைத்தியசாலையில் இடமில்லையெனத்தெரிகிறது. இப்படி மருத்துவத்திலும் வருணவேற்றுமை (சாதிவேற்றுமை) தமிழ்ச்சித்தர் நூல்களில் காணக்கிடைக்காது.

ஆனால் பல மருத்துவர்களுடைய பரம்பரை அனுபவமருந்துமுறைகளைப் பிற்காலத்தில் இருந்த மருத்துவர் பலர் தங்கள் படிப்புக்குத்தக்கபடி பாடல்களாகத் தாங்கள் பாடி, அந்நூல் பெருமையடைவதற்காகச் சித்தர்களின் பெயரை அந்நூலுக்கு வைத்துள்ளார்கள். கடவுளர்களும், தேவர்களும் சம்ஸ்கிருத ஆயுர்வேதத்தை எழுதினார்களென்று பெருமை கூறப்பட்டிருப்பதைக்கண்ட பிற்காலத் தமிழ் மருத்துவர்கள் சிலர் தமது தமிழ் மருத்துவநூலுக்கும் பெருமைவேண்டுமெனக்கருதி, தமிழிலும் பரமசிவன் பார்வதிக்கும், பார்வதி முருகனுக்கும் நந்தி கணங்களுக்கும் மருத்துவநூலைச் சொல்ல நந்திகள் மற்றச் சித்தர்களுக்கு உபதேசித்ததாகவும், இலட்சக்கணக்கான பாடல்களைச் சிவனார்முதலியோர்கள் தமிழில் பாடினார்களென்று தமிழ் மருத்துவநூலிலும் பொய்யும் புனைந்துரைகளும் சேர்க்கத்தலை



ப்பட்டார்கள். இவ்வகைத் தமிழ்வைத்தியப்பாடல்கள் யாருடையதாயிருப்பினும், சமீபகாலத்தில் இருந்த அலங்காரக்கவியாகிய தேரையர் என்பவரின் பாடலைப்போல் சொல்லலங்காரம் இல்லையாயினும், அப்பாட்டில்சொல்லப்படுகிற மருந்து முறைகள் சித்தர்களுடையதென்பதே பலர்கொள்கை. ஏனெனில் பாடல் இலக்கணமாயிராவிடினும் மருந்துமுறைகள் நல்லதாகவே காணப்படுகின்றன. தமிழர்களுடைய நூல்களிலுள்ள பலவிஷயங்களையும், மருந்துமுறைகளையும் சம்ஸ்கிருதத்தில் எழுதிக்கொள்ளப்பட்டதென முன்னரே கூறினோம். தமிழ்நாட்டில் சம்ஸ்கிருதமொழிக்கு ஏற்றமுண்டானகாலத்தில், தமிழில் பனை ஓலையிலுள்ள பல பழைய மருத்துவநூல்களைப் பிழைதிருத்தி அச்சிடுவதற்கு முன்வந்த சிலர் தமது தமிழ் மருத்துவநூல் விலையாகவேண்டுமென்னும் நோக்கத்தால் தமது நூல் தேவமொழியாகிய சம்ஸ்கிருதத்திலிருந்து மொழிபெயர்த்து எழுதப்பட்டதென்று கூறினார்கள்.

பண்டைக்காலத்தில் மனிதர்களுக்குண்டாகும் பசிநோய்க்கு எந்தெந்த நிலங்களில் என்னென்ன உணவுகள் கிடைக்கின்றதோ அதை உண்டு வாழ்ந்தார்கள். அதேபோல் அந்தந்த நிலத்தின் வெப்ப தட்ப வேற்றுமைகளாலும் உணவு செயல்களின் வேற்றுமைகளாலும், பருவகால வேற்றுமைகளாலும் நோய்கள் வருங்காலத்திலெல்லாம் அந்நோய்க்கு அவர்களுக்கு அருகில் அநுபவத்தில்கண்ட மூலிகைகளையும், மற்றப்பொருள்களையும் அருந்தி மருந்துகளாகக்கண்டார்கள். உணவின் பக்குவங்களாலும் நோய்களைப் போக்கிக்கொண்டார்கள். இவ்வனுபவங்களைத்தான் மருத்துவம் என்று கூறுவது. இவ்வனுபவங்களை மக்கள் எழுதிவைத்ததையே மருத்துவநூலெனப்படுகிறது.

இந்தியாவில் சம்ஸ்கிருதமொழியில் பலபுத்தகங்கள் எழுத நேர்ந்தபோது வடநாட்டில் மக்கள் அனுபவித்த மருந்து மூலிகைகளைப் பற்றியும்,தென்னாட்டுமருந்து முறைகளைப்பற்றியும்,தேசபாஷைகளில் உள்ள வைத்திய விஷயங்களையும் அவ்வப்போது ஒவ்வொருவரும் எழுதித்தொகுத்துக்கொண்டே வந்தார்கள். இதுதான் ஆயுர்வேதமாகும். இதனை விடுத்து சம்ஸ்கிருதத்திலுள்ள ஆயுர்வேதம் விண்ணுலகிலுள்ள கடவுளர்களும், தேவர்களும் எழுதி அனுப்பினார்கள் என்பது இக்காலத்திற்குச் சிறிதும் பொருந்தாததாகும். இதுவன்றிச் சம்ஸ்கிருத ஆயுர்வேதத்திலிருந்துதான் தமிழ்வைத்தியம் வந்ததென்றும் சொல்லிக்கொள்ளுவதாலும் பயனில்லை. தமிழ்நாட்டில் மக்கள் நோய் வந்தகாலத்தில் செய்துவந்த மருந்துமுறைகளும், நோய்வராமல் தடுத்

துக்கொள்ளும் சுகவழிகளும் தங்கள் அனுபவத்தில் நல்லதென்று கண்டவைகளையெல்லாம் தமிழ்மொழியில் எழுதிவைத்தார்கள். அந்நூல்கள் பல இறந்துபட்டன. எஞ்சி நிற்பனவற்றையாயினும் அழியவிடாமல் பொதுஜனங்கள் அதன்பயனை அடைந்து நோய்களின் துன்பம் குறையும்படி செய்வதுதான் நமது வேலையாகும். பொய்யைச் சொல்லியும் உள்ளதை மறைத்தும் இனி நாம் வாழமுடியாது.

மேல்நாட்டுமக்களால் நாள்தோறும் கண்டுபிடித்து எழுதப்படும் மருத்துவ நூல்களையும், மற்ற நூல்களையும் உலகத்தார் படித்து மகிழவில்லையா? அவர்கள் செய்கிற நூல்களை எந்தகடவுளாவது செய்தார் என்று அவர்கள் சொல்லவில்லை.

எல்லா அண்டகோடிகளையும், எண்ணிறந்த உயிர்வகைகளையும் இவைகட்கு ஆதாரமாகிய ஐம்பெரும் பொருள்களையும் கடவுள் படைத்தார் என்பதை ஆஸ்திகபுத்தியுள்ள எல்லோரும் ஒப்புக்கொள்ளுவார்கள். ஆனால் குறிப்பிட்ட ஒருமொழியையோ ஒரு சுவடியையோ மட்டும் கடவுள்செய்தார் என்பதை எல்லோரும் ஒத்துக்கொள்ளமாட்டார்கள். ஆதலால் இந்த விஷயத்தை இனி வளர்த்தாமல் நாம் முடித்துக்கொள்ளுகின்றோம். தமிழ் அல்லது சித்தவைத்தியமென்பதில் உள்ள தனிப்பெருமை என்னவென்றால், நாடி முதலிய எண்வகை சோதனைகளால் நோய்களை அறிதலும், இயற்கை வைத்தியமாகிய மணி, மந்திர, யோகமுறைகளும், அயம், வெள்ளி, பொன், முதலிய உலோகவகைகளையும், இரச, கெந்தக, பாஷாணாதிகளையும் சிந்தூரம் பஸ்பங்களாகச்செய்து மக்கள் நோய்களைப் போக்கிவருவதேயாகும். இதுதான் தமிழரின் சொந்த முறை என்று கூறுகின்றோம். தமிழிலுள்ள சில விஷயங்களும் சம்ஸ்கிருதத்தில் இருக்கிறதெனின், அது பிற்காலத்தில் சம்ஸ்கிருதத்தில் எழுதிக்கொண்டதென்பதற்குப் பல ஆதாரங்கள் காணக்கிடக்கின்றன. ஆதலால் தமிழ்மொழியோ, தமிழிலுள்ள மருத்துவம் முதலிய நூல்களோ சம்ஸ்கிருதத்திலிருந்துதான் வந்தன என்பது சிறிதும் பொருந்தாததாகும்.

---

# மலத்தில் புழுக்கள்

## அவைகள் செய்யும் குணங்கள்.

மலத்திற் காணப்படும் புழுக்களை, சிறிய பொருள்களை நூறு அல்லது ஆயிரமடங்கு பெரிதாக்கிக் காட்டும் பெருக்கக் கண்ணாடி (பூதக்கண்ணாடி) முதலிய கருவிகளினால் பார்க்கக்கூடியவைகளென்றும், யாதொரு துணைக்கருவியுமின்றி வெறுங்கண்ணால் பார்க்கக்கூடியவைகளென்றும் இரண்டுவகையாகப் பிரிக்கலாம்.

ஒரு உதவியுமின்றி மலத்தில் சாதாரணமாகக் காணப்படும் புழு அல்லது கிருமியை இரைப்பூச்சியென்றும், நாகப்பூச்சியென்றும், கிருமியென்றுஞ் சொல்வார்கள். இப்புழுவானது நாகப்பூச்சி, பூநாகம், நாங்கூழ் என்று சொல்லும் மண் புழுவைப்போல் பருத்து நீண்டு ஆறு ஏழு அங்குல நீளமுள்ளதா யிருக்கும். தவிட்டுநிறமுடையதாய் மலக்குடலையே தனக்கு இருப்பிடமாகக்கொள்வது. குடலினுள் கீழும் மேலும் ஊர்ந்துதிரியும். இரண்டுமுதல் முப்பது நாற்பதுவரை குடலில் காணப்படும். இப்புழுவின் முட்டைகளானது சூரிய வெப்பத்தைக் கொஞ்சநாள் தாங்கவல்லது; அசுத்தமான இடங்களில் கிடக்கிற இப்புழுக்களின் முட்டையானது, அவ்விடங்களில் மண்ணளைந்து விளையாடுகிற சிறுவர்கள் கையில் ஒட்டிப் பின்னால் ஆகாரத்தின் வழியாய் குடலில் சென்று விருத்தியாய்விடும். ஆனால் இப்புழுவானது பயங்கரமான கெட்ட குணங்களைச் செய்வதில்லை. ஒருவன் குடலில் இப்புழுக்கள் இருபது முப்பது இருப்பினும் அதிக துன்பந் தருவதில்லை.

இப்புழு செய்யுங் குணங்கள் பலவுள. பன்னிரண்டு வயதுக்குட்பட்ட சிறுவர்களிடத்தே இவ்விரைப்பூச்சிகள் மிகுதியாகக் காணப்படும். ஏனெனில் சிறுவர்கள் அசுத்தமான இடங்களில் மண்ணளைந்து விளையாடுவது வழக்கம். பத்து அல்லது பன்னிரெண்டு வயதிற்கு மேற்பட்டவர்களிடம் பெரும்பாலும் காணப்படா. அதிகமாக இரைப்பூச்சிகள் மலக்குடலில் பெருகிவிட்டால் அவைகள் தங்கள் நிலையினின்றும் பிரிந்து கீழ்நோக்கி மலத்தோடும், மேல்நோக்கி வாந்தியோடும் வருகின்றன. இடையிடையே மலத்தோடு ஒன்றிரண்டாக விழும். சில வேளைகளில் வாந்தி பண்ணும்பொழுது வாந்தியோடும் வந்துவிழும். சிலசமயங்களில் இப்புழு சுருட்டிக்கொண்டு தொண்டைக்குழியில் கட்டைபோல்வந்து தட்டி நின்றுவிடும். நாசித்துவாரங்களிலும் புகுந்துவிடும். இப்புழுக்கள் ஒருவிதமான விஷ

நீரைக் கக்குவதால் வயிற்றில் இடையிடையே நோயுண்டாகும். வாந்தியும் ஏற்படும். இக்கிருமியால் ஏற்படும் வயிற்றுவலி விட்டுவிட்டு வரக்கூடியது. நறுக்குவலியாயிருக்கும். மலங்கழிந்தபோதிலும் நோய் விடாது. சிலவேளைகளில் புழுக்களெல்லாம் ஒன்றாய்ப் பந்துபோல் திரண்டு மலக்குழாயை அடைத்து ஆபத்தை விளைவித்துவிடுகின்றன. சில பிள்ளைகளுக்கு இக்கிருமி விஷத்தால் சிறிது காய்ச்சல் மாலைக் காலத்தில் ஏற்படுவதுண்டு. ஆகவே இந்த இரைப்பூச்சியின் முக்கிய செய்குணம் வாந்தி, வயிற்றுவலி, உணவில் மந்தவிருப்பம், சிலருக்குச் சுரம்முதலியவைகளேயாம். முக்கியமாய் இக்கிருமி சிறுவர்களிடத்தே விசேஷமாய்க் காணப்படும் வயிற்றுவலி என்று சிறுவர்கள் சொல்வார்களேயானால் முதலாவது இரைப்பூச்சிக்குத்தான் சிகிச்சைசெய்ய வேண்டும்.

இரண்டாவது

“கொக்கிப் புழு” இது முக்கியமான சாதாரணப் பூச்சி இப்புழுவானது அரை அங்குலம் நீளமுள்ளதாய் வெண்மை நிறமுடையதாயிருக்கும். அதன் வாயினிடத்தே கொக்கிபோன்ற கருவி ரோமம்போல் நீண்டிருக்கும். இக்கொக்கிகளின் உதவியால் இரைப்பையின்சுவரைப்பற்றிப்பிடித்து உதிரத்தைக் குடிக்கும். ஒவ்வொரு புழுவுக்கும் அத்தகைய கொக்கி நான்கு இருக்கின்றன. இப்புழுக்கள் அதிகமாகப் பெருகிவிட்டால் மலத்தோடும் காணப்படும். அசுத்தமான தண்ணீரைப் பருகுவதனால் இக்கிருமி ஏற்படக்கூடியது. இக்கிருமிகளின் முட்டையானது தண்ணீரோடு சேர்ந்து குடலுள்ளுக்குச் சென்று பெருகிவிடுகிறது.

இப்புழுவானது செய்கிற குணங்கள் அநேகம். இப்புழுவானது குடலில் விருத்தியாகவே இரத்தத்தைக் குடிக்க ஆரம்பிக்கின்றது. உடம்பில் இரத்தம் குறையத் தொடங்குகிறது. சாம்பல் மண் முதலியவைகளில் நோயாளனுக்கு விருப்பமுண்டாகிறது. மலமானது பல நிறமாகவும் தண்ணீராகவும் போகும். நாக்கு வெளுத்துவிடும். நகக்கண்கள், கண்ணிமைகளின் உட்பக்கம், உடல் முதலியவைகள் வெளுத்துவிடுகின்றன. முகவேற்றுமைப்பட்டுவிடும். வயிறுபெருத்து மகோதரம்போல் தோன்றும். பித்தசோகையென்றும் இதனைச் சொல்லுவார்கள். பெண்களுக்கு மாதவிடாய் நின்றுவிடும். கண் பாசுபடர்ந்துவிடும். உடம்பு மாறுபட்டுத் தோன்றும். காலத்தே அறிந்து தக்க மருந்து கொடுக்காவிடில் உயிருக்குத் தீங்கு விளைவிக்கும். நோய்



முதிர்ந்துவிட்டால் மிகவும் பயப்படத்தக்கது. அநேக சிறுவர்கள் இந்நோய்வாய்ப்பட்டு உயிர் விடுகின்றார்கள். இது ஆண் பெண் இருபாலர்களுக்கும் எவ்வயதிலும் வரக்கூடியது. பரிகாரஞ் செய்யாமல் தானே நீங்கும் சில நோய்களைப்போல் இந்நோய்ப்போவதில்லை. இவ்வியாதி நெடுநாள் நீடித்திருப்பது. அடிக்கடி ஏற்படும் மலேரியா என்னும் காய்ச்சலாலும், நீடித்த இரத்தபேதியாலும் ஏற்படுகிற இரத்தக் குறைவு நோயை இந்நோயுடன் கலந்துவிடக் கூடாது. இக்கொக்கிப் புழுவினால் ஏற்படும் தீயகுறிகளாவன, நாக்கு, கண், நகக்கண், உடம்பு ஆகிய இவைகளின் வெளுத்தநிறமும், சாம்பல், மண், செங்கற்றுண்டு முதலியவைகளில் விருப்பமும், மலம் கருத்தும் வெளுத்தும் பலநிறமாகப் போதலும், கை காலில் வீக்கமும் ஆகிய இக்குணங்கள் இப்பிணியைத்தெரிவிக்கும்.

மூன்றாவது

நெல்வால்பூச்சி அல்லது தானப்பூச்சி

இப்பூச்சியானது நெல்லளவு நீளமுள்ளதாய் வெண்மை நிறமாய் நூற்றுக்கணக்காய் மூலத்தைப்பற்றி மூன்று அல்லது நான்கு அங்குலம்வரை ஊடாடித் திரியும். இப்பூச்சிகளுக்கு இருப்பிடம் மூலத்தில் மூன்று அங்குலம்வரையுமே. அதிகமாய் விருத்தியாய்விட்டால் மலத்தோடு வெளிவரும். மலத்தின்மீது மொய்த்து ஊடித்திரியக் காணலாம்.

இப்பூச்சி குற்றமற்றதெனினும் பலவகை வருத்தத்தைச் செய்ய வல்லது; மலவாயிலைச்சுற்றி நமைச்சல் அல்லது சொரி ஏற்படும். மூலத்தில் குடைச்சலை உண்டுபண்ணிவிடும். நெடுநாள் மலச்சிக்கல் உடையார்க்கு இப்பூச்சிகளால் பக்க பவுத்திரம் என்னும் நோய் உண்டாகும். பவுத்திர துளைகளிலிருந்துகொண்டு சீழ், நீர் முதலியவைகளை அதிகரித்துக்கொண்டிருக்கும். இராக்காலங்களில் தங்கள் நிலையினின்றும் வெளியாகிப் பக்கங்களில் ஊர்ந்து திரியும். ஊர்ந்து திரிந்து மூலத்தின் பக்கங்களை அசுத்தமாக்கிவிடும். பெண்களுக்கு இதே மாதிரியாக மலவாயிலினின்று வெளிப்பட்டு மூலத்திலும் அல்குலின் பக்கத்திலும் நமச்சலை ஏற்படுத்துவதுடன் அல்குலினுள்ளேயும் சென்று ஒருவகை மேகவியாதியைத் தூண்டிவிடுகிறது. இப்பூச்சி உயிருக்குத் தீங்குவிளைவிக்காதெனினும் பலவகைத் துன்பங்களுக்கு உள்ளாக்கி விடுகின்றது. இப்பூச்சி கசப்பு அல்லது உவர்ப்பு இவை

களால்சாகுந்தன்மையுடையது. இப்பூச்சிகளைத் தன்னிடத்தே உடையவர்கள் அப்பூச்சியால் தினவு ஏற்படும்பொழுது கைவிரல்களை அப்பக்கங்களில் செலுத்துவதால், அவர்கள் விரல்கள் நகத்தினிடை முதலியவைகளில் இந்நுண்ணிய தானப்பூச்சி ஒட்டிக்கொண்டு மறுபடியும் உணவோடு அல்லது தண்ணீரோடு குடலுள்ளுக்குச் செல்கின்றது. இப்பூச்சியும் அசுத்தமான தண்ணீரைக் குடிப்பதால் ஏற்படக்கூடியது.

நான்காவது

### ஆணிவேர்ப்புழு

இப்புழு உடை மரத்துக்காய்போல் இரண்டு அடிமுதல் பதினைந்து அல்லது இருபது அடி நீளம்வரை இருக்கும். அசல் உடை மரத்துக்காய்போல் வட்ட வடிவமாகவும் ஒவ்வொரு வட்டமான பாகமும் கீழும் மேலும் இவைபோன்ற வட்டமான பாகத்தோடு சேர்க்கப்பட்டிருக்கும். கொஞ்சம் வெண்மைநிறமாகவும் தட்டையாகவும் இருக்கும். தலையானது கொஞ்சங் கோணலான ஈட்டியின் மேல் பாகம்போல் இருக்கும். மிக நீளமாயிருக்கும்.

இப்பூச்சியானது ஒன்றுக்குமேல் காணப்படமாட்டாது. இப்பூச்சி முதிர்ந்தவுடன் ஒவ்வொரு வட்டமானபாகமும் பிரிந்து தனித்தனிப்பூச்சிகளாய்விடும். முதலில் ஒரு பூச்சியாயிருந்து வரவர பல புழுக்களாகிவிடும்.

இப்புழுவானது ஒருவகைத் துன்பத்தையும், நோயையும் உண்டுபண்ணுவதில்லை. இடையிடையே மலத்தில் ஒவ்வொரு வட்டமான பாகங்கள் பிரிந்து தனித்தனி பூச்சியானவுடன்தான் காணப்படும். இப்பூச்சியானது பன்றியின் ஊன் உண்பவருக்கே ஏற்படக்கூடியது. பன்றியோடு வாழும் சில வகுப்பினரிடத்திலும் காணப்படும். பொதுவாக இந்துக்களிடத்தில் இப்புழு காணப்படுவதில்லை. மாடு, பன்றி முதலியவைகளின் இறைச்சியைத் தின்போரிடத்தே காணப்படுகின்றது. பூசணிக்காயின் விதைக்கு இப்புழு குடலைவிட்டு வெளிப்பட்டுவிடுகிறது.

திருநெல்லைச்சுந்தரனார்
சிந்தாப்பள்ளி.

# இரசம் அல்லது சூதம்

## இரசத்தின் இயற்கைக் குணம்

இரசம் மினுமினுப்பும், பளுவும், வெண்ணிறமுமான, வெள்ளி போன்ற நீரான உலோகம். இதற்கு மணமும், சுவையும் இல்லை. இது பெரும்பாலும் சுரங்கங்களில் பவள மனோசிலை என்னும் கட்டிப்பொருளாயிருக்கும். இது அதிகமாக எடுக்கப்படும் சுரங்கங்கள் ஸ்பெயின், ஆஸ்ட்ரேலியா, கலிபோர்னியா, சீனம், ஜப்பான், முதலிய நாடுகளில் மிகுதியாயிருக்கிறதாகத் தெரிகிறது. சுரங்கங்களிலிருந்து எடுத்த கட்டிப்பொருளைத் தீயிலிட்டு இரசத்தை ஆவியாக்கிப் பிறகு, ஆற்றிப் பிரித்தெடுப்பார்கள். இதைப் பதங்கமாக எடுப்பதும் உண்டு, இரசம் 39 பாகை (டிகிரி)க்குக் குறைந்த கடுங்குளிருக்கு உறைந்து பலகையாகத் தட்டக்கூடியதாகும். 662 பாகை (டிகிரி) சூடேற்றக் கொதித்துக் கண்ணுக்குத் தோன்றாத ஆவியாகிவிடும். 40 பாகைக்கு மேற்பட்ட எந்தசூட்டிற்கும் இரசம் கொஞ்சமாக ஆவியைவிடும். இரசம் வெப்ப,தட்ப காற்றுக்குக் கரைபிடியாது.கொதிசூட்டுக்குக் கிட்டும்போது, மெல்ல மெல்ல உயிர்வளியை (பிராணவாயுவை) உறிஞ்சி, இரச செவ்வச்சிரம் என்னும் கருஞ்சிவப்பான பொடியாகும். இதைச் சிறிது சிவக்கக் காய்ச்சினால் அதினின்று பிராணவாயு பிரிந்து பறக்க இரசம் நிற்கும். இந்தத் தூளைக்கொண்டே பிராணவாயு உண்டென்பதும், பரமாணுவின் கலவை இன்னதென்பதும், முதன்முதல் கண்டுபிடிக்கப்பட்டன.

இரசம் கெந்தகத் (திராவகத்தில்) தீநீரிலும், பொட்டிலுப்புத் தீநீரிலும் மிக விரைவாய்க் கரையும். கரியுப்பு திராவகத்தில் (ஐட்ரோகுளோரிக் ஆஸிட்) ஆயினும், தண்ணீர்கலந்த (சல்பியூரிக் ஆசிட்) கந்தகத் தீநீரிலாயினும் கொஞ்சமும் கரையாது. இரசத்தைக் கெந்தகம், சீனச்சர்க்கரை, வெற்றிலைச்சார், நெய் முதலியவையோடு நன்றாயரைத்தாலும், டர்பண்டயின் எண்ணெயோடாவது, ஈதரோடாவது நன்றாகக் கலக்கினாலும், அது மிக நுண்ணிய அணுக்களாகப்பிரிந்து மினுக்கம் அற்று அப்பொருள்களோடு கலந்துவிடும். இரசம் இயற்கையான முழு உருவத்தில் மருந்துக்கு உதவாதிருந்தும் இப்படி பக்குவப்படுத்தின நுண்ணிதான நிலையில் அது உடம்பில் கலந்து பயன்தரும் மருந்தாகும்.

இரசம், பொன், வெள்ளி, ஈயம், நாகம், இவைகளோடு சேர்ந்து ஒருவித களிம்பாகும். இரசம் உடம்பின் சூட்டை அளக்கும் தர்மா

மிட்டர் என்னும் சூடறிகருவிக்கும், காற்றிலுள்ள வெப்பதட்பத்தைக் காட்டக்கூடிய அளவைக் கருவிகளுக்கும், சுரங்கங்களிலிருந்தெடுத்த பொன், வெள்ளிமுதலிய உலோகங்களைக் கல் மண்ணிலிருந்து பிரித்தெடுத்துச் சேர்ப்பதற்கும், கண்ணாடிகளில் ஒரு பக்கம் மூலாம்கொடுத்து உருவங்களைக் காண்பதற்கும், இன்னும் பலதொழில்களுக்கும், மருந்துகளுக்கும் மிகுதியாகச் செலவாகும்.

இரசம் பதங்கமாகவோ, செந்தூரமாகவோ, நீறு (பஸ்பம்) ஆகவோ, மெழுகாகவோ செய்து குறைந்த அளவில் நாள்பட உட்கொள்ளப்பட்டுவரின், நரம்பைப்பற்றிய வாதரோகங்களும், மேகச்சம்பந்தமான சில நோய்களும் நீங்கும். இரசக்களிம்பு, இரசப்பிளாஸ்திரி, இரசப்புகை இவைகளின்மேல் உபயோகங்களால் தோலைப்பற்றிய நோய்கள், இரணங்கள் நீங்கும்.

இரசமருந்துகள் பல்லில் படும்படி தின்றால் பல் ஈறு சுரந்து, வாய் வெந்து விடுமென்று சிலர் சொல்லுகிறார்கள். இது தவறு. இரசமருந்தை அளவு மீறி அருந்தினால், இரத்தம் கொதித்துப் பல் ஈறு வேகும், குடலில் புண்உண்டாகும். இரசமருந்தை அருந்துங்காலத்தில் உமிழ் நீரும், பித்தநீரும் மிகச்சுரந்தாலும், மலத்தில் பித்தம் மிகக் கலந்து கொதிப்பாய் இறங்கினாலும், வாயில் கெட்ட நாற்றம் உண்டாகிப் பல் ஈறு சுரந்தாலும், இரசம் உடம்பில் கலந்து பிடித்ததென அறியலாம். இரசமருந்து மிகத் தின்றால் வயிற்றுக்கடுப்பு, பேதி, பல் ஈறு, கன்னங்களில் அழிவுரணம், உமிழ் நீர்வடிதல், வாய் நாற்றம், தொண்டைப்புண், பற்கள் விழுதல், முகவீக்கம், காய்ச்சல், பலக்குறைவு, உடல் காந்தல், உடல்நடுக்கம் முதலிய தீக்குணங்கள் உண்டாகும். ஆயினும் மருத்துவர்கள் சிலநோய்களுக்கு இரசமருந்து கொடுக்க வேண்டியது இன்றியமையாததாகின்றது. நோய்க்கூறு, உடற்கூறு தெரிந்து, மிகக் குறைந்த அளவில் நீண்டநாள் கொடுத்து வருதல் நலமாகும். கைக்குழந்தைகளுக்கும், கிழவர்களுக்கும் இரசமருந்தைக் கொடுக்கக்கூடாது, கொடுத்தாலும் அவ்வளவு விரைவில் வாய் வேகாது; மூளை அழற்சி அடைந்திருந்தாலும், கல்லீரல் சீழ் பிடித்திருந்தாலும் வாய்பிடியாது.

## இரசத்துக்கு முறிவு (சத்துரு)ப் பொருள்கள்

சுண்ணாம்பு நீர், காடிக்காரம், வாந்தி உப்பு, வங்க உப்பு, விளக்கெண்ணெய், நீலி, வெண்சங்கிலைச்சாறு, வெற்றிலைச்சாறு முதலியவைகளாகும்.



## இரசத்துக்கு உணவு வகைகளில் முறிவு (சத்துரு)ப் பொருள்கள்

முட்டைக்கரு, பால், தயிர், கோதுமை மா, ஊன்வகைகள், அகத்திக்கீரை, பாகற்காய், பூசணிக்காய், எள், நல்லெண்ணெய், மஞ்சள் முதலியவைகளாகும்.

இரசமருந்து உண்ணுகிறவர்கள் காற்றில் உலாவாதிருந்தால் விரைவில் நோய் நீங்கும். இரசமருந்து கொடுக்கப்படாத பல வியாதிகள் உண்டு. இரசசெந்தூரம், இரச பதங்கம், இரச பஸ்பம் இவைகளைப் பொதுவாக ஒரு நெல் எடை மருந்தை ஐந்து பாக மாக்கி ஒரு நாளைக்கு இரண்டுவேளை கொடுக்கலாம்.

உட்செலுத்தும் மருந்தின் அளவு, காலம், உணவு, உடம்பு நோய், வயது இவைகளுக்குத் தக்கபடி விரைவாகவும், தாமதமாகவும் வாய் பிடிக்கிறதுண்டு.

இரசமருந்தைப் புகைபோடுவதாயிருந்தால், மனிதர்களின் தலை வெளியிலிருக்கும்படி கோழிக்கூடுபோல் தயாரித்த கூட்டினுள் உட்காரவைத்துப் புகைபோடுவதுண்டு. அதனால் தோலைப் பற்றின சில நோய்களும், இரணங்களும் விரைவில் நீங்கும். ஆனால் வாய் சீக்கிரம் பிடிக்கும். இரசப்புகை போடுகிறவர்களும், போட்டுக்கொள்ளுகிற பிணியாளர்களும் தங்கள் கண்களில் இரசப்புகை படாமல் காத்துக் கொள்ளல்வேண்டும். இரசத்துடன் சேரும் மற்றப் பொருள்களுக்குத் தக்கபடியும் இரசமே தேகத்தில் வேலை செய்கின்றது.

சூதத்தை மணியாகச்செய்து, துளைத்துக் கயிற்றில் கோர்த்து இடுப்பில் கட்டிக்கொள்வதாலும், கழுத்தில் கட்டிக்கொள்வதாலும், வாயில் அடக்கிக்கொள்ளுவதாலும், அரிய பெரிய பல காரியங்கள் நடைபெறுமென சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், அனுபவத்தில் ஒத்துவரவில்லை, இதைப்பற்றி தெரிந்தவர்கள் எழுதினால் பெரும் நன்மையாகும்.

## வாலைரசம் அல்லது லிங்கரசம்

கடைகளில் விற்கிற இரசத்தில் ஈயத்தைச் சேர்த்துவிடுகிறார்களாதலால், மருந்து செய்வதற்கு இலிங்கத்திலிருந்து எடுக்கும் இரசம் நல்லது. அதனை வாலைரசம், அல்லது லிங்கரசமெனக் கூறுவார்கள்.

## இலிங்கத்திலிருந்து இரசம் எடுக்கும் முறை

சாதிலிங்கத்துடன் சுண்ணாம்பு அல்லது அயம் சேர்த்து எரித்தால் இரசம் மேலேயுள்ள ஏனத்தில் அடைந்திருக்கும்.

## மற்றொரு முறை

ஒரு மண்குடுவை (கலயம்) யில் அல்லது மண் சட்டியில் நன்னா[illegible]வேர் தூளையாவது, கொடுவேலிவேர் (சித்திர) மூலம் தூளையாவது

போட்டு அதன்மேல் வேண்டிய அளவு இலிங்கத்தை வைத்து, மற்றொரு சட்டி படியும்படி மூடி நன்றாக ஐந்தாறு அடுக்கு சீலை மண் செய்து, ஏழுநாழி எரித்தால், இரசம் மேல் ஏனத்தில் அடையும். ஏனம் ஆறின பின்னர், பன்றி மயிர்க்கற்றை, அல்லது வேறு நார் கற்றையால் துடைத்து எடுத்துக்கொள்ளவேண்டியது. இதற்கு வாலை ரசம் அல்லது இலிங்கரசமெனப்பெயர்.

(இரசத்தை மெழுகு, களிம்பு, பதங்கம், செந்தூரம், நீறு முதலிய மருந்துகளாகச்செய்யும்வகைகளை மற்றொருமுறை எழுதுவோம்)

---

## மதுசாரம்

(126-ம் பக்கத்தொடர்ச்சி)

இடைவிடாமல் வெறியுள்ள மதுசாரத்தை உபயோகித்துத் தேகத்திற்குரிய சக்தியின் அளவை யதிகப்படுத்தல், உள்ளசக்திக்கு அதிகமாக வேலைசெய்தல், தேகத்தைப் பலவிதங்களில் வருத்தி மெலியச்செய்தல், மனவெழுச்சியையுண்டாக்கல் இவையாவும் நம் அறிவுக்கே யிடமாகின்றன.

ஆகவே, மதுசாரம் மனிதனுடைய தேகக்கண்ணறைகளையும், தேசமக்களின் சீரையும் கெடுக்கிறது.

உயிருள்ள ஜீவதாது (living protoplasm) மதுசாரத்தால் எவ்வாறு சேதப்படுகிறதென்பதை நீங்கள் முன்னமே தெரிந்திருக்கிறீர்கள். மதுசார்த்தின் நிகழ்ச்சியால் புல், பூண்டு, கொடி, செடி, மரம் முதலிய தாவரங்களேனும் பிராணிகளேனும் பூரண வளர்ச்சியடைவதில்லை; அன்றியும், அவை இயற்கையில் நன்றாய் வளர்ந்து வரும்போது, அவைகட்கு மதுசாரஞ் சேருமாயின் அவற்றின் வளர்ச்சிக்குன்றி, நிலைமைகுலைந்து சீர்கெட்டுப்போகின்றது.

நீங்கள் ரோசாச்செடி (Rose plant) யைப் பார்த்திருக்கின்றீர்கள். அது எவ்வளவு செழிப்பாகவும் அழகாகவுமிருக்கின்றது. அதில் அரும்புகள் நிறைந்திருப்பதால் அதிக மலர்களைக் கொடுக்குமென்று நீங்கள் நினைக்கிறீர்கள்; ஆனால் அச்செடியின்மேல் "பச்சைநிறமான பூச்சி" தங்கி, அதிவிரைவில் பூசனத்தைப் (Mildem) பரப்பிச் செடிமுழுதும் மூடும்படிசெய்துவிட்டது. அதனால், மெல்ல மெல்ல அச்செடியின் வீரியவளர்ச்சியும் அழகுங்குன்றிவிட்டன. சில அரும்புகள் மலர்ந்தன. வசந்தகாலமாயிருந்தும் அதன் செயல் பூரணமாகப் பலிக்கவில்லை. அஃதேன்? அப்பூச்சியால் அச்செடிக்கு மிக்க சீர்கேடு உண்டாயிற்று. அச்செடியின் இயற்கைக்குணமும் நிலைமையுங் கெட்டுப்போயிற்று. மனிததேகத்திற்குப் பச்சைநிறமான பூச்சியாவது மதுசாரமேயாம். அது, உயிருள்ள கண்ணறைகளின் வலுவையும், நலத்



தையும் உறிஞ்சிவிடுகிறது. அது, வயிற்றிலுள்ளவரையும் கண்ணறைகளுக்குக் கேட்டை விளைக்கின்றது.

இதனைத் திருட்டாந்தப்படுத்துவதற்கு மதுசாரத்தின் தன்மையைப்பற்றிச் சில ஆராய்ச்சியைப்பார்ப்போம்.

### பண்டிதஹாட்ஜ் (Professor Hodge) என்பவரது நாய்க்குட்டிகள்:—

பண்டிதஹாட்ஜ் என்பவர், ஏறக்குறைய சமமானவயதும் உருவமும் உயரமுமுள்ள நான்கு நாய்க்குட்டிகளை வளர்த்துவந்தார். அந்நான்கும் ஒன்றாகவசித்தும் விளையாடியும், ஒன்றாகவுண்டும் உறங்கியும், ஒன்றாகப் பயிற்றப்பெற்றும், மற்றெல்லாவகைகளிலும் ஒரேவிதமாக உபசரிக்கப்பெற்றும் வந்தன, ஆனால், அந்நான்கில் இரண்டுக்குமாத்திரம் ஒவ்வொருநாளும் அவற்றின் ஆகாரத்தோடு சிறிது மதுசாரஞ் சேர்த்துக்கொடுக்கப்பட்டது. C யும் D யும் மதுசாரமில்லாதிருந்தன. A யும் B யும் மாத்திரம் சிறிது மதுசாரமுண்டுவந்தன. அந்நான்கு நாய்களும் பந்து உருட்டினால் அதனைக் கொண்டுவருவதற்கு ஆறுமாதகாலம் பழகிவந்தன. அவைகளால் அவ்விளையாட்டை நன்றாகச்செய்ய இயன்றபிறகு, அவை ஒருவிசாலமான 300-அடி நீளமுள்ள அறைக்குள் கொண்டுபோகப்பட்டன. அங்கே ஒவ்வொருநாயும் எண்ணிடப்பெற்று, நாளொன்றுக்கு 100-தடவையாக 14-நாளைக்குப் பந்து உருட்டி விளையாடின. அவ்வாறு உருட்டின பந்துகளையுந் திரும்பக்கொண்டுவந்த அந்நாய்களின் கணக்கையும் சாக்கிரதையாகக் குறித்துக்கொண்டார். ஒவ்வொருநாயின் கழுத்துப்பட்டியில் (Collar) ஒவ்வொரு பாதைமானியந்திரம் (Pedometer) பொருத்தப்பட்டது. பாதை மானியந்திரமென்பது, துவிச்சக்கரவண்டி (Bicycle) அல்லது மோட்டார் இரதத்தில் (Motorcar) பிரயாணஞ்செய்யும் வேகத்தையுந் தூரத்தையுங்காட்ட, வேகமானியந்திரத்தில் (Speedomotor) பதிவுசெய்ய வைத்திருப்பதுபோலவே, அவ்வொவ்வொருநாயும் சென்றதின் அளவையும் வேகத்தையுங் காட்ட வைத்த சிறிய யந்திரமாம். பந்துகள் 1400-தடவை யுருட்டியதில், அவை ஒவ்வொன்றும் கொண்டுவந்த பந்துகளின் தொகையாவன:—

மதுபானமில்லாத C யும் D யும் 922 தரம்
மதுபானமுண்ட A யும் B யும் 478 தரம்

இவ்வித்தியாசம் எதனாலுண்டாயிற்று? Aயும் Bயும் தங்கள் ஆகாரத்தோடு மதுசாரமுண்டு வந்ததினாலாயிற்று. உண்டதினாலென்னவாயிற்று? அவையுண்ட மதுசாரம் மூளையின் கண்ணறைகளுக்குச்சென்று, ஜீவதாதுவை விஷமாக்கிப் பந்துகளைக்கொண்டு வருவதற்கு மனதைச் சோர்வடையச்செய்து, புத்தியை மந்தப்படுத்தி, ஊக்கத்தைக்குறைத்துச் சுறுசுறுப்பில்லாமற் செய்துவிட்டது.

# இந்திய அரசியல் மகாசபையாகிய

## சைமன் கமிஷனும்

## தென் இந்திய மருத்துவர்சங்கப் பிரதிநிதிகளும்

2-3-29 ஆம் நாள் சென்னை மெஸானிக்லாட்ஜில் சர் ஜான் சைமன் முன்பாக தென் இந்திய மருத்துவர் சங்கஸ்தாபகரும், சங்கத்தலைவரும், மருத்துவன் ஆசிரியருமாகிய பண்டிட் எஸ். எஸ். ஆனந்தம் அவர்களும், அட்வகேட் டி.எம். வேணுகோபால் B. A. B. L. அவர்களும், மருத்துவர் சங்ககாரியதரிசிகளில் ஒருவராகிய எஸ். தருமாம்பாள் அம்மை அவர்களும், தமிழ்மாதர் சங்கக்காரியதரிசி பண்டிதை. எ. நாராயணி அம்மை அவர்களும் வந்தார்கள். பண்டிட். ஆனந்தம் அவர்கள் சர் ஜான் சைமனுக்கு தென் இந்திய மருத்துவ சங்கத்தின் சார்பாக ரோஜாமலர்மாலை சூட்டி, முதன் முதல் ராயல் கமிஷன் பம்பாய் துறைமுகத்தில் வந்திறங்கும்போது, தென்னிந்திய மருத்துவர் சங்கத்தினர் கமிஷனை நல்வரவுகூறி தந்திகொடுத்ததையும், பிறகு சென்னையில் கமிஷன் வந்தவுடன் 1-2-29 ஆம் நாள் பப்ளிக் ஒர்க்ஸ் பில்டிங்கில் தென் இந்திய மருத்துவசங்கத்திலிருந்து பலர் ஒரு டெபுடேஷனாகவந்து சர்ஜான் சைமனுக்கும் கமிஷனுக்கும் நல்வரவு பத்திரம் படித்துக் கொடுத்ததையும் அந்த நல்வரவுப் பத்திரத்திலேயே தென் இந்திய மருத்துவர்களுக்கும், ஒடுக்கப்பட்ட மற்ற வகுப்பினர்களுக்கும் உயர்ந்த சாதியார் என்பவர்களால் ஏற்பட்டுள்ள கஷ்டங்களைப்பற்றியும் குறிப்பாய்க் கூறப்பட்டிருக்கிறது என்றுகூறி, தென் இந்திய மருத்துவர்களைப்பற்றியும், இந்திய அரசியல் திட்டத்தைப்பற்றியும் எழுதிய மெமோராண்டம் ஒன்றை சர்ஜான் சைமன் கையில் பண்டிட் ஆனந்தம் அவர்கள் கொடுத்தார்கள். சர்ஜான் சைமன் அதனைப்பெற்று மெமோராண்டம் கொடுத்ததற்காக மிக்க வந்தனமளிப்பதாகவும், மெமோராண்டத்தை முற்றும் தான் படித்துப்பார்த்து வேண்டியதைச் செய்வேனென்றும், நாங்கள் முதல்தடவை சென்னை வந்தவுடன் நீங்கள் டெபுடேஷனாகவந்து எங்களை வரவேற்று மரியாதைசெய்ததையும், இரண்டாவது இந்தியாவுக்கு வந்து சென்னையில் கமிஷன் அலுவல்முடிந்து ஊருக்குப் போகிறபோதும் நீங்கள்செய்த மரியாதையும் மறக்கமாட்டோம் என்றும் பதில்கூறினார்.

அட்வகேட் டி-எம். வேணுகோபால் அவர்கள் பண்டிட் ஆனந்தம் அவர்களைப்பற்றியும் தமிழ்நாட்டில் மருத்துவர்களுடைய கஷ்டங்களைப்பற்றியும் சிலவார்த்தைகள் சொன்னார். கஷ்டப்படுகிறவர்கட்கு வேண்டியதை செய்வதற்காகத்தான் நாங்கள் வந்திருக்கின்றோம் என்று சைமன் பதில் கூறினார்.

### இந்திய அரசியல் மகாசபையாகிய

# சர். ஜான் சைமன் கமிஷனுக்கு

### தென் இந்திய மருத்துவர் சங்கத்தின்

### அறிக்கை.

### (Memorandum.)

தென் இந்திய ஆயுர்வேத (சித்த வைத்திய) சங்கத்தின் ஸ்தாபகரும், தென் இந்திய மருத்துவர் சங்கஸ்தாபகரும், ஷை சங்கத்தலைவரும், மருத்துவன் பத்திராதிபருமான பண்டிட் S. S. ஆனந்தம் அவர்கள் தென் இந்திய மருத்துவர்சங்கத்தின் பிரதிநிதியாக சைமன் கமிஷனுக்குக் கொடுத்த மெமோராண்டத்தின் சாரம்:—

1928-ம் வருடம் மார்ச்சுமாதம் முதல்தேதி சென்னையில் தென் இந்திய மருத்துவர் சங்கத்தார் சைமன் கமிஷனுக்கு ஒரு வரவேற்புப் பத்திரம் வாசித்துக்கொடுத்தது நினைவிலிருக்கலாம். அவ்வாறு வரவேற்புபத்திரம் வாசித்துக்கொடுப்பதுடன் நில்லாமல் அச்சங்கத்தலைவனாகிய நான் கமிஷன் இரண்டாவதுதடவை இந்த நகரத்துக்கு வரும்போது கமிஷன்முன் மருத்துவ குலத்தவரின் கஷ்டங்களை எடுத்துக்கூறி அவர்களுக்கு சமூகத்தில் தக்க சம உரிமைகளும், ஸ்தலஸ்தாபனங்களில் பிரதிநிதித்வமும் கிடைக்கும்படி கேட்கவேண்டுமென்று தென் இந்திய மருத்துவ சங்கத்தார் விரும்பினர். ஆதலால் இந்த மெமோராண்டத்தில் மருத்துவகுலத்தாரின் சமூக அரசியல் நிலைமைகளை விவரித்து அவற்றை சீர்படுத்த என்னென்ன செய்யவேண்டுமென்று என்னால் இயன்ற அளவு இந்திய அரசியல் கமிஷனுக்கு எடுத்துரைத்திருக்கின்றேன்.

ஜனநாயக ஸ்தாபனங்களுக்கு பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்கும் முறை, ஓட்டுரிமை வழங்குவதின் விஸ்தாரம், அரசாங்க உத்தியோகங்களில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம், இன்னோரன்ன விஷயங்களைப்பற்றியும், எனது சங்கத்தார் கருதுகின்றபடி எவ்வித அரசியல் திட்டம் இந்த மாகாண அபிவிருத்திக்கு ஏற்றதென்பதைப்பற்றியும் நான் இந்த அறிக்கையில் சுருக்கமாகக் கூறியுள்ளேன்.

## சுய ஆட்சி ஸ்தாபனங்களில் மருத்துவருக்கு பிரதிநிதித்துவம் இல்லை.

1. தென் இந்தியாவில் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் மருத்துவகுலத்தார் சுமார் 11-லட்சம்பேர் இருக்கின்றனர். வைத்தியம், இரணவைத்தியம், சங்கீதம், பிள்ளைப்பேறு பார்த்தல், விவசாயம், சவரம்செய்வதுமுதலியன இவர்களின் முக்கிய தொழில்களாகும். இந்து மதத்தைச் சேர்ந்தவர்களாயினும் மருத்துவர்கள் தென் இந்தியாவிலுள்ள ஒடுக்கப்பட்டோரில் ஒரு வகுப்பாராக கருதப்படுகின்றனர். சமுதாய அரசியல் துறைகளில் முன்னேற்ற மடைந்துள்ள வகுப்பார் அனுபவிக்கிற பல சுதந்தரங்கள் மருத்துவ குலத்தாருக்கு மறுக்கப்பட்டுள்ளன. 1919-ம் வருடத்திய சீர்திருத்தங்களுக்கு பின்னரும் அரசியல் துறையில் மருத்துவ குலத்தாருக்கு நன்மை ஏற்படவில்லை. பொது ஸ்தானங்களிலே அவர்களுக்கு தேர்தல் மூலமாகவேனும், அல்லது நியமன மூலமாகவேனும் பிரதிநிதித்துவம் கொடுக்கப்படவில்லை. சீர்திருத்தப்படி ஒடுக்கப்பட்ட அல்லது பிற்போக்கான வகுப்பார்களில் ஒரு வகுப்பாருக்கு அல்லது சில வகுப்பார்களுக்காக சென்னை சட்டசபையில் ஒரு பிரதிநிதியை நியமிப்பது சர்க்காருக்கு வழக்கமாயிருந்து வந்தது. சட்டசபையிலும் மற்ற சுயாட்சிஸ்தாபனங்களிலும் சில ஒடுக்கப்பட்ட பிற்போக்கான வகுப்பார்களின் உரிமைகளை பாதுகாப்பதற்காக அப்படிப்பட்டவர்களுக்கு வகுப்புக்கொரு பிரதிநிதியேனும் சர்க்காரால் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். மருத்துவ குலத்தாருக்கோ அப்படி யில்லாமல் மேற் குறிப்பிட்டபடி பொதுப் பிரதிநிதித்துவம் தான் கொடுக்கப்பட்டிருக்கிறது.

### தனிப் பிரதிநிதித்துவம்.

2. சட்டசபையிலும், ஜில்லா போர்டு, லோக்கல்போர்டு, முனிசிபாலிட்டி முதலிய ஸ்தாபனங்களிலும் மருத்துவ குலத்தாரிலிருந்து ஒரு பிரதிநிதி நியமிக்கப்பட்டால் மருத்துவ குலத்தார் உரிமைகளுக்கு போதிய பாதுகாப்பு ஏற்படுமா என்பது. (1) சைமன் கமிஷன் அறிக்கை ஆதாரமாகக்கொண்டு தயாரிக்கப்படும் சீர்திருத்தங்களையும் (2) அப்போது ஏற்படுத்தப்பட்டிருக்கும் நியமன முறையையும் பொருத்ததாயிருக்கும்.



### நியமன முறை.

3. அடுத்த சீர்திருத்த திட்டத்திலே நியமன முறை முழுதும் ஒழிக்கப்பட்டுவிட்டால் ஒவ்வொரு சமூகமும் தன் தன் சொந்தப் பிரதிநிதியை தெரிந்துக்கொள்ள ஏற்பாடு செய்யவேண்டியது அவசியமாகும். அப்போது மருத்துவகுலத்தார் ஏறக்குறைய 11-லட்சம் ஜனத்தொகை யுள்ளவர்களாக யிருப்பதால் அவர்களுக்கும் அவ்விதமே சொந்தப் பிரதிநிதி தேர்ந்துகொள்ளும் உரிமை கிடைக்கும்.

4. அப்படி நேரிடாமல் நியமனமுறையே இன்னும் இருக்குமாயின், சட்டசபையிலும் மற்ற சுய ஆட்சி ஸ்தாபனங்களிலும் மருத்துவ குலத்தவர்களுக்கு தனிப்பிரதிநிதித்துவம் கொடுத்து மருத்துவ குலபிரதிநிதிகள் நியமிக்கப்பட ஏற்பாடு செய்தல் வேண்டும். ஆனால் தற்போது வழக்கத்திலிருக்கிற நியமனமுறை அந்தந்த வகுப்பாரின் உரிமைகளை முழுவதும் பாதுகாப்பதாயில்லை. நியமிக்கப்படுகிற பிரதிநிதிகளிடத்தில் அந்தவகுப்பாருக்கு நம்பிக்கை உண்டோ இல்லையோ என்பதை கவனியாமலே சர்க்கார் இப்போது ஒரு வகுப்புக்கு அல்லது ஸ்தாபனத்துக்கு சட்டசபையிலே பிரதிநிதிகளை நியமித்து வருகின்றனர். இந்த முறையை நீக்கிவிட்டு இதற்குப் பதிலாக எந்த பிற்போக்கான அல்லது ஒடுக்கப்பட்ட வகுப்பாருக்கு அந்த வகுப்பாரால் ஆதரிக்கப்படுகிறவரும், அவர்களின் நம்பிக்கையைப் பெற்றவருமான பிரதிநிதிகளை பல ஸ்தாபனங்களிலும் நியமிக்கவேண்டும். நியமனகாலத்தில் அந்தந்தவகுப்பாரின் சங்கங்களில் விசாரணைசெய்தால் இவ்வித அந்தஸ்துள்ள பிரதிநிதிகளை எளிதில் தெரிந்தெடுக்கலாம். உதாரணமாக மருத்துவ குலத்தாருக்கு பிரதிநிதி தெரிந்துகொள்ள வேண்டுமாயின் தென் இந்திய மருத்துவர் சங்கத்தின் மூலமாக தெரிந்துகொள்ளல் வேண்டும்.

5. மற்றெல்லா மாகாணங்களின் நிலைமைகளிலிருந்தும் பெரிதும் மாறுபட்ட இந்த சென்னை மாகாணத்தின் ராஜீய நிலைமைகளைப் பற்றி தீர விசாரித்ததின்மேல் தென் இந்தியாவிலுள்ள மருத்துவ குலத்தினர் இன்னும் தங்கள் பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்கத்தக்க தகுதியடையவில்லை என்று நானும் எனது குலத்தாரும் கருதுகின்றோம். எனவே, மருத்துவ குலத்தவர் உரிமைகளைக் காப்பாற்றுவதற்கு நியமனமுறை ஒன்றுதானுண்டு. கல்வியில் அவர்கள் பிற்போக்கான நிலைமையிலிருக்கின்றனர். ஆயிரத்தில் ஒருவர்கூட உயர்தரக் கல்வி பெற்றிருக்கவில்லை. மீதமுள்ள நூற்றுக்கு 99-பேருக்கு ஆரம்

பங் கல்விகூட கிடையாது. அரசியல் கல்வியில் அவர்கள் நிலைமை இன்னும் கேவலமானதா யிருக்கிறது. ஒரு வகுப்பார் தங்கள் பிரதிநிதியைத் தேர்ந்தெடுப்பதிலே கட்சிப் பிரதிகட்சிப் போட்டியும் குழப்பமும் நேரிடுகின்றன. பொதுத்தேர்தல் தொகுதியில் இந்த வகுப்பாருக்குக் கல்வி யில்லாமையால், உயர் ஜாதிக்காரர் தங்களை ஏமாற்றுவதற்கு இடங்கொடுத்து விடுகின்றனர். அரசியல் சமுதாயத் துறைகளிலே முன்னேற்ற மடைந்த வகுப்பாரின் தலைவர்கள் தங்கள் கட்சிக் கொள்கைகளை கடபடமறியாத கல்வியில்லாத மருத்துவ குலத்தாருக்குக்கொணர்ந்துபுகுத்தி அவர்களுக்குள் கட்சிப்பிரிவினை உண்டாக்குகின்றனர், எனவே மேற்குறிப்பிட்டவாறு நியமனமுறை ஏற்படுத்தினால் தகுதியுள்ள பிரதிநிதிகளை தேர்ந்துகொள்ளுவதற்காக சங்கங்கள் ஸ்தாபிக்கப்படுவதற்கு ஏதுவாகும். அப்படிப்பட்ட சங்கங்கள் ஏற்பட்டால் அந்தந்த வகுப்பாருக்குள் ஒற்றுமை ஏற்படவும், அவர்கள் தங்கள் ஓட்டுரிமையைச் சரியாய் பிரயோகிப்பதற்கு அவர்களுக்குத் தேர்ச்சி யுண்டாகவும் ஏதுவாகும்.

### வகுப்புவாரிப் பிரதிநிதித்துவமும், நியமனமும் வேண்டும்.

சீர்திருத்தத்துக்கு பின் சிறுபான்மை கட்சியாருக்கும், பிரதிநிதித்துவம் இல்லாத வகுப்பாருக்கும் நியமனத்தின் மூலமாக ஓரளவு நன்மை ஏற்பட்டிருப்பதாக அறிகிறோம். ஆகையால்நியமன முறையை நீக்கிவிடுகிறதாயின், அதற்குப்பதிலாக அதன் நோக்கம் நிறைவேறும்படியான தக்க ஏற்பாடு செய்யப்படவேண்டும். சிறுபான்மைக் கட்சியார் பொதுத் தொகுதிகளில் சேர்க்கப்பட்டால் அரசியல் சமூதாயத் துறைகளில் அபிவிருத்தி யடைந்துள்ள வகுப்பார்கள் அவ்விஷயங்களில் பிற்போக்கான நிலைமையிலுள்ள ஜனங்களுக்குப் பிரதிநிதிகளாக வர நேரிடும். அப்படி நேரிட்டால் பிற்போக்கான நிலைமையிலுள்ள ஜனங்களுக்கு தக்க பிரதிநிதித்துவம் கிடையாமற்போகும். இதனால்தான் நாம் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் வேண்டுமென்கிறோம். இது பிற்போக்கான வகுப்பார்களையாவது அல்லது இந்த மாகாணத்தை மாத்திரமாவது பொருத்ததல்ல. உண்மையில் இது இந்தியா முழுவதிலுமுள்ள எல்லா வகுப்பாருக்குமே அவசியமான தொன்றாகும்.

பொதுத்தேர்தல் தொகுதிகள் ஏற்பட்டால் இந்தியாவிலுள்ள பல வகுப்பார்களுக்குள்ளும் அதிக ஒற்றுமை ஏற்பட்டுவிடுமென்றும்,



வகுப்புவாரித் தனித்தேர்தல் தொகுதிகளால்தான் துவேஷம் அதிகரிக்கிறதென்றும் சொல்லப்படுவதை நாங்கள் ஆதரிக்கவில்லை. அதற்கு மாறாக தனித்தேர்தல் தொகுதிகளினால் ஒவ்வொரு வகுப்பாரும் தங்களுக்குள் ஒற்றுமைப்பட்டு தங்கள்சமூகத்திலுள்ள குற்றங்குறைகளை நீக்கி துரிதமாய் சீரேற்றமடைவதற்கு அனுகூலமுண்டாகும். ஆகையால் வகுப்புவாரித் தேர்தல் தொகுதிகளும், நியமன முறையும் ஏற்படுத்தப்பட வேண்டுமென்று நாங்கள் மிகவும் வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

### மேஜர்களுக்கு ஓட்டுரிமை.

இப்போது இந்திய சட்டசபை, ஜில்லாபோர்டு, தாலூக்காபோர்டு, முனிசிபாலிட்டி ஆகிய ஸ்தாபனங்களுக்கு ஓட்டு கொடுக்கிறவர்களுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள சொத்து, அந்தஸ்து மிகவும் உயரியதாயிருப்பதால் இந்த சுயஆட்சி ஸ்தாபனங்கள் தகுந்த ஜனப்பிரதிநிதித்துவமுள்ளதா யிருக்கவில்லை. எனவே, இந்த ஸ்தாபனங்களையெல்லாம் உண்மையில் ஜனப் பிரதிநிதித்துவ முள்ளதாக்குவதற்காக இப்போதைய ஓட்டுரிமை அந்தஸ்தை நீக்கிவிட்டு அதற்குபதிலாக வயது வந்தவர்களுக்கெல்லாம் ஓட்டுரிமை வழங்கவேண்டும். இப்போதுவழங்கப்பட்டுள்ள சீர்திருத்தங்களினால் தங்களுக்குக் கிடைத்துள்ள உரிமைகளை உபயோகப்படுத்த முடியாதபடி சில வகுப்பார்கள் பிற்போக்கான நிலைமையிலிருந்தாலும், நாடு முழுவதையும் மொத்தமாய்ப் பார்க்குமிடத்து பொது ஜனங்கள் அரசியல் விஷயமாய் தேர்ச்சிபெற்று வயது வந்தவர்களுக்கெல்லாம் ஓட்டுரிமை வழங்குவதற்கு நாடு தகுதியடைந்திருக்கிறது. தேர்தல் தொகுதிகளை விஸ்தாரமாக்கினால் தற்கால நிலைமையில் அவற்றை நிருவகிப்பது கஷ்டமென்று தோன்றலாம், என்றாலும் தேசம் குடியேற்றநாட்டு அந்தஸ்துக்காக தயாராகி வருவதால் இந்த கஷ்டத்தை மேற்கொள்ள வகைதேட வேண்டும்.

### மாகாண சுய ஆட்சி.

இந்தியா, கிரேட் பிரிட்டன் இவ்விரு நாடுகளின் நன்மைக்காக கிரேட் பிரிட்டனுடன் இந்தியாவுக்கு தொடர்பு இருக்கவேண்டுமென்றே நாங்கள் எப்போதும் நம்பி வந்திருக்கிறோம். இந்தியாவுக்கு சுயராஜ்யம் என்றால் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் ஒரு பகுதியாக இந்திய குடியேற்ற நாட்டு அந்தஸ்து அடைவதென்றே அருத்தமாகும். அப்படி இந்திய பிரிட்டிஷ் பொது ராஜ்யத்தில் ஒரு சம பங்காளியாக

எடுத்துக் கொள்ளப்படுவதற்கு முன் இந்தியா பல அரசியல் திருத்தங்களைக் கடந்து செல்லுவது அவசியமாகும். எனவே இதற்கடுத்த திருத்தமாக மாகாண சுய ஆட்சி கொடுக்கப்படவேண்டும். இரட்டையாட்சி சரியாய் நடத்தப்படக்கூடிய ஒரு ஏற்பாடல்லவென்றும், அப்படி அதை நடத்துகிறதானால் அதற்கு குறிப்பிட்ட சில நிலைமைகள் ஏற்பட்டிருந்தாலொழிய சரிவராதென்றும்கருதுகின்றோம். இரட்டையாட்சி ஏற்படுத்தி மாற்றப்பட்ட இலாக்காக்களை இவ்வளவுகாலம் மந்திரிகள் நிருவகித்து வந்திருப்பதால் இந்த திருத்தங்களை எடுத்துவிடுவது புத்திசாலித்தனமான முறையல்ல. இப்போதைய இரட்டையாட்சியிலும் நல்ல சீர்திருத்த ஏற்பாடு செய்ய முடியாவிட்டாலும், இப்போது மாற்றப்படாமலிருக்கும் இலாக்காக்களில் பலவற்றை மந்திரி ஆளுகைக்குள் மாற்றுவது நல்லதாகும். அதிலும் மாகாண சுய ஆட்சிதான் மிகச் சிறந்த ஏற்பாடாகும்.

### மாகாண சட்டசபையில் இரண்டாவது சபை.

சட்டசபையில் விரும்பப்படத் தகாதசட்டங்கள் செய்யாதபடி தடுக்க இரண்டாவது சபை ஏற்படுத்தவேண்டும். அதன் அமைப்பும் வல்லமையும், தன்மையும், இந்தியா சட்டசபையையும், அரசாங்க சபையையும்போ லிருக்கவேண்டும்.

### மருத்துவரும் அரசாங்க உத்தியோகங்களும்.

இப்போது மாகாண இந்திய அரசாங்க உத்தியோகங்களெல்லாம் இந்நாட்டிலே உயர்ந்த ஜாதிக்காரர் என்று சொல்லப்படும் சமூகத்தாராலேயே ஏகபோக மிராசாய் அனுபவிக்கப்பட்டு வருகின்றன. இந்த வகுப்பாரிடம் தான் எல்லா அறிவும் அடங்கியிருக்கிறதென்று நம்பிக்கை யிருப்பதால் இவர்களை அரசாங்க உத்தியோகங்களிலிருந்து நீக்கிவிட்டால் நிருவாகத்திறமை கெட்டுப்போகும் என்ற தவறான அபிப்பிராயமும் ஏற்பட்டிருக்கிறது. இந்த வகுப்பாருக்கு அரசாங்க உத்தியோகங்களில் உரிமை கொடுக்கக்கூடாதென்று நாம் கூறவில்லை. ஆனால் மற்ற வகுப்பாருக்கு இடம் கிடையாதபடி இந்த சமூகத்தார் அரசாங்க உத்தியோகங்களில் அதிகரிக்காதபடி ஏற்பாடு செய்யப்படவேண்டும். சர்வ கலாசாலை பட்டங்களை கவனியாமல் வகுப்புவாரி உரிமைகளைக் கவனித்தே மாகாண இந்திய அரசாங்க உத்தியோகங்கள் பகிர்ந்து கொடுக்கப்படவேண்டும். ஒரு வேலைக்கு ஒரு உயர்ந்த வகுப்பினரும், ஒரு தாழ்ந்த வகுப்பினரும் அபேட்சகராய் நின்றால்



உயர்ந்த வகுப்பினர் சர்வ கலாசாலைப்பட்டம் பெற்றிருந்தபோதிலும் அந்த உத்தியோகத்துக்கு போதுமான படிப்புள்ளவராயிருந்தால் அந்தத் தாழ்ந்த வகுப்பினரையே அந்த உத்தியோகத்துக்குத் தெரிந்து கொள்ளப்படவேண்டும். இவ்விதமே தாழ்ந்த மருத்துவ குலத்தார் கல்வியில் பிற்போக்கான நிலைமையி லிருக்கின்றனர். ஆதலால் இந்த வகுப்பைச் சேர்ந்த ஒருவர் போதிய சர்வ கலாசாலை படிப்புள்ளவரா யிருந்தால் அவருக்கு உயரிய அரசாங்க உத்தியோகம் கொடுக்கப்படவேண்டும். அப்படி உத்தியோகம்கொடுப்பதால் அது இந்த வகுப்பார் உயர்தரக் கல்வி கற்பதற்கு தூண்டிவிடுவதாகும்.

### இலவசக் கல்வி வேண்டும்.

மருத்துவர்கள் தற்காலம் தாழ்ந்தவர்கள் என்று கருதப்பட்ட போதிலும், பாம்பரையாக பெருமையுள்ள வைத்தியரா யிருந்து வரும் சமூகத்தாராவர்.

இந்த நாட்டில் அறியாமையே எங்கும் காணப்படுகிறது. மருத்துவரில் நூற்றுக்கு 10-பேர் வீதம்கூட படித்தவர்களல்ல என்று கூறினால் மிகையாகாது. பையன்களுக்கு எழு அல்லது எட்டு வயது ஆனவுடனே அவர்களை ஒரு தாழ்ந்த தொழில்களிலோ அல்லது ஏதாவது கடைகளிலோ மாதம் 4-அல்லது 6-ரூபா சம்பளத்துக்கு வேலைக்கு அனுப்பிவிடுவது மருத்துவகுல பெற்றோருக்கு வழக்கமாயிருந்து வருகிறது. இது நிறுத்தப்படவேண்டும். ஆகையால் ஆரம்பக்கல்விக் கட்டாயமாக கற்றுக்கொடுக்கப்படவேண்டும். ஆண் பெண் இருபாலாரும் பன்னிரண்டு வயது வரையிலாவது பள்ளிக்கூடத்தில் சேர்ந்து படிக்க ஏற்பாடு செய்யப்படவேண்டும். மருத்துவ குலத்தாரைப்போலவே ஒடுக்கப்பட்ட வகுப்புப் பிள்ளைகளுக்கும் இரண்டாந்தரக் கல்வி இலவசமாய் கற்பிக்க ஏற்பாடு செய்யப்படவேண்டும். அதற்குமேல் உயரிய படிப்புக்குப் போக விரும்புகிறவர்களுக்கு உபகாரச் சம்பளங்கள் கொடுத்து உதவிசெய்தல் வேண்டும்.

### வேலையில்லாக் கஷ்டம்.

பொது ஜனங்களில் படித்த நடுத்தர வகுப்பாருக்கு வேலை யின்மையால் பெரும் கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. இது விஷயமாய் விசாரித்து ஆலோசனை கூறும்படி இரண்டுவருட காலத்துக்குமுன் நியமிக்கப்பட்ட கமிஷன் இந்த வேலையில்லா கஷ்டத்தைத் தீர்ப்பதற்காக காரியத்தில் கொண்டுவரக்கூடிய எவ்வித திட்டமும் செய்யவில்லை.

கிராமப் பிரதேசங்களை அபிவிருத்திசெய்கிறதிலே வேலையில்லாதாருக்குப் போதிய வேலை கிடைக்கக்கூடுமென்று அந்தக் கமிஷன் சிபார்சு செய்ததுண்டு. ஆனால் அது நடக்கிற காரியமல்ல. நடுத்தரவகுப்பைச் சேர்ந்த இந்தியமாணவர்கள் மேனாட்டுக்கல்வி கற்றவுடனே அரசாங்க இலாகாவில் ஏதோ ஒரு குமஸ்தா அல்லது நிருவாக வேலைதான் தங்களுக்குக் கௌரவமானது என்று நினைக்கின்றனர். படித்தவர்களில் ஒருவருக்கேனும் ஒரு கிராமத்தில்போய் உழவுத்தொழில், கைத்தொழில் இவைகளை மேற்கொள்ள வேண்டுமென்று விருப்பம்கிடையாது. அவர்கள் அப்படிப்பட்ட படிப்பே படிக்கவில்லை. இந்தியாவில் இப்போது பல தொழிற்துறைகள் கிடையா. வேலையில்லாத் திண்டாட்டம் நீங்கவேண்டுமாயின் புதிது புதிதாய் தொழிற்துறைகள் ஏற்படுத்தப்படல் வேண்டும். நாட்டிலே கைத்தொழிற்சாலைகளை அதிகப்படுத்தினால் வேலையில்லாக் கஷ்டத்துக்கு நிவர்த்திமார்க்கம் ஏற்படுமென்று தோன்றுகிறது.

## கைத்தோழில் அபிவிருத்தி.

கைத்தொழில்களை அபிவிருத்தி செய்தால் நாட்டுப்பொருளாதார நிலைமை சீர்படுமென்று உணருகிறோம். இந்திய முதலைக்கொண்டே சர்க்கார் இந்தியாவில் கைத்தொழில்கள் ஏற்படுத்துவார்களானால் இப்போது இந்தியாவிலிருந்து அயல்நாடுகளுக்குச் செல்லும் பொருளில் பெரும்பாகம் இந்தியாவுக்கே பயன்படுமென்று நம்புகிறோம்.

## அயல்நாடு செல்லுவோருக்கு தொழில்.

இந்த மாகாணத்திலே விஸ்தாரமான நிலம் பயிருக்காக பண்படுத்தப்படாமல் கிடக்கிறது. இந்த நிலமெல்லாம் பண்படுத்தப்பட வேண்டும். சர்க்கார் இந்த வேலையை மேற்கொண்டு வேண்டிய விவசாய வசதிகள் ஏற்படுத்திக் கொடுத்தால் அதன் பலனாக சர்க்காருக்கு அதிக வரி கிடைப்பதுடன் இப்போது இங்கு வேலையில்லாமையால் சிங்கப்பூர், பினாங்கு, தென் ஆப்பிரிக்கா முதலிய நாடுகளுக்குச் செல்லுகிற தொழிலாளர் பெரும்பாலோருக்கு இந்த நாட்டிலேயே வேலை கிடைக்கும்.

## சமூக மத விஷயங்கள்.

சமூக விஷயங்களில் சர்க்கார் தலையிடுவதில்லையென்று விக்டோரியாராணி அறிக்கை காலம்முதல் அனுட்டித்துவரும் நடுநிலைமையை



விட்டுவிடவேண்டும். இந்தியா இன்னும் சமூக விஷயங்களில் பிற்போக்கான நிலைமையிலே இருக்கிறது. இந்திய ஜனங்கள் பிறப்பை அடிப்படையாகக் கொண்ட பலவித ஜாதிகளாகவும், உட்பிரிவுகளாகவும் பிரிந்துபோயிருக்கின்றனர். இதில் பார்ப்பனர் எல்லாரினும் உயர்ந்தோராகவும், ஒடுக்கப்பட்ட வகுப்பைச் சேர்ந்தோர் மிகத் தாழ்ந்த ஜாதியாகவும் கருதப்படுகின்றனர். ஒவ்வொரு மனிதனும் தனக்கு கீழ்ப்பட்ட வகுப்பாரினும் தன்னை உயர்ந்தவனாக மதித்துக்கொள்ளுகிறான். ஆனால் அவனுக்கு மேலான வகுப்பார் எனப்படுவோர் அவனைக் கேவலமாகவே நடத்துகின்றனர். இதனால் பொதுஜனங்களுக்குள் எவ்வித அனுதாபமும், ஒற்றுமையும் வளருவதற்கு இடமில்லை. சூத்திரர் பிர்மாவின் காலிலிருந்து பிறந்தவர்களென்று சொல்லப்படுகிறபடியால் இந்து சமூகத்திலுள்ள நாலு வகுப்பில் கடையராக கருதப்படுகின்றனர். இந்தச் சூத்திரர் யாரென்றால் பார்ப்பனரல்லாதாரே. அவர்களுக்குக் கீழாக பிற்போக்கான வகுப்பாரும் ஒடுக்கப்பட்ட மக்களுமிருக்கின்றனர். இவர்கள் பிர்மாவின் உடலின் எந்தப் பாகத்திலிருந்து தோன்றினார்களென்று சாஸ்திரத்திலாவது சரித்திரத்திலாவது சொல்லப்படவில்லை. இந்த வகுப்பார்கள் இந்துமதத்தை சேர்ந்தவர்களாயிருந்தும், இந்து தெய்வங்களை வணங்கிவந்தும் இவர்களில் பெரும்பாலோர் தீண்டாதாராக கருதப்படுகின்றனர். அவர்களைகிட்ட அணுகாதாராகக் கருதும் உயர்சாதியார் உண்டு. மலையாளத்தில் நம்பூதிரிப் பார்ப்பனர் இந்த வகுப்பாரைத் தங்கள் தெருக்கள் வழியாகச் செல்ல அனுமதிப்பதில்லை. பிறப்பினாலே ஏற்பட்ட இந்த ஜாதிக் கட்டுப்பாட்டுக் கொடுமைகளினால் இந்தியாவிலுள்ள கோடிக்கணக்கான ஜனங்கள் வருந்துகின்றனர். மதத்தின் பெயரால் மகத்தாகிய பாதகங்கள் செய்யப்பட்டு வருகின்றன.

மருத்துவரில் உயர்ந்த வைத்தியராயினும், என்ன அந்தஸ்துள்ளவராயினும், பெரிதும் மதிப்புப் பெற்றவராயினும், தமிழ்நாட்டில் திருநெல்வேலி மதுரை முதலிய இந்துக் கோயில்களுக்குள் செல்லக் கூடாது.

உயர் வகுப்பினரால் மக்களுக்குப் பொதுவான கோயில் வணக்க உரிமையே மறுக்கப்படுகிறதென்றால், ஒடுக்கப்பட்ட மக்களின் நிலைமை சமூகத்தில் மிக கேவலமாயிருக்கிறதென்பதைச் சொல்லவும் வேண்டுமோ.

பொது ஸ்தாபனங்களிலும், பொதுச் சத்திரங்களிலும் மருத்துவ குலத்தாருக்கு இவ்விதமே உரிமை கொடுக்கப்படுகிறதில்லை. மருத்துவர்கள் சிறப்பும் கண்ணியமுமான தொழில் நடத்திவருகிறவர்களென்பதை மறக்க முடியாது. புராதனகால முதலே மருத்துவ குலத்தார் வைத்தியராயிருந்து வந்திருக்கின்றனர். அவர்கள் முன்னோர் மூவேந்தரிடம் அரச வைத்தியர்களாக இருந்தனர். தமிழ் நூல்களிலே ஞானிகளும் அறிஞரும் அவர்களைப் புகழ்ந்து கூறியிருக்கின்றனர்.

தற்காலத்திய மருத்துவர்களும் தங்கள் புகழ்பெற்ற முன்னோரின் தொழிலை ஓரளவு மேற்கொண்டு நடத்தி வருகின்றனர். மருத்துவ குலத்தவரில் ஆண்கள் வைத்தியராகவும், பெண்கள் மருத்துவிச்சிகளாகவும் இருக்கின்றனர். நோய்வந்த காலத்திலும், பிரசவகாலத்திலும் தீண்டப்படாதார் என்று கருதப்படும் மருத்துவ குலத்தாரின் உதவியை உயர்ந்த வகுப்பார் ஆவலாய் விரும்புகின்றனர். ஆனால் மற்றகாலங்களில் பிறப்பினால் கேவலமாகக்கருதி எல்லாச் சிறுமைகளுக்கும் அவர்கள் உட்பட்டிருக்க வேண்டியிருக்கிறது.

### சமூக திருத்தத்துக்கு சர்க்கார் உதவி வேண்டும்.

இந்தியாவின் தற்கால அரசியல் நிலைமையிலே மருத்துவ குலத்தினர் தங்களுக்கு எவ்வித இழிவுமின்றி சமத்துவ அரசியல் உரிமை கொடுக்கவேண்டுமென்று கேட்பதை அலட்சியம் செய்யமுடியாது. சட்டசபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட சில பிரதிநிதிகள் இந்து சமுதாயத்திலுள்ள இந்தக் கதைகள் தேசீய வளர்ச்சிக்கு தடையாயிருக்கிறதென்பதை உணர்ந்து, அறியாமையிலும் குருட்டாட்டத்திலும் ஆழ்ந்து கிடக்கும் பொது ஜனங்களை பிரசாரத்தினால் திருத்த முடியாமையால் சட்டங்களினால் இந்த தீமைகளை நீக்க பல தடவைகளிலும் முயற்சித்திருக்கின்றனர். தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டசபைகளிலேயே இவ்வித சட்டம் செய்ய முடியுமாயினும், சர்க்கார் சமூதாய விஷயங்களில் தலையிட முடியாதென்ற காரணத்தினால் அவ்வித சட்டங்களுக்கு சம்மதம் கொடுக்க மறுத்தே வந்திருக்கின்றனர். பிரிட்டிஷ் சர்க்கார் இந்த முறையை மாற்றி சமூக திருத்தவிஷயமாய் இந்திய சட்டசபைகளுக்கு அதிகார மிருக்கும்படி அடுத்த சீர்திருத்த திட்டத்தில் ஏற்பாடு செய்யவேண்டும். சட்டசபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இதுவிஷயமாய் பாராமுகமாயிருந்தால், சர்க்காரே முன்வந்து சமூதாய தீமைகளை ஒழிப்பதற்கான சட்டங்கள் செய்தல் வேண்டும்,



இந்தியாவில் பிரிட்டிஷ் ஆளுகை ஏற்பட்டு இப்போது 200-வருடங்களாகியும் மருத்துவ குலத்தாரும் இன்னும் சில குலத்தினரும் முன்போல பிற்போக்கான நிலைமையிலேயே இருக்கின்றனர். சமுதாயத்திலே அவர்கள் இன்னும் முன்னேற்றநிலைமை அடையவில்லை. இவ்வாறு பல திறப்பட்ட சிக்கலான இந்திய வியவகாரங்களையெல்லாம் அவைகளின் முக்கியத்துக்கு தக்கதாக கவனத்துடன் விசாரித்து நடைமுறையில் வரத்தக்க ஏற்பாடுகள் செய்வார்களென்று நம்புகிறோம்.

### முடிவுரை.

இந்த மாகாண ஜனங்களெல்லோரும் இந்திய அரசியல் மகா சபையினிடத்தில் பூரண நம்பிக்கை யுள்ளவர்களா யிருக்கின்றனர். ஒரு சிலர் கமிஷனை ஆட்சேபித்தாலும், கமிஷனுடன் ஒரு வழியில் இல்லாவிட்டால் இன்னொரு வழியில் ஒத்துழைக்க விரும்பாதவர்கள் கிடையாது. இந்திய அரசியல் திருத்தம் செய்வதற்கு பிரிட்டிஷ் பார்லிமெண்டுக்கு உரிமையில்லை என்றுகூறும் பகிஷ்காரக்காரர்களின் நோக்கம் எதுவாயினும் மருத்துவ குலத்தாராகிய நாங்களும் எங்களைப்போல் கஷ்டப்படுகிற பலரும், சமூக முன்னேற்றத்துக்காகவும் சம உரிமைக்காகவும் இதுவரையில் பிரிட்டிஷ் பார்லிமெண்டை நம்பியிருந்ததுபோல எப்பொழுதும் பிரிட்டிஷ் சர்க்காரிடம் ராஜவிசுவாசமுள்ளவர்களா யிருக்கிறோம். இந்திய அரசியல் கமிஷனுடன் ஒத்துழைக்கும் உண்மை விருப்பத்துடன் இந்த அறிக்கையை (மெமோராண்டத்தை) கொடுக்கின்றோம்.

சர் ஜான் சைமனும் அவர் சகாக்களும் இந்திய அரசியல் விசாரணையை வெற்றிபெற நடத்தி முடிக்க விரும்புவதுடன், இந்திய சக்கரவர்த்திக்கு பூரண சுகமும் நீடிய ஆயுளும் ஏற்பட வேண்டுமென்றும் கடவுளைப் பிரார்த்திக்கின்றோம்.

---

மருத்துவனுக்கு

## உதவி பத்திராசிரியர் வேண்டும்

தமிழில் இலக்கிய இலக்கண ஞானமும், ஆங்கிலத்தில் ஸ்கூல் பைனல் படிப்பும், சிறிதாவது தமிழ்வைத்திய ஞானமும் உள்ள ஒருவர் மருத்துவன் பத்திரிகைக்கு உதவி ஆசிரியர் வேலைக்குவேண்டும். சம்பள விவரம் கடிதமூலமாகவாவது நேரிலாவது தெரிந்துகொள்ளலாம்.

**மருத்துவன் ஆபீஸ், 221, தங்கசாலைத்தெரு, சென்னை.**

# இலங்கை மருத்துவர்களுக்கு
## ஓர் வேண்டுகோள்

நமது தேசத்தில் மற்ற ஜாதியினரால் மருத்துவகுலத்தினருக்கு ஏற்பட்டுக்கொண்டிருக்கும் இம்சையைநீக்கி அவர்கள் மருத்துவ வகுப்பினரையும் தங்கள் சகோதரரென உணர்ந்து ஒருவருக்கொருவர் உதவிசெய்து அன்புடன் கலந்து வாழ்வதற்கு தடையாயுள்ள நமது அறியாமையைப்போக்கி நாம் முன்னேறவேண்டுமெனத் தளரா ஊக்கத்துடன் உழைத்துவருவதோடு, இப்போது மருத்துவன் பத்திரிகை மூலமாகவும் அதிகமான நன்மையை நமது சமூகத்திற்குச் செய்ய வேண்டுமெனத் தீர்மானித்து நமது தலைவர் பண்டித எஸ். எஸ். ஆனந்தம் அவர்கள் நமது வகுப்பினற்குரிய மருத்துவன் என்னும் பெயரிட்டே ஓர் மாதப்பத்திரிகையை வெளியிட்டு வருகின்றார்கள்.

மற்றப் பத்திரிகைகளில் காணக்கூடாத பல அரிய வைத்திய முறைகளும், சாஸ்திரங்களும் இம்மருத்துவன் பத்திரிகையில் வெளியாகிவருகின்றன. மக்கள் நோயின்றி உயிர்வாழவோ, வைத்தியசாஸ்திரங்களை எளிதாகக் கற்று மக்களுக்கு உதவிசெய்யவோ மருத்துவன் ஓர் சிறந்த அறிவுக்களஞ்சியமென்பதில் ஐயமில்லை. மருத்துவன் பத்திரிகைக்கு போதுமான சந்தாதாரர்கள் சேர்ந்தால் இப்போது அதற்கு ஏற்பட்டிருக்கும் சந்தாதொகையைக் குறைத்துவிடுவதாக முன்னரே தெரிவித்திருக்கிறார்கள். ஆதலால் நமது மருத்துவ குலத்தினர் தங்களாற்கூடியமட்டும் இம் மருத்துவனை ஆதரித்து தலைவர் பண்டித ஆனந்தம் அவர்களுக்கு முகமலர்ச்சியுடன் உதவிசெய்ய வேண்டுமென்பதே எனது வேண்டுகோளாகும்.

இலங்கைத்தீவில் வசிக்கும் நம் மருத்துவகுலத்தினர் கடைகள் வைத்து வியாபாரம்செய்து வருகின்றார்கள். இவ்விதகடைகளின் முதலாளிகள், தங்களிடமிருந்து வேலைசெய்பவர்களை ஒருவகையில் அன்பாக நடத்திவருகின்றார்களென்பதிற் சந்தேகமில்லை. சிற்சில இடங்களில் சற்று வெறுப்பான காரியங்கள் நடைபெற்றுக்கொண்டிருப்பினும் பெரும்பாலும் அவ்விதமேயிருந்து வருகிறதெனச் சொல்லுவதற்கில்லை. ஆனாலும் கடைகளில் வேலைசெய்வோர் தங்கள் குறைந்த கல்வியைச் சிறிது வளர்த்துக்கொள்ளவோ, சிறிதும் கல்வி இல்லாதவர்கள் எழுத்துவாசனையறியவோ, மற்றும் நல்ல விஷயங்களில் தமது காலத்தில் கொஞ்சமேனும் செலுத்தி அதனால் நன்மையடையவோ போதுமான சந்தர்ப்பமில்லாதிருந்து வருவது மிகவும் பரிதா



பமான காரியமாகும். சுருங்கச்சொல்லுமிடத்து இவர்களுக்கு இரவும் பகலும் ஒன்றுதான்.

இவ்விதம் ஓய்வின்றி உழைப்பதில் கடைகளின் சொந்தக்காரராயுள்ள முதலாளிகளுக்கு லாபம் சிறிது அதிகம் கிடைப்பதாகக் கருதியபோதிலும், வேலையாட்களின் உடல்நலங்கெட்டு அவர்களின் அறிவும், உடம்பும் வளர்ச்சியின்றி சீர்குலைந்துவிடுமென்பது திண்ணம்.

சிலோன் ஷாப்புகளில் வேலைப்பார்ப்பவர்கட்கு 'மருத்துவன்' என்ற பத்திரிகையைப்போல் இன்னும் பல பத்திரிகைகள் இலவசமாய்க்கிடைப்பினும், அப்பத்திரிகைகளைப்படித்து அதிலுள்ள விஷயங்களைக் கிரஹித்து நன்மையடைய சிறிதும் ஓய்வுநேரம் இல்லாமற்போனால், எத்தனை நூற்றாண்டுகள் முயற்சித்தாலும் நம் தலைவர்கள் எதிர்பார்க்கிறபடி மருத்துவ குலமக்கள் நன்மையையடைவது கஷ்டமாகிவிடும்.

தென் இந்திய மருத்துவசங்கத் தலைவர் பண்டிட் ஆனந்தம் அவர்கள் 1924 ஆம் ஆண்டு இலங்கைவந்திருந்தபோது, கடைகளிலுள்ள இளைஞர்கள் காலை 7-மணிமுதல் இரவு 7-மணிவரையில் வேலைசெய்து இரவில் இரண்டுமணிநேரம் படிப்பதற்கு விட்டுவிடும்படி முதலாளிகளுக்கு எவ்வளவோ சொல்லிக் கேட்டுக்கொண்டார்கள். அதைப்பற்றி ஆயிரக்கணக்காக நோட்டீஸ் அச்சிட்டு இலங்கை பொதுஜனங்களுக்கும் கொடுக்கப்பட்டது. முதலாளிகள் தங்கள் சுயநலத்தைமட்டும் கவனித்தார்களே தவிர குலநலத்தைச் சிறிதுங் கவனிக்கவில்லை.

ஆதலால் இலங்கையில் கடைகள் வைத்திருக்கும் முதலாளிமார்கள் எல்லோரும் தமது குலமக்கள்மீது கருணைவைத்து மேற்கண்ட நியாயங்களை ஊன்றிக் கவனித்து, கடைவேலையாட்கள் காலை 7-மணிக்கு வேலைக்குவந்து இரவு 8-மணிக்கு போகும்படியாவது உதவிசெய்வதோடு, முக்கியமான திருநாட்களிலும் அவர்களுக்கு விடுமுறை கொடுத்து முதலாளிமாரும் வேலையாட்களும் மனவெறுப்பின்றி அன்புடன் ஒற்றுமையாயிருந்து, நமது மக்களின் எதிர்கால நன்மையைக் காப்பாற்றவேண்டுமென்பதே எனது தாழ்மையான வேண்டுகோள்.

மு. உலகநாதன்

கொழும்பு.

# திருச்சி மருத்துவர் சங்கத்தில்

## ஓர் இறங்கர் கூட்டம்

1-3-29. ஆம் நாள் திரு எஸ். அய்யாகண்ணு அவர்கள் தலைமையில் மருத்துவர்களின் கூட்டம் கூடியது. திருச்சி தாலுக்கா சித்தாம்பூர் மருத்துவர் ரா. அங்கமுத்து அவர்கள் செங்கற்பட்டு சுயமரியாதை மகாநாட்டுக்கு தமது நண்பர்களோடு சென்று திரும்பி வரும்போது, ரயிலில் காய்ச்சல்கண்டு திருச்சியில் தமது மைத்துனர் வீட்டில் 23-2-29 ஆம் நாள் காலமாகிவிட்டார். இவர் குலாபிமானமுள்ளவர். தாழ்ந்தவகுப்பினரிடத்தும் ஏழைகளிடத்தும் மிகக் கருணையுடையவர். சுயமரியாதையுடையவர். இவர் தமது வீட்டில் நடைபெற்ற திதிமுதலிய சடங்குகளை தானே செய்துகொண்டு ஆங்குள்ள மற்றவர்களுக்கும் இவ்விஷயங்களைப் போதித்துவந்தார். இதனைக் கண்டு மனம்பொறாத அவ்வூர் பார்ப்பனப் புரோகிதர் கோடரிக்காம்புகளான நமது சகோதரர்களைத் தூண்டிவிட்டு அவர் வீட்டுக்குத் தீவைத்துவிட்டார்கள். அதற்கும் அஞ்சாது பிறகு வீட்டை பலமாகக் கட்டிமுடித்து, அவ்வீட்டிற்கு பங்குனிமீ சுயமரியாதைத் தலைவரைக்கொண்டு புதுமனை புகுவதென்று தீர்மானித்திருந்தார். அவர் எண்ணம் நிறைவேறுமுன்னம் திடீரென்று காலமானதால் மிக வருந்துவதாகவும், தங்கள் வருத்தத்தை அவரது குடும்பத்திற்கு அறிவித்துக்கொள்ளுவதாகவும் தீர்மானம் நிறைவேறியது என்று ஒரு நிருபர் எழுதுகின்றார்.

## சுயமரியாதைத் திதி

நாளது விபவ௵ மாசிமீ 25௳ வெள்ளிக்கிழமை ஆம்பூர் திருவாளர். சு. அய்யாபிள்ளை தமது தகப்பனார் சு. சுப்பிரமணியம் பண்டிதர் அவர்கள் வருட திதியை கண்டியில் தமது இல்லத்தில் கூலிப் புரோகிதர், போலிப்புரோகிதர், பார்ப்பனப்புரோகிதர் முதலியவர் யாவருமின்றி திதியைத் தாமே நடத்தி பந்துக்களுக்கும் ஏழைகளுக்கும் அன்புடன் உண்டி அளித்தனர் என கண்டி தி. நடனமுத்து எழுதுகிறார்.

## விருதுநகர் மருத்துவர்சங்கம்.

13-2-29 ஆம் நாள் புதன்கிழமை விருதுநகர் மேல்புறம் ஐயனார் கோயில்முன் திருவாளர் சாமிநாதபண்டிதர் அவர்கள் அவைத்தலைமையில் ஒரு கூட்டம் நடைபெற்றது. மருத்துவர்களின் முன்னேற்றத்தைப்பற்றியும், மருத்துவர் சங்கத்தின் அவசியத்தைப்பற்றியும், பலர் பேசினார்கள். பிறகு விருதுநகரில் தென் இந்திய மருத்துவர் சங்கத்திற்கு ஒரு கிளைச்சங்கம் நிறுவப்பட்டது என்று ஒருநிருபர் எழுதுகிறார்.

மருத்துவனுக்கு

# நன்கொடை அளித்த அன்பர்கள்

(136-ம் பக்கத்தொடர்ச்சி)

திரு - வி. சக்கரவர்த்தி ஏகாம்பரம் அவர்கள்
சக்கரவர்த்தி சித்தவைத்தியசாலை,
பாரிஸ் வெங்கடாசல அய்யர் தெரு,
சென்னை ரூ. 7 0 0

„ பார்த்தசாரதி பண்டிதர் அவர்கள்
கச்சேரிசந்து, மயிலாப்பூர், சென்னை „ 2 0 0
(இவர் மனைவி இறந்த கருமாதிக்காக நன்கொடை)

„ வ. பெ. பெருமாள் பண்டிதர் அவர்கள்
வல்லநாடு, திருநெல்வேலிஜில்லா „ 2 0 0

## மருத்துவனின் அன்பர்கள்.

திரு - R. M. நடேசன் அவர்கள்
இராயப்பேட்டை, சென்னை.

„ P. S. பகவதி பண்டிதர் அவர்கள்
புலியூர் குறிச்சி, திருநெல்வேலிஜில்லா.

„ S. இயக்கிமுத்து பண்டிதர் அவர்கள்
மருதானை, கொழும்பு.

„ V. பலவேசம் பண்டிதர் அவர்கள்
வியாங்கொடை, சிலோன்.

„ M. முருகலிங்கம் பண்டிதர் அவர்கள்
பாளையங்கோட்டை, திருநெல்வேலிஜில்லா.

„ P. S. திருவடி பண்டிதர் அவர்கள்
திருநெல்வேலி டவுன்.

„ E. அமுர்தலிங்க பண்டிதர் அவர்கள்
நாகல் நகர், திண்டுக்கல்.

„ P. சுந்தரம் அவர்கள்
வீரராகவபுரம், திருநெல்வேலிஜில்லா.

„ E. முத்துசாமிதாஸ் அவர்கள்
அம்பாசமுத்திரம், திருநெல்வேலிஜில்லா.

„ K. S. சுப்பையா அவர்கள்
புசலவா, சிலோன்.

திரு C. வேலுதாஸ் அவர்கள்
நஞ்சன்கோடு, திருவனந்தபுரம்

,, M. இயக்கிமுத்து பண்டிதர் அவர்களீ
அப்புதளை, சிலோன்.

,, S. சப்பாணி பண்டிதர் அவர்கள்
அம்பாசமுத்திரம், திருநெல்வேலிஜில்லா.

,, S. பிரமநாயகம்தாஸ் அவர்கள்
ஆழ்வார் திருநகரி, திருநெல்வேலிஜில்லா.

,, M. கணபதி பண்டிதர் அவர்கள். கொழும்பு.

,, P. பாப்பு பண்டிதர் அவர்கள்
கொள்ளுப்பட்டி, கொழும்பு.

,, S. இருளசாமி பண்டிதர் அவர்கள்
ஆத்தூர், திருநெல்வேலிஜில்லா.

,, M. நமசிவாய மருத்துவர் அவர்கள்
முட்டுவால், கொழும்பு.

,, சுவாமிநாதன் அவர்கள், கொழும்பு.

,, P. சுப்பய்யா பண்டிதர் அவர்கள்
ஆழ்வார்குரிச்சி, திருநெல்வேலிஜில்லா.

,, M. பிரமநாயகம் பண்டிதர் அவர்கள்
பாளையங்கோட்டை, திருநெல்வேலிஜில்லா.

,, வெள்ளையன் பண்டிதர் அவர்கள்
சேர்மாதேவி, திருநெல்வேலிஜில்லா.

,, S. விசுவனுததாஸ் அவர்கள்
நஞ்சன்கோடு, திருவனந்தபுரம்

,, N. பிச்சன் பண்டிதர் அவர்கள்
மூலக்கரைபட்டி, நாங்குனேரி தாலுக்கா.

,, S. பாப்பய்யா அவர்கள், கண்டி, சிலோன்.

,, A. K. காளிமுத்து பண்டிதர் அவர்கள்
குருநாக்கல், சிலோன்.

,, U. A. தளவாய் பண்டிதர் அவர்கள்
மொரட்டுவா, சிலோன்.

,, M. S. நாதன் அவர்கள், பினங்கு.

# வியாசம் எழுதுவோர் கவனிக்க வேண்டியவை.

வியாசம் எழுதுகிறவர்கள் கடிதத்தின் ஒரு பக்கத்தில் மாத்திரம் தெளிவாக எழுதி அனுப்பவேண்டும். இராஜ நிந்தனை, மத தூஷணை, மனித தூஷணை, முதலியவைகளும் பொருத்தமில்லாத விஷயங்களும் பிரசுரிக்கப்படமாட்டா. வியாசங்களைத் திருத்தவும், நிறுத்தவும் ஆசிரியருக்கு முழு உரிமையுண்டு. பிரசுரிக்காத வியாசங்கள் திருப்பி அனுப்பப்படமாட்டா.

வியாசதாரர்களின் அபிப்பிராயங்கட்கு ஆசிரியர் உத்தரவாதியல்லர்.

நமது ஆபீசிலிருந்து பதில் வர விரும்புவோர் ரிப்ளை கார்டாவது, தபால் பில்லையாவது அனுப்பிவைத்தல் வேண்டும்.

கடிதம் எழுதும்போதெல்லாம் ஒவ்வொருவரும் தங்கள் சந்தா எண்ணைக் குறிப்பிட்டு எழுதுதல் வேண்டும்.

## விளம்பர விகிதம்

| | | |
|---|---|---|
| முழுப்பக்கத்திற்கு ஒரு மாதத்திற்கு | ரூ. | 8—0—0 |
| அரைப் பக்கத்திற்கு ,, | ரூ. | 5—0—0 |
| கால் பக்கத்திற்கு ,, | ரூ. | 3—0—0 |

மானேஜர், மருத்துவன் ஆபீஸ்
221, தங்கசாலைத்தெரு, சென்னை.

---

## தமிழ்க்கலா நிலையம்

தமிழ்மொழியில் வெளிவந்துள்ள எல்லாவித நூல்களும் நமது தமிழ்க்கலாநிலையத்தில் கிடைக்கும்.

இலக்கிய நூல்கள் இலக்கண நூல்கள், நீதி நூல்கள், வைத்திய நூல்கள், ஞான நூல்கள், உடற்கூறு தேகதத்துவ நூல்கள், ஆபத்துக்காலங்களில் செய்யும் முதல் உதவி நூல், நோயணுகாவிதிகள், ரசாயன சாஸ்திரங்கள், பதார்த்தகுண நூல், தேசசரித்திரங்கள், ககோள, பூகோளசாஸ்திரங்கள், மக்கள் நோயின்றி கிழத்தன்மைவராமல் வாழ்வதற்குரிய நூல், மரணத்தின்பின் மனிதர்நிலை, முதலிய அரிய நூல்களும், நாவல்கள், கதைகள், நாடகங்கள் முதலிய இதரபுத்தகங்களும் கிடைக்கும்.

தமிழ்க் கலா நிலையம்,
221, தங்கசாலைத்தெரு, சென்னை.

Regd. No. M. 2418

**MARUTHUVAN**

**(PHYSICIAN)**

A High Class Medical Tamil Monthly

Editor; Pandit S. S. Anandam.

Sample Copy Free on Application

**Add:—** **Manager.**

**MARUTHUVAN OFFICE**

**221, Mint Street**

MADRAS.

## மருத்துவன் பத்திரிகை சந்தாதாரர் களுக்குள்ள பெரிய லாபம்.

பாலர் பரிபாலனம், பாலர் வைத்தியம்

மருத்துவனில் மாதந்தோறும் எட்டுப்பக்கம் (ஒரு பாரம்) பாலர்பரிபாலனம் பாலர்வைத்தியம்' என்பதன் சம்பந்தமாகப் பல அரிய பெரிய விஷயங்கள் வெளியாகும். இப்புத்தகம் சுமார் முப்பது பாரத்துக்குமேல் வரும். சந்தாதாரர்கள் அதனைச்சேர்த்து ஒரே புத்தகமாகப் பைண்டு செய்து கொள்ளவேண்டும். இல்லறத்தி லிருந்து மக்கள் பேறு அடையும் ஒவ்வொருவருக்கும் இப்புத்தகம் பெருநிதியைப்போன்றது. பாலரை நோயணுகாமல் வளர்க்கும்முறை களும், பாலர்களுக்குவரும் நோய்களுக்குத் தாங்களே பரிகாரம்செய் துகொள்ளும் வழிகளும் இப்புத்தகத்தில் தெளிவாக விளக்கிக் காட் டப்பட்டிருக்கின்றன. இப்புத்தகத்தைப் பெண்கள் எல்லோரும் படிப் பதால், சிசு தாயின்கருப்பையினின்று வெளிப்படுங்காலத்தில் அருகி லிருந்து பரிகாரஞ்செய்ய மருத்துவச்சி தேடவேண்டியதில்லை. வீட் டிலுள்ள பெண்பாலார் தாங்களே ஒருவருக்கொருவர் உதவிசெய்து கொள்ளலாம். இப்புத்தகம் மருத்துவர், மருத்துவச்சிகளுக்கும், மருத்துவமாணவர் மாணவிகட்கும், பொது ஜனங்கட்கும் தோன்றாத் துணையாக உள்ளது.

மானேஜர்:— **மருத்துவன் காரியாலயம்,**

221, தங்கசாலை வீதி,

சென்னை.

Printed by The Sree Subramaniya Vilasam Press, NO 220, Mint Street MADRAS
& Pubished by Pandit S. S. Anandam, 221, Mint Street, Madras.

# MARUTHUVAN

# மருத்துவன்

## PHYSICIAN

## தமிழ் வைத்தியப் பத்திரிகை

ஆசிரியர். பண்டிட் எஸ். எஸ். ஆனந்தம்

மலர் ௧. 1929வருடம் ஜூலை இதழ் ௭.

உள்ளுறை

பாலர் பரிபாலனம்

உடற்பயிற்சி

மதுசாரம்

ஐயவினா

நீவணக்கமே சிவவணக்கம் நீர்வணக்கமே மால் வணக்கம் 180

தமிழ் வைத்தியத்தைப்பற்றி மணி ஐயர் 187

தமிழ் வைத்தியத்தைப்பற்றி பண்டிட் D. கோபாலாச்சாரியார் 189

தமிழ் வைத்தியத்தைப்பற்றி சதாசிவ ஐயர் லார்ட் ஆம்தில் 192

நன்கொடை அளித்த அன்பர்கள் 194

பொதுச்செய்திகள் 199


தென் இந்திய மருத்துவர் சங்கத்தின் நிகழ்ச்சிக் குறிப்பு (முன் தொடர்ச்சி)

மருத்துவன் காரியாலயம்

221, தங்கசாலை வீதி

சென்னை.

5 - JUL 1929



தென் இந்திய மருத்துவர் முதல் மகாநாடு சென்னை. 1923

பாற்புட்டி:—இப்படிக்கொடுக்கும் பாலைப் பாற்குப்பியில்விட்டுக் கொடுக்கவேண்டும். சப்பையாய் நீண்ட குழாயுள்ள புட்டி நல்லதல்ல. அவை நன்றாய்ச் சுத்திசெய்ய இயலாது. கையில்வைத்துக் கொடுக்கச் சோம்பலடைந்தாவது, அவசர வேலையினாலாவது குப்பி நிறைய பாலை நிரப்பி சிசுவினருகில் வைத்து குழாயை அதன் வாயிற் கொடுத்துவிட்டுத் தாய் வேறுவேலை பார்க்கிறதும் உண்டு. இப்படிச் செய்வதில் இரண்டு பிழை நேரிடும். குழந்தை மிகுதியாய்ப் பாலைக் குடித்துவிடும். பாலெல்லாம் ஆனபின்னும் உறிஞ்சிக்கொண்டேயிருப்பதனால் வயிற்றுக்குள் காற்றும் புகுந்துகொள்ளும். அப்பால் வயிற்றுப்புசம், அசீரணம், வாந்தி, வயிற்றோட்டம் முதலியன கண்டு வருந்தவேண்டியதாகும். கண்ணாடிக்குப்பி நீண்டு அதன் கழுத்தும் வாயும் சிறுத்திருக்கிறது நல்லது. இலேசாய் சுத்திசெய்யவுங்கூடும். வேண்டிய அளவு கையில் வைத்துக்கொண்டே கொடுக்கலாம். முலை கொடுக்கும்போது எவ்விதமாகக் குழந்தையைக் கையில் ஏந்தி வைத்துக்கொண்டு கொடுக்கவேண்டுமோ, அவ்விதமாகவே புட்டிப்பாலும் கொடுக்கவேண்டியது.

புட்டிப்பால் கொடுக்கப் பழக்குகிறது:—

குழந்தைகளுக்குத் திடீரென அவசியமானபோது புட்டிப்பால் கொடுக்க நினைத்தால், பல குழந்தைகள் அப்படிக் குடிக்கச் சம்மதியாது. இதற்காகக் குழந்தைபிறந்த பத்தாம்நாளில் ஒருகரண்டிபாலில் இரண்டுகரண்டி வெந்நீரும், கொஞ்சம் சர்க்கரையும்சேர்த்துக் கலந்து, புட்டியில்விட்டுக் குழந்தைக்குக்கொடுத்தால் அதன்வேற்றுமை தெரியாமல் ஒரு தடையுமின்றிக் குடிக்கும். இவ்விதமாக வாரத்திற்கு நாலைந்துதடவை பழக்கிக்கொண்டுவந்தால் பின்னர் அதிக உதவியாயிருக்கும்.

கட்டிப்பால்:—கடைகளில் தகரடப்பாக்களில் அடைத்து விற்கப்படும் கட்டிப்பால் மிக நல்லதெனச் சொல்ல இயலாது. இதில் பாலைச் சுண்டவைக்கும் பொருட்டு மிகக் காங்கை உபயோகிக்கவேண்டியிருக்கிறது. அதனால் பாற்சத்துகள் பேதப்படும். இரண்டாவது கட்டிப்பாலுக்கு மூன்றிலொருபாகம் சர்க்கரை சேர்க்கப்பட்டிருக்கிறது. இதனால் பாற்சத்துகள் பேதப்படுவதுமன்றி, மறுபடியும் வெந்நீர் சேர்த்து இதைப் பாலாக்கும்போது பசுவின்பாலைவிட சர்க்கரையின் அளவு அதிகப்படும். மூன்றாவது இந்தப்பாலைக்குடிக்கும் குழந்தைகள் கொழுத்துப் பருமனாகத் தோற்றுகிறதே அன்றி, உடம்புக்கு

நல்ல வலிமைக் கொடுக்கிறதில்லை, உடம்பில் கொழுப்பு அதிகமாகிறது சர்க்கரையின் குணம். நான்காவது இவ்விதமாக பாலின் சத்துகள் பேதப்படுவதினாலோ, அல்லது அதனை அடைத்துவரும் தகரத்தினாலோ, வேறு எதனாலோ பல குழந்தைகளுக்கு இந்தப் பாலைக் கொடுக்கும்போது, குடலுக்கு ஒத்துக்கொள்ளாமல் சிலருக்கு உடனேயும், சிலருக்குச் சிறிதுகாலம் பொறுத்தும், வயிற்றோட்டங்கண்டு கொடியதுன்பத்துக் கிடமாகிறது. ஆகையால் தனிப்பசுப்பாலாவது, ஆட்டின்பாலாவது, கிடைக்கக்கூடியகாலத்தில் அதையே உபயோகிக்கவேண்டுமேயன்றி, இந்தக் கட்டிப்பாலை உபயோகிக்கிறது நல்லதல்ல.

2. புல்முளைக்கத் தொடங்கியபின் உணவுகொடுக்கும் ஒழுங்கு:— இப்போது பால் தவிர வேறே எளிதில் செரிக்கத்தக்க உணவுவகைகளையும் சிறிது கொடுக்கலாம். ஆனால் எது கொடுத்தாலும் பாலுடன் கலந்துதான் கொடுக்கவேண்டும். இதுவரை பால்மட்டும் உண்டுவந்த குழந்தைக்குத் திடீரென பாலுக்கு வேறான சத்துகளுள்ள வேறு உணவுகளைக் கொடாமல், கூடியவரை பாலின் சத்துகள்போன்ற சத்துகளுள்ளதும், அச்சத்துகள் ஏறக்குறைய அவைகளின் அளவுக்கு பாறுபாடின்றிக் கலந்திருப்பதுமான, உணவுப்பொருள்களைக்கொடுத்து அப்பால் வேறு உணவுகளை கொடுக்கவேண்டும். இப்படி கொடுக்கத்தக்க உணவுவகைகளின் சத்துக்களுடைய சராசரி அளவை இதன்கீழ் காட்டுவோம்.

| | | | | |
|---|---|---|---|---|
| பாலில் ஊன்வளர்ச்சி பாகம் | 1-க்கு | உயிர்த்தி உண்டாகும் பாகம் | | 2 |
| கோதுமை மாவில் | ஷை | 1-க்கு | ஷை | 7 |
| சோளம் | ஷை | 1-க்கு | ஷை | 8 |
| கம்பு, கேழ்வரகு | ஷை | 1-க்கு | ஷை | 9 |
| அரிசி | ஷை | 1-க்கு | ஷை | 11 |
| அரோரூட், சவ்வரிசி டாப்பியோக்கா | ஷை | 1-க்கு | ஷை | 26 |

இச்சத்துகள் ஒன்றுக்கொன்று மிக மாறுபட்டிருப்பதினாலேயே இவைகளைக் கையாடுவதில் முதலில் கவனமாயிருக்கவேண்டும். ஆங்கிலேய குழந்தைகளுக்கென்று பலவகை உணவுகள் கடைகளில் விற்பனையாகிவருகின்றன. ஆனால் நம் நாட்டு பெண்களுக்காக இப்புத்தகம் எழுதப்பட்டிருப்பதனால் நாம் எளிதில் உபயோகப்படுத்தக்கூடிய உணவுவகைகளைமட்டும் இதனடியில் காட்டியிருக்கின்றோம். இதில்



சொல்லியிருக்கும் பக்குவப்படி உணவுகளைச் செய்துகொடுத்துவரின் குழந்தைக்கு ஒருநோயும் வராது.

1. கோதுமைமாவு:—இது பாலுக்கு அடுத்த உணவு. கோதுமையைத்தீட்டி திரித்து, நொய்போகச் சல்லடையில் அரித்த கோதுமைமாவில் சிறிது மெல்லிய தூய்மையான துணியில்கட்டி, ஒரு பாண்டத்தில் நீர் நிரப்பி, அதனுள் அந்த மாவுமுடிச்சை வைத்து நாலைந்து மணிநேரத்துக்குச் சிறுகத் தீயெரித்து பின்னர் எடுத்து, முடிச்சை அவிழ்த்துப்பார்த்தால் கெட்டியாக இருக்கும். அதைச் சுற்றிலும் ஒரு ஓலைக்கனம் கத்தியால் செதுக்கி எடுத்துவிட்டு, இடித்துத் துணியில் வடிகட்டி காற்றுப்புகாத மூடியுள்ள ஒரு குப்பியிலடைத்து வைத்துக்கொண்டு வேண்டிய அளவு, அதாவது இரண்டு தேக்கரண்டி மாவை வீசம்படி தண்ணீரில் போட்டுக் காய்ச்சிச் சரிபாகம் பசுப்பால்விட்டுக் கொஞ்சம் சர்க்கரையும் சேர்த்துக் கலந்து ஒவ்வொரு வேளைக்கும் கொடுக்கலாம், இது எளிதில் செமிக்கும்.

2. ரொட்டி:—இதைச சிறுதுண்டுகளாக அறுத்து ஒரு பாத்திரத்திலிட்டு, அதற்கு இருபங்கு தண்ணீர்விட்டு வேகவைத்து இறக்கிப் பிசைந்து வடிகட்டி, அந்தச்சத்தில் ஒருவேளை வேண்டிய ஆகார அளவில் பாதியும், சரிபாகம் பாலுங்கலந்து சர்க்கரை கொஞ்சம் சேர்த்துக் கொடுக்கலாம். குழந்தைக்கு வயது செல்லச் செல்ல ரொட்டி வேகுவதற்குச் சேர்க்கும் நீரைப் படிபடியாகக் குறைத்து, கடைசியில் ரொட்டி கருகாமல் வேகப்போதுமான நீர்மட்டும் சேர்த்து வேகவைத்து அந்த ரொட்டியில் சூடான பாலைவிட்டுப் பிசறி வடிகட்டிக் கொடுக்கவேண்டும்.

3. ரொட்டியை சிறு துண்டுகளாக அறுத்து ஒரு பாண்டத்திலிட்டு நெருப்பருகில்வைத்து, சற்றுநேரம் அந்தச் சூட்டினால் நீர் சுண்டினவுடன் எடுத்து, இடித்துத் தூளாக்கிச் சட்டியிலிட்டு சிறிது சூட்டில் வறுத்து, சிறிது சிவந்த பக்குவத்திலிறக்கி மறு சட்டியில் போட்டு, நன்றாய்க் கடைந்து மெல்லிய துணிகட்டி வடித்தெடுத்த ரொட்டித்தூளைக் குப்பியிலடைத்து வைத்துக்கொண்டு,மேலேசொல்லியபடி பால்சேர்த்துக் கஞ்சி செய்து கொடுக்கலாம்.

4. மேற்சொல்லிய வகைகளைக் கஞ்சிசெய்து கொடுத்துவரும்போது மலச்சிக்கலுண்டானால், கோதுமைமாவு ஒருபங்கும் இவை இரண்டுபங்கும் சேர்த்துக் காய்ச்சிக் கொடுத்தால் மலக்கட்டு நீங்கும். இது மிக நல்ல உணவு.

5. ரஸ்க் ஓர்வித ரொட்டி இதில் வேண்டிய பாகத்தை முன் ரொட்டிக்குச் சொன்னதுபோல், நீரில் வேகவைத்துப் பிசைந்து வடிகட்டிப் பாலுஞ் சர்க்கரையும் சேர்த்துக் கொடுக்கலாம். குழந்தை வயதானபிறகு வடிகட்டாமலே கொடுக்கலாம்.

6. ரொட்டியின் மேற் புரணியாகிய கடினமான பாகத்தையும் இவ்விதமாகவே செய்துகொடுக்கலாம்.

7. கார்ன்ப்ப்வுளோர் என்னும் சோளமாவில் இரண்டு தேக்கரண்டி எடுத்து, ஒரு ஒயின் கிளாஸ் தண்ணீர்விட்டு நன்றாய்க் கலக்கிக் கொண்டு, அதனுடன் அரைக்காற்படி கொதிக்கிற வெந்நீராவது, தண்ணீரும் பாலுங்கலந்து கொதிக்கவைத்த பாலாவது, சேர்த்து அடுப்பில் வைத்து ஐந்து நிமிஷம் காய்ச்சி இறக்கி சிறிது சர்க்கரை கலந்து கொடுக்கலாம்.

8. சின்னச் சம்பாப் பச்சரிசியில் கொஞ்சமெடுத்து நீரில் ஒரு மணிநேரம் ஊறவைத்து நன்றாய்க்கழுவி, கல் மண்ணின்றி அரித்தெடுத்து, வெய்யிலில் காயப்போட்டு செவ்வையாகக்காய்ந்தபின், அதை உரலிலிட்டுக் குத்திப் பொடியாக்கி வைத்துக்கொண்டு, அதில் ஒரு கைப்பிடி நொய்யெடுத்து கொஞ்சம் நீர்விட்டு சிறுக நெருப்பெரித்துக் குழைய வெந்தபின், கொஞ்சம் சர்க்கரை கலந்து கால்மணிநேரம் காய்ச்சி யிறக்கி அதில் வீசம்படி கஞ்சிக்கு வீசம்படி பசுப்பால் விட்டுப் பிசைந்து, குழந்தை பலவீனமாயிருந்தால் வடிகட்டியும் இல்லையேல் வடிகட்டாமலும் கொடுக்கலாம்.

9. அரோரூட் மாவில் இரண்டு தேக்கரண்டி எடுத்து இரண்டு ஒயின் கிளாஸ் நல்ல தண்ணீரில் நன்றாகக் கரைத்து, இரண்டு ஒயின் கிளாஸ் பாலில் கொஞ்சம் சர்க்கரை சேர்த்து, அடுப்பில்வைத்துக் காய்ச்சி கொதிக்கிற தருணத்தில் அரோரூட் கலந்த நீரை அதில் விட்டு, சற்றுநேரம் துளாவி இறக்கி சூடாறினபின் குழந்தைகளுக்குக் கொடுக்கலாம். அதிக மெலிவாயிருக்கும் குழந்தைகளுக்கு இது நல்லது. இதில் ஊன் வளர்ச்சி சத்துகள் அதிகக் குறைவாயிருப்பதால் பால்சேர்க்காமல் கொடுக்கக்கூடாது.

10. சவ்வரிசி, 11. டாப்பியோக்கா, இவைகளை மேற்சொல்லிய பாகப்படி பால் சேர்த்துக் கஞ்சிசெய்து கொடுக்கலாம். ஆனால் குழந்தைகளுக்கு ஒரு வருடமானதின்பின் கொடுப்பது நல்லது.



இவைகள் தவிர ஆங்கிலேய குழந்தைகளுக்கு உபயோகிக்கும் சில நல்லமாதிரி ஆகார வகைகளுண்டு. பிரியமானவர்கள் அதைவாங்கி உபயோகிக்கலாம். அவைகளில் சிலதை இதனடியிற்காண்க.

12. நீவ்ஸ் குழந்தை ஆகாரம்:—இதைக் குழந்தைகள் சாப்பிடும்போது மலச்சிக்கலிருக்கமாட்டாது.

13. ரெவலென்று அரபிக்கா:—மெலிவாயும் அதிக பலவீனமாயுமிருக்கும் குழந்தைகளுக்கு நல்லது. பாலுடன்சேர்த்துக் காய்ச்சிக் கொடுக்கவேண்டும். இது பயறு தினுசுகளிலிருந்து செய்யப்படும் ஓர்வகை மாவு.

14 ராப்ஸ் பிஸ்கட்:—

15. சாப்மான் கோதுமைமாவு:—இது ஒரு பக்குவமாகச் செய்யப்பட்ட கோதுமைமாவு இதனை கஞ்சிசெய்து பால்சேர்த்துக் கொடுக்கலாம்.

இந்த உணவுவகைகளில் குழந்தைகளுக்கு எதைக்கொடுத்தாலும் பாலின்றி தனிமையாகக்கொடுப்பது சரியல்ல. பால்சேர்த்தே கொடுக்கவேண்டும். தவிர எந்த உணவு கொடுக்கவேண்டுமானாலும், முதலில் சிலநாள் ஒருநாளைக்கு ஒருதடவை கொடுக்கவேண்டும். அதனால் குழந்தைக்கு ஒரு வருத்தமுமில்லாமல், உடம்பில் பொருந்துமானால் மூன்று நான்கு தடவையும் கொடுத்துவரவேண்டும். இது கொடுத்தவேளைபோக மற்றநேரங்களுக்குப் பசுப்பால் கொடுக்கவேண்டும். கஞ்சிகாய்ச்சுவதில் பசுப்பால்போல் பாற்புட்டியில்விட்டுக் கொடுக்கத்தக்க பக்குவமாகக் காய்ச்சி புட்டியிலிட்டுக்கொடுப்பது நலம். சிலவேளை வீட்டைவிட்டு வெளியேபோகுங்காலங்களில் தனிப் பசுப்பால் அகப்படாது. அந்தச்சமயங்களில் பாலுக்காக வருந்தாமல் அடியிற்சொல்லும் பக்குவப்படி செய்து இரண்டு மூன்றுநாள் வைத்துக்கொள்ளலாம். ஒரு பெரிய குப்பிநிறைந்த பச்சை பசுவின் பாலுடன், திரிகடி (மூன்று விரலால் எடுக்கக்கூடியது) அதாவது பத்துக்குன்றுமணி நிறை சோடா உப்பைப் போட்டுக் காற்று புகாமல் அடைத்து வைத்துக்கொண்டால், பால் மூன்றுநாள்வரையில் கெடாமலிருக்கும். அல்லது பாலைக்காய்ச்சி அதில் சர்க்கரை கொஞ்சம் கலந்து சூடாயிருக்கும்போதே ஒருகுப்பிநிறைய விட்டு நன்றாய் காற்றுபுகாமல் அடைத்துவைத்துக்கொண்டாலும், கெட்டுப்போகாமல் இரண்டொருநாள் இருக்கும்.

மாவுக்கஞ்சிகளை செமிக்கச்செய்யும் சத்து (உமிழ்நீரில்) எச்சலில் இருக்கிறது. இதன் பெயர் தைலின். சிசுக்களுக்கு மூன்றுமாதம்வரை உமிழ்நீர் அதிகமாக ஊறமாட்டாது. பிறகு ஊறும் எச்சிலிலும் ஆறு மாதமாகிப் பல்முளைக்குங்காலத்தில்தான் இந்த சத்து போதுமான படி உண்டாகிறது. ஆதலால் ஆறுமாதத்துக்குமுன் மாவுக்கஞ்சிகள் கொடுத்தால் செமிக்காமல் பல நோய்களுண்டாகி பல குழந்தைகளுக்கு ஆபத்து உண்டாகின்றது. இதை அறியாமல் பெண்கள் தங்கள் குழந்தைகளுக்கு ஆறுமாதத்திற்குமுன் கஞ்சிகளைக்கொடுத்து விரைவில் மருந்துங் கையுமாய் வருந்துகின்றார்கள். மேற்சொல்லிய காரணத்தினால் ஆறுவதுமாதத்திற்குமேல் பால் சேர்ந்த மாவுக்கஞ்சிகள் கொடுக்கலாமென்றும், அவைகள் செமிக்கக்கூடுமென்றும், கடவுள் படைப்பினாலேயே அறியலாம். அன்றியும் மேற்கண்ட உணவுகளில் ஏதேனும் ஒன்றைக் குழந்தைக்குக்கொடுத்து, அது ஒத்துக்கொண்டு குழந்தையும் செம்மையாய் வளர்ந்து வருமாயின், அதையே கடைசி வரை கொடுத்துவரவேண்டுமேயன்றி ஒன்றுவிட்டொன்று மாற்றிக் கொண்டிருக்கக்கூடாது. அதனால் குழந்தைக்கு நோய் நேரிடலாம். இது நல்லது, அது நல்லது, இது கெட்டது, அது கெட்டது, என்று பலவாராகச் சொல்லுவது நமது நாட்டுப்பெண்களினியல்பு. இதைக் கேட்டு மோசம்போகக்கூடாது. அநுபவமுறையாக இங்கே நாம் சொல்லியிருக்கிறபடி செய்துவருவது உத்தமம்.

இப்படிக் கஞ்சிகள் கொடுத்துவருங்காலத்தில் வயிற்றோட்டங் கண்டால் சர்க்கரை சேர்க்காமல் சிறிது உப்புப்போட்டுக்கொடுப்பது நலம். மலச்சிக்கல் கண்டால் மேலேசொல்லிய கோதுமைக்கஞ்சி முதலானது கொடுக்கலாம். இவ்விதமாக குழந்தையின் உடம்புக்குத் தக்கதாக உணவுகளிலேயே மாற்றிக் குணமுண்டாகச் செய்யவேண்டுமேயன்றி, கண்டதற்கெல்லாம் மருந்து கொடுக்கக்கூடாது. அளவுக்குமிஞ்சி ஆகாரங் கொடுப்பதனால் செமியாக்குணமும், பொருமலுங்கண்டு வயிற்றுவலி உண்டாகும். இதற்கு ஓமநீர் நாலைந்து துளிகள் கொடுத்தால் போதும். உணவிலுள்ளகுற்றங்களினால் வரும்நோய்களுக்கு உணவைமாற்றியே வைத்தியஞ் செய்துகொள்ளவேண்டும். எட்டாம்மாதமுதல் இருவேளை கஞ்சியும், மற்றவேளைகளில் தனிப் பசுப்பாலும், பத்தாம் மாதத்தில் மூன்றுவேளை கஞ்சியும், இரண்டு வேளை பசுவின்பாலும், ஒருவருஷத்திற்குமேல் மூன்றுவேளை கஞ்சியும், மற்ற இரண்டு வேளைகளில் பாலும் ரொட்டியும் கொடுக்கலாம். எட்டாம்மாதத்திற்குமேல் அவசியமின்றிப் பாலில் வெந்நீராவது சுண்ணாம்பு நீராவது சேர்க்கவேண்டியதில்லை. காலை உணவு கொடுக்கிற வேளைக்கு வெகு நேரத்திற்கு முன்னமே குழந்தை விழித்துக்கொள்ளுமானால், அப்போது கொஞ்சம் பால் கொடுக்கவேண்டும். இருபது மாதமாயினபின் ஊன்சத்துக்கள் ஏதேனும் சிறிது கொடுக்கலாம். அரை அவியல் முட்டை ஒன்று சமயங்களில் கொடுக்கலாம். நன்றாகக்குழைய வெந்த கருணைக்கிழங்கு, உருளைக்கிழங்கு சிறிது கொடுக்கலாம். ரொட்டியில் வெண்ணெய், சர்க்கரை தடவிக் கொடுப்பது நலம். ஆனால் இவைகளெல்லாம் கடைவாய்ப் பற்கள் முளைக்குமுன் கொடுக்கிறது நல்லதல்ல. சிறிதுசிறிதாகக்கொடுத்து அது செமிக்கிற வகையைக் கவனித்து சரியாயிருந்தால் வரவர அதிகப்படுத்தவேண்டியது. ஒரேதடவையாக எதையும் மிகுதியாகக் கொடுக்கக்கூடாது. இரண்டுவருஷம் முடியும்வரை இவ்விதமாக உணவு கொடுத்துவரவேண்டும். இது குழந்தைகளுக்கு இருவிதத்திலும் வருத்தமானகாலம். பால்மட்டும் குடித்துவந்த குழந்தைக்கு பாலை நிறுத்தி வேறு உணவு கொடுக்கப்பட்டுவருகிறது. அது ஒத்துக்கொள்ளாவிடில் வருத்தம், மேலும் பல்முளைப்பதனாலும் இப்போது வருத்தமுண்டு. உணவு மாறுவதினாலும், உடம்பிலுண்டாகும் மாறுதலினாலும், பல நோய்கள் இக்காலத்தில் எளிதில் உண்டாகும். ஆதலால் இந்தசமயந்தான் தாய் குழந்தைகளை மிகப் பதனமாய்க் கவலையோடு வளர்க்கவேண்டிய காலம்.

## 10 அத்தியாயம்

### பல் முளைத்தல்

குழந்தைகளுக்கு முதலாவது முளைக்கும் பற்களுக்குப் பால் பற்கள் என்று பெயர். இவைகள் தொகையில் இருபது. சிசுவுக்கு ஆறுமாதத்திற்குமேல் முப்பதுமாதத்திற்குள்ளாக இப்பற்கள் முற்றும் முளைக்கும். சிசு கருப்பத்திலிருக்கும்போதே தாடை எலும்புகளின் ஓரத்தில் பல் உற்பத்தியாகிறது. இதில் சிலது சீக்கிரம் வெளியே வந்துவிடுகிறதினால்தான், சில குழந்தைகளுக்குப் பிறக்கும்போதே பற்கள் முளைத்திருக்கிறதுண்டு. அவைகள் வலிவற்றவைகளானதால் விரைவில் விழுந்துபோம். சில குழந்தைகளுக்கு உடல் வளர்ச்சியின் குறைவினாலே, பதினெட்டு மாதங்களுக்குமேல்தான் பல் முளைக்கிறதுண்டு. மிகச் சிலருக்கு ஆயுள்கால முழுவதும் பல் முளையாமலிருந்ததாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. இது மிக அருமை.

பால் பற்கள் முளைக்குங் காலத்தில் சிசுக்களுக்கு பல பிணிகளால் ஆபத்து நேரிடுவதுண்டு. என முன்னமே கூறினோம். காய்ச்சல், இருமல், வலிப்பு, சிரங்கு, கரப்பான், வயிற்றோட்டம், சீதபேதி முதலிய பல நோய்கள் இக்காலத்தில் நேரிடுவதால், பல் முளைப்பதையே சிலர் ஒரு நோயாக நினைப்பதுண்டு. உணவு, உடைகளில், பதனமாயிருந்தால் அநேகமாய் வியாதிகள்நேரிடாமல் பார்த்துக்கொள்ளலாம். இவைகளில் கவலைத் தாழ்ச்சியினால்தான் குழந்தைகள் அநேக நோய்க்கிடமாகிறது.

பாற்பற்கள் முளைக்கும் ஒழுங்கு:—பெரும்பான்மையாக 7-ம் மாதத்தில் கீழ் முன்பற்கள் இரண்டும், 8-ம் மாதத்தில்மேல் முன் பற்களிரண்டும், 9-ம் மாதத்தின் மேல் முன்பக்கப் பற்களிரண்டும், 10-ம் மாதத்தில் கீழ் முன் பக்கப் பற்களிரண்டும், 12-ம், 13-ம் மாதங்களில் கீழ்முன் கடைவாய்ப்பற்களிரண்டும், 14-ம், 15-ம் மாதங்களில் மேல் முன்கடைவாய்ப்பற்களிரண்டும், 16-முதல் 20-மாதங்களுக்குள் கூர்மையான சிங்கப்பற்கள் நாலும், 20 முதல் 30 மாதங்களுக்குள் பின் கடைவாய்ப்பற்கள் நாலும், இம்முறையாக இருபது முப்பது மாதங்களுக்குள் பல் முளைப்பது வழக்கம். ஆனால் ஒருகாலம் இந்த ஒழுங்கு பிசகி முளைப்பதுண்டு. இந்த இருபத்துநாலு மாதங்களும் சிசுவுக்கு அபாயமானகாலம். ஆனால் இதனடியிற் சொல்லிவரும் விவரங்களை நன்றாய்க் கவனித்து அதன்படி சிசுக்களைக் கவலையாய்ப் பார்த்துவந்தால் பல ஆபத்துகள் நேரிடாமல் பார்த்துக்கொள்ளலாம்.

பல் முளைக்கும்போது உண்டாகும் குறிகள்:—இயல்பாய் அநேககுழந்தைகளுக்குப் பல் முளைக்கும்போது ஒருவருத்தமும் நேரிடுவதில்லை. அப்படி வருத்தம் நேரிடுமானால் எச்சில் அதிகமாக ஊறி வடிந்துக்கொண்டேயிருக்கும். பல்ஈறு சிவக்கத்துவங்கி அதிக வலிகொடுப்பதனால் குழந்தை ஓயாமல் அழுதவண்ணமாயிருக்கும். விரலையாவது, கைக்கு அகப்படும் எந்த வஸ்துவையாவது, பல் ஈறில் வைத்துக்கடிக்கும். ஓயாமல் அழுதுகொண்டிருப்பதினாலும், எச்சில் உட்செல்லாமல் வடிந்துகொண்டிருப்பதினாலும், குழந்தைக்கு தொண்டை உலர்ந்து தாகமதிகமாகி முலைகொடுத்தால், ஆவலுடன் வாயை வைத்து உறிஞ்சிக்குடிக்க எத்தனிக்கும். ஆனால் வலியினாலே உடனே வாயை எடுத்துவிட்டு வீறிட்டழும். சரியாகத்தூங்காது திடீரென விழித்து விழித்து அழும். உடம்பு சிறிதுகாயும். சில குழந்தைகள் வாந்திசெய்யும். வயிற்றோட்டமும் காணும். இக்குறிகள் ஏழாம் எட்

**PANDIT S. S. ANANDAM**

who has been nominated to the Madras Corporation by the Government.



**பண்டிட் எஸ். எஸ். ஆனந்தம்**

அரசாங்கத்தாரால் சென்னை முனிசிபல் கார்பரேஷன் கவுன்சிலராக நியமனம் செய்யப்பட்டார்.

GOLDEN & CO., MADRAS.

உ

# மருத்துவன்

(PHYSICIAN)

A High Class Medical Tamil Monthly

Editor: Pandit S. S. Anandam,

தமிழ் வைத்தியப் பத்திரிகை

ஆசிரியர் பண்டிட் எஸ். எஸ். ஆனந்தம்

மலர் க. | 1929௵ ஏப்ரல்௴ | இதழ் எ.

## உடற்பயிற்சி

### நிற்குதல்

கோணல், மேடுபள்ளமில்லாத சுத்தமான ஒரு சுவற்றின் ஓரத்தில் தன் உடலின் பின்புறம் முதுகு, இடுப்பு, துடை, குதிகால்களின் பின்புறம் முதல், தலையின் பின்புறம் வரையில், (உடலின் பின்பக்கம் முழுவதும்) சுவரில் பொருந்தும்படி நிமிர்ந்து நிற்கவேண்டும். முகத்தில் தாழ்வாயின் முன்பக்கத்தைக் கழுத்தின் பின்பக்கமாக எவ்வளவுதூரம் நிமிர்த்தக்கூடுமோ அவ்வளவு நிமிர்த்தி, கைகள் இரண்டு துடைகளைச் சேர்ந்திருக்கும்படி தொங்கவிடவேண்டும். மார்பை முன் தள்ளி அடிவயிற்றை உள்ளடக்கவேண்டும். தோள்களை அசையவிடக்கூடாது. இதுதான் நம் உடல் இருக்கவேண்டிய சரியானநிலை. அந்நிலையில் நிற்கும்போது உடம்பிலுள்ள தசைநார்கள் வலிவுற்றிருப்பது காணப்படும். மேலும் மார்பு தோள்களைப் பின்னுக்குத் தள்ளுவதால், வயிற்றின் மேற்புறத்திலுள்ள தசைகள் முன்னுக்கு வராமல் சுருங்கி, விலா எலும்புகள் மேல்தூக்கப்பட்டு முன்னுக்குவருவதும் காணப்படும். மேற்சொன்ன இரண்டும் நன்றாய்த் தெரியும்வரையில், உடலின் பின்பக்கம் முழுவதும் சுவற்றில் பொருந்த நின்று முன் தள்ளியபடி பழகுதல் வேண்டும்.

நிமிர்ந்து ஒழுங்காகநின்று உடலின் தசைகளையும், நரம்புகளையும் வலிவுடனிருக்கச்செய்யவும், மார்பை முன்னுக்குத் தள்ளச்செய்யவும் கற்றுக்கொண்டால்,பிறகு சுவற்றின் உதவி வேண்டுவதில்லை.

மேற்சொன்ன இரண்டு விஷயங்களையும் தெரிந்துகொண்டபின் எந்தச்சமயத்தில் எங்கு நின்றாலும், அவ்விடத்தில் மேற்சொன்ன மாதிரியே தாழ்வாய்க்கட்டையை உள்ளுக்கிழுத்துத் தலையை நிமிர்த்தி, தோள்களைத் தளர்த்தித் தொங்கவிட்டு, வயிற்றின் தசைகளை உள்ளுக்கிழுத்து மார்பை முன்னுக்குத்தள்ளி, சுவற்றை ஒட்டிநின்றதுபோல் நிமிர்ந்து நேராகவே நிற்கவேண்டும். மனிதன் நிற்கும்போது அவன் பின்புறம் ஆறடி உயரமுள்ள ஒரு கோலை நிறுத்தினால் அக்கோலின்மீது அம்மனிதனுடைய தலையின் பின்புறம் முதல், அவன் குதிகாலின் பின்புறம்வரையில் படிந்திருக்கவேண்டும். அதாவது கோணலில்லாத அக்கோலைப்போல் மனிதன் உடம்பும் நிற்கவேண்டும்.

## உட்காருதல்

நிலமட்டத்துக்குமேல் குறிச்சி (நாற்காலி) முதலிய ஆசனங்களில் உட்கார்ந்தால் முன்பக்கம், பின்பக்கம், வலப்பக்கம், இடப்பக்கம் சாயாமல் முன்சொல்லியவிதம் சரியானநிலையில் உடலை நிமிர்த்தி, கால்களை உட்பக்கமிழுக்கவேண்டும். தரையில் உட்கார்ந்தாலும் சரியாய் நிமிர்ந்த நிலையில் தேகமிருக்கவேண்டும். படிக்கும்போதும், எழுதும்போதும் அந்தநிலையிலிருத்தல்வேண்டும்.

## நடத்தல்

பறவைகளும், விலங்குகளும் அதனதன் உடல் அமைப்புக்குத் தக்கபடி நன்றாய் கால்களை நீட்டி, ஊன்றி நடக்கின்றன. மனிதர்களில் பலர் சரியாய் நடப்பதில்லை. ஆதலால் நடக்கும்போது உடம்பை சரியான நிலையில் நிமிர்த்தி, மெதுவாகவும் நன்றாகவும் சுவாசித்துக்கொண்டு ஒரேவேகத்தில் போர்வீரன்போல் நடக்கவேண்டும். அப்போது இடுப்பைமுன்பக்கம் வளைத்தும், குதிகால் பூமியில் படும்போது முழங்காலைநீட்டியும், கைகளை வீசியும் நடக்கவேண்டும். இவ்விதம் பழகிக்கொண்டால் வெகுதூரம் நடக்கலாம். சோர்வுண்டாகாது. தசைநார்கள் வலிவடையும். அழகாகவும் தோன்றும். மேற்சொல்லியபடி நிற்கும்போதும், உட்காரும்போதும், நடக்கும்போதும், ஓடும்போதும், உடம்பு நிமிர்ந்த நிலையில் இருத்தல்வேண்டும்.

சில சமயங்களில் அந்நிலையை மறந்து உடலைத் தளரவிட்டு, முதுகை வளைத்துக்கொண்டிருக்கலாம். அச்சமயத்தில் பழக்கம் நினைவிற்கு வந்தால் உடனே தமது உடம்பைச் சரியான நிலையில் கொண்டுவரவேண்டும். சிறிதுகாலம் கொஞ்சம் வருத்தத்துடன் நமது உடலை நிமிர்ந்த நிலையிலிருக்கும்படி பழகுவதால் பிறகு அந்நிலை நமக்கு இயற்கையாய்விடும். அதனால் கிடைக்கும் பலன்கள் அளவிலாதன.

## தூங்குதல்

படுக்கைக்குப் போகும்போது சலோபாதையை நிவர்த்திசெய்து நல்ல தண்ணீரால் பிறப்புறுப்பையும் (ஜனனேந்திரியம்,) முகம், கை, கால்களையும் நன்றாய்க் கழுவிக்கொண்டு, வெந்நீர் அல்லது தண்ணீர் குடித்து கொஞ்சநேரமிருந்து இடது பக்கமாகப் படுத்து முதல் பயிற்சியில் சொன்னபடி கடவுளை நினைத்து, மூச்சு போக்குவரவைக் கவனிக்கவேண்டும். தலையணை தலைக்கும் தோளுக்கும் நடுவில் எவ்வளவு உயரமிருக்கவேண்டுமோ அவ்வளவுதான் இருத்தல்வேண்டும். தலையணை எப்போதும் அதிக உயரமாகயிருக்கக்கூடாது.

## மூச்சுப்பழக்கத்தின் முன்பழக்கம்

உடற் பயிற்சியைப்பற்றிப் பலர் பலவிதமாக எழுதியிருக்கிறார்கள். ஒவ்வொருவருடைய பயிற்சியையும் மேலாகத்தான் சொல்லுகிறார்கள். ஆனால் அவைகளில் நாம் முக்கியமாய்க் கவனிக்கவேண்டியது ஒன்றுண்டு. தேகத்தின் தசை நார்களைமட்டும் பலப்படுத்திப் பெருக்கச்செய்து, மனிதர்க்கு இயற்கையாகிய மிருகத்தன்மை மேலிடச்செய்யாமலிருக்கவேண்டும். எப்போதும் மனோசக்திக்குத் தேகசக்தி மீறினதாயிருக்கக்கூடாது. உலகத்தில் அரிய பெரிய காரியங்களைச் செய்தவர்கள் மனோசக்தியை உடையவர்களே. ஆகையால் நமது அப்பியாசம் தேக,மனோதிடம் உண்டாக்கக்கூடியதாயிருக்கவேண்டும். மனோதிடம் மனம்சாந்தமடைவதால் உண்டாகவேண்டும். மனம் நெஞ்சுத்துடிப்பாகிய நாடிநடை, சுவாசநடை இவைகள் ஒன்றிற்கொன்று சம்மந்தமிருப்பதால், முன்சொன்னபடி மனோவாசி அப்பியாசம் அவசியமாயிருக்கிறது. மூச்சுப் பழக்கங்களிலும் பல பிரிவுகளிருக்கின்றன. நமது முன்னோர்கள் காலை மாலை கடவுளை வணங்கும்போது நிலத்தில் பன்முறை விழுந்து கைகளை நீட்டி வணங்குதல், காதைப்பிடித்துக்கொண்டு தோப்புக்கரணம் போடுதல், ஆல

யம் சுற்றல், அங்கம் புரளுதல், ஆடுதல், பாடுதல் முதலியன அவற்றில் அடங்கும்.

சாதாரணமாகவோ, கருவிகள் மூலமாகவோ செய்யும் உடற்பயிற்சிகளெல்லாம் அமைதியுடனிருந்து செய்யும் சுவாசாப்பியாசத்திற்கு இணையாகாதென்பது வெளியாகிறது. ஆகையினால் உடற்பழக்கத்துடன் சுகாதார விதிகளைக் கவனித்து, ஒவ்வொருவரும் மேற்கண்டுள்ள மனப்பழக்கங்களையும், மூச்சுப்பழக்கங்களையும் பழகிவருதலே நலமென்று தோன்றுகிறது. (தொடரும்)

---

## மதுசாரம்

(151-ம் பக்கத்தொடர்ச்சி)

Cயும் Dயும் ஏன் அதிகப் பந்துக்களைக் கொண்டுவந்தன? அவை தங்களாகாரத்தோடு மதுசாரம் உண்ணவில்லை. வெறுந்தண்ணீரே அருந்தின. ஆதலின், அவை, பந்து உருட்டியதைக் கூர்மையாகப் பார்த்தன. அவற்றின் மூளை, சுத்தமாயும் சுகமாயும் நல்ல வேலைசெய்யச் சக்தியுடையதாயுமிருந்தது.

நரம்புமண்டலத்தில் (Nervous System) நரம்பின் கண்ணறைகளும், நரம்பின்நாரும் (Nervefibre) அமைந்திருக்கின்றன. மூளையிலும், முள்ளந்தண்டுக்கொடியிலும் கண்ணறைகள் அதிகமாயும் உள்ளுறுப்புக்களில் சிலவாயுமிருக்கின்றன.

நரம்பின் நார்கள், நரம்பின் கண்ணறைகளை உடம்பின் எல்லாப் பாகங்களோடும் இணைக்கின்றன. அவை, மூளையிலிருந்தும் முள்ளந்தண்டுக்கொடியிலிருந்தும், உடம்பில் மிகத்தூரமாயுள்ள பகுதிகளுக்கும் நீண்டு செல்லுகின்றன. ஆகவே, நரம்பின் கண்ணறைகளுக்கும் உடம்பின் மற்றப் பகுதிகளுக்கும் சமாசாரங்கொண்டுபோதலே நரம்பின் நார்களின் தொழிலாகும்.

உடம்பிலுள்ள ஒவ்வொரு தசைக்கும் நரம்பு செல்லுகின்றது. இந்நரம்பு தசையினுள்ளே பலகிளைகளாகக் கிளைத்து, அவற்றிலிருந்து அநேக சிறுநரம்புகள் கிளைக்கின்றன. இக்கிளை நரம்புகளிலொன்று ஒவ்வொரு தசைக் கண்ணறைக்கும் செல்லுகின்றது. ஒருவன் தன் தசையை யுபயோகிக்க விரும்பும்போது, அவனுடைய மூளையிலுள்ள நரம்பின் கண்ணறைகள் நரம்பின் நார்களின் மூலமாய்ச் சமாசார மனுப்பித் தசையை யசைக்கச் சொல்லுகின்றன. அப்படியே, நரம்பின் நார்கள் தசையிலுள்ள ஒவ்வொரு கண்ணறைக்கும் சமாசார மெட்டவைத்து; உடம்பிலுள்ள தசையை யசைக்கச்செய்கிறது. Aயும் Bயும் மதுசாரம் உண்டுவந்ததால், அவற்றின் ஜீவதாது உணர்ச்சி குன்றியதால் நரம்பின்வழியாகத் தசைக்குஞ் சரியான சமாசார மெட்டாமற்போனது. அதனால் அவை C. Dயைப்போல நல்லவேலை செய்யக்கூடவில்லை.

"மதுபானமுள்ள நாய்களினும் மதுபானப் பழக்கமேயில்லாத நாய்களுக்கு மிக்க கூர்மையான அறிவும், மிக்கசுறுசுறுப்பும், உடனே கீழ்ப்படியுங்குணமும், சந்தோஷமுண்டாக்குவதற்கு மிக்க ஆசையுமுடையனவா யிருந்தன" வென்று ஹாட்ஜ் பண்டிதர் கூறுகின்றார்.

சிலநாட்களுக்குப்பிறகு, அவ்வூரில் நாய்களுக்குள்ளே நோயுண்டாயிற்று. அவைகட்கு எல்லாப்பரிகாரங்களுஞ் செய்யப்பட்டன. பண்டிதஹாட்ஜ் என்பவருடைய நாய்களுக்குள்ளே மதுபானமுண்டுவந்த A, B நாய்களுக்கு நோய்கண்டு, அவை பெரிதும் இறக்கும் நிலைமைக்கு வந்துவிட்டன. மதுபானமில்லாதிருந்த C, D நாய்களுக்கு நோய் சொற்பமாகக்கண்டு, சீக்கிரமாகச் சௌக்கியமடைந்தன. (மதுபானம் நோயை யெதிர்ப்பதற்கில்லாதபடி தேகத்தை யெப்படிமெலியச்செய்கிறதென்பதைக் கவனியுங்கள்) அன்றியும்,

C, D நாய்களுக்கு 45 குட்டிகளிருந்தன. அவையாவும் உடல் நலமும் வலுவுள்ளனவாயுமிருந்தன. A, B நாய்களுக்கு 24 குட்டிகளிருந்தன. அவற்றுள் நான்கு குட்டிகள்தான் ஆரோக்கியமுள்ளனவாயிருந்தன. அநேகங் குட்டிகள் இறந்து பிறந்தன. சில உயிரோடிருந்தும் அவைகளே உணவருந்துவதற்குஞ் சக்தியில்லாதிருந்தன.

இதனாலே அவற்றிற்கு

(1) வேலை செய்வதற்குச் சக்தியிலும்

(2) தேக சுகத்திலும் தேகத்தைத் தகுதியாக வைப்பதிலும்

(8) தங்களினத்தை உற்பத்திபண்ணுவதிலும்

சீர்கேடுற்றன என்பவை தெளிவாய்த் தெரிகின்றன. இதுநிற்க,

### ஊசிகளில் நூல் கோத்தல்.

ஊசிகளில் நூல்கோக்கும் சோதனையின்பொருட்டு ஒருவன் அவ்வேலையிற்பழகிக் கைதேர்ந்தவனானன். அதன்விவரம் வருமாறு:-

200 ஊசிகள் பஞ்சுமெத்தையில் குத்திவைத்து நூலும் வைக்கப்பட்டது. அவ்விருநூறு ஊசிகளுக்கும் 20 நிமிஷத்திற்குள் நூல் கோக்கவேண்டுமென்பது அவனது கருத்து. அதற்காக அம்மனிதன் ஒவ்வொருநாளும் பழகிக் கைதேர்ந்தவனானான். பிறகு சோதனை யாரம்பமாயிற்று. 14 நாள் அவன் மதுசாரம் அருந்தவேயில்லை. பிறகு, 10 நாளைக்கு அவன் படுக்கைக்குப்போகுமுன் 1 பயின்ட் பீர் குடித்து வந்தான். நூல்கோக்கும் வேலை காலை 10 மணிக்கு ஆரம்பம். (மதுசாரம் 15 லிருந்து 24 மணி நேரம் இரத்தத்திலிருக்குமென்பது உங்களுக்குத் தெரியும்)

இப்போது அவன் செய்த வேலையைப்பார்ப்போம். அவன் மதுபானமில்லாமல் 167ல் ஆரம்பித்தாலும் 20 நிமிஷத்தில், தான்செய்த அப்பியாசத்தின் முதிர்ச்சியால் 191 ஊசிகள் வரையும் நூல்கோக்கும்படி கைதேர்ந்தவனானான். ஆனால் மதுபானஞ்செய்ததும் அவனுடைய முந்தின அப்பியாசமெல்லாங் கெட்டுப் பயனில்லாமற் போயிற்று. உயர்ந்த நிலையிலிருந்தவன் தாழ்ந்த நிலையை யடைந்தான். நன்னிலைமையினின்றும் விலகிக் கேடான நிலைமைக்கு அடிமையானான்.

முதலிலிருந்தவன் நான்காவதானான்.

பண்டித ஜே. ஜே. ஏபில் (Professor j. j. Able) என்பவர் தாமெழுதிய புத்தகமொன்றில் மதுக்குடியாலுண்டான கேடொன்றை உதாரணமாகக் காட்டுகின்றார்:—

"நான் புறாக்களைக் குறிபார்த்துச் சுடும் பந்தயத்திலிருந்தேன். அப்பந்தயத்தைக் கெலித்து, நல்ல வெகுமதியைப் பெறுவதற்குக் குறிபார்த்துச் சுடக்கூடிய கைதேர்ந்தவர்கள் அநேகர்வந்து கூடினர். அவர்களுள் குறிபார்த்துச் சுடுவதில் பிரசித்திபெற்ற ஒருமனிதன், பந்தயங் கெலிப்பதற்காக முன்வந்து நின்றான். யந்திரபலத்தாற் செய்யப்பட்ட 20 புறாக்களை (Mechanical pigeons) ஆகாயத்திற் பறக்கவிட்டனர். அம்மனிதன் 20 தரங்குறிபார்த்துச்சுட்டு அவ்விருபது புறாக்களையுங் கீழே வீழ்த்தினான். முதல்முறை அவனே முதலாவதானான். பிறகு, அவனும் நானும் சிறிது பட்சணமெடுத்துக்கொள்ளக் கூடாரத்துட்போனோம். அங்கே, அவன் ஒருகிளாஸ் உஸ்கி (Whisky) குடித்ததைப்பார்த்தேன். பிறகு வெளிவந்ததும் அவன் இரண்டாம்முறை பந்தயத்திற்கு அழைக்கப்பட்டான். மீண்டும் 20 புறாக்களை ஆகாயத்திற் பறக்கவிட்டனர். அவன் 20 தரங் குறிபார்த்துச் சுட்டும் அவ்விருபதையுங் கீழே வீழ்த்தக்கூடாதவனானான். முதன்முறையில் ஒவ்வொருவரும் அவனுடைய கை வேகத்தையுங் குறிபார்த்துச்சுட்ட திட்டத்தையுங்கண்டு ஆச்சரியப்பட்டவர்களே, இரண்டாமுறையிலும் அவனே பலதரமுங் குறிதப்பிப்போனதைக் கண்டு வியப்படைந்தனர். இரண்டாம்முறை முடிந்ததும் அவன் நான்காவதானான். மதுக்குடி இல்லாதபோது அவன் முதற்றரமானவனாயிருந்தான். மதுக்குடி யிருந்தபோது அவன் நான்காந்தரமானவனானான். அதேன்? மதுசாரம் ஆரோக்கிய நிலைமையிலிருந்த உயிருள்ள கண்ணறைகளைத் தாக்கி, அவற்றைக் கேடான நிலைமைக்குக் கொண்டுவந்தது.

டைப் அடிப்பவர் ஒருவரைப் (Typewriter) பல சோதனைகள் செய்தபோது, அவர் மதுபானம் செய்யாதகாலத்தில் ஒவ்வொரு அரைநிமிஷத்தில் 114 எழுத்துக்களை டைப்அடித்தார் அவர் சிறிது மதுவருந்தியிருந்தபோது, அதேநேரத்தில் டைப் அடித்ததில் 6-எழுத்துக்கள் குறைய 108 எழுத்துக்கள்தான் அடித்தார். அவ்வாறு அரைநிமிஷத்திற்கு 6 எழுத்துக்கள் குறைந்தால் ஒருமணி நேரத்திற்கு 720 எழுத்துக்கள் குறைந்தன.

மதுபானமில்லாதபோது 1000 எழுத்துக்கள் டைப் அடித்ததில் 14 தப்புகளும், மதுபானமிருந்தபோது 31 தப்புகளும் நேர்ந்தன. அச்சடுக்கும்வேலைக்காரர்கள் மதுசாரமுண்டிருந்தால் அவர்கள்வேலை 100 க்கு 10 பங்கு சீர்குலைந்திருக்கிறதாம். எண்களைக் கூட்டுதலிலும், வாசகங்களை அல்லது பாட்டுக்களை ஞாபகத்திற்குக் கொண்டுவருவதிலும் மதுபானிகளே அதிக தவறுகள் செய்கிறார்களாம். பிழைக்கும்வழி யெதுவாயிருப்பினும் அதைப்பற்றிக் கேள்வியில்லை; ஆனால், மதுசாரமட்டுங் கூடாது. அது ஒருவன் சீரைக்குலைத்துக் கேட்டை விளைவிக்கும். பிறகு, முன்னிருந்த நன்னிலையையடைவது மிகக் கடினமாகும். As Sir Frederic Treves Says:—

"A Person Cannot Be at His Best on Alcohol"

"மதுசாரமுண்பவன் நல்லறிவினனாயிருக்கமுடியாது"

ஒவ்வொருவர் சாமர்த்தியந் தெரிந்துகொள்ளவேண்டி பரிட்சையில், பந்தய ஓட்டம் ஓடுகிற சிலருக்குப் பாரம் இடப்படுகிறது, அல்லது அவர்களுக்கிருக்குஞ் சுலபங் குறைக்கப்படுகிறது. அதெப்படியெனின், ஒரு பந்தயத்தில் ஒருபையன் மற்றப்பையனைப்பார்க்கினும் மூத்தவனாயும் பெரியவனாயும் பலசாலியாயு மிருந்தால், அப்பரிட்சை

யைச் சமமாக்குவதற்கும், சிறியபையனுக்கு ஓட்டத்தில் நல்லசமயம் கிடைப்பதற்கும், அப்பெரியபையன் பந்தயம் புறப்படும் இடத்திலிருந்து சிறிதுதூரம் பின்வாங்கி நிற்கவேண்டும். அதுபோலவே, பந்தயவோட்டத்தில் பெரிய படகு சிறியபடகுக்கு நேரங்கொடுக்கவேண்டும். இப்படிச்செய்வதற்கு ஆங்கிலத்தில் "ஹாண்டிகாப்" (Handi cap) என்று சொல்லப்படுகிறது. சுருக்கிச்சொல்லுமிடத்து "ஹாண்டிகாப் என்பது ஓடும்பந்தயத்தில் எல்லோருக்கு மிருக்குஞ் சுலபத்தைச் சமமாக்கும்பொருட்டுச் சிலருக்கிடும் பாரம். அதாவது, பந்தயவோட்டத்தில் மேலான நிலைமையிலிருப்பவனைத் தாழ்வான நிலைமையிலிருப்பவனுக்குச் சமமாக்குதலாம், அதுபோன்றே, மதுசாரம், ஒருவனுடைய வாழ்நாளின் பந்தயவோட்டத்தில், அவனுடைய மேன்மைக்குணத்தைத் தாழ்வடையச்செய்கிறது, உயர்ந்தோனைத் தாழ்ந்தோனுக்குச் சமமாக்குகிறது. உத்தமனுடைய நல்லறிவைப் பாழாக்கி, அதமனுடைய அறிவு கெட்ட நிலைமைக்குக் கொண்டு போகிறது.

ஒவ்வொரு வருடமும் பிழைக்கும்வழி தேடுவதும், பிழைக்கும் வழி தேடுவதற்கு முந்திக்கொள்வதும் மிகக் கடினமாய்விட்டது. ஓரிடத்தில் ஒருவேலை காலியானால் அவ்வொருவேலைக்கு எத்தனையோ ஆட்கள் மேல்விழுந்து வருகிறார்கள். ஆனால், வேலையாட்களைவைத்து நடத்துவோர் மதுக்குடியன்மேல் அவநம்பிக்கைப்படுகிறார்கள்.

ஏனெனின், மதுக்குடி ஞாபகத்தையும்,சுறுசுறுப்பையும், மனவுறுதியையும், விவேகத்தையும், தன்னடக்கத்தையும் (Self control) கெடுக்கிறதென்று அவர்கள் தெரிந்திருக்கிறார்கள். அது வேலைக்காரர்களுக்குள்ளதான மேலான அறிவின் விளக்கத்தைக் கெடுக்கிறது. அவன் நல்லறிவோடு செய்யும் வேலையில் அவனுக்கு இடையூற்றையுண்டாக்குகிறது.

அமெரிக்கா வியாபாரிகளுள்ளே தலைமையானவரான ஸ்காட்லண்ட் தேசத்தாராகிய மிஸ்டர் கார்னேகி (Mr. Carnagie) என்பவர் ஆயிரக்கணக்கான சனங்களை வேலைக்கு அமர்த்தி யிருந்தார். அவர் முற்றும் மதுவிலக்கின் பயனைத் தெரிந்தவரானதால், வேலைக்காரருள்ளே மதுக்குடி விலக்கியவர்களுக்குமாத்திரம் 100-க்கு 10-விகிதம் அதிகச் சம்பளமுயர்த்தி மதுக்குடியர்களுக்கு உயர்த்துவதை மறுத்துவிட்டனர்.

(தொடரும்)

# ஐயவினா

"திருத்தகு ஆயுள்நூற் செழுங்கடற் றுறைசான்ற
மருத்துவப் புலமையோர் மணிமுகப் பார்வைக்குப்
பொறித்திடும் வேண்டுகோள்"

அன்பிற் சிறந்த பெரியோர்களே!

இதன் கீழ் வரும் வேண்டுகோளைச் சிறிது நோக்குவீர்களாக.

"உந்தி தொக்கல் உவாகதம் வெண்லிங்கம்
கந்தமலர்ப் பெடயம் கனக மோரிடை
வந்த பிரணவம் வன்னித் தியாகரி
சந்தில் வெந்து தானும் மஞ்சாடி
அரைமு ளலசாமம் அகீத நீர்பிடம்
விறவிதேனி லுண்ணல் குட்டமும் வீக்கமும்
பிளவையற்ற சூலையு முன்பொடி யானது
குறையத் தீர்க்கும்"

என்ற ஒரு வைத்தியப் பாட்டிற்கு ஒருவர் இதன் கீழ் வரும்

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | உந்தி | = | பச்சைநாவி | |
| 2 | தொக்கல் | = | ரசம் | [வேண்டும்) |
| 3 | உவாகதம் | = | கெந்தகம்(உவாதகம் என்றிருத்தல் | |
| 4 | வெண்லிங்கம் | = | சாதிக்குப்பிலிங்கம் | |
| 5 | கந்தமலர் | = | அரிதாரம் | |
| 6 | பெடயம் | = | மனோசிலை | |
| 7 | கனகம் | = | மிளகு | |
| 8 | பிரணவம் | = | ஓமம் | |
| 9 | வன்னி | = | கொடிவேலி | |
| 10 | தியாகரி | = | அரிசித்திப்பிலி | |
| 11 | சந்தில்வெந்து | = | வெண்பாஷாணம் | |

என்ற உரையையும், இன்னொருவர், கீழ்வரும்

உந்தி-தொக்குக்-கல்= கடலை ஆடையாகப் போர்த்த கல். இது அண்டக்கல் எனப்படும். இதற்குப் பரியாய நாமங்கள்:—வெண்கல், சுண்ணாம்புக்கல் ஆதியனவாம். பெரும்பான்மை பூமி நாதம் விளையு

மிடங்களில் இதனைக் காணக்கூடுமெனவும், அந்த இடத்தைச் சவர்க் காரக் குழி எனவும், அநுபவம் நிறைந்த சித்தர் பலர் கூறுகின்றனர். கடலை ஆடையாக உடுத்த பூமியென்ற பொருள் வந்தமையை வற் புறுத்த வேண்டில்,

"கடல்விளிம் புடுத்த நெடுநில வுலகத்து"

என்ற சான்றோர் வாக்கே இதற்குப் போதிய புட்பக் கோதை யாமெனக. அதுவுமன்றி அச்செய்யுளில் 'பூமி' என்னுஞ் சொல் வெளிப்படையாகவிராது. குறிப்பாகநின்று பொருள் தந்தமையை ஆன்றோர் அருளிய செய்யுள்களிற் காண்க. ஈண்டு அதை விரிக்கிற் பெருகும்.

உவா.கதம்=கருமையுள்ள நாகம் (கருநாகம்=காரீயம்)

வெண்=வெள்ளியரசம். வெண், என்றவிடத்து நேரே ரசத் தைக் குறிப்பதற்கு எடுத்துக்காட்டு வருமாறு:- ரசத்திற்கு சுந்தரம் என்றோர் பெயருமுண்டு. சுந்தரம் என்பது வெண்மை, அழகு என் னுஞ் சொற்களைக் குறிக்குமோர் சொல். இதனை எம் சைவகுரவர் திருஞான சம்பந்த சுவாமிகள் மணிவாய் மலர்ந்த திருநீற்றுப் பதி கத்தில்,

"மந்திரமாவதுநீறு வானவர்மேலதுநீறு
சுந்தரமாவதுநீறு துதிக்கப்படுவதுநீறு"

என்வருந் தேவாரத்தால் அறிந்து மகிழ்க. இன்னும்,

"சூதமென்ற பாஷாணம் சொல்லக்கேளு
சுந்தரமாஞ் சொற்குறியாந் தூமமாகும்
... ... ... .... '..."

என்று போகமுனிவர் அருளிய நிகண்டிற் கண்டு தெளிவுறுக.

லிங்கப்=சாதிலிங்கம்

கந்தம்=கந்தகம்

மலர்ப்பேடு=வெண்டாமரையில் வீற்றிருக்கும் சரஸ்வதியின் பெயரைத் தனக்கு வரித்துக்கொண்ட மனோசிலை, ஈண்டு மனோசிலை என்றபெயர் சரஸ்வதியின் பெயரினின்றும் வந்தவழி கூறவேண்டில்,

"நான்முகன்தேவி நலங்குஞ்சரசோதி
வான்முகவாணி மருவியவெள்ளைச்சி
தாமுகவாக்கி தாமரையாசினி
கோமுகநாமக் கொடுமனோசிலைக்குமே"

என்று தவத்திற் சிறந்த சட்டமுனிவர் கூறிப்போந்தவாற்றால் கண்டுணர்க.

அயம்=கருந்தாது (இரும்பு)
கனகம்=பொன்

அதீதநீர்=கடுங்காரச்செயநீர். அதிதீரநீர் (குருஜெயநீர்) என்று இன்னோரன்ன பொருள்கள் எமது புல்லறிவிற் தென்பட்டன. இன்னும் மேற்கூறிய சரக்குகளுக்கு நாதவிந்து (உப்பு-புளி) என்ற நிரையை நோக்குமிடத்து அவைகளுஞ் சாலப் பொருத்தமுறுவதை யும், ஈண்டு சிறுக நுவல்வாம். மருந்துமுறையில் சரக்குகள் உப்பு புளி சேர்படுகின்றனவோ என அவற்றை வைத்தியர் சிறிது கவனித் துக்கொள்ளுதல் இன்றியமையாததாமென்பதை.

"... ... ... ... உப்பொடு புளிசேர்ந்து உரிசையாகும், உப் பென்று புளியென்று உரைத்துப்பாரே" என்று போகமுனிவர் கூறி யுள்ளார். மேற்கூறியவற்றுள் அண்டக்கற்சுண்ணம், சாதிலிங்கம், கந் தகம், மனோசிலை ஆகிய நான்கும் புளிச்சரக்காமென்றும், எஞ்சிய கருநாகம், ரசம், அயம், தங்கம் என்ற நான்கும் உப்புச்சரக்காமென் றும் அறியக்கிடக்கின்றன.

"மலர்ப்பேடு" இந்தச்சொல், முறையே இலக்குமியையும், சரஸ் வதியையும் கருதத்தக்க அருத்தம் அமைந்திருப்பினும், மேற்கூறிய தங்கத்திற்குப் புளிச்சரக்காக வருவது மனோசிலையானதினால் மலர்ப் பேடு மனோசிலையென்று துணியப்பட்டது. இன்னும் உவா.கதம். இது அமாவாசையை யொத்த கருநாகமென்றும், பூரணச்சந்திரனை நிகர் த்த வெண்நாகமென்றும், இருபான்மையானும் பொருள் கொள்ளத் தக்கதாக விருப்பினும் அவற்றுள் கருநாகமே குட்டம், சூலை, ஆதி யாம் பிணிகளைக் கடிந்தொதுக்க வல்லதாமாதலின், ஒருவாறு எம் மால் கருநாகமென்று உறுதி கொள்ளப்பட்டது. அங்ஙனமே ரச முங் கோடற்குரியது.

"உந்திதொக்கல் ... ... ..." என்ற பாட்டில் இரண்டாமடி யாகிய "கந்தமலர்ப்பெடையம் கனகமோரிடை" என்றது முறையே "கந்தமலர்ப் பேடயம் கனக மோரிடை" என்றேயிருத்தல் சாலப் பொருத்தமுறும் என்ற உரையும் தந்தனர்.

இப்படியே மேற்கூறிய செய்யுளுக்கு இருபிரிவாகப் பொருள் கூறுகின்றனர். அவற்றை தமிழ் ஆயுள்வேதநூல் ஆய்ந்த அறிவுடையோர், அன்புடன் நோக்கி மேற்கூறிய இருவருடைய பொருள்களுள் எது சரியானதென்றும், சரியான அவற்றிற் காதாரம் யாதென்றும், அன்றி, இருவருடைய பொருள்களும் பிழையானதெனின், அச்செய்யுளுக்குரிய சரியான பொருள் யாதென்பதையும், அன்பு கனிந்து இந்த மருத்துவன் வாயிலாக வெளியிடுமாறு அன்னாரைப் பணிவுடன் வேண்டுகிறேன்.

இங்ஙனம்:
உண்மை விரும்பி.

---

# தீ வணக்கமே சிவ வணக்கம் நீர் வணக்கமே மால் வணக்கம்

பண்டித எஸ். எஸ். ஆனந்தம் அவர்கள்

குமரன் பத்திரிகைக்கு எழுதின விஷயம்

பேரிருள் அடர்ந்த தாயின் கருப்பையில் கட்டுண்டு கண்மூடி குருட்டுத் தன்மையிலிருந்த குழவி, கருப்பையை விட்டு வெளிவந்தவுடனே தாயினும் இனிய மருத்துவச்சியால் கண் மாசு நீங்கப்பெற்றுக் கண்திறந்து முதலில் கண்டது ஒளியேயாகும். நாள்தோறும் ஞாயிறு மறைந்தபின்னர் இரவில் விளக்கின் உதவியால் மக்கள் ஒருவருக்கொருவர் முகத்தையும், பிறபொருள்களையும் அறிகின்றனர். நள்ளிருளில் தூக்கத்தில் அழுந்திக்கிடந்து விழித்தவுடன், நமது கண்கள் தீப்பிழம்பாகிய ஒளி, உலகின் செயற்கையால் பொருள்களை நிச்சயித்து மகிழ்கின்றன. காடுதிருந்தி நாடாகுமுன் பண்டைக்கால மக்கள் பகலெல்லாம் உணவு தேடி உண்டு, தூயநீரில் குளித்து மகிழ்ந்து, சூரியன் மறையவும், காட்டிலும், மலைப்பொந்துகளிலும், புதல்களிலுமுள்ள கொடிய விலங்குகட்கும், பாம்பு, தேள் முதலிய நச்சுப் பிராணிகட்கும், பனி, மழை முதலியவைகளின் வருத்தங்கட்கும் அஞ்சித் தங்கள் குடிசைகளில் புகுந்து, கற்களில் தீயை உண்டாக்கி, அச்சமுந் துன்பமும் தங்களை அணுகாதொழியத் தீயைநம்பி வாழ்ந்தார்கள். இன்று கல்வீடுகள் நெருங்கி அடர்ந்த நகரங்களில் மின்சார விளக்குகளில் வாழும், மக்களுக்குத் தீயின் அருமை தெரியாதென்றே



சொல்லலாம். அக்காலத்து மக்கள் தமக்கு உயிர்த்துணையாய் முதன்முதல் கண்ட பொருள் தீயும், பெருந் தீக்கோளமாகிய ஞாயிற்று மண்டலமுமேயாகும். தாங்கள் கண்ணால்கண்ட பொருள்களில் எல்லாம் மிகப் பெரியதும், ஒளிவிட்டெரியக்கூடியதும், உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாததுமாகிய பொருள்களைக் கடவுளின்செயலெனக் கருதி வணங்குவது, நமது மூதாதைகளின் இயற்கை. அதனாலேயே நாம் கண்டவற்றுள் முதற் பெரும்பொருளாகிய ஞாயிற்றின் பெயரைக் கிழமைகளில் முதற்கிழமைக்கு இட்டழைத்தார்கள். இரண்டாவதாக இரவில் குளிர்ந்த கதிர்களால் தங்களை மகிழ்விக்கும் ஒளிப்பொருளாகிய திங்களையே மறுநாளைக்குப் பெயராக இட்டார்கள். அவர்கள் இரவெல்லாம் காடுகளில் தீத்துணையிலிருந்து கீழ்த்திசையை நோக்கி அருணன் உதயத்தை எதிர்பார்த்துத் தவங்கிடப்பார்கள். கிழக்குவெளுத்ததும் ஆடிப்பாடி மகிழ்வார்கள். அவர்கள் முதலாவதாக தீப்பிழம்பாகிய ஞாயிற்றையும், இரண்டாவதாக நீரையுமே துணையாய்க் கண்டார்கள். இத்தீயையும் நீரையும் மக்கள்மட்டுந்தான் கண்டு மகிழ்ந்தார்கள் என்பதில்லை. பகுத்தறிவில்லாத பறவைகளும், கொடிய விலங்கினங்களும்கூட நாள்தோறும் அதனைக்கண்டு மகிழ்கின்றன. அவை அதன் பயனை அனுபவித்தே உயிர் வாழ்கின்றன. இக்கால மக்களுக்கு அறிவு வளர்ந்து, பல்வகை அவாக்கள் மிகுதிப்பட்டமையால் இவர்கள் இயற்கையின் அழகையும் அற்புதங்களையும் கண்டு மகிழ்வதற் கியலாதவர்களா யிருக்கின்றார்கள். ஐம்பெரும் பொருள்களில் தீயானது வெளியே அண்டத்தில் காண்பதைப்போல், மக்கள் உடம்பாகிய பிண்டத்திலும் ஓரளவிலிருந்து மாறுபடாமலிருக்கும்வரையில் உடல் நலங்கெடாது, நோயின்றி நெடுநாள் வாழலாமென்னும் உண்மையையும், அக்காலத்து மக்கள் கண்டறிந்தார்கள். தாங்கள் வசிக்க வீடுகள் கட்டுவதிலும், நாள்தோறும் வாழ்க்கைக்கு வேண்டிய இயற்கைப் பொருள்களைத் தேடித் தொகுப்பதிலும், குளிர்காலங்களில் தங்க [illegible] ப் போதுமான ஆடைகள் உண்டாக்கிக்கொள்ள இ [illegible] டுகளாக்கி, [illegible] ங்களில் தீயை வளர்ப்பதற்கு வேண்டிய உலர் [illegible] சேமித்து வைப்பார் [illegible] மாட்டுச்சாணியையும், எண்ணெய் விதை [illegible] ரியக்கூடிய பாலுள்ள சுள்ளிகளையும் [illegible] பொ [illegible] யும் காட்டில்தேடி எடுத்துத் துணுக்கமாகும். [illegible] மழைய [illegible] பல இடங்களில் அவர்கள் [illegible] கள். தீயை உ [illegible] ண்ணத் தீப்பெட்டி யில்லாத

அக்காலத்தில் பல இடங்களில் எப்போதும் தீயை வளர்த்துக் கொண்டே சிலர் இருப்பார்கள். பனி, காற்று, குளிர் முதலியவைகளுக்கும், பாம்பு, தேள், கம்பளிப்பூச்சி, கொசு, பேன், மூட்டுப்பூச்சி, தெள்ளுப்பூச்சி, புழு, ஈ, தேன்ஈ, குளவி, வண்டு, மண்ணுண்ணிகள் முதலியவைகட்கும், சாம்பல் விரோதப்பொருளெனக் கண்டபடியால் அவர்கள் காலை மாலை நீராடினவுடனே தாங்கள் வளர்க்கும் தீயில் விழும் சாம்பலை உடம்பு முழுதும் பூசிக்கொள்வார்கள். பலருக்கும் பொதுவான பல இடங்களில் எரியைப் பெருக்கிக்கொண்டிருக்கும் வயது சென்றவர்கட்கு மற்றவர்கள் உணவு முதலியன கொண்டு வந்து கொடுத்து உதவிசெய்வார்கள். பொதுவாக வானில்தோன்றும் ஞாயிறு, திங்கள், உடுக்கள் (நட்சத்திரங்கள்), மின்னல், இடி முதலியவைகளையும், எரிமலைகளையும் கண்டு, உலகின்கண் நிகழும் எல்லாச் செயல்களும் ஒளியில் அடங்குமென்றும், அவ்வொளிகளெல்லாம் தீக் கடவுளின் காரியங்களென்றும் அவர்கள் தீர்மானித்தார்கள். இறப்பு என்பது உடம்பிலுள்ள உயிர்த்தீ தன் அளவில் குறைந்து ஒடுங்கி அடங்கிப்போவதுதான் என்றும், தீயை வணங்குவதே கடவுளை வணங்குவதெனவும்தேர்ந்தார்கள். குளிர்காலங்களிலெல்லாம் கூட்டமாய்த் தீக்காய்வார்கள். பிற்காலத்தில் தாம் வசிக்க மண்ணாலும், கல்லாலும், சுண்ணத்தாலும் வீடுகள் கட்டவும், ஆற்றங்கரை, குளக்கரைகளுக்குப் படித்துறைகள் கட்டவும், கற்றுக்கொண்டபிறகு தீ வளர்க்கும் இடங்களில் மழை, காற்று முதலியவற்றால் அத்தீ அவியாதிருக்கவும், தீயை வளர்க்கும் பொருள்களும், தாங்களும் நனையாமல் கூட்டங்களோடு அத்தீக்கடவுளை வணங்கவும், எல்லோர்க்கும் பொதுவாகக் கட்டிக்கொண்ட இடங்களே கோயில்கள் எனப்படும்.

இதனை ஆரியர்கள் யாகசாலை எனக் கூறுவர். தீயானது தங்களுக்குத் துன்பத்தையும் அச்சத்தையும் நீக்கி இன்பத்தைக் கொடுத்தமையாலும், சிவந்த நிறத்துடனிருப்பதாலும், தீக்கடவுளுக்கு உருத்திரனென்றும், சிவனென்றும் பெயரிட்டார்கள். சிவமென்னும் செம்பொருளைத் தீயின் வழியாகவே வணங்கி வந்தார்கள். தீயே இறைவன் வெளிப்படும் வழி. தீயே சிவனுக்குப் பருவடிவம் என்பது அவர்கள் கொள்கை. அப்பழைய உண்மையைத்தான் இன்றும் தமிழர்கள் தங்கள் நடுவீடுகளில் தகழியில் தூய்மையான[illegible]யும் திரியும் சேர்த்து விளக்கேற்றி, நாள்தோறும் தீ வழி[illegible] பகம்[illegible]ன் பற்றி வருகின்றார்கள். மக்கள் உயிர்நீங்குங்காலத்[illegible]ரில் மின்[illegible] [illegible]தெரியாதென்றே



சூடன்கொளுத்திச் சிவனை வணங்குவதும், மக்கள் தாய்வயிற்றினின்றும் பிறந்தவுடன் விளக்கேற்றிப் பார்த்து மகிழ்வதும் இக்கொள்கையைப் புலப்படுத்தும். எந்தப் பொருள்களைத் தீ விரைவில் பற்றி எரிகிறதோ, அந்தப்பொருள்களையெல்லாம் அவர்கள்விரும்பி வாங்குவார்கள். பிற்காலத்தில் வந்த கற்பூரம் என்னும் சூடன் மிகவிரைவில் தீப்பற்றி எரிவதைக்கண்டு, அது தீக்கடவுளுக்கு மிக இன்பமான பொருளெனக்கருதித் தீவளர்த்து வணங்குவதற்குக் கற்பூரத்தையும் எடுத்துக்கொண்டார்கள். மேலும், அவர்கள் வீடுகளில் நடைபெறும் நலந்தீங்குகளில் பாலுள்ள ஆல், அரசு முதலிய சுள்ளிகளைக்கொண்டு நடுவீட்டில் தீவளர்த்தலும், ஆண்டுகள்தோறும், கார்த்திகைநாளில் கோயில்களின் முன் வானுற ஓங்கி வளர்ந்தெரியும் பெருந் தீ உருவைக் காணச் சொக்கப்பனை கொளுத்துவதும், மலைகளின் முகட்டில் விளக்கொளி காண்பதும், விளக்கில்லாக் கோயில்களில் கடவுள் இல்லை எனக் கூறுவதும், வீடுகளிலாயினும், அம்பலங்களிலாயினும் திருவிளக்கேற்றியே தெய்வந்தொழுவதும் செய்துவந்தார்கள். இப்பழக்கம் இந்துக்களிடம்மட்டுமே காணப்படுவதன்று. மற்றும், புத்தர், கிறிஸ்தவர், ஜயினர் முதலியவர்களும் தங்கள் கோயில்களில் இன்றும் பகலிலும் மெழுகு திரியைக் கொளுத்தியே வணங்குகின்றார்கள். இந்துக்கள் இலட்சவிளக்கேற்றி விழாக்கொண்டாடுவதும், ஞாயிற்றைப் பூசிப்பதும் இவ்வுண்மையேயாகும்.

இதனையே அப்பர் சுவாமிகள்,

"எரி பெருக்குவர் அவ்வெரி ஈசனது
உரு வருக்கம தாவ துணர்கிலார்
அரி அயர்க்கரி யானை அயர்த்துப்போய்
நரி விருத்தம தாகுவர் நாடரே" எனவும்,

"அருக்கன் பாதம் வணங்குவர் அந்தியில்
அருக்க னாவான் அரனுரு வல்லனோ
இருக்கு நான்மறை ஈசனையே தொழும்
கருத்தினை நினை யார்கன் மனவரே" எனக் கூறுவதாலும்,

'எரியலால் உருவமில்லை' 'சோதியே சுடரே சூழ்ஒளி விளக்கே' என்பனபோன்ற, வேறு பல பாடல்கள் தேவாரத்திலும், திருவாசகத்திலும் பெரிதும் பயின்று காணப்படுதலாலும், தீவணக்கமே சிவவணக்கமாகும்.

நாராயணன், எனப்பொருள்படும். நீரின் தன்மையன், கடல்... கொண்டிருப்பவன், கடல்நிற வண்ணன், கார்மேகவண்ணன், கரியமேனியன் எனத் திருமாலைப்பற்றி வைணவ புராணங்களில் கூறுவதும் இக்கருத்தேயாகும். இதனால் பண்டைக்காலமக்கள் தமது உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாத வெப்பத்திற் கடுத்தது தட்பமென்பதையும் கண்டு அதனை இரண்டாவதாக வணங்கினார்கள்.

தீயும், நீரும், சிவமும், சக்தியும் எனச் சேர்த்தே வணங்கி வந்தார்கள். நீரின் தன்மையாகிய தட்பத்தைவணங்கும் விஷ்ணுகோயில்களிலும் திருவிளக்கேற்றியும், சூடன் கொளுத்தியும் வணங்குவார்கள். இன்றும் விஷ்ணு கோயிலுக்குச்சென்று கடவுளை வணங்குகிறவர்கட்கு ஆங்குள்ள கோயில் பூசாரி அல்லது குருக்கள் ஆங்குள்ள தட்பத்தன்மையுடைய நீர்க்கடவுளே மால் என்பதை உணர்த்தும்பொருட்டு நீரையே தீர்த்தப் பிரசாதமெனக் கையில் அள்ளிவிடுகின்றார்கள். ஆனால் பிற்காலத்தில் கடவுளை வணங்கும் கோயில் சிலர் வயிறு வளர்க்கும் இடமானதால் சிவன் கோயில், விஷ்ணுகோயில் என்று பிரிக்கப்பட்டு விஷ்ணுகோயில்களில் ஜனக்கூட்டத்தை மிகுதியாகச் சேர்ப்பதற்காக பொங்கல்,சர்க்கரைப்பொங்கல்,சிற்றுண்டிகள் வழங்கவும், வேடிக்கை விநோதங்கட்கும் இடமாக மாறிவிட்டது. முற்காலத்தில் தீக்கடவுளின் பிரசாதம் திருநீறும் (பஸ்மம்) நீர்க்கடவுளின் பிரசாதம் என்பது தண்ணீருமேயாகும். இதனை இன்றும் சிவ விஷ்ணு ஆலயங்களில் காணலாம். வீடுகளிலும் திருவிளக்கேற்றி தீயை வணங்குங்காலம், மணவினைகாலம், புதுமனை புகுங்காலம், பொதுவாக எந்த நலங் தீங்குகளிலும் விளக்கும் நீருமே சேர்த்து வைத்தே வணங்குவதற்காக பக்கத்தில் தண்ணீரையும் ஓர் குவளையில் அல்லது ஒரு குடுவையில் வைத்து வணங்குவார்கள். பிற்காலத்தில் சிவ, விஷ்ணு ஆலயங்களில் போட்டியின்மேல் விழா உருவங்களும், பல கடவுளர்களும், பல வேடிக்கை விநோதங்களும் சேர்ந்து பண்டைக்காலக்கருத்து மாறுபட மக்களுக்கு அக்கருத்தின் உண்மை மறந்துபோய்விட்டது. இதனால் அத்தீவழிபாடே சிவலிங்க வழிபாடானதென்றும்,நீர் வழிபாடே மால்வழிபாடானதென்றும் ஒருவாறு கூறினோம். இதனை வாசகர்களெல்லாம் ஒத்துக்கொண்டு பழைய முறையில்தான் கடவுளை வணங்கவேண்டுமென்பது எமது கருத்தல்ல. பண்டைக்காலத்தில் இவ்வுருவ வணக்கங்களும் மதக்குறிகளும் வந்த காரணங்களைமட்டும் நான் எனது சிற்றறிவுக் கெட்டிய



வண்ணம் கூறினேன். மனிதர்கள் அறிவு வளர வளரக் கடவுள் வழிபாடும், கடவுளைப்பற்றிய கொள்கைகளும் மாறுவதும், தத்துவங்கள் உயர்வதும் இயற்கையேயாகும். பிற்காலத்தில் கல்வி அறிவு வளர வளர, முப்பொருளாகிய பதி பசு பாச இலக்கணங்களைப்பற்றிச் சித்தாந்தநூல்கள் ஒழுங்காக எழுதப்பட்டன. பழைய புராணக்கதைகளும் ஒழியவில்லை. புதிய சித்தாந்தக் கருத்துகளும், புராணக்கதைகளும், கோயில்களில் கலந்து மயங்கித் தற்காலம் காணப்படுகின்றன.

தற்காலம் இந்துமதம் என்று சொல்லுகிற சைவ வைணவ சமயங்களும் வேதாந்தமென்று சொல்லுகிற ஏகான்மவாதமதமும் கலந்து காலத்துக்குத்தக்கபடி சீர்திருத்த மடையவேண்டும். இம்மதங்களைப் பிரித்துக்காட்டும், நெற்றியிலிடும் வெளிச்சின்னங்களை முக்கியமெனக் கருதாமல், கடவுள் ஒன்றென்னும் கொள்கைக்கு வரவேண்டும். ஆயிரக்கணக்கான சிறுதேவதைகளுக்கு உயிர்ப்பலிகளிட்டு, பேயாட்டமாடும் பாமர மக்களுக்கு இயன்றவரையில் தெய்வம் ஒன்றென்னும் உணர்ச்சியை முதலில் உண்டுபண்ணவேண்டும்.

கடவுளைப்பற்றிய கொள்கையெல்லாம் மக்களுடைய மனத்தில் இருக்கவேண்டுமேயல்லாது அவரவர் மதச்சின்னங்களாக உடைகளிலோ, தலையிரிலோ, நெற்றிகளிலிடும் குறிகளிலோ வெளிப்படுத்திக் காட்டிக்கொள்ள வேண்டுவதில்லை. இக்கொள்கையை பரவச்செய்ய வேண்டும். இல்லையேல், நாட்டில் மக்கள் சமாதானமாக ஒற்றுமையோடு வாழ்வதற்கு வழி ஏற்படாது. மதத்தின் பெயரால் நெடுங்காலமாக நடைபெற்றுவரும் கொலை, களவு, பகை முதலிய மகா பாதகங்கள் வளர்ந்துகொண்டுதானிருக்கும்.

---

# தமிழ் (சித்த) வைத்தியத்தைப்பற்றி

சென்னை ஐகோர்ட்டு ஜட்ஜியாயிருந்த

**டாக்டர், சர். எஸ். சுப்பிரமணிய ஐயர் அவர்களின் விண்ணப்பம்**

(1916 - ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் எழுதியது)

நமது நாட்டின்கண் நமக்கு உரிமையான நமது நாட்டு வைத்திய முறையை, உயிர்ப்பிக்க வேண்டுமென்னும் விருப்பம் நம்மவர்களின் மனத்தின்கண் எழும்பியிருத்தல் அனைவரும் அறிந்ததே. சமஸ்கிருத நூல்களில் மட்டும் இம்முறைகள் காணப்படுகின்றன வென்னும் கருத்து தவறாகும்.

தென் இந்தியாவில் சமஸ்கிருதபாஷைவந்து கலப்பதற்கு நெடுங் காலத்துக்குமுன்னமே, உயர்ந்த நாகரீகம் தமிழ்நாட்டி லிருந்ததென்பது அனைவரும் நன்கறிந்ததேயாகும். தமிழர் நாகரீகமடைந்திருந்த காலத்துச் சாத்திரவிருத்தியும், இத்தகைய வைத்தியமுறைப் பயிற்சியும் மிக்க மேம்பாடுற்றிருந்தன வென்பதற்கு, இக்காலத்தும் நம்மிடமுள்ள இலக்கியங்களின்மிகுதியே தக்க சாட்சியாகும். அருமையினையும், பெருமையினையும், உரிமையினையும் பெற்றுள்ள மருந்துகளை முடித்தலில் அக்காலத்து மருத்துவர் (பண்டிதர்கள்) உயர்ந்த முறைகளைக் கையாண்டிருந்தனர். பின்னர் நாளாக நாளாக இந்நூற்களின் பொருள்கள் பல இறந்துபடினும் தப்பித்தவறி நின்றவைகளை வெளியிட்டு அம்மருத்துவக் கல்வியினை வளர்ச்சியடையச் செய்யின் அதனால் விளையும் பயன் மிகப் பெரிதேயாகும். சென்னையின்கண் தென் இந்திய ஆயுர்வேத சங்கமெனும் தமிழ் வைத்தியசங்கம் தக்க திறமை வாய்ந்துள்ளவர்களாலாகியது. மிக்க இன்றியமையாத இந்த வேலையை ஆரம்பித்து நடத்த முன்வந்திருப்பது மகிழ்ச்சி தரத்தக்கது; இச்சங்கத்துக்கு பண்டிதர் எஸ். எஸ். ஆனந்தம் அவர்கள் காரியதரிசியாயிருந்து மிக ஊக்கமாகப் பாடுபட்டு வருகின்றார். இதனை நடத்த மேற்கொண்ட வழியோ எளிதாகவும் கையாளத் தகுந்ததாகவு முள்ளது.

பழைய நூல்களிலுள்ள மிக அருமையான பொருள்களைத் திரட்டி யாவரும் அறிந்து கொள்ளுமாறு எளிய வசனநடையில் எழுதுவித்து வெளியிடுவதும், மாணவர்களைப் படிப்பிப்பதும் இதன் முதல் வேலையாகும். இத்தகைய புத்தகங்களை எழுதி வெளிப்படுத்துவதில் இம்மாகாணத்திலுள்ள தமிழர் யாவரும் இச்சங்கத்தாருக்கு மனப்பூர்வமான உதவிபுரியக் கடமை யுடையவர்களாக வேண்டுமென்பது எனது தீர்மானமான வேண்டுதலாகும். முக்கியமாக அரசர்களும், ஜமீன்தார்களும், வர்த்தகர்களும், செல்வர்களும், இச்சங்கத்துக்குப் பொருளுதவி புரிவார்களென்று நம்புகிறேன். மேலும் பொது நன்மைக்குப் பாடுபடும் சபையின் நிருவாகிகளும், தலைவர்களும் இச் சங்கத்திற்குப் பொருள் உதவி செய்ய வேண்டப்படுகின்றனர்.

மற்றவர்களும் ஆலயம், சத்திரம் முதலிய அறநிலையங்களில் நியாயமான செலவுபோக மிகுதியாகும் தொகையை நோயாளிகளுக்கும், ஏழைகளுக்கும் உபயோகப்படுத்துவதைத் தவிர வேறு நல்லவழி யில்லை.

புத்தகம் வெளிப்படுத்தும் வேலை சிறிது வளர்ச்சியடைந்த பின்னர் சென்னையிலும், இன்னம் முக்கியமான பலவிடங்களிலும் இச்சங்கத்தின் ஆதரவில் தரும வைத்தியசாலைகள் ஏற்படுத்த யோசிக்கப்பட்டிருக்கிறது. இந்த மருத்துவசாலைகளில் வடமொழிப் புத்தகங்களின் முறையைமட்டும் கையாளும் வைத்தியர்கள், அறியாத தமிழ் வைத்திய நூற்பயிற்சியும், மருந்து செய்யும் முறைகளும் மாணாக்கர்களுக்குக் கற்பிக்கப்படும்.

முன்னர் கூறியவாறு தமிழ் மருத்துவமுறை மிக எளிதில் கையாளத் தகுந்ததாயிருத்தலால், இவ்விஷயத்தில் போதுமான உதவி கிடைப்பின் இம்முயற்சி ஓங்கி உயர்ந்து செல்வர்களுக்கும், ஏழைகளுக்கும் பேருதவியைச் செய்யு மென்பது திண்ணம்.

(Sd.) S. சுப்பிரமணியம்.

---

# சித்த வைத்திய முறையைப்பற்றி

## வைத்திய ரத்தினம் பண்டித D. கோபாலாச்சாரியாரின் விரிவுரையின் சுருக்கம்

இந்திய ஆயுர்வேத மகாசபை சுமார் 12-வருஷங்கட்குமுன் கல்கத்தாவில் கூடினபோது காலஞ்சென்ற வயித்திய ரத்தினம் பண்டித டி. கோபாலாச்சாரியார் அவர்கள் அக்கூட்டத்தில் தமிழ் வைத்தியம் அல்லது அகத்திய வைத்தியமுறை என்பதைப்பற்றிப் பேசியதின் சுருக்கத்தை நம் தமிழ் மருத்துவர்களும், தமிழ்மருத்துவத்தில் அன்புள்ள செல்வர்களும் அறிந்திருப்பது இன்றியமையாததால் அதைச் சுருக்கி எழுதுவோம்:—

தென் இந்தியாவில் தமிழ் (அகத்திய) வைத்தியமுறை வழங்கப்பட்டு வருகிறது. இது ஆர்ஷம், தாந்திரீகம், (ஆர்ஷம் - மூலிகை வைத்தியம். தந்திரம்—இரசவர்க்கங்கள், உலோக வர்க்கங்களால் வைத்தியம்) இரண்டு வகை முறைகளும் தமிழ் வைத்தியத்தில் கலந்ததாகக் காணப்படுகிறது. இது ஆரியர்களுடைய வைத்தியமுறைகளைப் போலவே அகத்திய முறையிலும் சிவன் தனது அருட்சத்தியால் நந்திகேசுவரர், அசுவினிதேவர்கள், அகத்தியர் முதலான முனிவர்களுக்கு முறையே வெளிப்படுத்தினர் என்றும் சொல்லப்படுகிறது.

அகத்திய வைத்திய முறையை முதலில் விருத்தி செய்தவர்கள் பதினெண் சித்தர்களென்றும், இவர்களையன்றி திருமூலர், தேரையர், சட்டமுனி, கொங்கணர், புசுண்டர், இடைக்காடர், புலத்தியர், யூகிமுனி, கருவூரார் முதலான சித்தர்கள் சமஸ்கிருத மறியாத தமிழ் நாட்டு யோகிகள் என்றும் அறிகிறோம். இத்தமிழ் வைத்திய முறைக்கு 21-சித்தர்களென்றும், 48-சித்தர்களென்றும் சொல்லுகிறார்கள்.

இதனால் வடதேசத்து ஆர்ஷ வைத்திய முறையைத் தவிர்த்து தென்தேசத்து வைத்திய முறைகள் என்று வகுக்கப்பட்டன.

ஸ்ரீராமன் தென் இந்தியாவுக்கு வருவதற்கு முன்னரே அகத்தியர் இங்கு இருந்திருப்பதால் அவர் தமிழ் வைத்தியத்தைத் திருத்தி அமைத்தபடியினாலோ வேறு எக்காரணத்தாலோ தமிழ் வைத்தியத்துக்கு அகத்தியவைத்தியம் என்னும் பெயர் சிறப்பாய் வழங்குகிறது.

அகத்திய வைத்திய முறையைப் பின்பற்றி பல வைத்திய நூல்கள் தமிழில் வெளியாயிருக்கின்றன. இவற்றுள் தேரையர் எழுதின நூல்கள் மிக அழகாக எழுதப்பட்டிருக்கிறதென அறிகிறோம்.

உலோக வகைகள், ரசவகைகளால் செய்யும் (தாந்த்ரிக) மருந்து முறைகள் தமிழ் நாட்டாருடைய தனி முறையாகவே காணப்படுகிறது. உலோகங்களையும் தாதுவகைகளையும் கொண்டு செய்யப்படும் பஸ்பம், சிந்தூரம், திராவகம் முதலிய பலவகைமுறைகள் வடமொழியிலுள்ள இரச சாஸ்திரங்களுக்கு வேறுபட்டவைகளாகவே இருக்கின்றன. தமிழ் முறைகளின்படி உலோகங்கள் இரசவர்க்கங்கள் முதலியவற்றை நீற்று பஸ்ம சிந்தூரங்களாக எளிதில் செய்துவிடலாம்.

சாரங்கள், (செயநீர்) உப்புவகைகள் இவற்றை பாதாள யந்திரத்தின் உதவியின் நிலத்தின்கீழ் சிலகாலம் அடக்கம்பண்ணிவைத்து ஒருவகை திராவகம் செய்வதுண்டு. இதிலிருந்தெடுக்கப்படும் திராவகத்துக்கு செயநீர் என்று பெயர். இந்த நீரால் பாஷாணம் முதலிய தீயில் எரிந்துபோகும் சரக்குகளுக்கு ஒருவகை சுருக்குக் கொடுப்பதும், செயநீரால் சுருக்குக் கொடுத்த இரசவகை மருந்துகள் நெருப்புக்குப் புகைந்துபோகாமல் கட்டுவதும் வழக்கப்படி செயநீரால் பக்குவம் செய்யப்பட்ட பாஷாணம் முதலிய மருந்துகளை தேன் முதலானவற்றோடு அனுபானமாகக் கலந்து வாதரோகம், சன்னிவாதம் முதலான மிகக் கடுமையான நோய்களுக்குக் கொடுத்துக் குணமடைகின்றார்கள்.



வடமொழியிலுள்ள ஆயுர்வேத நூல்களில் கூறப்பட்டபடி அப்பிரேகத்தை நூற்றுக்கணக்கான புடங்களில் எறித்தாலன்றி, அதிலுள்ள சந்திரிகை என்கிற மினுமினுப்புகள் போகிறதில்லை; ஆனால் தமிழ்முறையின்படி நாய்ப்புகையிலையின் சாற்றினால் அப்பிரேகத்தை பத்துமுறை அரைத்துப் புடமிட மினுக்கமில்லாமல் நல்ல நீறாய் (பஸ்மமாய்) விடுகிறது. இவ்வகையாகப் பக்குவம் செய்யப்படும் அப்பிரேக நீறுக்கு (பஸ்மத்துக்கு) வீரியமும் மிகுதியாயிருக்கிறது.

குரு பஸ்மம்:—பல மூலிகைகளால் மயில்துத்தம் என்னும் துருசை வெண்மையான நீறு (பஸ்மம்) ஒன்று செய்யப்படுகிறது. இதைக் குருபஸ்பம் என்று சொல்வதுமுண்டு. கட்டு மருந்தென்றும் சொல்லுகிறார்கள். இம்மருந்தை மிகக் கொடுமையான நோய்களுக்கு மிகவும் சிறிய அளவில் இரண்டு வேளைக்குமேல் உபயோகிப்பதில்லை. இவ்வகை மிகச் சிறந்த நூற்றுக்கணக்கான முறைகள் தமிழ் வைத்தியத்தில் உண்டு. இம்முறைகள் தென் இந்தியா முழுவதும், இலங்கைத்தீவிலும், சிங்கப்பூர் முதலிய மலேயா நாடுகளிலும், பர்மாவிலும் இப்போது வழங்கப்பட்டு வருகின்றன. புத்த மதஸ்தர்கள் அரசாண்ட காலத்தில் தமிழ் வைத்தியமுறை மற்ற நாடுகளிலும் பரவினதாக அறிகிறோம். இந்தத் தமிழ்நாட்டு வைத்தியமுறைக்குத் தலைவரான அகத்தியரால் ஆயுர்வேத சூத்திரங்களுக்கு விரிவுரை (பாஷியமும்) எழுதப்பட்டிருப்பதாகக் கேள்விப்படுகிறோம். ஆயுர்வேத சூத்திரங்களுக்கு வியாக்கியானம் வரைந்த யோகானந்தநாதரும், தமிழ் வைத்திய முறைப்படி கிரந்தங்கள் இயற்றிய சித்தர்களில் ஒருவர் என்று தெரியவருகிறது. பண்டைக்காலத்திய தமிழ் வைத்திய நூல்கள் ஆங்காங்கு சிதறிக் கிடப்பதெல்லாம் இப்போது வெளியாய் வருகின்றன.

அகத்தியர், தன்வந்தரி முதலானவர்கள் தமிழ் வைத்தியத்துக்குத் தலைவர்களாகக் கருதப்படுகின்றனர். இவர்களே ஆர்ஷ வைத்தியத் தலைவர்களாகவும் ஆகிறார்கள். ஆனால், இவ்விஷயங்களை நன்கு விளக்குவதற்கேற்ற சரித்திரங்கள் கிடைக்கவில்லை. ஆதலால் மேற்கூறியவர்களில், அல்லது நூல்களில் முந்தியவை பிந்தியவை என்ற விசாரணை சாத்தியமானதல்ல. மிகக் கடினம். ஆயினும், எனது புத்திக்கு எட்டினவரையில் தமிழ் வைத்திய நூல்களை ஆராய்ச்சி செய்ததாலும், அவ்வைத்திய முறையைக் கையாளும் வைத்தியர்களுடைய அபிப்பிராயங்களைக் கொண்டும், வடமொழி தாந்திரீக வைத்திய

## சென்னை கவர்னராயிருந்த லார்டு ஆம்தில்

சென்னை மாகாணத்தின் கவர்னராயிருந்த லார்டு ஆம்தில் இ-டியில் ஒரு வைத்திய ஆராய்ச்சி பாடசாலையைத் திறக்கும்போது கூறியதின் சுருக்கம்; ஆதியில் அரபியாவிலும், அங்கிருந்து ஐரோப்பா கண்டத்திலும் பரவி வளர்ந்து வரும் வைத்திய முறை எல்லாம் இந்தியாவிலிருந்து போன அறிவேயாகும். ஆனால் அது மேல்நாட்டாருடைய நாகரீகத்தால் வேறுருப் பெற்று திரும்பி இந்தியாவுக்கு வருகிறது என்று சொன்னார்.

## மருத்துவனுக்கு நன்கொடை அளித்த அன்பர்கள்

(168-ம் பக்கத்தொடர்ச்சி)

| | | | |
|---|---|---|---|
| திரு - P. நாராயணசாமி அவர்கள் கோலாலம்பூர். ரூபா | 15 | 0 | 0 |
| ,, G. முத்துராக்குபண்டிதர் அவர்கள் கோலகங்சார், பினங்கு. | 13 | 8 | 0 |
| சித்தவைத்தியர் K. அப்பாவு பண்டிதர் அவர்கள் பினங்கு. | 8 | 8 | 0 |
| ,, S. K. சாமி அவர்கள் ஜாவா. | 5 | 0 | 0 |
| ,, E. V. முருகையன் அவர்கள் ஜாவா. | 5 | 0 | 0 |
| ,, K. வீரப்பன் அவர்கள் ஜாவா. | 5 | 0 | 0 |
| ,, N. ராசப்பன் அவர்கள் ஜாவா. | 5 | 0 | 0 |
| ,, சங்கு பண்டிதர் அவர்கள் பரமகுடி, ராமநாதபுரம் ஜில்லா. | 2 | 0 | 0 |
| ,, V. S. சண்முகாநந்தவைத்தியர் அவர்கள் மதுரை. | 1 | 0 | 0 |

### மருத்துவனின் அன்பர்கள்

திரு - S. கருப்பையா அவர்கள், ஈப்போ.
,, S. தருமலிங்கம் பண்டிதர் அவர்கள், மதுரை.
,, T. M. அண்ணாமலை செட்டியார் அவர்கள், திருச்சி.
,, E. ஈனமுத்து பண்டிதர் அவர்கள்
புரக்கோட்டை, கொழும்பு.
,, M. R. சங்கரலிங்கம் அவர்கள்
குருணைக்கல், சிலோன்.

திரு - S. பெருமாள் பண்டிதர் அவர்கள்
பலாமரச்சந்தி, கொழும்பு.
,, P. இரத்தின பண்டிதர் அவர்கள்
ஆரணி, பொன்னேரிதாலூகா.
,, S. கோபால்பிள்ளை அவர்கள்
பாளையங்கோட்டை, திருநெல்வேலிஜில்லா.
,, S. சிவானந்தம்பிள்ளை அவர்கள்
சூளை, சென்னை.
,, K. S. சண்முகம்பிள்ளை அவர்கள்
கொழிஞ்சாம்பாறை, கொச்சி.
,, A. செல்லையா அவர்கள்
டிக்கோயா, சிலோன்.
,, M. உலகநாதன் அவர்கள்
மூன்றுவது மருதானை, கொழும்பு.
,, S. R. சுப்பிரமணியம்பிள்ளை அவர்கள்
மாத்துறை, சிலோன்.
,, K. N. திருமலைக்குமார பண்டிதர் அவர்கள்
திருநெல்வேலி.
,, T. பாக்கியம் பண்டிதர் அவர்கள்
கொழும்பு.
,, T. K. பொன்னையா பண்டிதர் அவர்கள்
கிராண்டு பாஸ்ரோட், கொழும்பு.
,, M. இரத்தினசாமி பண்டிதர் அவர்கள்
கட்டுகாஸ்டோட்டா, சிலோன்.
,, T. S. ஒளிமுத்து மருத்துவர் அவர்கள்
கொழும்பு, சிலோன்.
,, பண்டிதை A. நாராயணி அம்மா அவர்கள்
ஜார்ஜ்டவுன், சென்னை.
,, R. A. சுப்பையா அவர்கள்
குருணைக்கல், சிலோன்.
,, ப. பிச்சக்கண்ணு பண்டிதர் அவர்கள்
முன்னீர்பள்ளம், திருநெல்வேலிஜில்லா

திரு - வி. பார்த்தசாரதிபிள்ளை அவர்கள்
மயிலாப்பூர், சென்னை.

,, K. ராமையா பண்டிதர் அவர்கள்
தென்காசி, திருநெல்வேலிஜில்லா.

,, V. அருணாசல வைத்தியர் அவர்கள்
வண்ணார்பேட்டை, திருநெல்வேலிஜில்லா

,, T. S. துரைசாமி பண்டிதர் அவர்கள் சிதம்பரம்.

,, S. K. ராமசாமி பண்டிதர் அவர்கள்
பிள்ளையார்பாளையம், மதுரை.

,, S. வெள்ளையன் பண்டிதர் அவர்கள்
முனிசிபல் ஆஸ்பத்திரி, திருநெல்வேலி.

,, சுடலைமுத்து பண்டிதர் அவர்கள்
பத்தமடை, திருநெல்வேலிஜில்லா.

,, Y. சுப்பையா பண்டிதர் அவர்கள்
அம்பாசமுத்திரம், திருநெல்வேலிஜில்லா.

,, சுப்பிரமணிய பண்டிதர் அவர்கள்
புலியூர் குறிச்சி, திருநெல்வேலிஜில்லா.

,, பண்டிட் K. கோவிந்தராசன் அவர்கள் சிங்கப்பூர்.

,, சி. த. சுடலைமுத்து பண்டிதர் அவர்கள்
வெளிவேரியா, கொழும்பு.

,, S. செல்லையா பண்டிதர் அவர்கள்
ஏருவாடி, நாங்குநேரிதாலுக்கா.

,, பொன்னையா பண்டிதர் அவர்கள்
பாலயம்பட்டி, ராமநாதபுரம்ஜில்லா

,, திருவாழிப்பெருமாள் அவர்கள்
ஆழ்வார் திருநகரி, திருநெல்வேலிஜில்லா

,, K. M. சுப்பையா பண்டிதர் அவர்கள் கொழும்பு.

,, T. சுப்புபண்டிதர் அவர்கள்
கீழ்க்கல்லூர், திருநெல்வேலிஜில்லா.

,, P. S. M. E. மகமதுயாகூப்சாகிப் அவர்கள்
கணையூர்போஸ்ட், மடத்துக்குளம்.

## மருத்துவனின் அன்பர்கள்

திரு - V. M. வீரண்ணன் அவர்கள்
பரமகுடி ராமநாதபுரம்ஜில்லா.

,, குப்பழகு பண்டிதர் அவர்கள்
சோழவந்தான் போஸ்டு, மதுரை ஜில்லா

,, வ. பெ. பெருமாள்பண்டிதர் அவர்கள்
ஸ்ரீ வைகுண்டம் தாலுக்கா திருநெல்வேலி ஜில்

,, பாலையா அவர்கள்
கிளார்க் சப்டிவிஷனல் ஆபீஸ் ஸ்ரீவைகுண்டம்,
திருநெல்வேலிஜில்லா.

,, அ. ஐயா பிள்ளைபண்டிதர் அவர்கள்
மட்டுக்காமா, சிலோன்.

,, M. கருப்பையா அவர்கள்
பெரியமணிக்கவத்தை. டிக்கோயா சிலோன்.

,, S. ஜீவரத்தினம் அவர்கள் கம்பளை, சிலோன்.

,, வி. நாயனார் அவர்கள்
நாகர்கோயில், திருநெல்வேலிஜில்லா.

,, A. T. நடராஜ பண்டிதர் அவர்கள்
மொரட்டுவா, சிலோன்,

,, பண்டிட் P. பொன்னையா அவர்கள்
கட்டுகாஸ்தொட்டை, சிலோன்.

,, கெ. நடேசபண்டிதர் அவர்கள்
பட்டர்வொர்த், பினாங்கு.

,, வி. குப்புசாமி பண்டிதர் அவர்கள் சிங்கப்பூர்.

,, பி. நாராயணசாமி அவர்கள் கோலாலம்பூர்.

,, K. ஆறுமுகம்பண்டிதர் அவர்கள்
சேது சுப்ரமணியபுரம், திருச்செந்தூர்.

,, P. M. சுப்பையாபண்டிதர் அவர்கள்
சிலேவ்ஐலெண்ட், கொழும்பு.

,, முத்திருளப்பன்பண்டிதர் அவர்கள்
வடக்கு கார்சேரி, திருநெல்வேலி ஜில்லா.

,, சின்னையாபண்டிதர் அவர்கள்
மேலப்புத்தூர், திருச்சி.

திரு - K. முனிசாமி அவர்கள்
லோரம், சிங்கப்பூர்.

" M. சுப்பையன் பண்டிதர் அவர்கள்
டைப்பிங் பேராக்.

" டி. எஸ். வீராசாமிபண்டிதர் அவர்கள், சிங்கப்பூர்.

" க. நடேசன்பண்டிதர் அவர்கள்
கோலகங்சார், பேராக்.

" பொன்னுசாமிபண்டிதர் அவர்கள், திருச்சி.

" G. முத்துகுமாரசாமிபிள்ளை அவர்கள், சிங்கப்பூர்.

" எம். அழகியநம்பிவாத்தியார் அவர்கள்
வடிவீசுரம், திருநெல்வேலி ஜில்லா.

" எ. சி. நாயுடு அவர்கள், இரங்கூன்.

" பா. பழனி பண்டிதர் அவர்கள்
புதுப்பேட்டை, திருநெல்வேலி.

" N. இராமலிங்கம்பண்டிட் அவர்கள்
பாளையம், திருவனந்தபுரம்.

" உபாத்தியாயர் K. சீதாபதி அவர்கள்
மீஞ்சூர், பொன்னேரி.

" தேவதாசர் B. A. L. T. சித்த வைத்தியசாலை
தேவநல்லூர், தின்னனூர்.

" சி. நல்லமுத்துபண்டிதர் அவர்கள், திருநெல்வேலி.

" சின்னையாபண்டிதர் அவர்கள்
நத்கம், மதுரைஜில்லா.

" எஸ். சண்முகம் அவர்கள்
பால்மெர்ஸ்டன், சிலோன்.

" V. S. கந்தசாமிபண்டிதர் அவர்கள்
பணடுரை, சிலோன்.

" A. சண்முகம்பண்டிதர் அவர்கள்
சிக்கல் நாசுப்பையன் கிராமம், திருெ – பாது

" K. முத்துசாமிபண்டிதர் அவர்கள்
ராகாமா, சிலோன். முத்துவன் ஆபீஸ்
தங்கசாலைத்தெரு, சென்உ

# ஒரு சீர்திருத்தத் திருமணம்

17-8-29-ல் காலை மதுரை திரு. K. கருப்பையா மருத்துவரின் மூன்றாவது புதல்வன் K. K. கருப்பண்ண மருத்துவருக்கு நாகை திரு. K. முத்தையா மருத்துவரின் மகள் கர்ப்பகத்தம்மாளை மணம் செய்துகொடுப்பதன்பொருட்டு மதுரை கான்பாளையம் 4 - நெம்பர் சந்து 33 - ம் நெம்பர் இல்லத்தில் பார்ப்பனீய சடங்கை விடுத்து மதுரை திரு. ரா. பச்சையாண்டி மருத்துவரால் திருமணச்சடங்கு தமிழில் மிக அழகுடன் நடைபெற்றது.

அதன் பின்னர் மதுரை திரு. வி. எஸ். சண்முகானந்த வைத்தியரால் கடவுள் வணக்கம் மங்களவாழ்த்துப்பாடல் பாடப்பட்டது. வந்திருந்தவர் மணமக்களை வாழ்த்தினார்கள். நாகை. M. ரெங்கசாமி மருத்துவர் அவர்கள் நடுவில் வந்த மூட வழக்கங்களை விடுத்து தற்கால நாகரீகமுறையைக் கைக்கொள்ளுதலே நலம் என்பதைப்பற்றி ஓர் பிரசங்கம் செய்தார். இத்திருமணத்தின்பெயரால் நமது நாட்டின்கண் சுயமரியாதைக்கு உழைத்துவருகின்ற பத்திரிகைகளாகிய குடி அரசு, திராவிடன், மருத்துவன் மூன்றுக்கும் ரூபா ஒன்றுவீதம் நன்கொடை அனுப்பப்பட்டது. என்று ஒரு நிருபர் எழுதுகிறார்.

# தண்ணீர் கஷ்டம்

மதுரை நகருக்கடுத்து மூன்றுமைல் தொலைவிலுள்ள மாடக்குளம் என்னும் கிராமத்தில் வசிக்கும் முகமதியர், மருத்துவர், வண்ணார் முதலானோர்கள் வழக்கமாக கிராமப் பொதுக்கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்துவருவது வழக்கம். இப்போது ஆங்குள்ள உயர்ந்த சாதியார் என்போர் தண்ணீர் எடுக்கக்கூடாது என்று தடுத்திருக்கிறதினால் முகமதியர் தங்களுடைய சொந்த நிலங்களிலேயே கிணறு வெட்டிக்கொண்டார்கள். அங்குள்ள ஏழை மருத்துவர், வண்ணார் ...ளவர்கள் கிணறு வெட்டிக்கொள்ள சக்தியற்றவர்களாயும், ...ங்கு தமது கஷ்டத்தை தெரிவித்துக்கொள்ள திறமை ...பதால் பக்கத்திலுள்ள ஏரியின் அழுக்கு நீரை ...ர் வற்றிப்போன காலங்களில் அவர் படும்

## மருத்துவன்

தண்ணீரில் பலவித விஷக்கிருமிகளிருக்கிறதென்று மருந்துகள் அதனுடன்கலந்து வடிக்கட்டி சுத்திசெய்து, கொடுக்கப்படுகின்ற குழாய்த் தண்ணீரைக்கூட காய்ச்சிக் குடிக்கவேண்டுமென்று சுகாதார இலாகா அதிகாரிகள் பலவிளம்பரங்களை செய்துவருகின்ற இக்காலத்தில் நம் நாட்டிலுள்ள மாடக்குளம் கிராமவாசிகளில் உயர்ந்த சாதியார் என்பவர் மதுரைக்கு அடிக்கடி வந்து ஷை விளம்பரங்களை கேள்விப்பட்டிருந்தும், அங்குள்ள ஏழைமக்களாகிய மருத்துவர், வண்ணார் முதலானோர்களை தற்சமயம் பொதுக்கிணற்றில் தண்ணீர் எடுக்கக்கூடாதென்று தடுத்து ஆடு, மாடுகளைக் கழுவுவதற்கும் மலசலங்கழித்தவர்கள் சுத்தஞ்செய்வதற்கும் தகுதியற்ற ஏரியின் நீரை அருந்தும்படி விடுத்திருப்பது பரிதாபமன்றோ.

மதுரைக்கடுத்த மாடக்குளம் கிராமத்துக்கு அஜிஸ்ஸர், அம்பலம் பெரியசாமி அவர்களும், கர்ணம் தங்கையா என்ற நாகுப்பிள்ளை அவர்களும் தலைவர்களாக இருந்து ஷை கிராமத்திலுள்ள எளியோர்களாகிய மருத்துவர், வண்ணார்முதலானவர்கள் கிராமப் பொதுக்கிணற்றில் தண்ணீர் எடுப்பதை தடுத்திருக்கிறார்கள் என்பதை கேள்விப்பட்ட நாங்கள் மிகவும் வருந்துகின்றோம்.

ஆகையால் மதுரைஜில்லா கனம் கலெக்டர்துரை அவர்களும், கனம் போக்ஸ் துரை அவர்களும், கனம் முத்துசெட்டியார் (தாலுக்கா போர்டு பிரசிடென்ட்) அவர்களும், மிக விரைவில் ஷை கஷ்டத்தை நீக்குமாறு அதிக தாழ்மையுடன் வேண்டிக்கொள்கிறோம். என்று ஒரு நிருபர் எழுதுகிறார்.

### மருத்துவனுக்கு ஏஜண்டு

கோலாலம்பூர், கோலகங்சார், டைப்பிங் முதலிய F. M. S. வர்களுக்கு இராமநாதபுரம் G. முத்துராக்கு பண்டிதர் அவர்கள் மருத்துவனுக்கு சந்தாதாரர்களைச் சேர்க்க அன்புடன் முன்வந்துள்ளார். அன்பர்கள் G. முத்துராக்கு பண்டிதர் அவர்களிடம் மருத்துவனுக்கு அளிக்கும் நன்கொடை, சந்தாதொகைகளை அவர்மூலமாகவும் நமக்கு நேரிலும் அனுப்பி மருத்துவனை ஆதரிக்கப்பெ கேட்டுக்கொள்ளுகின்றோம்.

மானேஜர்: ம... ஆபீஸ்
221, ...லத்தெரு, சென்னை

தமிழ்நாடு ...
21848
... 600 008



தென் இந்திய மருத்துவர் இரண்டாவது [illegible] மகாநாடு. 1925

*Regd. No. M. 2418*

# MARUTHUVAN

## (PHYSICIAN)

A High Class Medical Tamil Monthly

Editor: Pandit S. S. Anandam.

Sample Copy Free on Application

**Add:— Manager.**

**MARUTHUVAN OFFICE**

**221, Mint Street,**

MADRAS.

## மருத்துவன பத்திரிகை சந்தாதாரர் களுக்குள்ள பெரிய லாபம்.

பாலர் பரிபாலனம், பாலர் வைத்தியம்

மருத்துவனில் மாதந்தோறும் எட்டுப்பக்கம் (ஒரு பாரம்) 'பாலர்பரிபாலனம் பாலர்வைத்தியம்' என்பதன் சம்பந்தமாகப் பல அரிய பெரிய விஷயங்கள் வெளியாகும். இப்புத்தகம் சுமார் முப்பது பாரத்துக்குமேல் வரும். சந்தாதாரர்கள் அதனைச்சேர்த்து ஒரே புத்தகமாகப் பைண்டு செய்து கொள்ளவேண்டும். இல்லறத்திலிருந்து மக்கள் பேறு அடையும் ஒவ்வொருவருக்கும் இப்புத்தகம் பெருநிதியைப்போன்றது. பாலரை நோயணுகாமல் வளர்க்கும்முறைகளும், பாலர்களுக்குவரும் நோய்களுக்குத் தாங்களே பரிகாரம் செய்துகொள்ளும் வழிகளும் இப்புத்தகத்தில் தெளிவாக விளக்கிக் காட்டப்பட்டிருக்கின்றன. இப்புத்தகத்தைப் பெண்கள் எல்லோரும் படி[ப்]பதால், சிசு தாயின்கருப்பையினின்று வெளிப்படுங்காலத்தில் அ[...] லிருந்து பரிகாரஞ்செய்ய மருத்துவச்சி தேடவேண்டியதில்லை. [...]டிலுள்ள பெண்பாலார் தாங்களே ஒருவருக்கொருவர் உதவி[...] கொள்ளலாம். இப்புத்தகம் மருத்துவர், மருத்துவச்சிகளுக்[கும்] மருத்துவமாணவர் மாணவிகட்கும், பொது ஜனங்கட்கும் தோ[...] துணையாக உள்ளது.

மானேஜர்:—**மருத்துவன் காரியாலயம்**

221, தங்கசாலை

---

Printed by The Sree Subramaniya Vilasam Press, NO 220. Mint Stre[et] M[adras]
& Published by Pandit S. S. Anandam, 221, Mint Street, Madras.

# மருத்துவன்

ஓர் உயர்ந்த வைத்திய மாதப் பத்திரிகை.

இம் மருத்துவன் ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றி
யாத வேண்டியவன். இவன் நோயணுகா விதிகளை ஆண், 
ஆகிய இரு பாலாருக்கும் போதிக்கக் கூடியவன், வந்த
களை எளிதாகப் போக்கிக் கொள்ளும் வழிகளைக் கூறுபவன்,
கள் கருப்பெற்ற காலத்திலும், கரு உயிர்க்கும் காலத்திலும் ந
கொள்ள வேண்டிய முறைகளையும், பாலர் பரிபாலனத்
குழந்தைகளுக்கு வரும் நோய்களையும், அவற்றிற்குரிய பரிகார
ங்களையும் அறிவிப்பவன். பொதுவாக மக்கள் நோயின்றித் தேக பல
தோடும், நீண்ட ஆயுளுடனும் வாழ்வதற்குரிய வழிகளை ஆராய்ச்
முகத்தால் எடுத்து விளக்குபவன். மக்களுக்கு உயிரினும் சிறந்
பொருள் உலகில் வேறொன்றுமில்லையாதலால், ஒவ்வொருவருடை
உயிர் வாழ்க்கைக்கும் இம்மருத்துவன் உற்ற துணைவனாவான்.

## மருத்துவனின் சந்தா விவரம்.

ஆண்டு 1-க்குத் தபாற் கூலியுட்பட உள்நாடாகிய இந்
இலங்கை, பர்மா முதலிய இடங்களுக்கு ரூ. 3—0—0.

பினாங்கு, சிங்கப்பூர், கோலாலம்பூர், தென் ஆபிரிக்கா முதல
வெளி நாடுகளுக்கு ரூ 3—8—0

தனிக்காப்பி அணா 0—4—0.

ஓராண்டுக்குக் குறைந்த சந்தா கிடையாது.

பத்திரிகை ஆங்கிலமாதக் கடைசியில் வெளிவரும்.

## சந்தாதாரர்கள் கவனிக்கவேண்டியவை.

சந்தா தாரர்களாகச் சேருகிறவர்கள் தங்கள் பெயரைய
முழு விலாசத்தையும் அருகிலுள்ள தபாலாபீசோடு தெளிவ
எழுத வேண்டும்.

சந்தா தொகையை முன்னரே செலுத்தியாவது
வி-பி-யில் செலுத்தியாவது பத்திரிகையைப் பெற்றுக்
வேண்டும்.

ஆண்டின் நடுவில் சேருகிறவர்களுக்கு முன் பத்தி
வேண்டுமானால், இருக்கும் சஞ்சிகைகள் மட்டும் அனுப்பப்ப

## செந்தமிழ், மதுரை

மருத்துவன்:—இஃதொரு புதிய மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை. டிட் எஸ். எஸ். ஆனந்தம் அவர்கள் இதன் பத்திராதிபராவர். ழ்வைத்தியமுறைகளைப் பரவச்செய்தலும், மருத்துவர் முன்னேற் க்கு உழைத்தலும் இதன் முக்கிய நோக்கங்களென்று தெரி து. வருடச்சந்தா ரூபா 3. தனிப்பிரதி அணா 4.

## ஸ்வராஜ்யா (தமிழ்), சென்னை

மருத்துவனின் முதலாம் ஆண்டு இரண்டாம் இதழ் கிடைக்கப் பெற்றோம். இச்சஞ்சிகையில் காணப்படக்கூடிய விஷயங்களை இதன் பெயரே விளக்குகின்றன. பண்டிதர் ஆனந்தர் அவர்களின் பெயரைப் பலரும் நன்கு அறிந்திருப்பாராதலால் நாம் அவரைப்பற்றி ஒன் றும் குறிக்கவேண்டிய அவசியமில்லை. உடல் நலன் விஷயத் தில் சிறிதும் கவனம் செலுத்தாது, தேகவலிமையை இழந்து, மெலி ய சரீரத்தைத்தாங்கி எலும்புக்கூடுகளாய் உலவிவரும் மக்களுக்கு டலைக் காத்துக்கொள்ளவேண்டியதன் அவசியத்தை "மருத்து வன்" மூலமாக வற்புறுத்த முன்வந்திருக்கும் பண்டிதர் ஆனந்தம் அவர்களுக்கு நமது பாராட்டு உரியதாகுக. தமிழ் வைத்தியமுறையை தன் பண்டைய உன்னத நிலைக்கு உயர்த்தவேண்டுமென்பதே 'மருத்துவனின்' கொள்கை. இதில் வைத்தியசம்பந்தமான பல கட் டுரைகள் காணப்படுகின்றன. நமக்குக் கிடைத்துள்ள இதழில் செம் பின் இயற்கைக்குணம், பித்தளை, மாதரும் மருத்துவமும், கடுக்காயின் பெருமை, குழந்தைகள் பருதி முதலிய விஷயங்கள் திகழ்கின்றன. நாம் திடகாத்திர சரீரியாயிருக்கவேண்டுமென எண்ணங்கொண்டிருக் கும் ஒவ்வொருவரும் இம் 'மருத்துவனை' ஆதரித்தல் வேண்டும்.

## குமரன், காரைக்குடி

சென்னையினின்றும் மாதந்தோறும் வெளிவரும் மருத்துவன் னும் பத்திரிகையின் முதலிரண்டு இதழ்கள் கிடைக்கப்பெற்றோம். யனால்லாத தலைவர்களிலொருவராகிய பண்டித எஸ். எஸ். ந்தம் அவர்கள் இப்பத்திரிகையின் ஆசிரியர். குறைவற்ற செல்வ ய நோயற்ற வாழ்க்கைப் பெறுவதற்கு மருத்துவன் தமிழ் மக்களுக் பெரிதும் உதவிபுரிவானெனக் கூறவேண்டியதில்லை. பண்டைத் தமி கையாண்டுவந்த மருத்துவமுறைகள் மருத்துவனால் வெளியி டுகின்றன. பலவித நோய்களுக்காளாகியிருந்தும் நம் நாட்டுக்கு

## பண்டிட் ஆனந்தரின் தமிழ் வைத்திய சாலை,

சென்னை ஐகோர்ட் ஜட்ஜ்.

### சர். டி. சதாசிவ ஐயர் எம். ஏ. பி. எல் அவர்கள்

பண்டிட் எஸ்.எஸ்.ஆனந்தம் அவர்கள் புகழ்பெற்ற பரம்பரை மருத்துவ குடும்பத்தில் பிறந்தவர். இவருடைய மருத்துவ சாலையில் செய்யப்படும் மருந்துகளில், ஜீரணி லேகியம், மகா சந்தனாதித்தைலம், கல்நார் பற்போடி முதலியவைகளை நானும் எனது குடும்பத்தினரும் உபயோகித்து அதன்குணத்தைப்பற்றி மிக மகிழ்ச்சியடைகின்றோம். இவர் நமதுநாட்டு மருத்துவத்தை முன்னேற்றவும், மருத்துவத்தொழிலுக்குரிய மருத்துவ வகுப்பினர்களை நல்ல மருத்துவர்களாக்கவும் மிகப் பாடுபட்டு வருகின்றார்.

சென்னை ஐகோர்ட்டு ஜட்ஜ்.

### ஆனரபில் டி. வி. சேஷகிரி ஐயர் அவர்கள்

"பண்டிட் எஸ். எஸ். ஆனந்தம் அவர்களின் சந்தனாதித் தைலம் கண்ணுக்குக் குளிர்ச்சியையும் தேகத்துக்கு ஆரோக்கியத்தையும் உண்டுபண்ணுகிறது."

### இராமநாதபுரம் அரசர் எம். எல். சி.

(ராஜ ராஜேசுவர சேதுபதி அவர்கள்)

பண்டித எஸ். எஸ். ஆனந்தம் அவர்களை வெகுகாலமாக எமக்குத்தெரியும். அவர் வழி வழி வந்த மருத்துவ குடும்பத்தில் பிறந்தவர். அவருடைய அமுதசுரபி என்னும் தாதுவிருத்தி லேகியம், மகா சந்தனாதித் தைலம், ஆனந்த பாம், பற்போடி முதலிய மருந்துகளை உபயோகித்துக் குணமடைந் திருக்கின்றோம். அதைப் பலர்க்கும் மிக மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம்.

### எட்டயபுரம் அரசர்

எனக்குநேர்ந்த கொடிய பல்நோய்க்குப் பலமருந்துகள் உபயோகித்தும் பயன்படவில்லை. கடைசியாகப் பண்டிதர் ஆனந்தம் அவர்களின் பற்போடி, ராயல் டூத் பேஸ்ட் என்னும் பல் துலக்கும் மருந்துகளை உபயோகித்து விரைவில் நலமடைந்தேன். அவருடைய அமுதசுரபி என்னும் தாது விருத்தி மருந்து, பொன்மருந்து, சந்தனாதித் தைலம் முதலியவைகள் எவ்வகையிலும் திருப்தியைத் தருகின்றன. நமது நன்மதிப்புக்குறியாகப் பொற்றேடா, பொற்பதக்கம் முதலிய வெகுமானங்களும் செய்துள்ளோம்."

### சேற்றூர் ஜமீன்தார் அவர்கள் எம். எல். சி.

சென்னை, பண்டிதர். எஸ். எஸ். ஆனந்தம் பிள்ளை அவர்களின் வைத்திய சாலையில் செய்யப்படுகிற அரச அமுத சுரபி என்னும் தாது புஷ்டி மருந்து என் அனுபவத்தில் மிகவும் நல்லகுணத்தை உண்டு பண்ணுகிறது. தாதுவிருத்தி லேகியங்களுக்கெல்லாம் இதுவேசிறந்ததாகச் சொல்வதில் தடையில்லை. நான் அவருடைய பொன்மருந்து, மகா சந்தனாதித் தைலம், பற்போடி முதலியவற்றையும், உபயோகித்திருக்கிறேன் அவையும் நல்ல மருந்துகளே.

அன்பர்களே!

### அருமையான உங்கள் உடம்பில் ஒரு நோய்வந்தால் உடனே யாரிடம் தெரிவிக்கின்றீர்கள்? யார் சொல்லை நம்புவீர்கள்?

### யாருடைய மருந்தை அன்புடன் அருந்துவீர்கள்?

கற்றறிந்த பிரபலமான ஒரு வைத்தியர் (டாக்டர்) சொல்லைத் தானே நம்புவீர்கள். அதுபோல் கவர்ன்மெண்டு வைத்திய பரீட்சைகளில்தேறி பொதுஜனங்களின் நன்மதிப்புக் குரியவர்களாயுள்ள இங்கிலீஷ் டாக்ட்டர்கள் இதன் அடியில் என்ன எழுதுகின்றார்கள் என்பதை அன்புகூர்ந்து முழுவதும் படித்துப்பார்த்து அதன்படி நடந்துகொள்ளப் பெரிதும் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

## டாக்டர்கள் எழுதுவது

### டாக்டர் சி. என். டி. சுவாமி, ஐ. எம். டி.

ஒரு குழந்தைக்கு இருந்த மேக நோயை வெகு ஆச்சரியமாக பண்டிட் எஸ். எஸ். ஆனந்தம் அவர்கள் குணப்படுத்தினதை நான் பார்த்தேன். அந்த குழந்தையை முதலில் என்னிடம்தான் கொண்டுவந்தார்கள். * * * * ஷை குழந்தையை இரண்டொரு மாதங்களுக்குப் பின் நான் பார்க்க நேரிட்டபொழுது, அந்த மேகநோய் முற்றும் நீங்கி, அக்குழந்தை நலமா யிருக்கக்கண்டேன். சில சித்தவைத்தியர்கள் இம்மாதிரி வியாதிகளைக் குணப்படுத்துவதில் மிகவும் கைதேர்ந்தவர்களென்று நான் கேள்விப்பட் டிருக்கிறேன்.

மாவுக்கஞ்சிகளை செமிக்கச்செய்யும் சத்து (உமிழ்நீரில்) எச்சலில் இருக்கிறது. இதன் பெயர் தைலின். சிசுக்களுக்கு மூன்றுமாதம்வரை உமிழ்நீர் அதிகமாக ஊறமாட்டாது. பிறகு ஊறும் எச்சிலிலும் ஆறு மாதமாகிப் பல்முளைக்குங்காலத்தில்தான் இந்த சத்து போதுமான படி உண்டாகிறது. ஆதலால் ஆறுமாதத்துக்குமுன் மாவுக்கஞ்சிகள் கொடுத்தால் செமிக்காமல் பல நோய்களுண்டாகி பல குழந்தைகளுக்கு ஆபத்து உண்டாகின்றது. இதை அறியாமல் பெண்கள் தங்கள் குழந்தைகளுக்கு ஆறுமாதத்திற்குமுன் கஞ்சிகளைக்கொடுத்து விரைவில் மருந்துங் கையுமாய் வருந்துகின்றார்கள். மேற்சொல்லிய காரணத்தினால் ஆறுவதுமாதத்திற்குமேல் பால் சேர்ந்த மாவுக்கஞ்சிகள் கொடுக்கலாமென்றும், அவைகள் செமிக்கக்கூடுமென்றும், கடவுள் படைப்பினாலேயே அறியலாம். அன்றியும் மேற்கண்ட உணவுகளில் ஏதேனும் ஒன்றைக் குழந்தைக்குக்கொடுத்து, அது ஒத்துக்கொண்டு குழந்தையும் செம்மையாய் வளர்ந்து வருமாயின், அதையே கடைசிவரை கொடுத்துவரவேண்டுமேயன்றி ஒன்றுவிட்டொன்று மாற்றிக் கொண்டிருக்கக்கூடாது. அதனால் குழந்தைக்கு நோய் நேரிடலாம். இது நல்லது, அது நல்லது, இது கெட்டது, அது கெட்டது, என்று பலவாராகச் சொல்லுவது நமது நாட்டுப்பெண்களினியல்பு. இதைக் கேட்டு மோசம்போகக்கூடாது. அநுபவமுறையாக இங்கே நாம் சொல்லியிருக்கிறபடி செய்துவருவது உத்தமம்.

இப்படிக் கஞ்சிகள் கொடுத்துவருங்காலத்தில் வயிற்றோட்டங் கண்டால் சர்க்கரை சேர்க்காமல் சிறிது உப்புப்போட்டுக்கொடுப்பது நலம். மலச்சிக்கல் கண்டால் மேலேசொல்லிய கோதுமைக்கஞ்சி முதலானது கொடுக்கலாம். இவ்விதமாக குழந்தையின் உடம்புக்குத் தக்கதாக உணவுகளிலேயே மாற்றிக் குணமுண்டாகச் செய்யவேண்டுமேயன்றி, கண்டதற்கெல்லாம் மருந்து கொடுக்கக்கூடாது. அளவுக்குமிஞ்சி ஆகாரங் கொடுப்பதனால் செமியாக்குணமும், பொருமலுங்கண்டு வயிற்றுவலி உண்டாகும். இதற்கு ஓமநீர் நாலைந்து துளிகள் கொடுத்தால் போதும். உணவிலுள்ளகுற்றங்களினால் வரும்நோய்களுக்கு உணவைமாற்றியே வைத்தியஞ் செய்துகொள்ளவேண்டும். எட்டாம்மாதமுதல் இருவேளை கஞ்சியும், மற்றவேலைகளில் தனிப் பசுப்பாலும், பத்தாம் மாதத்தில் மூன்றுவேளை கஞ்சியும், இரண்டு வேளை பசுவின்பாலும், ஒருவருஷத்திற்குமேல் மூன்றுவேளை கஞ்சியும், மற்ற இரண்டு வேளைகளில் பாலும் ரொட்டியும் கொடுக்கலாம்,



எட்டாம்மாதத்திற்குமேல் அவசியமின்றிப் பாலில் வெந்நீராவது சுண்ணாம்பு நீராவது சேர்க்கவேண்டியதில்லை. காலை உணவு கொடுக்கிற வேளைக்கு வெகு நேரத்திற்கு முன்னமே குழந்தை விழித்துக்கொள்ளுமானால், அப்போது கொஞ்சம் பால் கொடுக்கவேண்டும். இருபது மாதமாயினபின் ஊன்சத்துக்கள் ஏதேனும் சிறிது கொடுக்கலாம். அரை அவியல் முட்டை ஒன்று சமயங்களில் கொடுக்கலாம். நன்றாகக்குழைய வெந்த கருணைக்கிழங்கு, உருளைக்கிழங்கு சிறிது கொடுக்கலாம். ரொட்டியில் வெண்ணெய், சர்க்கரை தடவிக் கொடுப்பது நலம். ஆனால் இவைகளெல்லாம் கடைவாய்ப் பற்கள் முளைக்குமுன் கொடுக்கிறது நல்லதல்ல. சிறிதுசிறிதாகக்கொடுத்து அது செமிக்கிற வகையைக் கவனித்து சரியாயிருந்தால் வரவர அதிகப்படுத்தவேண்டியது. ஒரேதடவையாக எதையும் மிகுதியாகக் கொடுக்கக்கூடாது. இரண்டுவருஷம் முடியும்வரை இவ்விதமாக உணவு கொடுத்துவர வேண்டும். இது குழந்தைகளுக்கு இருவிதத்திலும் வருத்தமானகாலம். பால்மட்டும் குடித்துவந்த குழந்தைக்கு பாலை நிறுத்தி வேறு உணவு கொடுக்கப்பட்டுவருகிறது. அது ஒத்துக்கொள்ளாவிடில் வருத்தம், மேலும் பல்முளைப்பதனாலும் இப்போது வருத்தமுண்டு. உணவு மாறுவதினாலும், உடம்பிலுண்டாகும் மாறுதலினாலும், பல நோய்கள் இக்காலத்தில் எளிதில் உண்டாகும். ஆதலால் இந்தசமயந்தான் தாய் குழந்தைகளை மிகப் பதனமாய்க் கவலையோடு வளர்க்கவேண்டிய காலம்,

## 10 அத்தியாயம்

### பல் முளைத்தல்

குழந்தைகளுக்கு முதலாவது முளைக்கும் பற்களுக்குப் பால் பற்கள் என்று பெயர். இவைகள் தொகையில் இருபது. சிசுவுக்கு ஆறுமாதத்திற்குமேல் முப்பதுமாதத்திற்குள்ளாக இப்பற்கள் முற்றும் முளைக்கும். சிசு கருப்பத்திலிருக்கும்போதே தாடை எலும்புகளின் ஓரத்தில் பல் உற்பத்தியாகிறது. இதில் சிலது சீக்கிரம் வெளியே வந்துவிடுகிறதினால்தான், சில குழந்தைகளுக்குப் பிறக்கும்போதே பற்கள் முளைத்திருக்கிறதுண்டு. அவைகள் வலிவற்றவைகளானதால் விரைவில் விழுந்துபோம். சில குழந்தைகளுக்கு உடல் வளர்ச்சியின் குறைவினாலே, பதினெட்டு மாதங்களுக்குமேல்தான் பல் முளைக்கிறதுண்டு. மிகச் சிலருக்கு ஆயுள்கால முழுவதும் பல் முளையாமலிருந்ததாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. இது மிக அருமை.

அகத்திய வைத்திய முறையை முதலில் விருத்தி செய்தவர்கள் பதினெண் சித்தர்களென்றும், இவர்களையன்றி திருமூலர், தேரையர், சட்டமுனி, கொங்கணர், புசுண்டர், இடைக்காடர், புலத்தியர், யூகிமுனி, கருவூரார் முதலான சித்தர்கள் சமஸ்கிருத மறியாத தமிழ் நாட்டு யோகிகள் என்றும் அறிகிறோம். இத்தமிழ் வைத்திய முறைக்கு 21-சித்தர்களென்றும், 48-சித்தர்களென்றும் சொல்லுகிறார்கள்.

இதனால் வடதேசத்து ஆர்ஷ வைத்திய முறையைத் தவிர்த்து தென்தேசத்து வைத்திய முறைகள் என்று வகுக்கப்பட்டன.

ஸ்ரீராமன் தென் இந்தியாவுக்கு வருவதற்கு முன்னரே அகத்தியர் இங்கு இருந்திருப்பதால் அவர் தமிழ் வைத்தியத்தைத் திருத்தி அமைத்தபடியினாலோ வேறு எக்காரணத்தாலோ தமிழ் வைத்தியத்துக்கு அகத்தியவைத்தியம் என்னும் பெயர் சிறப்பாய் வழங்குகிறது.

அகத்திய வைத்திய முறையைப் பின்பற்றி பல வைத்திய நூல்கள் தமிழில் வெளியாயிருக்கின்றன. இவற்றுள் தேரையர் எழுதின நூல்கள் மிக அழகாக எழுதப்பட்டிருக்கிறதென அறிகிறோம்.

உலோக வகைகள், ரசவகைகளால் செய்யும் (தாந்த்ரிக) மருந்து முறைகள் தமிழ் நாட்டாருடைய தனி முறையாகவே காணப்படுகிறது. உலோகங்களையும் தாதுவகைகளையும் கொண்டு செய்யப்படும் பஸ்பம், சிந்தூரம், திராவகம் முதலிய பலவகைமுறைகள் வடமொழியிலுள்ள இரச சாஸ்திரங்களுக்கு வேறுபட்டவைகளாகவே இருக்கின்றன. தமிழ் முறைகளின்படி உலோகங்கள் இரசவர்க்கங்கள் முதலியவற்றை நீற்று பஸ்ம சிந்தூரங்களாக எளிதில் செய்துவிடலாம்.

சாரங்கள், (செயநீர்) உப்புவகைகள் இவற்றை பாதாள யந்திரத்தின் உதவியின் நிலத்தின்கீழ் சிலகாலம் அடக்கம்பண்ணிவைத்து ஒருவகை திராவகம் செய்வதுண்டு. இதிலிருந்தெடுக்கப்படும் திராவகத்துக்கு செயநீர் என்று பெயர். இந்த நீரால் பாஷாணம் முதலிய தீயில் எரிந்துபோகும் சரக்குகளுக்கு ஒருவகை சுருக்குக் கொடுப்பதும், செயநீரால் சுருக்குக் கொடுத்த இரசவகை மருந்துகள் நெருப்புக்குப் புகைந்துபோகாமல் கட்டுவதும் வழக்கப்படி. செயநீரால் பக்குவம் செய்யப்பட்ட பாஷாணம் முதலிய மருந்துகளை தேன் முதலானவற்றோடு அநுபானமாகக் கலந்து வாதரோகம், சன்னிவாதம் முதலான மிகக் கடுமையான நோய்களுக்குக் கொடுத்துக் குணமடைகின்றார்கள்.

வடமொழியிலுள்ள ஆயுர்வேத நூல்களில் கூறப்பட்டபடி அப்பிரேகத்தை நூற்றுக்கணக்கான புடங்களில் எறித்தாலன்றி, அதிலுள்ள சந்திரிகை என்கிற மினுமினுப்புகள் போகிறதில்லை; ஆனால் தமிழ்முறையின்படி நாய்ப்புகையிலையின் சாற்றினால் அப்பிரேகத்தை பத்துமுறை அரைத்துப் புடமிட மினுக்கமில்லாமல் நல்ல நீறாய் (பஸ்மமாய்) விடுகிறது. இவ்வகையாகப் பக்குவம் செய்யப்படும் அப்பிரேக நீறுக்கு (பஸ்மத்துக்கு) வீரியமும் மிகுதியாயிருக்கிறது.

குரு பஸ்மம்:—பல மூலிகைகளால் மயில்துத்தம் என்னும் துருசை வெண்மையான நீறு (பஸ்மம்) ஒன்று செய்யப்படுகிறது. இதைக் குருபஸ்பம் என்று சொல்வதுமுண்டு. கட்டு மருந்தென்றும் சொல்லுகிறார்கள், இம்மருந்தை மிகக் கொடுமையான நோய்களுக்கு மிகவும் சிறிய அளவில் இரண்டு வேளைக்குமேல் உபயோகிப்பதில்லை. இவ்வகை மிகச் சிறந்த நூற்றுக்கணக்கான முறைகள் தமிழ் வைத்தியத்தில் உண்டு. இம்முறைகள் தென் இந்தியா முழுவதும், இலங்கைத்தீவிலும், சிங்கப்பூர் முதலிய மலேயா நாடுகளிலும், பர்மாவிலும் இப்போது வழங்கப்பட்டு வருகின்றன. புத்த மதஸ்தர்கள் அரசாண்ட காலத்தில் தமிழ் வைத்தியமுறை மற்ற நாடுகளிலும் பரவினதாக அறிகிறோம். இந்தத் தமிழ்நாட்டு வைத்தியமுறைக்குத் தலைவரான அகத்தியரால் ஆயுர்வேத சூத்திரங்களுக்கு விரிவுரை (பாஷியமும்) எழுதப்பட்டிருப்பதாகக் கேள்விப்படுகிறோம். ஆயுர்வேத சூத்திரங்களுக்கு வியாக்கியானம் வரைந்த யோகானந்தநாதரும், தமிழ் வைத்திய முறைப்படி கிரந்தங்கள் இயற்றிய சித்தர்களில் ஒருவர் என்று தெரியவருகிறது. பண்டைக்காலத்திய தமிழ் வைத்திய நூல்கள் ஆங்காங்கு சிதறிக் கிடப்பதெல்லாம் இப்போது வெளியாய் வருகின்றன.

அகத்தியர், தன்வந்தரி முதலானவர்கள் தமிழ் வைத்தியத்துக்குத் தலைவர்களாகக் கருதப்படுகின்றனர். இவர்களே ஆர்ஷ வைத்தியத் தலைவர்களாகவும் ஆகிறார்கள். ஆனால், இவ்விஷயங்களை நன்கு விளக்குவதற்கேற்ற சரித்திரங்கள் கிடைக்கவில்லை. ஆதலால் மேற்கூறியவர்களில், அல்லது நூல்களில் முந்தியவை பிந்தியவை என்ற விசாரணை சாத்தியமானதல்ல. மிகக் கடினம். ஆயினும், எனது புத்திக்கு எட்டினவரையில் தமிழ் வைத்திய நூல்களை ஆராய்ச்சி செய்ததாலும், அவ்வைத்திய முறையைக் கையாளும் வைத்தியர்களுடைய அபிப்பிராயங்களைக் கொண்டும், வடமொழி தாந்திரீக வைத்திய